**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி - 627012**

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI - 627012**

தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# சிற்றிலக்கியம்

**முதுகலை இரண்டாமாண்டு**

**மூன்றாம் பருவம்**

# 2024

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 627 012**

| Learning Objectives: பாடநோக்கங்கள் |
|---|
| • தமிழில் மரபாகத்தோன்றிவழங்கும்இலக்கியவகைகளாகியசிற்றிலக்கியங்கள் குறித்துஆழ்ந்தபுலமைபெறுதல்.<br>• சிற்றிலக்கியங்களின்வடிவம், இடம்பெறும்யாப்புகள், கவிதைஅழகுகள், புலவர்தனித்திறன்முதலியவற்றைஆழமாகஅறிதல்.<br>• பரணி, தூது, பள்ளு, குறவஞ்சிஆகியசிற்றிலக்கியங்களில்சிறப்புப்பயிற்சிபெறுதல். இவ்விலக்கியங்களைமுழுமைநிலையில் / முக்கியமானபகுதிநிலையில்கற்றுப்புலமைபெறுதல்.<br>• கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், காவடிச்சிந்துஆகியஇலக்கியவகைகளிலும்முத்தொள்ளாயிரத்திலும்சிறப்புப்பயிற்சிபெறுதல். இவ்விலக்கியவகைகளில்தனித்தன்மைகளை, சிறப்புகளைஆழமாகஅறிதல்.<br>• தமிழின்மரபானஇலக்கியவகைவளத்தில்தேர்ந்தபுலமைபெறல்; சிற்றிலக்கியப்புலவர்களின்தனித்தஇலக்கியப்பங்களிப்புகளைஉணர்தல்; சிற்றிலக்கியங்களைக்காலச்சூழலிலும்சமூகச்சூழலிலும்வைத்துமதிப்பிடவும்புதியசிற்றிலக்கியங்களைப்படைக்கவும்புலமைபெறல். |

# சிற்றிலக்கியம்

அலகு 1

சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் – பொது அறிமுகம். பரணி, தூது, குறவஞ்சி, பள்ளு, கலம்பகம், பிள்ளைத்தமிழ், அந்தாதி, காவடிச் சிந்து, முத்தொள்ளாயிரம் குறித்த ஆழமான அறிமுகம். பாட்டியல் நூல்களும் பிரபந்த இலக்கணமும் குறித்த அறிமுகம்

பாடப்பகுதி: கலிங்கத்துப்பரணி – இராச பாரம்பரியம்

அலகு 2

தமிழ் விடு தூது - முழுமையும்

அலகு 3

குற்றாலக் குறவஞ்சி - (சிங்கன் சிங்கி உரையாடல் நீங்கலாக)

அலகு 4

முக்கூடற்பள்ளு - முழுமையும்

அலகு 5

மதுரைக் கலம்பகம் (புயவகுப்பு, அம்மானை) திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் (2 பருவங்கள்–வாரானைப் பருவம், அம்புலிப் பருவம்) அபிராமி அந்தாதி (10 பாடல்கள்–பாடல் எண்கள் - 8,10,22,24,55,69,72,77,87,95) – அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து– 4 தலைப்புகளில் உள்ள பாடல்கள் (1. விநாயகர் துதி (திருவுற் றிலகுகங்க), 2. முருகன் துதி (சீர்வளர் பசுந்தோகை),3. கழுகுமலை நகர் (தெள்ளுதமி ழுக்குதவு) 4.கோயில் வளம் (சென்னி குளநகர்)– முத்தொள்ளாயிரம் (பாண்டியன்: அக. மரகதப்பூன் மன்னவர், 82.வாகை வனமாலை 83. அரும்பவிழ்த்தார்க் கோதை 84. கண்ணார் கதவம் 85. அந்தணர் ஆவோடு 86.பறைநிறை கொல்யானை 87. மாணார்க் கடந்த 88.மாறடுபோர் மன்னர் 89.புல்லாதார் வல்லே.

# அலகு 1

## சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது சிற்றிலக்கியம் ஆகும். இவ்வகையில் தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, குறவஞ்சி போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் ஆகும். சிற்றிலக்கியங்களை முதலில் பிரபந்தங்கள் என்று வழங்கினர்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பேரிலக்கியம் சிற்றிலக்கியம் என்னும் பாகுபாடு அண்மை காலத்தில் தோன்றியது அளவால் விரிந்து மக்களுடைய வாழ்க்கையை அடையாளப்படுத்தி அவர்களை நெறிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்பட்டன அளவால் குறைந்து கற்பனை மிகுதியாக தெய்வங்களையும் செல்வர்களையும் மக்களையும் தலைவர்களாகக் கொண்டு படைக்கப்பட்டவை சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை பன்னிரு பாட்டியல் பச்ச நந்தி மாலை ஆகிய நூல்கள் எடுத்துக் கூறுகின்றன சிற்றிலக்கியங்கள் பிரபந்தங்கள் என்னும் வடமொழிச் சொல்லால் அழைக்கப்படுகின்றன இவற்றை 96 வகையாக அமைப்பர்.

தமிழின் முதல் நூலாம் தொல்காப்பியத்தில் சிற்றிலக்கிய கூறுகள் இடம் பெறுகின்றன அதன்பின் சங்க இலக்கியங்களிலும் சிறப்பாகப் பக்தி இயக்க காலத்திலும் சிற்றிலக்கியத்தின் வளர்ச்சி உயர்ந்த நிலையை அடைந்து நாயக்கர்களின் காலத்தில் சிற்றிலக்கியங்கள் அதிகமாக தோன்றின சிற்றிலக்கியங்களில் அந்தாதி கோவை கலம்பகம் பரணி பிள்ளைத்தமிழ் குறவஞ்சி அம்மானை குறிப்பிடத்தக்கன ஆகும்.

### பரணி

பண்டைத் தமிழ் இலக்கியத்தை அகம், புறம் என்று பிரிப்பர். தமிழர்களின் காதல் வாழ்க்கையைப் பாடுபவை அக இலக்கியங்கள். வீரம், கொடை, மானம்

முதலியவற்றைப் பாடுபவை புற இலக்கியங்கள். பரணி புற இலக்கியம். பாட்டுடைத் தலைவனின் வீரமே இந்த இலக்கியத்தின் மையக் கருவாகும். இது பற்றிப் பன்னிரு பாட்டியல் கூறுவது வருமாறு:

வஞ்சி மலைந்த உழிஞை முற்றி
தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்புசின மாற்றான் தானை வெங்களத்தில்
குருதிப் பேராறு பெருகும் செங்களத்து
ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே (பன்னிரு: 240)

மன்னன் பகைவனது நாட்டை வெல்வதற்காக வஞ்சிப் பூமாலை அணிந்து போர்க்களம் சென்றான். உழிஞைப் பூமாலை அணிந்து பகைவனது மதிலை முற்றுகை இட்டான். தும்பைப் பூமாலையைச் சூடிப் பகைவனுடன் போர் செய்தான். பகை வீரர்கள் மடிந்தனர்; குருதி ஆறு பெருக்கெடுத்து ஓடியது; பகைவனை வென்றான். இவ்வாறு படை எடுத்துச் சென்று வாகை மாலை சூடிய மன்னனின் வீரத்தைப் புகழ்வதே பரணி இலக்கியம் ஆகும்.

பரணி, வீரத்தைப் பற்றிப் பாடினாலும் காதல் இலக்கிய மரபையும் கொண்டு உள்ளது. மகளிரை அழைத்துப் போர் பற்றிய செய்திகளைக் கூறும் பகுதி 'கடைதிறப்பு' எனப்படும். 'தலைவன் புகழைக் கேட்கக் கதவைத் திறவுங்கள்' என்று கூறுவது கடைதிறப்பு ஆகும். இப்பகுதி முழுவதும் காதல் இலக்கிய மரபை அடியொற்றி அமைந்துள்ளது.

**பரணி பெயர்க் காரணம்**

பரணி என்பது நட்சத்திரத்தின் பெயர்; காளியையும் யமனையும் தெய்வங்களாகக் கொண்ட நாள். பரணி நாளில் பிறந்தவன் பெரும் வீரனாவான் என்பதும் நம்பிக்கை. எனவே போர்க்களத்தில் யானைகள் பலவற்றைக் கொன்று, பல உயிர்களையும் யமன் கவர்ந்து கொள்ளுமாறு செய்து, அரசனின் வீரம்

வெளிப்பட, போர்க்களத்தில் காளிக்குக் கூழ் சமைத்து வழிபட்ட நிகழ்ச்சிகளைக் கூறுவதால் இந்நூல் பரணி என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். காளிக்கு உரிய நாள் பரணி. காளியைத் தெய்வமாகக் கொண்டு பாடப்படுவதால் இந்நூலுக்குப் பரணி எனப்பெயர் வந்தது என்றும் விளக்கம் கூறுவர்.

**பரணியின் இலக்கணம்**

பரணியின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. இருந்தாலும் 'யானை மறம்' என்ற துறையைச் சுட்டி உள்ளது. யானைகளின் வெற்றியைப் பாடுவது இந்தத் துறை. சங்க இலக்கியங்களில் பரணி இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன. போர்க்களத்து வீர நிகழ்ச்சிகள் – பேய்களின் நிகழ்ச்சிகள் – முதலியவற்றைச் சுட்டலாம்.

**இலக்கண விளக்கம்**

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மானவனுக்கு வகுப்பது பரணி (இலக். விள. 839)

(அமர் - போர்; மானவன் - படைவீரன். )

என்று இலக்கண விளக்கம் கூறியுள்ளது. போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனின் வெற்றியைப் பாடுவதே பரணி – என்பது இதன் பொருள்.

**தூது**

ஒருவர் மற்றொருவரிடத்து மக்களையோ அல்லது அஃறிணைப் பொருள்களையோ தூது அனுப்புவதாக அமைந்த இலக்கியம் ஆகையால் இதற்குத் தூது இலக்கியம் என்ற பெயர் ஏற்பட்டது.

**இலக்கணம்**

பல்வேறு இலக்கிய வகைகளுக்கு உரிய இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் தூது இலக்கியத்தின் இலக்கணத்தையும் கூறுகின்றன. நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கம், முத்து வீரியம், சிதம்பரப்

பாட்டியல், இலக்கணச் சுருக்கம் முதலிய பாட்டியல் நூல்களில் தூது இலக்கிய வகையின் இலக்கணத்தைக் காணமுடிகின்றது. பாட்டியல் நூல்கள் கூறும் வகைப்படி தூது இலக்கியம் பின்வருமாறு அமையும்.

1) காதல் துயரம் காரணமாக ஓர் ஆண் அல்லது பெண், தான் காதல் கொண்ட பெண் அல்லது ஆணுக்குத் தூது அனுப்புவதாக அமைவது.

2) உயர்திணையைப்போல் ஓர் அஃறிணைப் பொருளைத் தூது சென்று வருமாறு வேண்டுவது.

3) தூது பெறுவோரிடம் சென்று மாலை வாங்கி வருமாறு தூது அனுப்புவோர், தூது செல்லும் பொருளிடம் வேண்டுவது.

**முதல் தூது நூல்**

தூது இலக்கிய வகையின் முதல் நூல் **நெஞ்சுவிடு தூது** என்ற நூல் ஆகும். இதனை இயற்றியவர் **உமாபதி சிவாச்சாரியர்** ஆவார். இதன் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு. தமது ஞானாசாரியரிடம் சென்று தமது குறைகளை எடுத்துக் கூறுமாறு, உமாபதி சிவாச்சாரியர் தமது நெஞ்சைத் தூது விடுக்கிறார். இந்நூலைத் தொடர்ந்து பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இப்போது முந்நூற்றுக்கும் மேற்பட்ட தூது நூல்கள் உள்ளன.

எல்லாத் தூது நூல்களும் பொதுவாகத் தூது என்ற சொல்லை இறுதியில் பெற்றுள்ளன. சான்றாக **நெஞ்சுவிடு தூது** என்ற நூலைக் கூறலாம். ஆனால் **சோம சுந்தர பாரதியார்** இயற்றிய தூது நூல் மட்டும் **மாரிவாயில்** என்ற பெயரைப் பெற்றுள்ளது. மாரி என்றால் மேகம் என்றும் வாயில் என்றால் தூது என்றும் பொருள்படும். மேகவிடு தூது என்பது இதன் பொருள் ஆகும்.

தூது நூல்கள் பெயர் பெறும் நிலையில் சில முறைகள் உள்ளன.

1) தூது அனுப்பும் பொருளின் பெயரால் பெயர் பெறுகின்றன. சான்றாக, **மான்விடு தூது** என்ற நூலைக் கூறலாம். இதில் தூது செல்வது மான் ஆகும்.

2) சில நூல்கள் தூது பெறும் தலைவன் பெயரையும், தூது செல்லும் பொருளின் பெயரையும் கொண்டு அமைகின்றன. சான்றாக, **மதுரை சொக்கநாதர் தமிழ்விடு தூது** என்ற நூலைக் கூறலாம். இதில் தூது பெறுவோர் இறைவனாகிய **சொக்கநாதர்**, தூது செல்வது **தமிழ்** ஆகும்.இவ்வாறு, தூது நூல்கள் பெயர் பெறும் முறைகளைக் காணலாம்.

**தூது நூல் வகைகள்**

தூது அனுப்புவோர், தூது பெறுவோர் ஆகிய அடிப்படையில் தூது நூல்களை மூன்று வகைகளாகப் பாகுபடுத்தலாம்.

1) ஆடவர் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்

2) ஆடவர் பெண்களுக்குத் தூது அனுப்பும் நூல்கள்

3) பெண்கள் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்

என்று வகைப்படுத்தலாம்.

**தலைவன் பெருமைகள் கூறுதல்**

தூது நூல்களில் தூது பெறும் தலைவன் பெருமைகளை விளக்கிக் கூறும் பகுதி இடம் பெறுகின்றது. இப்பகுதியில் தலைவனின் தசாங்கங்கள் (பத்து உறுப்புகள்), தலைவனின் உறுப்புகளின் சிறப்புகள், தலைவன் இன்னின்னார்க்கு இன்னின்ன உறவுடையவன் என்று கூறும் உறவு முறைகள் போன்ற பல்வேறு பெருமைகள் விளக்கிக் கூறப்படும்.

## குறவஞ்சி

குறவஞ்சி என்பது குற+வஞ்சி என்று பிரியும். வஞ்சி என்றால் வஞ்சிக்கொடி போன்ற பெண் என்று பொருள். குறவஞ்சி என்பது குறவர் குலத்தில் பிறந்த வஞ்சிக்கொடி போன்ற பெண் என்ற பொருளைத் தரும். இந்த நூலில் குறத்தி குறி கூறுதல், குறத்தி குறவனுடன் உரையாடுதல், குறத்தியின்

செயல்கள், குறி வகைகள் போன்றவை முதன்மை இடம் பெறுவதால் இந்த இலக்கிய வகை குறவஞ்சி என்ற பெயரைப் பெற்றுள்ளது என்று விளக்கம் அளிப்பர்.

**இடத்தின் பெயரால் பெயர் பெறுதல்**

பாட்டுடைத் தலைவனின் ஊர்ப் பெயரால் சில நூல்கள் பெயர் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகத் **திருக்குற்றாலக் குறவஞ்சியைக்** கூறலாம். இந்நூலில் பாட்டுடைத் தலைவன் **குற்றால நாதர்**. அவர் எழுந்தருளியுள்ள இடம் **திருக்குற்றாலம்**. எனவே, இந்த இடத்தின் பெயரால் இந்த நூல் பெயர் பெற்றுள்ளது.

**பாட்டுடைத் தலைவன் பெயரால் பெயர் பெறுதல்**

குறவஞ்சி நூல்கள் பாட்டுடைத் தலைவனின் பெயரால் பெயர் பெறும் நிலையைக் காணலாம். எடுத்துக்காட்டாகத் **தியாகேசர் குறவஞ்சி**யைக் கூறலாம். இந்நூலின் பாட்டுடைத் தலைவன் இறைவன் ஆகிய **தியாகேசர்** ஆவர்.

**இடம், தலைவன் பெயர் இரண்டாலும் பெயர் பெறுதல்**

குறவஞ்சி நூல்கள் பாட்டுடைத் தலைவனின் இடத்தின் பெயர், பாட்டுடைத் தலைவனின் பெயர் ஆகிய இரண்டினையும் பெற்றுப் பெயர் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகத் **தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சியைக்** கூறலாம். இந்த நூலில் பாட்டுடைத் தலைவர் பெயர் **வெள்ளைப் பிள்ளையார்**. அவர் எழுந்தருளியுள்ள இடம் தஞ்சாவூர் எனப்படும் **தஞ்சை** ஆகும். எனவே இந்நூல் இவ்வாறு பெயர் பெற்றுள்ளது. **தலைவியின் பெயரால் பெயர் பெறுதல்**

குறவஞ்சி நூல்கள் தலைவியின் பெயராலும் பெயர் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. எடுத்துக்காட்டாகத் **தமிழரசி குறவஞ்சியைக்** கூறலாம். இந்த நூலின் தலைவியின்பெயர் **தமிழரசி** ஆகும்.

**குறத்தியின் பெயரால் பெயர் பெறுதல்**

சில நூல்கள் குறத்தியின் பெயரால் பெயர் பெற்றுள்ளதையும் அறிய முடிகின்றது. எடுத்துக்காட்டாகத் **துரோபதைக் குறவஞ்சியைக்** கூறலாம். இந்த நூலில் இடம்பெறும் குறத்தியின் பெயர் **துரோபதை** ஆகும்.

**பள்ளு**

பள்ளர்களின் வாழ்க்கையை விளக்கிக் கூறும் இலக்கியம் ஆதலால் இதற்குப் பள்ளு என்ற பெயர் ஏற்பட்டது. பள்ளர்கள் என்போர் யாவர்? உழவுத் தொழில்

செய்யும் மக்கள் பள்ளர்கள் ஆவர். இவர்களில் பெண்கள் பள்ளியர், பள்ளத்தியர் என அழைக்கப்படுவர். எனவே, வயல்களில் உழவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியம் எனலாம்.

**சிலப்பதிகாரத்தில் உழவர் பாடல்கள்**

**சிலப்பதிகாரம்** மருத நில மக்கள் வாழ்க்கையை, அதாவது வயலும் வயலைச் சார்ந்த இடத்திலும் உள்ள மக்களின் வாழ்க்கையைக் கூறுவதைக் காணமுடிகின்றது. அப்போது இளங்கோவடிகள் **ஏர் மங்கலம், முகவைப் பாட்டு** என்பனவற்றைக் குறிப்பிடுகின்றார். (நாடுகாண் காதை, 125 :134- 137)

ஏர்மங்கலம் என்பது யாது? முதன் முதலாக ஒரு நல்ல நாளில் ஏரைப் பூட்டி உழத் தொடங்குவதைப் **பொன்னேர் பூட்டல்** என்பர். இவ்வாறு, பொன் ஏர் பூட்டி நின்ற உழவர்கள் தம் உழவுக் கருவியாகிய ஏரை வாழ்த்தி, நன்கு விளையுமாறு வேண்டிப் பாடும் பாட்டு **ஏர் மங்கலம்** எனப்படும்.

அடுத்து, முகவைப் பாட்டு என்பது பற்றிப் பார்ப்போம். வயல்களில் நெற் பயிர்கள் நன்றாக விளைந்த பின்பு அவற்றை உழவர்கள் அறுப்பர். அவற்றை வீட்டிற்குச் சுமந்து வந்து பரப்பி, மாடுகளால் மிதிக்கச் செய்து நெல்லையும் வைக்கோலையும் பிரிப்பர். அப்போது பாடும் பாட்டு **முகவைப் பாட்டு** எனப்படும். எனவே, சிலப்பதிகாரம் காட்டும் ஏர் மங்கலம், முகவைப் பாட்டு என்பன உழவர்களின் வாழ்க்கையையே காட்டுகின்றன எனலாம்.

**பள்ளு இலக்கியத்தின் தோற்றம்**

உழவர்கள் பற்றிய செய்திகளும், **உழத்திப்பாட்டு** முதலிய வழக்காறுகளும், பாட்டும் கூத்துமாக அமைந்துள்ள பள்ளு என்ற சிற்றிலக்கிய வகை தோன்ற வழி செய்திருக்கலாம். பழங்காலத்தில் உழவுத் தொழிலில் ஈடுபட்ட பள்ளர், பள்ளியர்களின் வாழ்க்கையை ஒட்டிய கூத்து வகைகள் பாட்டும் தாளமும் பொருந்தச் சாதாரண மக்களால் விரும்பி ஆடப்பட்டு வந்தன. இந்த ஆட்டங்களையும் பாடல்களையும் கவனித்து மகிழ்ந்த புலவர்கள் அவற்றை இலக்கியமாகப் படைக்க வேண்டும் என்று விரும்பியிருக்கலாம். அதன் விளைவாகவே பள்ளு இலக்கியம் தோன்றியது என்றும் கருதுவர்.

இவ்வகையில், பள்ளு இலக்கியத்தின் முதல் நூலாக முக்கூடற்பள்ளு என்ற நூல் அமைகின்றது. இந்நூல் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது என்பர். அதன் பின்னர் ஞானப்பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, குருகூர்ப் பள்ளு, சிவசயிலப் பள்ளு, வைசியப்பள்ளு, வடகரைப் பள்ளு, திருமலை முருகன் பள்ளு, சீகாழிப் பள்ளு, செண்பகராமன் பள்ளு, தில்லைப் பள்ளு, வையாபுரிப் பள்ளு, கண்ணுடை அம்மை பள்ளு, திருப்புன வாயிற் பள்ளு, கதிரை மலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, குற்றாலப் பள்ளு, திருச்செந்தில் பள்ளு, போரூர்ப் பள்ளு, இருப்புலிப் பள்ளு, திருவிடை மருதூர்ப் பள்ளு, புதுவைப் பள்ளு போன்ற பல நூல்கள் தோன்றின.

**இலக்கணம்**

பல்வேறு சிற்றிலக்கிய வகைகளுக்கு உரிய இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. ஆனால், இப்பாட்டியல் நூல்களில் பள்ளு என்ற சிற்றிலக்கிய வகையின் இலக்கணம் காணப்படவில்லை. ஆனால், **நவநீதப் பாட்டியலில்** பிற்காலத்தில் சேர்க்கப்பெற்றுள்ள பல பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நான்கு பாடல்களில் **உழத்திப் பாட்டு** என்றால் என்ன என்று விளக்கப்படுகின்றது. உழத்திப் பாட்டைக் குறிப்பிட்டுவிட்டு இதைப் பள்ளும் என்பர் எனக் கூறுகின்றன.

வீரமாமுனிவர் இயற்றிய **சதுரகராதியில்** தொகை அகராதி என்ற பிரிவில் சிற்றிலக்கிய வகைகள் பலவற்றின் விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் உழத்திப் பாட்டு என்பதன் விளக்கமும் உள்ளது.

**வேறு பெயர்கள்**

பள்ளு என்ற இலக்கிய வகைக்குப் **பள்ளு நாடகம்**, **பள்ளு மூவகைத்தமிழ்**, **பள்ளேசல்**, **பள்ளிசை** என்ற பெயர்களும் காணப்படுகின்றன. இப்பெயர்களால் பள்ளு என்ற இலக்கிய வகை நடித்தற்கு உரியது; பாடுவதற்கு உரியது; இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் உரியது என்பன தெரிய வருகின்றன.

**கலம்பகம்**

கலம்பகம் என்பதற்குக் கலவை என்ற பொருளும் உண்டு. சங்க நூல்களில் ஒன்று பெரும்பாணாற்றுப்படை. இந்நூலில்,

***பல்பூ மிடைந்த படலைக் கண்ணி** (174)*

(**பல்** = பல; **பூ** = பூக்கள்; **மிடைந்து** = கலந்து)

என்று ஓர் அடி வருகின்றது. இதற்கு, பலவாகிய பூக்கள் கலந்து கட்டப்பட்ட கலம்பக மாலை என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுகின்றார். பல பூக்களைக் கலந்து கட்டிய மாலை. ஆகையால் கலம்பக மாலை என்கிறார்.

இப்பொழுது நாம் பல வகையான பூக்களைச் சேர்த்துக் கட்டிய மாலையைக் கதம்பம் என்கிறோம். இதுவே கலம்பகம் என்று வழங்கப்பட்டது எனலாம்.

பல்வேறு பூக்களால் ஆன மாலை கலம்பகம் எனப்படுகிறது. அதுபோலப் பல்வேறு உறுப்புக்களைக் கலந்து இயற்றிய நூல் கலம்பகம் என்று அழைக்கப்படுகின்றது எனலாம். **நவநீதப் பாட்டியல்**, ***கலந்து பாடுவது கலம்பகம்*** என்கின்றது.

**கலம்பகம் - சொல் அமைப்பு**

கலம்பகம் என்ற சொல் இரண்டு சொற்களின் கூட்டு ஆகும். கலம்பு + அகம் = கலம்பகம் என்றும், கலம் + பகம் = கலம்பகம் என்றும் இந்தச் சொல்லைப் பிரிக்கலாம். பல்வேறு வகையான உறுப்புகள் இந்த இலக்கிய வகையில் அகத்தே - உள்ளே - கலந்து வருவதால் கலம்பகம் என்று அழைக்கப்படுகின்றது.

கலம் என்றால் 12 என்று பொருள். பகம் என்றால் பகுதி அல்லது பாதி என்று பொருள். இங்கும் பன்னிரண்டின் பகுதி ஆறு ஆகும். எனவே, 12 + 6 = 18. இந்த இலக்கிய வகையில் 18 உறுப்புகள் கலந்து வருவதால் கலம்பகம் என்று பெயர் பெறுகின்றது எனலாம்.

**தோற்றமும் வளர்ச்சியும்**

கலம்பக இலக்கிய வகையின் உறுப்புகள் பல **தொல்காப்பியத்தில்** இடம் பெறக் காணலாம். அம்மானை, ஊசல், காலம், வண்டு, கைக்கிளை, பாண், தழை, இரங்கல், குறம், தூது என்ற கலம்பக உறுப்புகள் தொல்காப்பிய அகத்துறை சார்ந்தவை ஆகும். இனி, மறம், புயம் என்பன தொல்காப்பியப் புறத்துறை சார்ந்தவை ஆகும். இவை பற்றிப் பின்னால் காணலாம். இவ்வாறு, தொல்காப்பிய அகத் துறையிலும் பாடிய நிலையில் கலம்பகம் என்ற இலக்கிய வகை தோன்றியது எனலாம்.

**முதல் நூல்**

கலம்பக இலக்கிய வகையின் முதல் நூல் **நந்திக்கலம்பகம்** ஆகும். இந்நூலின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. இந்த நூலின் பாட்டுடைத் தலைவன் **மூன்றாம் நந்திவர்மன்** என்ற மன்னன் ஆவான். இந்த நூலைத் தொடர்ந்து பல கலம்பக நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

**உறுப்புகள்**

கலம்பக இலக்கிய வகையின் இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் **பிரபந்த மரபியல்**, **சிதம்பரப் பாட்டியல்**, **இலக்கண விளக்கம்**,

**தொன்னூல் விளக்கம்**, **முத்து வீரியம்**, **பிரபந்த தீபிகை** ஆகிய பாட்டியல் நூல்கள் பதினெட்டு உறுப்புகளைச் சுட்டுகின்றன. ஆனால், இந்த உறுப்புகளிடையே வேறுபாடுகளும் காணப்படுகின்றன. எனவே, அவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் கலம்பக உறுப்புகள் **புயம்**, **அம்மானை**, **ஊசல்**, **களி**, **மறம்**, **சித்து**, **காலம்**, **மதங்கி**, **வண்டு**, **மேகம்**, **சம்பிரதம்**, **தவம்**, **பாண்**, **கைக்கிளை**, **ஊர்**, **தழை**, **இரங்கல்**, **தூது**, **குறம்**, **தென்றல்** என்ற **இருபது** என்பது தெரிய வருகின்றது.

### பதினெட்டுக்கும் குறைவான உறுப்புகள்

பொதுவாகக் கலம்பக உறுப்புகள் பதினெட்டு என்று கூறப்படும் நிலை உள்ளது. சில நூல்களில் பதினெட்டுக்கும் அதிகமான உறுப்புகள் காணப்படுகின்றன. இதைப் போன்றே சில கலம்பக நூல்களில் பதினெட்டுக்கும் குறைவான உறுப்புகள் இடம் பெறக் காணலாம். சான்றுகளாக **ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்**, **தில்லைக் கலம்பகம்** என்பனவற்றைக் கூறலாம்.

### சிறப்புகள்

கலம்பகம் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. எனினும் அது பல சிறப்புகளைக் கொண்டதாகத் திகழ்கின்றது.

கலம்பக இலக்கியத்தில் பல்வேறு உறுப்புகள் கலந்து வருவதால் அது பல்சுவை உடையதாக விளங்குகின்றது.

கலம்பகம் வேறு சில சிற்றிலக்கிய வகைகளின் கூறுகளையும் உள்ளடக்கியதாக விளங்குகிறது. சான்றாகக் கலம்பக நூலில் தூது,

சமுதாயத்தில் வாழ்கின்ற சாதாரண மக்களைப் பற்றிய உறுப்புகளையும் கலம்பகம் கொண்டுள்ளது. சான்றாக மதங்கியார், இடைச்சியார், வலைச்சியார் ஆகிய உறுப்புகளைக் கூறலாம்.

கலம்பகம் நாட்டுப்புற இலக்கியக் கூறுகளும் புலமை இலக்கியக் கூறுகளும் கலந்த கலவையாக உள்ளது.

கலம்பக நூல்கள் சில வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்தக் காணலாம். எடுத்துக்காட்டு - நந்திக்கலம்பகம்.

கலம்பகம் அகப்பொருளும் புறப்பொருளும் கலந்த கலவையாகவும் உள்ளது. பல சமயப் புலவர்களாலும் பாடப்பட்ட சிறப்புடையதாய் விளங்குகின்றது.

## பிள்ளைத்தமிழ்

இச்சிற்றிலக்கிய வகையினைத் தோற்றுவித்தவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான பெரியாழ்வாரே ஆவார். இவர் கண்ணனைக் குழந்தையாக எண்ணித் தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார். பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி என இவரைக் கூறலாம். இது **பிள்ளைப் பாட்டு** எனவும் **பிள்ளைக் கவி** எனவும் வழங்கப்படும்.

### பிள்ளைத் தமிழ் வரலாறு

கி.பி.12ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தரால் இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது பாடப்பட்டுள்ள **குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே.** முதல் பிள்ளைத் தமிழ் நூலாகும். இது சோழர்களின் வரலாற்றைக் கூறும் சிறந்த இலக்கியமாகும்.

கி.பி.17 ஆம் நூற்றாண்டில் குமரகுருபரர் பாடிய **மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்** ஆகிய இரண்டும் பக்தி இலக்கிய வரலாற்றில் பெரும் புகழ் படைத்தவை. கி.பி.18ஆம் நூற்றாண்டில் பகழிக் கூத்தர் எழுதிய **திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்** சிறப்புடையது. சொற்சுவை, பொருட்சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய சுவைகள் ஒரு சேர அமையப் பெற்ற நூலாக இந்நூல் உள்ளது.

19ஆம் நூற்றாண்டில் அழகிய சொக்கநாதர் பாடிய **காந்திமதியம்மைபிள்ளைத் தமிழ்**, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய **சேக்கிழார் பிள்ளைத் தமிழ்** ஆகியவை சிறப்பானவை.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் அவர்கள் பத்துப்பிள்ளைத் தமிழ் நூல்களைப் படைத்த பெருமைக்குரியவர்.

சிவஞான சுவாமிகள் எழுதிய **அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்**, அருணாசலக் கவிராயர் எழுதிய **அனுமார் பிள்ளைத் தமிழ்** ஆகியவற்றோடு **செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ், சுந்தரர் பிள்ளைத் தமிழ்,**

**மாணிக்கவாசகர் பிள்ளைத் தமிழ்** போன்ற பிள்ளைத் தமிழ் நூல்களும் பிற்காலத்தில் தோன்றியுள்ளன.

தற்காலத்தில் **பாவேந்தர் பிள்ளைத் தமிழ், மறைமலை அடிகள் பிள்ளைத் தமிழ், காமராசர் பிள்ளைத் தமிழ், பெரியார் பிள்ளைத் தமிழ், கலைஞர் பிள்ளைத் தமிழ், எம்.ஜி.ஆர். பிள்ளைத் தமிழ்** போன்றவை தோன்றியுள்ளன. சிற்றிலக்கிய வகைகளில் மிகுதியான இலக்கியங்கள் பிள்ளைத் தமிழிலேயே தோன்றியுள்ளன.

**பிள்ளைத் தமிழ் இலக்கணம்**

புலவர்கள் தாம் விரும்பும் தெய்வத்தையோ, அரசனையோ, தலைவனையோ, வள்ளலையோ, சான்றோரையோ குழந்தையாகப் பாவித்துப் பாடுவது **பிள்ளைத் தமிழ்** எனப்படும். இது குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் 21ஆம் மாதம் வரை ஒரு பருவத்திற்கு இரண்டு திங்கள் என வகுத்துக் கொண்டு பத்துப் பருவங்களில் வைத்துப் பாடப்படுவதாகும். இதில் ஒரு பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் பத்துப் பருவங்களுக்கு மொத்தம் 100 பாடல்கள் பாடப்படும். இவ்விலக்கியம் **ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ்** எனஇரண்டு வகைப்படும். **வெண்பாப் பாட்டியல்** (செய்யுளியல் 7ஆவது பாடலின்) மூலம் **காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர்** எனப் பத்துப் பருவங்களை உடையது **பிள்ளைத் தமிழ்** என்பதை அறிய முடிகிறது. இதில் முதல் ஏழு பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கும், பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும்

பொதுவாகும். கடைசி மூன்று பருவங்களான சிறுபறை, சிற்றில், சிறுதேர் ஆகியன ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரியன. இம்மூன்று பருவங்களுக்குப் பதிலாக, **கழங்கு, அம்மானை, ஊசல்** என்ற மூன்று பருவங்களைப் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குச் சேர்த்துக் கூறுவது மரபு.

## அந்தாதி

**பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல்** போன்ற இலக்கண நூல்கள் சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் வகுக்கின்றன. அந்தத்தை ஆதியாக வைத்துப் பாடுவது **அந்தாதி.** முன் பாடப்பட்ட பாடலின் ஈற்றில் உள்ள அடியோ, சீரோ, அசையோ, எழுத்தோ அடுத்த செய்யுளின் முதலாக அமையப் பாடுவது அந்தாதியாகும். அந்தம் (இறுதி) ஆதியாக (முதலாக) வருவதால் இப்பெயர் பெற்றது.

தொல்காப்பியர் குறிப்பிடும் **இயைபு** என்னும் வகையில் அந்தாதி அடங்கும். **யாப்பருங்கலக்காரிகை** 'அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி' எனக் குறிப்பிடும். இதற்குரிய யாப்பு வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறையாகும்.

அந்தாதி தமிழ் இலக்கியத்திற்கு வடமொழியின் தாக்கத்தால் வந்தது என்பர். இது சரியன்று. அந்தாதி தனி இலக்கியமாக இல்லாவிடினும் **புறநானூற்றில்** முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய பாடலில் முதல் ஐந்து வரிகளில் **அந்தாதி அமைப்பினை**க் காண முடிகிறது.

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் (புறம் 2)

முதல் வரியின் ஈற்றுச் சொல் 'நிலன்' அடுத்த வரியின் முதற் சொல்லாக வருகிறதல்லவா. இதுதான் அந்தாதி எனப்படும். மனப்பாடம் செய்வதற்கு

எளிமையாக இருக்க வேண்டும் என்று கருதியே அந்தாதி இலக்கியம் தோன்றியது. தமிழில் தோன்றிய முதல் அந்தாதி **காரைக்கால் அம்மையார்** பாடிய **அற்புதத் திருவந்தாதி** ஆகும்.

### அந்தாதி இலக்கிய வரலாறு

பக்தி இலக்கிய காலமே அந்தாதி பெரிதும் உருவாகிய காலம் எனலாம். ஏனெனில் பக்திப் பாடல்களை மனப்பாடம் செய்ய அந்தாதி இலக்கியம் ஏற்றதாக இருந்தது. எனவே தான் சைவத்தின் 12 திருமுறைகளில் 11-ஆம் திருமுறையில் மட்டும் 8 அந்தாதி நூல்கள் அடங்கியுள்ளன. ஆழ்வார்களில் தலைசிறந்த நம்மாழ்வாரும் **திருவாய்மொழி**யின் ஆயிரம் பாடல்களையும் அந்தாதித் தொடையில் அமைத்துள்ளார்.

## காவடிச் சிந்து

சிந்து என்பது இசைத் தமிழ் பாகுபாடுகளில் ஒன்றாகும். அது ஐந்து உறுப்புகளால் ஆன யாப்பு விசேடம். அவை பல்லவி, அநுபல்லவி, மூன்று கண்ணிகள் அடங்கிய சரணம் ஆகும். காவடிச் சிந்து பல்லவியும் அநுபல்லவியும் இன்றிச் சரணங்களுக்குரிய கண்ணிகளை மாத்திரம் பெற்று வரும். முருகனிடம் பிரார்த்தனை செய்து காவடி எடுத்துச் செல்வோர் வழியில் துதி செய்து பாடும் பாடல்களே காவடிச் சிந்து எனப்படுகின்றன. இந்த நூலை இயற்றியவர் அண்ணாமலை ரெட்டியார். இவர் திருநெல்வேலி சங்கர நயினார் கோவிலை அடுத்த சென்னிகுளம் என்னும் ஊரில் 1865 ஆம் ஆண்டு பிறந்தார். திருநெல்வேலி இராமசாமிக் கவிராயரிடம் கல்வி கற்று, பின்னர் ஊற்றுமலை ஜமீந்தார் சுந்தரதாஸ் பாண்டியனின் சமஸ்தான வித்துவானாக விளங்கினார்.

காலமாற்றத்திற்கேற்ப சிந்துப் பாடல்களில் பல்வேறு மாற்றங்கள் உண்டாயின. சிந்துப்பா அதன் அடியளவைக் கொண்டு சமநிலைச்சிந்து, வியனிலைச் சிந்து என இருவகையாக அமைந்தது.

### சமநிலைச் சிந்து

முதலடியும் அடுத்த அடியும் சீரின் எண்ணிக்கையால் ஒத்து இருப்பின் அது சமநிலைச் சிந்து.

**வியனிலைச் சிந்து**

அடியும் சீரும் எண்ணிக்கையால் வேறுபட்டு இருப்பின் அது வியனிலைச் சிந்து.

**சிந்து இலக்கியங்களின் அமைப்பு**

சிந்து இலக்கியங்கள் பொதுவான ஓர் அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. அளவொத்த இரண்டடி ஒரெதுகை பெற்றதாகத் தொடக்க காலத்தில் இருந்த சிந்துப்பாடல்கள், பிற்காலத்தில் பல இயல்புகளில் மாற்றம் பெற்றன. பிற்காலச் சிந்து இலக்கிய நூல்கள் சில பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற கீர்த்தனை அமைப்பைக் கொண்டன.

**சிந்து இலக்கியத்தின் தோற்றம்**

பொ.யு. 13-ம் நூற்றாண்டில், 'திருவாழி பரப்பினான் கூத்தன்' என்பார் இயற்றிய சிந்து நூலே தமிழின் முதல் சிந்து நூல் என்று மு. அருணாச்சலம் குறிப்பிடுகிறார். ஆனால், அந்த நூல் கிடைக்கவில்லை. சித்தர் ஆரூடம் என்ற நூலின் பாடல்கள் நொண்டிச் சிந்தில் அமைந்துள்ளன. இதன் காலம் 13-ம் நூற்றாண்டு என மு. அருணாசலம் தெரிவிக்கிறார். சித்தர் ஆரூடம் நூல் பழங்காலத்தது அல்ல; 18-ம் நூற்றாண்டாக இருக்கலாம் என முனைவர் இரா. திருமுருகன் தனது 'சிந்து இலக்கியம்' என்ற ஆய்வு நுலில் தெரிவித்துள்ளார்.

18-ம் நூற்றாண்டில் தோன்றிய அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து நூல் முன்னோடிச் சிந்து இலக்கிய நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## முத்தொள்ளாயிரம்

முத்தொள்ளாயிரம் (பொ.யு. ஒன்பதாம் நூற்றாண்டு) தமிழ் இலக்கியத்தில் தொகைநூல் வகையைச் சேர்ந்த நூல் .

முத்தொள்ளாயிரம் அகம், புறம் என இரு பாடுபொருள்களாலும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மீது பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய நூல். இந்திய அரசின் செம்மொழித் தமிழ் உயராய்வு நிறுவனம் பட்டியலிட்டுள்ள நாற்பத்தொரு செம்மொழி இலக்கண இலக்கியங்களில் முத்தொள்ளாயிரமும் ஒன்று. இந்நூலின் 130 பாடல்கள் மட்டுமே இன்று கிடைக்கின்றன. முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

முத்தொள்ளாயிரம் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மீது பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய நூல். ஒவ்வொரு மன்னரைப் பற்றியும் தொள்ளாயிரம் பாடல்கள் வீதம் 2,700 பாடல்கள் அடங்கிய தொகுப்பு எனக் கருதப்படுகின்றது. இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை.

வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்; மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது. மூன்று மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்ட 900 பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் முத்தொள்ளாயிரம் என்று பெயர்பெற்றது. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூலிலிருந்து 108 செய்யுள்கள் கிடைத்துள்ளன. அவை முத்தொள்ளாயிரம் என்னும் பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.ஆசிரியரின் பெயரை அறியமுடியவில்லை. இவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். சேரநாட்டை அச்சமில்லாத நாடாகவும் சோழநாட்டை ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உடைய நாடாகவும் பாண்டிய நாட்டை முத்துடை நாடாகவும் பாடப்பகுதி காட்டுகிறது.

ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர். பிற்காலக் காப்பியங்களில் நாட்டுவளம் தவறாது இடம்பெற்றது. முத்தொள்ளாயிரம் சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை நயமாக வெளிப்படுத்துகிறது.

### கலிங்கத்துப்பரணி – இராச பாரம்பரியம்

கலிங்கத்துப்பரணி என்ற நூல் பரணி வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் ஆகும். இந்நூல் முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கப் போர் வெற்றி

குறித்துப் பாடப்பட்ட நூல் ஆகும். குலோத்துங்கனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது. அனந்தவன்மன் என்னும் வட கலிங்க மன்னன் திறை கொடாமலிருந்த பிழையின் காரணமாக முதலாம் குலோத்துங்க சோழனின் படைத்தலைவனும் அமைச்சனுமாயினாயிருந்த கருணாகரத் தொண்டைமான் கி.பி. 1112 ஆம் ஆண்டில் போரில் வென்ற செய்தியே நூற்பொருள். இது செயங்கொண்டார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இவர் தீபங்குடியைச் சேர்ந்த அருகர் ஆவார். இந்நூலின் காப்புச் செய்யுளால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என அறியலாம்.

வரலாற்று ஆராய்ச்சி ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டப்படுபவைகளுள் முக்கியமானதொன்று. முன்னோர் ஒழுகிக்காட்டிய உயர்ந்த நெறிகளையும் அன்னோர் கொண்டிருந்த உயர்ந்த பண்புகளையும் பின்னோர்க்கு எடுத்துக்காட்டுவது வரலாற்று நூல். வரலாற்றுத்துறை அறிவு வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழியமைத்துத் தரும் இன்றியமையாத துறை. அதுபற்றியே நாகரிகம் எய்தியுள்ள மேற்புல அறிஞர் தம் நாட்டின் உண்மை வரலாறுகளை ஆராய்ந்து பல நூல்கள் வடிவாக வெளியிட்டு வருகின்றனர்; அதனால் நிறைந்த பயனையும் எய்தி வருகின்றனர். மேனாடுகளில் எத்தனையோ விதமாக வரலாற்று நூல்கள் நாள்தோறும் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அவை அவர்களுடைய தாய்மொழியில் வெளியிடப் பெற்றிருப்பதாலும், அனைவரும் அவற்றைப் படித்து வருதலாலும், அவர்களிடம் முன்னேற்றத்தைக் காணமுடிகிறது.

**வரலாற்று மூலங்கள்**

ஒரு நாட்டின் வரலாற்றை நன்கு அறிந்து கொள்வதற்கு மூலங்களாக இருப்பவை அந்நாட்டில் முன்னோர் எழுதிவைத்துள்ள கல்வெட்டுக்கள், செப்பேடுகள், கோவில்கள், சிற்பங்கள், நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவையாகும். அவற்றில் காணக்கிடைக்கும் ஒரு சில குறிப்புக்களைக் கொண்டே வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்று நூலை எழுதுவர்; அக்கால மக்கள் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு, வாணிகம் முதலிய பல்வேறு

செய்திகளையும் அவற்றின் மூலம்தான் அறிய வேண்டும். 'கலிங்கத்துப் பரணி' யிலிருந்து சோழர்கால வரலாற்றையும் அக்கால மக்களின் வாழ்க்கையைப்பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம். அதில் காணக்கிடைக்கும் ஒரு சில செய்திகள் கல்வெட்டுக்கள் போன்ற பிற மூலங்களால் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு உறுதிப்படுகின்றன.

**சோழர் கால வரலாற்று மூலம்**

கலிங்கத்துப் பரணியிலுள்ள 'இராச பாரம்பரியம்' என்ற பகுதியில் சோழர் குலமுறை தொடக்கம் முதல் காணப்படுகின்றது. கவிஞன் நாரதன் என்ற இதிகாச முனிவனக் கொண்டு வந்து நிறுத்துவதால் அதிலுள்ள செய்திகள் யாவும் 'உயர்வு நவிற்சி'யாகவே இருக்கின்றன. சோழர் வரலாற்றை நாரதன் உரைப்பதாகவும், அதைக் கரிகாலன் இமயத்தில் பொறித்து வைப்பதாகவும் அதை ஒரு முதுபேய் கற்று வந்து காளிக்கு உரைப்பதாகவும் நூல் கூறுகின்றது. அதுபோலவே, அவதாரம் என்ற பகுதியில் பாட்டுடைத் தலைவனாகிய முதற் குலோத்துங்கனின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி கற்றல் படைக்கலப் பயிற்சி, முடிபுனைதல் முதலிய செய்திகள் விரித்துப் பேசப்பெறுகின்றன. குலோத்துங்கன் திருமாலின் அவதாரமாகவே பேசப்படுகின்றான்.

அன்றிலங்கை பொருதழித்த அவனே அப்பாரதப்பேரர் முடித்துப் பின்னை வென்றிலங்கு கதிராழி விசயதரன் எனஉதித்தான் விளம்பக் கேண்மின்.

[ ஆழி-சக்கரம், ஆணைச்சக்கரம்; விசயதரன்-குலோத்துங்கன் ]

என்று முதுபேயின் வாயில் வைத்துக் குலோத்துங்கன் வரலாற்றைக் கூறத் தொடங்குகிறார் கவிஞர். இலக்கியமாதலால், அப்பகுதியிலுள்ள செய்திகள் கற்பனை நயம் செறிய உயர்வு நவிற்சிகளாகவே உள்ளன. என்றாலும், உண்மையான வரலாற்றுக் குறிப்புக்கள் தெளிவாக இல்லாமல்

இல்லை. அவற்றைத் தவிர 'காளிக்குக் கூளி கூறியது' என்ற பகுதியில் குலோத்துங்கனின் திருவோலக்கச் சிறப்பு, அவன் கலிங்கநாட்டின் மீது படை எடுத்தற்குரிய காரணம், படைகள் கலிங்க நாட்டுடன் பொருது வென்றமை முதலிய செய்திகளும், 'பேய்களைப் பாடியது', 'கோயில் பாடியது' என்ற பகுதிகளில் பேய்களின் குறையுறுப்புக்களைக் கூறுவதுபோல் குலோத்துங்கனின் வெற்றிகளைப்பற்றிய செய்திகளும் 'களம் பாடியது' என்ற பகுதியில் பேய்கள் கூழ் சமைத்தற்கு அரிசியைக் குற்றும்போது பாடுவதாக அமைந்துள்ள வள்ளைப் பாட்டுக்களிலும் கூழை உண்டபின் பாடும் வாழ்த்துப் பாடல்களிலும் சோழ அரசர்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

**இராச பாரம்பரியம்**

சோழ அரசர்களின் குலமுறை வரலாற்றை இதில் காணலாம். எனவும் இப்பகுதி வரலாற்றில் 'கொடி வழி' போன்றதாகும். 'திருமுடி அடைபு' எனவும் இப்பகுதி வழங்கி வந்துள்ளது

**இமையத்தில் புலிக்கொடி**

ஒரு சமயம் கரிகாற் சோழன் போர் வேட்கையால் வட திசைக்கண் படையெடுத்துச் சென்றான். அப்போது வடக்கிலுள்ள உச்சிகளையுடைய இமயமலை குறுக்கே நின்று தடுத்தது. அதனைக் கரிகாலன் தன் போர்க்கருவியாகிய செண்டினால் தலைகீழாகத் திருப்பினான். திருப்பியவன், 'இம்மலை முன் நின்ற நிலையிலேயே நிற்கட்டும்' என்று எண்ணினான். தனது புலிக்கொடியாகிய அடையாளச் சின்னத்தை அம்மலையின் நடுவிடத்தில் பொறித்து. இமயமலையை முன் இருந்த நிலையிலேயே திரும்பவும் இருக்கச் செய்தான்.

செண்டு கொண்டு கரிகாலன் ஒரு காலின் இமயச்

சிமய மால்வரை திரித்தருளி, மீள அதனைப்

பண்டு நின்றபடி நிற்க இது.' என்று. முதுகில்

பாய்புலிக் குறிபொறித்து, அது மறித்த பொழுதே.

செண்டு- ஒருவகைப் போர்க்கருவி, ஒரு காலின் - ஒரு சமயத்தில். சிமயம்-உச்சி. மால்-பெரிய திரித்து-தலை கீழாக்கி. குறி-வடிவம். அது மறித்த பொழுது-இமயத்தை முன்போல் நிலை நிறுத்தியபோது.

**நாரதர் கூறல்**

அவ்வேளை, மூன்று காலங்களையும் அறியக் கூடியவரும் தெய்வத்தன்மை பெற்றவரும், வேதம் உணர்ந்தவருமான நாரத முனிவர் அவன் எதிரில் வந்தார். 'அரசே! கடல் சூழ்ந்த இந்த உலகத்தில், உன்னைப் போன்று, கல்வி, அறிவு, ஆற்றலில் சிறந்த அரசர்கள் எவரும் இலர்' என்று வாழ்த்துரை வழங்கினார். மேலும், 'உன்னிடம் நான் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று உள்ளது. அதனைக் கேட்பாயாக!' என்று கூறி விட்டு, அச்செய்தியைச் சொல்லத் தொடங்கினார்.

காலம் மும்மையும் உணர்ந்தருளும் நாரதன் எனும்
கடவுள் வேத முனி வந்து, கடல் சூழ் புவியில் நின்
போலும் மன்னர் உளர் அல்லர் என ஆசி புகலாப்
'புகல்வது ஒன்று உளதுகேள்: அரச!' என்று புகல்வான்

**நாரதர் இருப்பிடம் செல்லல்**

தீக்கடைக் கோலில் இருந்து உண்டாகும் நெருப்பினால் வேள்வி இயற்றப்படும். அந்த உருவமாகப் பொருந்தியிருக்கும் படுக்கையில் திருமால் அறிதுயில் தொடக்கமாக ங்கும் நிறைந்து வேள்ளியில் எங்கும்' ஆதிசேடன் என்னும் பாம்புப் கொள்வார். அத்தகைய திரும உலகத்திலுள்ளவர்களைக் காக்கும் தொழில் புரியும் தொடர்ந்து முதற் குலோத்துங்க சோழன் வரையிலும் மூலாற்றைத் வரச் சீரும் சிறப்பும் அமைந்த சோழன் அவர் கூறியபடி கரிகாவிஷ தம் இருப்பிடம் சென்றார். அதனை அவர் கூறியபடி கரிகாலன் இமயத்தில் எழுதினான். அது வருமாறு:

அரணி வேள்வியில் அகப்படும் அகண்ட உருவாய்

அரவு அணைத் துயிலும் ஆதி முதலாக, அபயன்

தரணி காவல் அளவும் செல மொழிந்து, முனிவன்

தான் எழுந்தருள. மா முனி மொழிந்த படியே. (186)

அரணி-தீக்கடைக்கோல் . அகண்டம்-துண்டு படாதது. பூரணம்-முழுமை. அரவு அணை-ஆதிசேடன் என்னும் பாம்புப் படுக்கை. ஆதி -திருமால். தரணி - உலகம். முனிவன்-நாரத முனி

**நாரதர் கூறிய வரலாறு**

எல்லா வரலாற்றுக்கும் முதன்மையானவர் திருமால். அவரது உந்தியினின்றும் தோன்றியது செந்தாமரை மலர். அதிலிருந்து நான்முகன் தோன்றினான். அவனிடமிருந்து பெருமைக்குரிய மரீசி தோன்றினான். உயிர்களிடத்தில் அன்பு மிகுந்த மரீசி காசிபனை மகனாகப் பெற்றான். அவன் ஒளிக்கதிர்களையுடைய சூரியனைப் பெற்றான்.

மனு என்பவன் சூரியனுக்கு மகனாகப் பிறந்து உலகினைக் காப்பாற்றினான். அவன் தன்னுடைய சிறந்த மகனை ஒரு பசுவின் கன்றுக்குச் சமம் என்று கருதினான். எல்லோரும் வியப்புறும்படி அவனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்று பசுவிற்கு நீதி வழங்கினான். இத்தகைய மனுநீதிச் சோழனுக்கு மகனா

**இக்குவாகு என்பவன் பிறந்தான்**.

இக்குவாகுவுக்கு மகனாக விகுட்சி பிறந்தான். இவனது மக ககுந்தன். ககுந்தன் மிகவும் வலிமையுடையவன். பகைவ வெல்லுமளவுக்குப் போர் புரியக் கூடியவன். இவன் மிகுந் ஆற்றலுடைய செயல் பல புரிந்து ஆயிரம் கண்களையுடைய யானையை வாகனமாகக் கொண்டான். இந்திரன் ஐராவதம் என்னும் யானையில் ஊர்ந்து வெற்றி கொண்டது போல், இவனும் ஒரு

களிற்றிலே ஊர்ந்து தன்னை எதிர்த்துப் போர் புரிந்த அசுரர்களை எல்லாம் வென்று வெற்றிக் கொடி நாட்டினான்.'

இயல்பிலேயே கோபத்தைக் கொண்டது புலி; சாதுவான தன்மையுடையது மான். புலிக்கு விருப்பமான உணவு மானிறைச்சி. அவ்வாறு இருந்தும் அவ் இரண்டும் ஒரே துறையில் ஒன்றாக இருந்து நீர் பருகும்படி. பசி பகை முதலியவற்றைப் போக்கிய வலிமையுடையவன் மாந்தாதா என்னும் சோழ மன்னன். அவன் உலகத்துள்ள உயிர்களிடத்தில் செலுத்திய அருளின் தன்மையால் ஆட்சி புரிந்தான். முசுகுந்தன் என்ற மன்னன் போர்க்களத்தில் புகுந்து இமையவர் உலகம் முழுவதையும் எவ்விதத் தீங்குமின்றிக் காவல் புரிந்து அரசோச்சிக் காப்பாற்றிய தன்மையை உடையவன்.

பிருதுலாட்சன் என்னும் சோழ மன்னன் திருப்பாற்கடலை மந்தர மலையை இட்டுக் கலக்கினான். அதிலிருந்து இனிய சாவா மருந்தாகிய அமுதம் உண்டாயிற்று. அதனைத் தேவர்கள் உண்ணுமாறு கொடுத்தான். சிபி என்ற சோழ மன்னன் ஒரு புறா அடைந்த துன்பத்தை நீக்குவதற்காக ஒப்பற்ற தராசு தட்டில் தன் உடல் சதையை அறுத்து வைத்தான். அது புறாவின் எடைக்குச் சமமாகவில்லை. அதனால் அவன் தானே அந்தத் தட்டில் ஏறி அமர்ந்தான். அப்பொழுதுதான் எடை சரியாயிற்று. தராசில் சிபிச் சக்கரவர்த்தியின் உடல் நிறுக்கப்பட்டது போல் உலக மக்களின் உள்ளமாகிய தராசில் அவன் புகழ் உடம்பும் அளந்து அறியப்பட்டது.

சுராதிராசன் என்பவன் முற்காலத்தில் முதல் சோழனாகப் பிறந்தான். அவனே சோழ மண்டலத்தை ஏற்படுத்தியவன். அவனது மரபிலுதித்த இராசகேசரி, பரகேசரி என்னும் இருவரும் தங்களுடைய கட்டளையால் ஏழுவகைத் தீவுகளையுடைய இந்த உலகம் முழுவதையும் காப்பாற்றிப் புலிக் கொடியினால் ஆணை செலுத்தி, ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தனர்.

'இதுவே நீதியாகும்' என்று கூற்றுவனுக்கு எடுத்துரைத்தவன் கிள்ளி வளவன் என்னும் சோழனாவான். குடகு மலையைக் குடைந்து காவிரியாற்று நீரைச் சோழ நாட்டிற்குக் கொண்டு வந்து ஓடச் செய்தவன் கவேரன் என்பவன் ஆவான். மிருத்யுசித் என்னும் அரசன், தன் நாட்டில் திடீர்ச்சாவு ஏற்படாமல் எமனிடத்தில் வெற்றி கொண்டவன். இம் மூவரும் பெரு வெற்றியுடன் வாழ்ந்த சோழ மன்னர்களாவார்கள்.

சித்திரன் என்னும் சோழன், தன் துகில் கொடியில் இந்திரனைப் புலிக் கொடியாகக் கொண்டான். அதனால் 'வியாக்கிர கேது' என்ற தெப்பும் வெட்டி கீழ்க்கடலையும் போக்குவரவுக்காக மேல் கடளையும் ஒன்று செந்தியை ஜெயா இயான நீர் வேட்கை இயக்கர்களுக்குத் தன்னுடைய ஐந்து இரத்தக் சோழ மன்னன் நீர் நிறைந்த பெரிய கடலிடத்தே குழாய்களையும் அப்பொழுது கொண்டான், 'வாதராசனைப் ஒரு சோழன் வளிச் செல்வனை வரவழைத்து, ஏவல் அவ்வளவு வல்லமையுடைய சோழனை. பணிகொண்டவன்' என்று கூறுவர்.

அசுரர்கள் வானில் உலாவும் மூன்று அச்சமுண்டாக்கும் பதில்களைக் கொண்டு பலர்க்கும் தீங்கிழைத்தனர். அவற்றை அழித்துப் பெருமை கொண்டவன் தூங்கெயில் எறிந்த சோழ மன்னன் ஆவான். இரத்தினக் கற்கள் பதித்து ஒளிவீசும் தனது விமானத்தை வானில் பறக்கும்படி செய்தவன் உபரிசரன் என்னும் சோழனாவான், பாண்டவர்கள் பாரதப் போரை முடிக்கும் வரையிலும் தளராமல் நின்று தருமனது கடல் போன்ற பெரிய படைக்கு உதவி புரிந்தான் ஒரு சோழ மன்னன்.

கிள்ளிவளவன் குகை ஒன்றின் வழியாகத் தனிமையில் நடந்து சென்றான். அங்கு ஒரு நாக கன்னிகையைக் கண்டான். அவள் முல்லை மொக்குப் போன்ற பற்களையும் வேல் போன்ற விழிகளையும் உடையவளாக விளங்கினாள். நாகர்களின் கண்மணி அனைய அந் நாகக் கன்னிகையைக் கிள்ளி வளவன் மணம் புரிந்து கொண்டான்.

சோழன் செங்கணானுக்கும். சேரன் கணைக்கால் இரும்பொறைக்கும் போர் ஏற்பட்டது. அப்போரில் சோழன் வெற்றி பெற்றான். வென்றவன் சேரனைச் சிறைபிடித்துக் காலில் விலங்கு பூட்டி வைத்திருந்தான். சேரனின் ஆசிரியப் பெருந்தகையாகிய பொய்கையார் 'களவழி நாற்பது ' என்னும் நூலைப் பாடிச் சோழனைச் சிறப்பித்தார். அதனால் சேரன் காலில் பூட்டிய விலங்கைச் சோழன் வெட்டி எறிந்து, அவனுக்குத் திரும்பவும் ஆட்சியை அளித்தான்.

ஆதி மால் அமல நாபி கமலத்து அயன் உதித்து
அயன் மரீசி எனும் அண்ணலை அளித்த பரிசும்;
காதல் கூர்தரு மரீசி மகன் ஆகி வளரும்
காசிபன் கதிர் அருக்கனை அளித்த பரிசும்: (187)
அவ் வருக்கன் மகன் ஆகி, மனு மேதினி புரந்து,
அரிய காதலனை ஆவினது கன்று நிகர் என்று
எவ் வருக்கமும் வியப்ப முறை செய்த கதையும்:
இக்குவாகு இவன் மைந்தன் என வந்த பரிசும் 188)
இக்குவாகுவின் மகன் புதல்வன் ஆன உரவோன்,
இகலுவோன் இகல் உரம் செய்து, புரந்தான் எனும்
சக்கு ஆயிரம் உடைக் களிறு வாகனம் எனத்
தான் இருந்து, பொரு தானவரை வென்ற சயமும்: (189)
ஒரு துறைப் புனல் சினப் புலியும் மானும் உடனே
உண்ண வைத்த உரவோன் உலகில் வைத்த அருளும்:
பொரு துறைத்தலை புகுந்து முசுகுந்தன், இமையோர்
புரம் அடங்கலும் அரண் செய்து புரந்த புகழும் (190)

கடல் கலக்க எழும் இன்னமுது தன்னை ஒருவன்

கடவுள் வானவர்கள் உண்ண, அருள்செய்த கதையும்

உடல் கலக்கு அற அரிந்து தசையிட்டும் ஒருவன்

ஒருதுலைப் புறவொடு ஒக்க நிறை புக்க புகழும் (191)

'சுராதிராசன் முதலாக வரு சோழன் முனம் நாள்.

சோழ மண்டலம் அமைத்த பிறகு, ஏழ் உலகையும்

இராச கேசரி புரந்து, பரகேசரிகள் ஆம்

இருவர் ஆணை புலி ஆணை என நின்ற புகழும்: (192)

'காலனுக்கு 'இது வழக்கு' என உரைத்த அவனும்

காவிரிப் புனல் கொணர்ந்த அவனும்; புவனியின்

மேல் அணைத்து உயிரும் வீவது இலை ஆக நமன்மேல்

வென்றி கொண்டவனும், என்று இவர்கள் கொண்ட விறலும்;(193)

'புலி எனக் கொடியில் இந்திரனை வைத்த அவனும்;

புணரி ஒன்றனிடை ஒன்றுபுக விட்ட அவனும்

'வலியினில் குருதி உண்க' என அளித்த அவனும்

வாதராசனை வலிந்து பணிகொண்ட அவனும்; (194)

தூங்கு மூன்று எயில் எறிந்த அவனும் திரள் மணிச்

சுடர் விமானமது வான்மிசை ஊர்ந்த அவனும்;

தாங்கள் பாரதம் முடிப்பளவும் நின்று தருமன்

தன் கடற்படை தனக்கு உதவி செய்த அவனும்;(194)

"தளவு அழிக்கும் நகை வேல்விழி பிலத்தின் வழியே

தனி நடந்து, உரகர்தம் கண்மணி கொண்ட அவனும்;

களவழிக் கவிதை பொய்கை உரை செய்ய, உதியன்

கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட அவனும் (194)

ஆதி முதல், மால் திருமால் அமலம் தூய்மை. நாபி உத் செய்த பரிசும் என்பதும் பாடம்

மனு-மனு நீதிச் சோழன், மேதினி உலகம். அரிய காதலன். சிறந்த மகன், வருக்கம் கூட்டம், பரிசு-தன்மை.

மகன் புதல்வன்-மகனுக்கு மகன்; போன். உரவோன். வல்லமையுடையவன்; ககுந்தன். இகல் பகை. புரந்தான் - இந்திரன் சக்கு-சுண். தானவர்-அரசர் சயம் வெற்றி.

துறை நீர் நிலை. புனல்-நீர். உரளோன்-மாந்தாதா பொருதுறைத் தலை போர்க்களத்தில், புரம் வானுலகம். அடங்கள்- முழுவதும். புரந்த-காப்பாற்றிய. இமையோர் அரண்-காவல்.

சுலக்க-கடைய. எழும்-தோன்றிய. சுலக்கு அற-வருத்தம் நீங்க. துலை-தராக, புறவு-புறா. நிறை எடை.

முன் நாள்-முற்காலத்தில்.

காலன்; நமன்-எமன். வழக்கு முறைமை, நீதி. புவனி - உலகம். வீவது-இறப்பது. விறல்-வெற்றி.

புணரியிடை - கடலில், வாதராசன்-வாயுதேவன். வலிதினில்-கட்டாயமாக. பணி-ஏவல்.

தூங்கு-அசைந்து செல்லுகின்ற. எயில்-மதில் எறிந்த-அழித்த. திரள்-வட்டம். முடிப்பு அளவும்-முடிக்கும் வரையிலும்.

தளவு -முல்லை. அழிக்கும்- கெடுக்கும். நகை - புன் முறுவல்; பற்கள். பிலம்-குகை. உரகர்-நாகர். கண்மணி - நாக கன்னி; கொண்டவன், கிள்ளிவளவன். களவழி-ஒரு சிறந்த நூல்; நாற்பது செய்யுட்களை உடையது; அட்ட களம் என்று முடிவது. உரை செய்ய-பாடி அருள. உதியன்-சேரன்; கணைக்கால் இரும்பொறை. கால்வழி- காலில். தளை - விலங்கு. இட்ட - வைத்த. அவன்- செங்கணான்.

இந்த வரலாறுகள் புராணக் கதைகள் போலப் புனையப் பெற்றுள்ளன.

**கரிகால் வளவன்**

இவ்வாறு தனக்கு முன் விளங்கிய சோழ அரசர்களின் வரலாறுகளை எல்லாம் நாரதர் கூறக் கேட்ட கரிகாலன் அவற்றை இமயத்தில் எழுதினான். பின்னர்த் தனது புகழ்ச் சிறப்பை எழுதத் தொடங்கினான்.

கரிகாற் சோழன் முதலாம் பெருநற்கிள்ளியின் போனும் இளஞ்சேட் சென்னியின் மகனும் ஆவான். பெருஞ்சேரலாதன், நெடுஞ்செழியன் என்னும் Gay பாண்ணடியரை ஒப்பற்ற ஆண் யானையை ஊர்தியாகக் கொண்டு எதிர்த்துப் போரிட்டு வென்றான். வீர மகளின் பெருந்தனங்களைத் தனது தோள்களால் தழுவினான்.

மேலும் கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டுவித்தான். சிற்றரசர் பலரும் அவன் ஆணையை ஏற்றுக் கரை அமைத்தனர். பிரதாபருத்திரன் என்னும் மன்னன் காவிரிக்குக் கரை எடுக்க வராமல் ஆரவாரித்தான். அவனுக்கு நெற்றியிலும் ஒரு கண் இருந்ததாம் ! கரிகாலன் பிரதாபருத்திரனது படத்தை எழுதி வருமாறு ஓளியனுக்குக் கட்டளை இட்டான். படம் வரையப்பட்டு வந்தது. அதில் அவனுக்கு மிகையாக நெற்றியில் இருந்த ஒரு கண்ணைக் கரிகாலன் தனது பாதத்தால் மிதித்து அழித்தான். அப்பொழுதே

பிரதாபருத்திரன் நெற்றிக் கண்ணை இழந்தான். செருக்கு அழிந்த பிரதாபருத்திரன் தன் பிழையுணர்ந்து வந்து கரிகாலன் கட்டளையை நிறைவேற்றினான்.

மீன்கள் துள்ளிப் பாயும் தடாகங்களையுடைய குருமி என்னும் ஊர் சேர்ந்த நாட்டைக் கரிகாலன் வெற்றி பெற்றான். மேலும் இனிய செந்தமிழ்ச் செய்யுள் பாடிப் புகழோடு வாழும் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர் கரிகாலனின் நாடு. வீரம், கொடை, நீதி ஆகியவற்றைப் பாடிப் பதினாறு இலட்சம் பொன்னைப் பரிசாகப் பெற்றார். அந்நூலே பட்டினப் பாலை ஆகும்.

எந்தக் காலத்திலும் களத்தில் முதுகு காட்டி ஓடாத சேர அரசர்களும், பாண்டிய அரசர்களும் ஆகிய இரு பெரு வேந்தர்களையும் கரிகாலன் தோல்வியுறச் செய்தான். அவர்கள் இடுப்பில் சுந்தைத் துணியை அணிவித்தான். தலையில் அகல் விளக்கை எரிய வைத்துத் தன் ஆற்றலைத் தோற்றுவித்தான். இத்தகைய தனது புகழ்ச் சிறப்புக்களையும் கரிகாலன் இமய வெற்பில் பொறித்தான்.

'என்று மற்றவர்கள் தங்கள் சரிதங்கள் பலவும்
எழுதி, மீள இதன்மேல் வழுதி சேரன் மடியத்
தன் தனிக் களிறு அணைந்தருளி, வீரமகள் தன்
தன தடங்களொடு தன்புயம் அணைந்த பரிசும்.(197)
'தொழுது மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திலா முகரியைப் 'படத்து
எழுதுக!' என்று கண்டு "இது மிகைக் கண்" என்று.
இங்கு அழிக்கவே, அங்கு அழிந்ததும், (198)

வேழம்-யானை உகைத்து செலுத்தி, ஆலி மழைத்துளி, பகைவர்தம் விரைந்த எமச்சி, அசைய தொலைய கூடல்-மதுரை இகல் பகை. கடந்தது வென்றது. இசை புகழ்.

## முதலாம் இராசராச சோழன்

முதலாம் இராசராச சோழன் இரண்டாம் பராந்தகனின் மகன். இவன் சேர நாட்டில் சத சதய நட்சத்திர நாளில் ளில் விழா ஒன்றை ஏற்படுத்தினான். ஒப்பற்ற ஒரு யானையின் மேல் காலையில் தோன்றும் இளஞாயிற்றைப் போல் விளங்கினான். உதகை என்னும் ஊரினை வென்றான். ஒப்பற்ற துதிக்கையையுடைய யானைகள் பலவற்றைக் கவர்ந்து கொண்டு வந்தான்.

சதய நாள் விழா உதியர் மண்டலம்

தன்னில் வைத்தவன், தனியொர் மாவின்மேல்

உதயபானு ஒத்து உதகை வென்ற கோன்

ஒருகை வாரணம் பல கவர்ந்ததும்; (202)

உதியர் சேரர். மண்டலம்-நாடு. மா-யானை. உதயபானு-எழு ஞாயிறு. உதகை -ஓர் ஊர். உதக மண்டலம் என்றும் கருதுவர். வாரணம் யானை.

## இராசேந்திர சோழன்

முதலாம் இராசராச சோழனின் திருமகன் இராசேந்திரன். இவன் தன் ஆட்சிக் காலத்தில் மிகுந்த சினமுற்றுக் கங்கையாறு வரை படை எடுத்துச் சென்று வென்றான். மண்ணை என்ற ஊரில் கங்கையின் நீரைத் தன் போர் யானைகள் குடிக்கும் படி செய்தான். மேலும், கடல் கடந்து சென்று கடாரம் என்னும் நாட்டையும் வென்று. அதனைத் தனக்கு உரிமையாகக் கொண்டு, தன் குடைக்கீழ் வைத்து ஆட்சி செலுத்தினான்.

களிறு கங்கைநீர் உண்ண, மண்ணையில்

காய் சினத்தொடே கலவு செம்பியன்,

குளிறு தெண்திரைக் குரை கடாரமும்

கொண்டு மண்டலம் குடையுள் வைத்ததும்; (203)

மண்ணை-ஓர் ஊர். காய் சினத்தொடே-மூண்டு எரியும் கோபத்தோடு. கலவு- பொருந்திய. செம்பியன்- சோழன்; இராசேந்திரன். தெள்-தெளிந்த. திரை- ஓலை. குரை-ஒலி. கடாரம் - பர்மா அல்லது மலேயா. மண்டலம் -உலகம்.

**முதலாம் இராசாதிராசன்**

முதலாம் இராசாதிராசன் பூண் அணிந்த தந்தங்களையுடையமலை போன்ற யானையைச் செலுத்திக் கம்பிலி என்னும் நகரில் தன்வெற்றித் தூணை நிலை நிறுத்தினான். காவல் மதில்களைக்கொண்ட கலியாணபுரம் என்ற நகரில் வீரர் தம் வலிமை கெடும்படி எட்டு மலைகளிலும் தன் புலிக் கொடியைப் பதித்தான்.

கம்பிலிச் சயத்தம்பம் நட்டதும்,

கடிஅரண் கொள் கல்யாணர் கட்டறக்

கிம்புரிப் பணைக்கிரி உகைத்தவன்.

கிரிகள் எட்டினும் | புலி பொறித்ததும்: (204)

தம்பிலி-ஒரு நகரம் சயம் வெற்றி, தம்பம்தூண் சாளுக்கிய நிலைநிறுத்தியதும். சுடி-காவல் அரண் மதில் கஊர்கள் சுட்டு க்கிய நாட்டின்கண் உள்ள கலியாணபுரத்திலுள்ள வீ புண். கிரி மலை வலிமை கெட. கிம்புரி-யானைத் தந்தத்தில் பூட்டும் பூண். போன்ற யானை. உகைத்தவன் செலுத்தியவன். கிரி-மலை.

**இராசேந்திரசோழன்**

கிருட்டிணை ஆற்றுக் கரையிலுள்ள கொப்பம் என்னும் ஊரில் அண்ணனான இராசாதிராசனும் இராசேந்திர தேவனும் மேலைச்

சாளுக்கியனான ஆகவமல்லனுடன் கடும்போர் புரிந்தனர். அதில் இராசாதிராசன் இறந்துபட்டான். அப்போது இராசேந்திரதேவன் ஒப்பற்ற யானையின் மேல் ஏறிவரும் மற்றொரு யானையைப் போல் வந்து, 'அஞ்சாதீர்' எனப் படைத்தலைவர்களை ஊக்கினான்.; இறுதியில் வெற்றியும் அடைந்தான். அதே இடத்தில் முடி தரித்துக் கொண்ட இராசேந்திர தேவன் உலகம் முழுவதையும் போர்க்கக் கூடிய ஒப்பற்ற குடையைத் தன் மேல் கவித்துக் கொண்டான்.

ஒருகளிற்றின்மேல் வரு களிற்றை ஒத்து

உலகு உயக்கொளப் பொருது கொப்பையில்

பொரு களத்திலே முடிக் கவித்தவன்

புவி கவிப்பதோர் குடை கவித்ததும்; (205)

**இராச மகேந்திரன்**

இராச மகேந்திரன் இராசேந்திர தேவனுக்குப் பிறகு சிறிது காலமே ஆட்சி புரிந்தான். இவன் எல்லா நூல்களுக்கும் முதன்மையாகிய நான்கு வேதங்களிலும் முன்பு சொல்லப்பட்ட நல்ல ஒழுக்கங்களைப் புதுப்பித்தான். 'மனுநீதிச் சோழனைக் காட்டிலும் நீதியில் மூன்று நான்கு மடங்கு மேம்பட்டவன்' என்று யாவரும் சொல்லும் படி ஆட்சி நடத்தினான். இவனுடைய நிலவைப் போன்ற குடை நிழலில் அறம் எங்கணும் தழைத்து வளர்ந்தது.

பனுவலுக்கு முதல் ஆயவேதம் நான்கில்

பண்டு உரைத்த நெறிபுதுக்கிப், பழையர் தங்கள்

மனுவினுக்கு மும்மடி நான்மடி ஆம் சோழன்

மதிக் குடைக்கீழ் அறம் தளிர்ப்ப, வளர்ந்த வாறும்; (206)

பனுவலுக்கு நூல்களுக்கு, நெறி ஒழுக்கம். புதுக்கி புதுப்பித்து பழையர் முன்னோர். ஆம் சிறந்தவன் ஆகிய, தளிர்த்தல் தழைத்தல். ஆறும் தன்மையும்.

**முதற் குலோத்துங்கன் தோற்றம்**

இராசமகேந்திரனுக்குப்பின் அவன் தம்பி வீரராசேந்திரன் அரசு எய்தினான். இவன் கூடல் சங்கமம் என்னும் ஊரில் குந்தள நாட்டு வீரரை வெற்றிக் கொண்டு நாடு காத்து அருள் புரிந்தான். அதன் பின்னர் 'சிறப்பு மிக்க, இந்த நில மகளானவள், இவனிடம் வந்து சேர, என்ன தவம் செய்தாளோ' என்று யாரும் கூறும் வண்ணம், முதல் குலோத்துங்க சோழன் தோன்றினான்.

குந்தளரைக் கூடல் சங்கமத்து வென்ற

கோன், அபயன், குவலயம் காத்து அளித்த பின்னை

'இந்தநிலக் குலப்பாவை இவன்பால் சேர

என்ன தவம் செய்திருந்தாள்' என்னத் தோன்றி: (207)

கோன்-அரசன். குவலயம் உலகம். குலப்பாவை- மேன்மை மிக்க மகள். தோன்றி-பிறந்து.

**வெற்றிச் சிறப்பு**

கீழ் நடு மேல் ஆகிய மூன்று உலகங்களின் நிலப்பரப்பு எவ்வளவு தொலைவு பரவி இருக்குமோ அவ்வளவு தொலைவும், நான்கு மறைகளும் எவ்வளவு காலம் நிலை பெற்றிருக்குமோ, அவ்வளவு காலமும், கடல்களை வட்ட வடிவமாய்ச் சூழ்ந்துள்ள சக்கரவாள மலையளவும் தன் செங்கோல் செல்லுமாறு குடிமக்களைக் காப்பாற்றி, அருள் புரிந்தான் முதற் குலோத்துங்க சோழன். இவனே, இந் நூலின் பாட்டுடைத் தலைவன் ஆவான்.

எவ்வளவும் திரிபுவனம் உளவாய்த் தோன்றும்,

எவ்வளவும் குல மறைகள் உளவாய் நிற்கும்.

அவ்வளவும் திகிரிவரை அளவும் செங்கோல்

ஆணை செல, அபயன் காத்து அளிக்குமாறும்; (208)

திரி புவனம் மூன்று உலகம். குலமுறை-மேன்மையான 3வதம். திகிரி வரை-சக்கரவாள மலை. ஆறும்-விதமும்.

**கரிகாலன் எழுதி முடித்தான்**

மேலே கண்ட வண்ணம் சோழ அரசர்களின் வரலாற்றினை நாரதர் கூறி முடித்துத் தம் இருப்பிடம் சென்றார். அவர் கூறிய பழைய வமிசத்தில் உள்ளவர்கள் பெயர்களையும், அவர் புரிந்த புகழ்மிக்க செயல்களையும், பின் வருபவர்களின், சிறப்புக்களையும், எழுதுவதற்கு அருமையான மறையினை ஏட்டில் எழுதினாற் போல பெரிய இமய மலையின் தென் திசைப் பகுதியில் உள்ள நடுவிடத்தில், கரிகாலன் ஒன்று விடாமல் எழுதி முடித்தான்.

'இப்புறத்து இமயமால் வரையின் மார்பின் அகலத்து

எழுதினான்: எழுதுதற்கு அரிய வேதம் எழுதி,

ஒப்புறத் தனது தொல்மரபும். அம் மரபின் மேல்

உரைசெய் பல்புகழும், ஒன்றும் ஒழியாத பரிசே ! (209)

இப்புறத்து- தென்திசைப் பகுதியில். மார்பின் அகலத்து-நடு இடமாகிய பரந்த இடத்தில். ஒப்புற போல. பரிசு-தன்மை.

**காளி வியத்தல்**

முன்னமே கண்டபடி தேவியின் சீற்றத்திற்கு அஞ்சி இமயமலைச் சாரலில் சென்று மறைந்து வாழ்ந்த முதுபேய் ஒன்று அங்கிருந்த உருத்திரயோகினியை வணங்கிற்று. சோழர் வரலாற்றை நாரதர் கூற இமயமலையில் எழுதிய கரிகாலன் 'இராச பாரம்பரியத்தைப் பின்பு

சொல்பவராகிய அவர்கள் செய்த குற்றங்களை எல்லாம் பொறுத்துக் கொள்வார்களாக!' என்று முடித்திருந்தான். அந்த வரலாற்றை உருத்திர யோகினி தமிழ்நாட்டு முதுபேய்க்குக் கூறினாள். முதுபேய் 'தான் செய்த பிழையையும் சோழ மரபினர் பொறுப்பார்கள்' என்று எண்ணி, அவர்கள் வரலாற்றினைக் கற்று வந்து, காளி, தேவியை வணங்கி உரைத்தது. சோழர் வரலாற்றைச் சொன்ன முதுபேயின் மூதறிவுத் திறனைக் காளி வியந்தாள்.

'எழுதி, 'மற்று உரை செய்து அவரவர்கள் செய் பிழை எல்லாம்

எமர் பொறுக்க!' என இப்படி முடித்த இதனைத்

தொழுது கற்றனம்.' எனத் தொழுது சொல்லும் அளவில்

சோழ வம்சம் இது என்ன அறிவு என்ன அழகோ! (210)

மற்று-பின்பு. உரை செய்து சொல்லி. எமர்-எம்மவர். தொழுது- வணங்கி.

**காளி மகிழ்தல்**

நில மகளாகிய உயர்குலப் பெண்ணுக்குத் தலைமகனாக முதற் குலோத்துங்க சோழன் தோன்றினான். அவன் பிறந்த சோழர் குலப்புகழையும், நீதியையும் கேட்டு அவள் களிப்படைந்தாள். இவ்வளவு சிறப்புடைய குலத்தில் தோன்றிய முதற் குலோத்துங்க சோழனைத் தனது அருமை மகனாகவே கருதினாள். தன் மகனைச் சான்றோன்' எனக் கேட்டத்தாய் பெற்ற காலத்திலும் பெரு மகிழ்ச்சி அடைவது போல, 'முதற் குலோத்துங்க சோழனை மகனாகப் பெற்றெடுத்த காலத்திற்கூட இப்பொழுது அடையும் இன்பத்தைப் போல் இருந்தது இல்லை' என்று கூறி அவள் பெரிதும் மகிழ்ந்தாள் !

வையகமாம் குலமடந்தை மன் அபயன்

தன்னுடைய மரபு கேட்டே

ஐயனை யான் பெற்று எடுத்த அப்பொழுதும்

இப்பொழுது ஒத்து இருந்தது இல்லை! (211)

வையம் உலகம். குலமடந்தை-உயர்வுடைய பெண். மன்- தலைவன். மரபு-பரம்பரை.

**காளி புகழ்தல்**

உலகங்கள் எல்லாவற்றையும் ஒப்பற்ற குடைக்குள் போர்த்திருக்கின்ற முதற் குலோத்துங்கனுடைய பரம்பரையோர் புகழைக் கேட்ட-பேய்களை எல்லாம் காப்பாற்றுகின்ற காளி, 'இனிக் குலோத்துங்கனே உலகங்களை எல்லாம் காப்பாற்றுவான்' என்று கூறிப் புகழ்ந்தாள்!

'உலகை எலாம் கவிக்கின்ற ஒரு கவிகைச்

சயதுங்கன் மரபின் கீர்த்தி'

அலகை எலாம் காக்கின்ற அம்மை. 'பூ

தலம் காப்பான் அவனே!' என்ன (212)

கவிக்கின்ற- போர்த்திருக்கின்ற. கவிகை - குடை. சயதுங்கன் குலோத்துங்கன். மரபு-பரம்பரை. கீர்த்தி-புகழ் . அலகை - பேய அம்மை-காளி. பூதலம்-உலகம். 'அலகை எல்லாம் கற்று உய்ம்மி அகில, பூதம் காப்பான் அவனே! கண்ணிற்குத் தொடர்புடனும் விளங்கும்.

**பிரபந்த இலக்கணம்**

பிரபந்தம்' என்ற சொல் மிகவும் பிற்காலத்தில் வந்தது. ஆனால் பிரபந்தங்கள் என்னும் நூல்வகை பழமையான காலம் முதல் இருந்து வந்துள்ளது. காப்பியத் தன்மை இல்லாது பாடப்பெற்ற சிற்றிலக்கியம் பிரபந்தம் ஆயிற்று. இக்காலப் பகுதியில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி செய்த நூல்கள் அனைத்துமே பிரபந்தங்கள் ஆகும். அவை பற்றிச் சைவ இலக்கியம் என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. அன்று தோன்றி இன்று

இல்லாமல் போன சில பரணிப் பிரபந்தங்கள் உள்ளன. (96 வகைப் பிரபந்தங்களில் பரணி, உலா, கோவை, தூது முதலியவை அடங்கும்).

பரணி என்ற நிலையில் கொப்பத்துப் பரணியும், கூடல சங்கமத்துப் பரணியும், பிரபந்தம் அல்லாத பிற நூல்கள் என்ற நிலையில் கனா நூல், ஓவிய நூல், திருவள்ளுவ மாலை போன்ற நூல்களும் அடங்கும். ஏழாம் நூற்றாண்டில் நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன் மீது பாடப்பெற்ற பாண்டிக்கோவையே தனியான முதல் பிரபந்தம் ஆகும்.

பிரபந்த இலக்கணம் பொருத்தங்கள் அல்லாத மற்றொரு வகைப்பிரிவு, பிரபந்தங்களின் அமைப்பினைப் பற்றிக் கூறுவதாகும். தொல்காப்பியர், ஓரளவு குறிப்பாகச் சுட்டிச் சென்ற இலக்கியப் பாகுபாடுகளைக் கால வளர்ச்சியில் விரித்துக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்பணியில் பாட்டியல் நூல்கள் தொல்காப்பியர் காலத்தில், 42, செய்யுள் வகைகள் இருந்தன. அவர் காலத்தில் பரந்துபட்ட அளவில் பல்வேறு வகைத் தனி இலக்கியங்கள் இல்லை. ஆயினும், அத்தகைய இலக்கியங்கள் காலப்போக்கில் தோன்றுதல் கூடும் என்பதனை அறிந்தே விருந்து என்னும் வனப்பினை அமைத்துள்ளார். பிற்காலத்தில் பல புதிய இலக்கிய வகைகள் பழமையின் அடிப்படையில் தோன்றின. இதற்கு ஏற்பப் பாட்டியல் நூல்கள், அதன் அமைப்பையும் ஒழுங்கையும் ஆராய முற்பட்டன.

**பாட்டியல் நூல்கள்**

பாட்டியல் என்பது ஒரு நூல் வகையாகும். இது பிரபந்த இலக்கியங்கள் எனப்படும் சிற்றிலக்கியங்கள் தொடர்பான இலக்கணத்தைக் குறிக்கும். பிரபந்தங்களின் வகை, அவற்றின் இலக்கணங்கள், அவற்றைப் பாடவேண்டிய முறை, வெவ்வேறு வருணத்தாருக்குரிய பாடல்கள், அவ்வருணத்தார் இயல்புகள், பாட்டுடைத்தலைவர் நூல் கேட்கவேண்டிய முறை, நூல் அரங்கேற்றம்செய்வதற்குரிய அவையின் இயல்பு, புலவர்களின்

வகை போன்றவை பாட்டியலுள் அடங்குகின்றன. இதனால், செய்யுள்களின் உறுப்புகளையும் அவற்றின் இனங்களையும் விளக்கும் யாப்பியலினின்றும் வேறுபடுகின்றது.

பாட்டியல் நூல்கள் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், இலக்கண விளக்கத்துள் அமைந்த இலக்கண விளக்கப் பாட்டியல் என்பன. மேலும் முத்துவீரியத்துள்ளும், தொன்னூல் விளக்கத்திலும் பாட்டியலைக் காண்கிறோம். பிரபந்ததீபிகை என்னும் நூலும் பாட்டியலே ஆகும். இவையன்றி வாருணப் பாட்டியல், தத்தாத்திரேயப் பாட்டியல், பண்டாரப் பாட்டியல், அகத்தியர் பாட்டியல், மாமூலர் பாட்டியல், பாட்டியல் மரபு, பிரபந்ததீபம், பிரபந்தத்திரட்டு முதலிய நூல்கள் பற்றியும் சில சில குறிப்புக்கள் கிடைத்துள்ளன. பன்னிருபாட்டியல் முதலிய நூல்கள் பற்றிய செய்திகளை, அவ்வந்நூல் பற்றிய தலைப்பில் காண்க. அங்கு ஒவ்வொரு நூலின் சிறப்பியல்புகளையும், அமையும் முறைகளையும் குறித்துள்ளேன்.

பிரபந்த இலக்கியங்கள் தோன்றிய பின்னரே அவற்றுக்கு இலக்கணம் வகுக்கப் பாட்டியல் நூல்கள் தோன்றின. தமிழில் பல பாட்டியல் நூல்கள் எழுதப்பட்டதாக அறியப்பட்டுள்ளன. அவற்றுள்,

- இந்திரகாளியம் ஆசிரியர் பெயர் தெரியவில்லை -கி.பி.10-ஆம் நூற்றாண்டு
- இலக்கணவிளக்கப் பாட்டியல் வைத்தியநாததேசிகர் -கி.பி.17-ஆம் நூற்றாண்டு
- சிதம்பர பாட்டியல் பரஞ்சோதிமுனிவர் -கி.பி.16-ஆம் நூற்றாண்டு
- தாத்தாத்திரேயர் பாட்டியல்
- நவநீதப் பாட்டியல் நவநீதநடனார் -கி.பி.14-ஆம் நூற்றாண்டு
- பண்டாரப் பாட்டியல்

- பன்னிரு பாட்டியல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை -கி.பி.13-ஆம் நூற்றாண்டு
- பிரப்பந்த தீபம் ஆசிரியர் பெயர் தெரியவில்லை -கி.பி.19-ஆம் நூற்றாண்டு
- பிரபந்த தீபிகை முத்துவேங்கட சுப்பையர் -கி.பி.19-ஆம் நூற்றாண்டு
- பிரபந்த மரபியல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை -கி.பி.16-ஆம் நூற்றாண்டு
- பிரபந்த திரட்டு ஆசிரியர் பெயர் தெரியவில்லை –கி. பி. 19–ஆம் நூற்றாண்டு

******

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பரணியின் பெயர் காரணம் கூறுக. | K2 | CO2 | PO4 |
| 2 | தூது பற்றிக் குறிப்பு வரைக. | K4 | CO4 | PO2 |
| 3 | முதல் தூது நூல் எது? அவற்றின் இலக்கணம் கூறுக. | K5 | CO1 | PO1 |
| 4 | பிள்ளைத்தமிழ் பற்றி - குறிப்பு வரைக. | K3 | CO5 | PO2 |
| 5 | அந்தாதிகான இலக்கணத்தை கூறுக. | K1 | CO6 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் | K1 | CO1 | PO4 |
| 2 | பரணியின் இலக்கணத்தை கூறி விவரிக்க. | K2 | CO2 | PO5 |
| 3 | ஆடவர் பெண்களுக்கு தூது அனுப்பும் நூல் எவை? ஏதேனும் ஒன்றினை நிறுவுக. | k5 | CO3 | PO2 |
| 4 | பள்ளு இலக்கியத்தின் தோற்றம் பற்றி கட்டுரைக்க | K3 | CO2 | PO1 |
| 5 | கலம்பகம் -இலக்கணம் தருக. | K4 | CO4 | PO3 |

அலகு 2

## தமிழ் விடு தூது

**தமிழ்விடு தூது** என்ற நூல், மதுரையில் எழுந்தருளி உள்ள சோமசுந்தரக் கடவுளிடம் ஒரு பெண் தன் காதல் துன்பத்தைக் கூறித் தமிழ்மொழியைத் தூது அனுப்பியதாக அமைந்துள்ளது.

இந்த நூலில் தூது பெறுவோர் கடவுள். அதாவது சோமசுந்தரக் கடவுள். தூது விடுவோர் ஒரு பெண். தூது செல்லும் பொருள் தமிழ்மொழி. இந்த நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. இந்த நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர் தெரியவில்லை.

**நூல் கூறும் பொருள்கள்**

தூது செல்லும் தமிழ் மொழியின் பெருமைகளைக் கூறுதல்.

பிற பொருட்களைத் தூதாக அனுப்பாமைக்குரிய காரணங்களைத் தலைவி தூதுப் பொருளிடம் கூறுதல்.

தூது பெறும் தலைவன் ஆகிய சோமசுந்தரக் கடவுளைப் புகழ்ந்து கூறுதல்.

தலைவி தன் துன்பம் கூறுதல்.

தலைவி தமிழிடம் தன் தூதுச் செய்தியைக் கூறித் தூது வேண்டுதல்.

என்ற பகுதிகளைக் கொண்டு திகழ்கின்றது **தமிழ்விடுதூது.**

**இடம் பெறும் செய்திகள்**

இனி, மேற்கண்ட செய்திகள் **தமிழ்விடு தூதில்** எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதைக் காண்போம்.

**தமிழ்மொழியின் பெருமை**

தூது அனுப்புவோர் தூதுப்பொருளிடம் அதன் பெருமைகளைக் கூறித் தூது செல்ல வேண்டுவதை, எல்லாத் தூது நூல்களிலும் காணலாம். இந்த நூலில் தூது விடும் தலைவி, தூதுப் பொருளான தமிழின் பல்வேறு பெருமைகளைப் புகழ்ந்து கூறுகின்றாள்.

**தமிழைப் புகழக் காரணம்**

சிவபெருமான், தடாதகைப் பிராட்டியார், விநாயகர், முருகன், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், அகத்தியர், தொல்காப்பியர், மெய்கண்ட தேவர், திருவிசைப்பாப்பாக்கள் பாடிய திருமாளிகைத் தேவர் முதலியவர்கள், திருமூலர், கபிலர், பரணர், நக்கீரர், ஐயடிகள் காடவர்கோன், கழறிற்றறிவார், திருவள்ளுவ நாயனார் முதலாகிய கல்வி, கேள்விகளில் சிறந்த எல்லாருமாய் நீ இருக்கின்றாய். ஆகவே, உன்னைக் கண்டு, உன் பொன் போன்ற அடிகளைப் புகல் இடமாகக் கொண்டு போற்றுகின்றேன் என்று, தலைவி முதலில் தமிழ்மொழியைப் போற்றக் காரணம் கூறுகின்றாள்.

***கல்லாதார் சிங்கம்எனக் கல்விகேள்விக்கு உரியர்***
***எல்லாரும் நீயாய் இருந்தமையால் - சொல்ஆரும்***
***என்அடிக ளேஉனைக்கண்டு ஏத்தின்இடர் தீரும்என்று***
***பொன்அடிக ளேபுகலாப் போற்றினேன்***
***(கண்ணிகள், 15-16)***

(**ஏத்தின்** = புகழ்ந்தால்; **இடர்** = துன்பம்; **புகலா** = அடைக்கலமாக)

என்கிறாள்.

**தமிழை அரசனாக உருவகம் செய்தல்**

"பாவே ! நூலே ! கலையே ! புலவர்களுடைய உள்ளம் கருகாது சொல் விளையும் செய்யுளே ! வெண்பா முதலாக மருட்பா இறுதியாக உள்ள 5 குலங்களாய் நீ வந்தாய் ! கொப்பூழில் உதான வாயு தரித்து; வாக்கு ஆகிய கருப்பத்தை அடைந்து; தலை, கழுத்து, நெஞ்சு ஆகிய இடங்களைச் சார்ந்து; நாக்கு, பல், மேல் வாய் ஆகியவற்றில் உருவாகி; முதல் எழுத்துகள் முப்பதும், சார்பெழுத்துகள் இருநூற்று நாற்பதுமாய்ப் பிறந்தாய்" என்கிறாள் தலைவி. இப்பகுதியில் தமிழ் எழுத்துகளின் பிறப்பு முறை கூறப்படுகின்றது.

எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, இடைநிலை, ஈற்றுநிலை, போலி, பதம், புணர்ச்சி என்ற 12 பருவங்களை உடையதாய் வளர்ந்தாய்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பாலும் ஊட்ட நீ நன்கு வளர்ந்தாய்.

பிள்ளைத் தமிழ் நூலுக்குரிய பத்துப் பருவங்களாக வளர்ந்தாய்.

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய செய்யுள் ஈட்டச்சொற்கள் நான்கும்; பெயர், வினை, இடை, உரி ஆகிய செந்தமிழ்ச் சொற்கள் நான்கும்; அகத்திணைகள் ஏழும்; புறத்திணைகள் ஏழும்; எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினம் என்ற எட்டும்; அணிகள் முப்பத்தைந்தும் கொண்ட மிக்க அழகுடைய மாப்பிள்ளையாய் உள்ளாய்.

செப்பல் பண், அகவல் பண், துள்ளல் பண், தூங்கல் பண் ஆகிய பண்கள் பட்டத்துப் பெண்களாக உள்ளனர்.

ஐந்து வகை இசைக் கருவிகள் வெளியிடும் 103 பண்கள் பின்னர்

மணந்த பாவையராக உள்ளனர்.

வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரம் ஆகிய ஒன்பது சுவைகள் ஆகிய குழந்தைகளைப் பெற்றாய்.

நாடகமாகிய மனைவியுடன் கொலுவில் வீற்றிருக்கின்றாய் எனத் தமிழ்மொழியின் சிறப்புகள் கூறப்படுகின்றன.

பெரும் காப்பிய இலக்கியத்திற்குரிய 18 வருணனைகள் ஆகிய வாழ்வு எல்லாம் கண்டு மகிழ்ந்தாய்.

வையை ஆற்றில் பெருகி வந்த நீரைத் தடுக்க மண் சுமந்த சிவபெருமானைப் பாண்டிய மன்னன் அடித்த பிரம்பை உன் செங்கோல் ஆகக் கொண்டாய்.

திசைச் சொற்கள் ஆகிய தமிழ் நீங்கிய 17 மொழிகளும் உன் சிற்றரசர்கள் ஆவர்.

உன் நாட்டின் எல்லை ஆக மேல் கடல், கீழ்க்கடல், குமரி ஆறு, திருவேங்கடம் ஆகியவற்றைக் கொண்டாய்.

வையை ஆற்றின் வடக்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும், மருத ஆற்றின் தெற்கும் ஆகிய நாட்டை உன் அரண்மனையாகக் கொண்டாய்.

மூன்று வேந்தர்கள் ஆகிய சேரன், சோழன், பாண்டியன் ஆகியவர்களின் வாகனமாக நீ நில உலகம், தேவர் உலகம், பாதாள உலகம் ஆகியவற்றிற்குச் சென்றாய்.

வேதங்கள், ஆகமங்கள் ஆகியன உன் புரோகிதர்கள். பெரும் காப்பியங்கள், நாடக நூல்கள் ஆகியவை உன் நண்பர்கள். சாத்திரங்கள் ஆகிய சமய நூல்கள் உன் நாட்டைப் பாதுகாக்கும் படைத்தலைவர்கள். மகாபாரதம், பதினெட்டுப் புராணங்கள் ஆகியன உன் படைகள்.

சொல் அணிகள் உன் அங்கங்கள்.

தேவார மூவர் பாடிய பதிகங்களும், வாதவூரர் அருளிய திருவாசகமும் அவர் கூறத் தில்லையம்பலவன் எழுதிய திருக்கோவையாரும், ஐந்து பெரும் காப்பியங்களும், திருவாரூர் மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, திருவாமாத்தூர்க் கலம்பகம், கலிங்கத்துப் பரணி, பொன்வண்ணத்தந்தாதி, இராசராச சோழன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் ஆகியன உன் மெய்க்காப்பாளர்கள். இவ்வாறு தமிழ்மொழியை மன்னனாக உருவகம் செய்து பல சிறப்புக்களையும் கூறக் காணலாம்.

**தமிழைக் கனியாக உருவகம் செய்தல்**

வெண்பா முதலிய நான்கு வகைப் பாக்களும் வயல்களின் வரப்புகள். பாவினங்கள் மடை. நல்ல வனப்பாகிய காளைகளால் மனம், புத்தி, அகங்காரம், அந்தக்கரணம் என்ற ஏரைப் பூட்டி, நல்ல நான்கு நெறிகளை விதையாக விதைத்து, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகைப் பொருள்களை விளைவிக்கும் நாளில், புன்கவிகளாகிய களைகளை, அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரர், ஒட்டக்கூத்தர் ஆகியோர் களைகின்றனர். இதனால், பெருங்கனியாகத் திகழும் தமிழே என்று தமிழ்மொழியைக் கனியாக உருவகித்துப் போற்றுகிறாள்.

**சிறப்புக்கள்**

சிந்தாமணியாய் உள்ள உன்னைச் **சிந்து** என்று கூறிய நாக்கு சிந்தும். (**சிந்தாமணி** = ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. **சிந்து** = சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.) உலகில் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்ற 5 நிறங்கள் உண்டு. ஆனால் உனக்கு நூறு (பா) வண்ணங்கள் உண்டு. கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்ற ஆறுவகைச் சுவைகள் (ரசம்) உண்டு. ஆனால் உனக்கு வீரம்,

அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரம் என்ற 9 வகைச் சுவைகள் உண்டு.

அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பால்களுடன் ஆண்பால், பெண்பால் என்ற இரண்டு பால்களும் சேர்ந்து உனக்கு ஐந்து பால்கள் உண்டு என்று புகழ்கின்றாள்.

**அரசியல் தூது**

ஒருவர் தம்முடைய கருத்தை மற்றொருவருக்கு ஓர் ஆன் வாயிலாகச் சொல்லி விடுப்பது ாது எனப்படும். செய்தியை ஒலையில் எழுதிக் கொடுத்து அனுப்புவதும். உண்டு தூதாகச் செல்பவன் தூதன் எனப்படுவாலை

பண்டை நாளில் தூது என்பது பெரும்பாலும் அரசியல் தூதாகவே இருந்தது." தலைவன் ஒருவன் களவு - கற்புக் காலங்களில் தலைவியைப் பிரிந்து செல்லும் பிரிவுகள் பற்றிப் பேசுமிடத்துத் தொல்காப்பியர்..

'ஓதல் பகையே தூது இவை பிரிவே'

(தொல். பொருள். அகத். 25)

என்கிறார். இந் நூற்பாவிற்கு நச்சினார்கினியர். "ஓதற்குப் பிரிதலும், பகைமேற்பிரிதலும், பகைவரைச் சந்து செய்தல் முதலிய தூது பற்றிப் பிரிதலும் என மூவகைப்படும்" என விளக்கம் தருகிறார். இதனால் பகை நிகழ்ந்தவழித் தூது நிகழ்தல் நேரும் என்பது பெறப்படும்.

திருவள்ளுவர் பொருட்பாலில் அரசனுக்குரிய அங்கங்கள் பற்றிப் பேசுமிடத்து அமைச்சியலில் 'தாது' னும் ஓர் அதிகாரம் வைத்துள்ளார். இங்கே

எது என்பதற்குப் பரிமேலழகர், செத்தி விக்கிரங்கட்டு (பொருந்தச் செய்தல், பிரியச் செய்தல்) வேற்று வேந்த னிடைச் செல்வானது தன்மை" என்று கூறுவர். இந்த அதிகாரத்தில் தூது செல்வானுக்குரிய தன்மை, தகுந் முதலியன பற்றி விவரித்துள்ளார்.

'விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்

வாய்சோரா வன்கண வன்" (குறள் 689)

எனத் தூதுரைப்பானின் திண்மையைப் புலப்படுத்தியுள்ளார்.

சிலப்பதிகாரம் முதலிய காவியங்களில் அரசியல் சார்ந்த தூது நிகழ்ச்சிகள் பேசப்பட்டுள்ளன. இராமாய ணத்தில் அனுமன், அங்கதன், ஆகியோர் இராமன் விடுத்த செய்தி கொண்டு இராவணனிடம் தூதாகச் சொன்றனர். மகாபாரதத்தில் உலூகன் தூது, சஞ்சயன் தூது, கிருட்டிணன் தூது இடம் பெற்றிருக்கக காணலாம். சுந்த புராணத்தில் வீரபாகு தேவர் தூது சிறப்பாகக் குறிப் பிடத்தக்கது.

புறவாழ்க்கையில், சிறப்பாக ஆடவரே தூதுவராக அமைகின்றனர். அதிகமான் நெடுமானஞ்சியின் பொருட்டுத் தொண்டைமானிடம் ஔவையார் தூது சென்றது (புறம் 95) போல்வன சிறுபான்மை நிகழ்ச்சி.

அகவாழ்க்கையில் தலைவன் தலைவியர்க்கிடையே ஊடல் தீர்க்கும் பொருட்டுத் தூது செல்வாரை 'வாயில்' என்று தொல்காப்பியர் சுட்டுகிறார்.

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்

பாணன் பாடினி இளையர் விருந்தினர்

கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்

யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"

(தொல். பொருள். கற்பியல் 52)

என அகவாழ்க்கையிலே வாயிலாக அமைபவர்களை இந் நூற்பாவில் தொகுத்துத் தந்துள்ளார். நாவலர் சோம சுந்தர பாரதியார் மேகவிடு தூது என்னும்

பொருளில் 'மாரி வாயில் எனத் தம் நூலுக்குப் பெயரிட்டுள்ளமையும் கருதத்தக்கது.

**காதல் தூது**

அகவாழ்க்கையில் வரும் தூது காதல் தூது. அதாவது காதலர் ஒருவர்க்கொருவர் தம் விரகதாபத்தைத் தெரிவிக் கும் படியாக விடுவதாகும்.காதலர் உயர்திணைப் பொருளையேனும் அஃறிணைப் பொருளையேனும் சது விடுவதாகப் புலவர் பெருமக்கள் பாடுவர். சீவகசிந்தாமணி யில் குணமாலை சீவனுக்குக் கிளியைத் தூது விடுத்த செய்தி இடம்பெற்றுள்ளது. (சீவக 1000 - 1062) நளனுடைய சரித்திரத்தில் நளன் தமயந்தியிடம் அன்னத் தைத் தூது விடுத்தமை பேசப்படுகிறது.

**தூது இலக்கியம்**

பிரபந்த வகைகளுள் தூது இலக்கியம் காலந்தோறும் தோன்றி வந்துள்ளது. தலைவி ஒருத்தி தான் காதலித்த தலைவனிடம் ஏதேனும் ஒரு பொருளைத் தூது விடுவ தாகக் கலிவெண்பாவினால் பாடப்பெறுவது இந்தத் தூது இலக்கியம்.

"பயில்தரும் கலிவெண் பாவி னாலே

உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்

சந்தியின் விடுத்தல் முந்துறு தூது எனப்

பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே "

என்னும் இலக்கண விளக்க நூற்பா (874) தூது இலக்கிய மரபுகளை எடுத்தோதுகிறது.

**அஃறிணைப் பொருளை விடுக்கும் மரபு**

அஃறிணைப் பொருள்கள் சொல்லும் திறமுடையன அல்லவாயினும் அவற்றை விளித்துத் தூது விடுவது தலை வன் தலைவியர்க்கு உளதாகும்

மனமயக்கமே எனலாம். அஃறிணைப் பொருள்களை விளித்துத் தத்தம் எண்ணங்களைக் காதலர் வெளிபடுத்துரைத்தலை ஓர் இலக்கிய மரபாகவே முன்னையோர் கொண்டுள்ளனர்.

"ஞாயிறு திங்கள் அறிவே நாணே

கடலே கானல் விலங்கே மரனே

புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே

அவையல பிறவும் நுதலிய நெறியால்

சொல்லுந போலவும் கேட்குந போலவும்

சொல்லி யாங்கு அமையும் என்மனார் புலவர்"

(தொல். பொருள் - செய்யுள். 201)

என்று தொல்காப்பியர் செய்யுளியலில் இம் மரபினை எடுத்துரைத்துள்ளார்.

**தூது விடுத்தற்குரிய பொருள்கள்**

தூது சொல்லி விடுவதற்குரிய பொருள்கள் எவை யெவை என்பதை இரத்தினச் சுருக்க நூல் செய்யுள் ஒன்று பின்வருமாறு தெரிவிக்கிறது.

"இயம்புகின்ற காலத்து எகினம்மயில் கிள்ளை

பயம்பெறு மேகம்பூவை பாங்கி-நயந்த குயில்

பேதைநெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்தும்

தூதுரைத்து வாங்கும் தொடை."

இப்பாடலால் எகினம் (அன்னம்), மயில், கிள்ளை (கிளி), மேகம், பூவை (நாகணவாப்புள்), பாங்கி (தோழி). குயில், நெஞ்சம் (மனம்), தென்றல், பிரமரம் (வண்டு) என்னும் பத்துப் பொருள்கள் தூது விடுவதற்குத் தக்கலை என்பது தெரியவரும். இரத்தினச் சுருக்கம் சுட்டும் பத்துப் என்ருள்களையேயன்றி வேறு பல புதிய பொருள்களைத்து ஏது விடுத்ததாகப் பாடிய நூல்களும்

காலம்கோளைத் தோன்றியுள்ளன. வனச விடு தூது (தாமரை), பண விடு தூது, நெல் விடு தூது, விறலி விடு தூது என்பன புதுமையன இப்புதிய வகையுள் ஒன்றாக

**தூது இலக்கியப் பெயரீடு**

தூது இலக்கியங்கள் தாது விடப்படும் பொருளைச் சார்ந்தே பெயரிடப்படுகின்றன. பாட்டுடைத் தலைவ னுக்கு நூலுள் சிறப்பிடம் தருவது போலவே துத லை கியங்களில் தூது விடப்படும் பொருள்களுக்குத் தனிச் சிறப்பிடம் தந்து புலவர்கள் போற்றியுள்ளனர். தூது செல்லும் பொருளின் சிறப்பினைப் பலவாறு போற்றிப் புகழ்ந்து உரைப்பதோடு பிற பொருள்களைத் தூதுவிடின் அவை நன்கு தெளிவுற எடுத்துச் சொல்லும் ஆற்றல் இல்லாதன எனச் சிற்சில குறைகளை அவற்றின்பால் சார்த்தி விலக்கும் பாங்கு கவிஞரின் கற்பனைத் திறனை எடுத்துக் காட்டுவதாகும். பிள்ளைத் தமிழில் அம்புலிப் பருவத்தில் புலவர்கள் சாம பேத தான தண்டம் என்னும் முறையில் சந்திரனை அழைக்கும் முறையில் பெறப்படும் கற்பனைகள் போன்றது இப்பகுதி.

**பாட்டுடைத் தலைவர்**

தூது இலக்கியம் உலா இலக்கியம் போலவே கடவுள், அரசன், அறிவுடைப் பெரியோர் முதலியவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாக் கொண்டு பாடப்படுதல் குறிப்பிடத்தக்கது. தூது நூல்களின் முதலில் கவிஞன் தான் வழிபடுகடவுளையோ,நூலுக்கு ஏற்புடைய கடவுளையோ வணங்குவது மரபு.

பாட்டுடைத் தலைவனின் வரலாறுகளையும் சிறப்புக்களையும் பலவாறாகப் புகழ்ந்து பேசுகின் றனர். க்கும் பகுதி களைத் தனிப்பட எடுத்துரைக்கும் பகுதி இப்பெயருடன் விளங்கும் சிற்றிலக்கியத்தை நினைவூட்டும். சொல்லணி, பொருளணிகளையும் அங்கங்கே கவிஞர்கள் அமைத்துப் பாடுதலையும் காணலாம்.

**தூது இலக்கிய முடிவு**

தூது இலக்கிய முடிவில் பெரும்பான்மையும் தலைவ னுடைய மார்பில் அணிசெய்யும் மாலையைப் பெற்றுவா என்று வேண்டுவதாக முடிப்பதே மரபு. சிவபெருமானைக் குறித்த கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிது தூது பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது ஆகியவற்றில் அப் பெருமானுக்குரிய கொன்றை மாலையை என்று சொல்வதாக உள்ளது. வாங்கிவா

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தமது குருநாதராகிய பொம்மபுரம் ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர்மீது பாடிய 'நெஞ்சு விடு தூது' பாமாலையில், என்னும்

"வேலையுல கெல்லாம் வியக்கும் சிவஞானி

மாலைமன மேவாங்கி வா'

என்று முடிக்கிறார்.

இந்தத் தமிழ்விடு தூதோ,

'துறவாதே சேர்ந்து சுகாநந்தம் நல்க

மறவாதே தூது சொல்லிவா'

எனத் தனக்கு இன்பம் நல்குமாறு செய்தி சொல்லப் பட்டுள்ளது. ஆயினும் நூலுள், 'ஒரு தொடை வாங்கி

உதவாயோ' (114) எனத் தலைவனிடம் மாலை பெற்று வருமாறு தலைவி வேண்டுதலால், தலைவனின் மாலை யைப் பெற்று வருமாறு கூறும் மரபு சுட்டப்படுதல் காணலாம்.

## தமிழ்விடு தூது

தமிழ்விடு தூது என்னும் இந்த இலக்கியம் மதுரைச் சோமசுந்தரக் கடவுளிடம் காதல் கொண்ட ஒரு துரைச் சாதல் நோயால் துன்புற்றுத் தமிழை அப்பெருமாளைம் மானிடப் பெண்டிர் ற்றப் பெற்றுள்ளது. கருமாளிடம் கொண்ட காதல் இது. புறத்திணைத் துறைகளுள் கடவுள்மாட்டு கெனைப் பெண்டிர் நயந்த பக்கத்தின் பாற்படும் என்பர். இந்நூல் 268 கண்ணிகளையுடையது.

**நூலாசிரியர்**

இந்நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இந்நூலின் அமைப்பையும் பாடுபொருளையும் நோக்கும் போது இவர் தமிழ் நூல்களில் பெரும்பயிற்சியுடையார் என்பது தெரியவரும். பத்துப்பாட்டு முதலான சங்க நூல்தொட்டு பிற்காலப் பிரபந்தங்கள் வரையில் இவர்தம் நூலுள் குறிப்பிட்டுச் செல்கிறார்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்

இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்னும் இவர் வாக்கு தமிழின்பால் இவருக்குள்ள பேரீடுபாட்டை நமக்குப் புலப்படுத்துகிறது.

இவர் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களில் மனத்தைப் பறிகொடுத்தவர் என்பது பற்பல திருவிளையாடல்களை நூலுள் குறிப்பிடுதல் கொண்டு அறியலாம். சிவபெருமானிடத்தும் நாயன்மார்களிடத்தும் பேரன்பு பூண்டவர் என்பது இந்நூலால் நன்கு வினங்கு கிறது. கல்லாடர் மதுரைச் சொக்கநாதர் புகழைக் கல்லாடப் பாடல்களில் பலபடியாகப் போற்றிப் புகழ்வது. போலவே இவரும் இத்தூதிலக்கியத்தில் சொக்கநாதரின் புகழ் எடுத்து மொழிகின்றார்.

வடமொழி நூல்களைத் தமிழின் உறுதிச் சுற்றமாகச் சுட்டியதும் வடநூற்கருத்துக்களையும் சொற்களையும் தொடர் மொழிகளையும் எடுத்தாண்டிருப்பதும் நோக் கின் இவர் இருமொழிப் புலமையுடையார் என்பது விளங்கும்.

முன்னையோர் சொல்லிப்போந்த பல கருத்துக்களை ஏற்ற இடங்களில் எடுத்தாண்டிருக்கிறார். முன்னோர் மொழிகளையே அன்றிமுழுச் செய்யுட்களையும் அங்கங்கே எடுத்தாண்டிருக்கிறார், திருக்குறட்பாக்களைப் பல இடங்களில் நயம்பட இவர் அமைத்துள்ள பாங்கு கற்று இன்புறுதற்குரியதாம்.

**பதிப்பு வரலாறு**

இந்த அரிய நூலை டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடன் 1930 ஆம் ஆண்டு முதன் முறையாகப் பதிப்பித்துத் தமிழுலகிற்குத் தந்தார். அதன் பின்னும் இதற்குப் பல பதிப்புக்கள் வந்துள்ளன. அவர்தம் அரிய முன்னுரை, குறிப்புரை, ஒப்புமைகள் அமைந்த அடிக் குறிப்புக்கள், ஆராய்ச்சிக் குறிப்புக்கள் ஆகியவை இப் பதிப்பை அணிசெய்கின்றன. ஆயினும் நூல் முழுமைக்கும் பொழிப்புரை இல்லாமை ஒரு குறையாகவே இருந்து வந்தது. இதனைப் போக்கும்வண்ணம் பேராசிரியர் செ. இராதாகிருஷ்ணன் இப்பொழுது எளிய இனிய நடையில் தெளிவுரை தந்துள்ளார். அரும்பதங்களுக்கு அங்கங்கே பொருளும் சுட்டியுள்ளார். இறுதியில் இவர் சேர்த்துள்ள பொருட்குறிப்பகராதி நூலுள் இடம்

1. சீர்கொண்ட கூடல் சிவராச தானி புரந்து

ஏர் கொண்ட சங்கத்துஇருந்தோரும் - போர்கொண்டு

சிறப்புக்கள் மிக்க கூடல் என்னும் சிவமதத் தலை நகரைக்காத்து வருபவரும், அழகுகொண்ட தமிழ்ச் சங்கத் தில் புலவராக வீற்றிருந்தவரும் ஆகிய சோமசுந்தரரும், [கூடல்- மதுரை, ராசதானி - தலைநகர்.

2. இசையும் தமிழரசி என்று ஏத்தெடுப்பத் திக்கு

விசையம் செலுத்திய மின்னும் - நசையுறவே

போர்களில் பெரும் வெற்றி கொண்டு விளங்கும் தமிழரசி என்று அனைவரும் புகழ எல்லாத் திசைகளிலும் வெற்றிப் பயணம் செய்த மீனாட்சியம்மையும், (2)

3. செய்ய சிவஞானத் திரள் ஏட்டில் ஒரேடு

கையில் எடுத்த கணபதியும் - மெய்யருளால்

(தாம் உபதேசித்ததைக் கேளாமல் பராமுகமாக இருந்த அம்பிகையை வலைஞர் மகளாகப் பிறக்குமாறு ஈசன் சபித்தபோது அதற்குக்காரணகமாவிருந்த) விருப்ப மூட்டும் திருந்திய சிவஞானத்தின் திரளான ஏட்டுச் சுவடி களிலிருந்து ஓர் ஏட்டினைக் (கடலில் எறிவதற்காகச் சினத்துடன் ) கையில் எடுத்த கணபதியும்.

4. கூடல் புரந்து ஒருகால் கூடற் புலவர்எதிர்

பாடல் அறிவித்த படைவேளும் - வீடு அகலா

மெய்யருள் கொண்டு மதுரையை (உக்கிர குமார பாண்டியனாக) ஆண்டு வந்ததுடன், ஒரு சமயம் சங்கப் புலவர் எதிரே (உருத்திரசன்மராக) இருந்து பாடல் பொருள் உணர்த்திய வேலவனாகிய முருகனும். (கூடற் புலவர் - சங்கப் புலவர், படை - ஆயுதம், வேள் - முருகன் ] (4)

5.மன்னும் மூவாண்டில் வடகலையும் தென்களையும்

அன்னை முலைப்பாலில் அறிந்தோரும் - முன்னரே

வீட்டை விட்டுத் தானாக வெளியே செல்லவும் அறியாத மூன்றே வயதான இளம்பருவத்திலேயே வட மொழி, தென்மொழி நூல்களை அன்னை உமையின் முலைப்பாலருந்தி அறிந்து கொண்ட திருஞான சம்பந்தரும், (5)

6. மூன்று விழியார் முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்

ஈன்றுதரச் சொல்லின் இசைத்தோரும் - தோன்று அயன் மால்

மூன்றாண்டுகளுக்கு முன்னரே முதலை விழுங்கி விட்ட பிள்ளையை முக்கண்ணன் முன் தமிழ்பாடி மீண்டும் தரும்படி செய்த சுந்தரரும், [அயன்-பிரமன், மால்-திருமால்.)(6)

7. தேடி முடியா அடியைத் தேடாதே நல்லூரில்

பாடி முடியாப் படைத்தோரும் -நாடிமுடி

பிற எளிய உயிர்களைப் போலத்) தோற்றமும் மறைவும் கொண்ட பிரமனும் திருமாலும் மிகவும் தேடி யும் காண முடியாத சிவபெருமான்

திருவடிகளைத் திரு நல்லூரில் பாடல்களைப் பாடித் தம் தலையில் முடியாகத் தாங்கும் பேறு பெற்ற திருநாவுக்கரசரும், (7)

8. மட்டோலைப் பூவனையார் வார்ந்து ஒலை சேர்த்துஎழுதிப்

பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும்-முட்டாதே

தேன்கொண்ட தாழம்பூவை அணியாது விலக்கி விட்ட ஈசன்,விரும்பி ஓலையை வாரித் தம் குறிப்போலைக் சட்டில் எழுதிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணம் திருக் பட்டோலை குறிப்போலை, வாசகரும், (மட்டு-தே ஓலைப்பூ - தாழம்பூ) (8)

9. ஒல்காப் பெருந்தமிழ் மூன்று ஓதியருள் மாமுனியும்

தொல்காப்பியம் மொழிந்த தொல்முனியும் மல்காச் சொல்

குறையாத பெருமை வாய்ந்த முத்தமிழைத் தடை யின்றி உரைத்தருளிய மாமுனிவர் அகத்தியரும், தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்தை மொழிந்த தொல் காப்பியரும், (9)

10 பாத்திரம் கொண்டே பதிபால் பாய் பசுவைப் பன்னிரண்டு

சூத்திரம் கொண்டே பிணித்த தூயோரும்- நேத்திரமாம்

குறைவற்ற சொல்லாற்றல் மிக்க தம் பாடல் தால் உருவாக்கிய பன்னிரண்டு நூற்பாக்களால் ஆன பாய்கின்ற பசுவாகிய உயிர்களைக் கட்டிய தூயவரான மெய்கண்ட தேவரும். (பாத்திரம் - பாடல்களின் நிலை, நூ சூத்திரம்- நூற்பா. நேத்திரம் - கண்.] (10)

11. தீதில் கவிதைத் திருமாளிகைத் தேவர்

ஆதி முனிவர் அனைவோரும் - சாதி, உறும்

தமிழுக்குக் கண்களென விளங்கும் குற்றமற்ற திருவிசைப்பாப் பாடல்களைப் பாடிய திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது புலவர்களும் (11)

12. தந்திரத்தினால் ஒழியாச் சார்வினையைச் சாற்றுதிரு

மாதிரத்தினால் ஒழித்த வல்லோரும் செந்தமிழில்

சாதியாலும், செய்கின்ற தந்திரங்களாலும் விலக்க முடியா வகையில் உயிர்களைப் பற்றிய வினைகளை எவ்வாம் தம் திருமந்திரத்தால் ஒழித்த வல்லவராகிய திருமூலரும்.தந்திரம் - நூல்1 (12)

13. மொய்யடிமை இல்லாப் புலவர் என்று நாவலர்சொல்

மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்

செந்தமிழில் யாருக்கும் பொய் அடிமைத் தொழில் யதவர்கள் என்று நாவன்மையுடையோர் புகழ்ந்து கூறும் உண்மைத் தொண்டர்களாகிய சங்கப் புலவர் களும்[சங்கத்து மேலோர் - கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர்] (13)

14. காடவரும் செஞ்சொல் கழறிற்றறிவாரும்

பாடஅரும் தெய்வமொழிப் பாவலரும் - நாடஅரும்

ஐடிகள் காடவர்கோனும், செம்மையான சொல் வாற்றன் கொண்ட சேரமான் பெருமாள் நாயனாரும். பாடுவதற்கரிய பெரும் புகழ் வாய்ந்த தெய்வப் புலவரா கிய திருவள்ளுவரும்.[ஐடிகள் காடவர் கோன்பாடியது க்ஷேத்திரத் திருவெண்பா சேரமான் பெருமாள் நாயனார் இயற்றியவை திருக்கைலாய ஞானவுலா, பொன் வண்ணத்தந்தாதி,திருவாரூர் மும்மணிக் கோவை. கழறிற்றறிவார் - சேரமான் பெருமாள் நாயனார். திருவள்ளுவர் அருளியது திருக்குறள்] (14)

15.கல்லாதார் சிங்கமெனக் கல்வி கேள்விக்கு உரியர்

எல்லாரும் நீயாய் இருந்தமையால் - சொல் ஆரும்

கல்லாதவர்கள் நாடவும் முடியாத அருஞ்சிங்கமெனக் அல்வி கேள்லால் இறந்து விளங்கும் எல்லாருமாக நீயே திருந்தமையால்தான். (15)

16. என்னடிகளே உனைக்கண்டு ஏத்தின்இடர் தீருமென்றுஉன்

பொன்னடிகளே புகலாப் போற்றினேன் பன்னியமென்

சொல்லில் அடங்காத புகழ் வாய்ந்த தமிழே! உன்னைக் கண்டு புகழ்ந்தால் என் துயரம் தீரும் என்று உன்னுடைய பொன் அனைய அழகிய திருவடிகளைச் சரண் புகுந்து போற்றுகிறேன். (பொன்னடிகள் - அழகிய திருவடிகள் என்றது செய்யுளடிகளை.) (16)

17. பஞ்சி படா நூலே பலர்நெருடாப் பாவே கீண்டு

எஞ்சி அழுக்கு ஏறா இயல்கலையே - விஞ்சுநிறம்

அடிக்கப் பெற்ற மென்மையான பஞ்சிலிருந்து நூற்கப் படாத நூலே! பலரால் நெருடப்படாத பாவே கிழிந்து, குறைந்து அழுக்கடையாத இயல்புள்ளகலையே! சிலேடை : நூல் - புத்தகம், நூல்; பா - பாடல், பாவு: கலை - கலைகள், துணி 1 (17)

18. தோயாத செந்தமிழே சொல்ஏர் உழவர் அகம்

தீயாது சொல்விளையும் செய்யுளே - வீயாது

வேறு நிறம் மிஞ்சித் தோயாத செம்மைத் தமிழே! சொல்லையே ஏராக்கி மனங்களை உழும் உழவர் களாகிய புலவர்கள் அகம் தீய்ந்து போகாது சொற்களை விளைவிக்கும் செய்யுளே! [சொல் - மொழி, நெல் செய்யுள் - பாடல், நிலம்; வீயாது - அழியாது ] (18)

19. ஒருகுலத்தும் வாராது உயிர்க்கு உயிராய் நின்றாய்

வருகுலம் ஓர் ஐந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்

ஒரு குலத்திலும் பிறக்காத நீ என்றும் அழியாது எங்கள் உயிருக்கு உயிராக நின்றாய்; ஆனால் (வெண்பா ஆசிரியம், வஞ்சி, சுலி, மருட்பா ஆகிய) ஐந்து குலங்களாக வும் வந்தாய். ( இரு நிலம் - பெருமை மிக்க நிலம் ] (19)

20 புண்ணியம் சேர்உந்திப் புலத்தே வளிதரித்துக்

கண்ணிய வாக்காம் கருப்பமாய் - நண்ணித்

பெருமை மிக்க இவ்வுலகில், புண்ணியம் வாய்ந்த உந்தியில் தோன்றிய காற்று, வாக்கு என்னும் கருத்தரித்து இருந்து,(வளி - காற்று, கண்ணியம் - பெருமை, நண்ணி - அடைந்து, உந்திப்புலம் - கொப்பூழ்.] (20)

21. தலைமிடறு மூக்குரத்தில் சார்ந்து இதழ்நாத் தந்தம்

உலைவிலா அண்ணத்து உருவாய்த் - தலைதிரும்பி

தலை,தொண்டை, மூக்கு,மார்பு ஆகிய உறுப்பு களை சார்ந்து உதடுகள், நாக்கு, பற்கள், குறையில்லாத அண்ணம், ஆகியவற்றால் உருப்பெற்று, [மிடறு- தொண்டை, உரம்-மார்பு, இதழ் - உதடு, அண்ணம் - மேல்வாய்) (81)

22. ஏற்பமுதல் முப்பது எழுத்தாய்ச் சார்பு இருநூற்று

நாற்பது எழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே

தலை திரும்பி உலகம் ஏற்க, முதல் எழுத்து முப்ப தாகவும் (உயிர் 12, மெய் 18), சார்பெழுத்து இரு நூற்று நாற்பதாகவும் (உயிர் மெய் 216, உயிரளபெடை 7, ஒற்றளபெடை 11, குற்றியலுகரம் குற்றியலுகரம் ஆய்தம் ஐகாரக்குறுக்கம் ஔகாரக்குறுக்கம் மகரக் குறுக்கம் சிறப்புடன் பிறந்தாய்.[மேற்பட- பிறகு]

23. எண்முதலாகப் பகரும் ஈறாறு எனும்பருவம்

மண்முதலோர் செய்துவளர்க்கும்நாள்- கண்மணிபோல்

நீ பிறந்த பிறகு எண், பெயர்,முறை பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, இடைநிலை, இறுதி நிலை, போலி, பதம், புணர்ச்சி ஆகிய பன்னிரண்டு (எழுத்திலக் கணப்) பருவங்களாகச் செய்து இவ்வுலகில் முதன்மை வாய்ந்த, புலவர்கள் வளர்க்கும் காலத்தில், [பகரும் கூறப் படும், பருவம் - பகுதி] (23)

24 பள்ளிக்கூடத்து அசையாம் பற்பல தொட்டில் கிடத்தித்

தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி -உள் இலகு

உன்னைத் தங்கள் கண்மணிபோல் பள்ளிக் கூடங் களில் அசை என்னும் பற்பல தொட்டிலில் கிடத்திச் சிறுவர்கள் ஒன்றாகக் கூடித் தள்ளித் தாலாட்டி, [அசை- ஓலைச் சுவடிகளை வைத்துத் தூக்கிச் செல்லும் பலகை, தால் - நாக்கு, தாலாட்டி - அ. ஆ என நாவால் ஒலித்துப் பழகி (24)

25 மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்

மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்- மஞ்சரையே

உள்ளது விளங்கும்படி மஞ்சள் பூசிக் குளிப்பாட்டி, மையிட்டு, முப்பால் (தாய்ப்பால் பசுவின் பால், ஆட்டின் பால்) மிகுதியாகப் புகட்ட நீ வளர்ந்தாய் [சிலேடைப் பொருள்: ஏடுகளில் மஞ்சள் தடவி, எழுத்து விளங்க மை பூசி. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் புகட்டத் தமிழ் வளர்கிறது [மஞ்சர் - மைந்தர] (25)

**சிற்றிலக்கியம்**

பன்னிஒரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்

உன்னை வளர்த்துவிட ஒண்ணுமோ-முன்னே

மைந்தர்களைக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி முத்தம். வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனப் பத்துப் (பிள்ளைத் தமிழ்) பருவங்களில் நீ வளர்த் தாய். அத்தகைய உன்னை ஒருவரால் வளர்த்து முடியுமோ? விட (26)

27. நினையும் படிப்பெல்லாம் நின்னைப் படிப்பார்

உனையும் படிப்பிப்பார் உண்டோ-புனைதருநல்

உலகோர் தாம் விரும்பும் கல்வியனைத்தையும் உன்னிடமிருந்து கற்பார்கள். உன்னைப் படிக்க வைப் போரும் உண்டோ? (27)

**சொல்லின் வகைகள்**

28. செய்யுள்சொல் நான்கும்உயர் செந்தமிழ்ச்சொல் ஓர்நான்கும்

மெய்உட்பொருள் ஏழ்விதத் திணையும்-மையில் எழுத்து

அணிவதற்குரிய இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் ஆகிய நான்கு செய்யுள் சொற்களும், பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு செந்தமிழ்ச் சொற்களும்; கைக்கிளை, பெருந்திணை. குறிஞ்சி. முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய அகத்திணை ஏழு; வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்னும் புறத்திணை ஏழு என்னும் திணை களாகிய மெய்ப் பொருள்களும். (28)

29. ஆதியாப்பு எட்டும் அலங்காரம் ஏழ்ஐந்தும்

பேதியாப் பேரெழில் மாப்பிள்ளையாய்ச் - சாதியிலே

குறைகளற்ற எழுத்து. அசை, சீர், தளை,அடி, தொடை, பா, பாவினம் ஆகிய எட்டு யாப்பு உறுப்பு களும், தன்மையணி முதலான முப்பத்தைந்து அணி ஒளும் இயைந்து சிறிதும் வேறுபடாத பேரழகு கொண்ட மாப்பிள்ளையாகி, [சாதி- வெண்பா முதலிப பாடல் வகை; மாப்பிள்ளை - மணமகன்]

30. ஆங்குஅமை செப்பல்பண் அகவல்பண் துள்ளல்பண்

தூங்கல்பண் பட்டத்துத் தோகையரா-ஓங்குமனத்து

அந்த அந்தப் பாவகைக்குப் பொருந்த அமைந்த செப்பலோசை, அகவலோசை, துள்ளல் ஒசை, தூங்க லோசை ஆகிய நான்கு பண்களும் பட்டத்துராணிகளாக வும் (தோசையர்- பெண்கள்] (30)

31 எண் கருவி ஐந்துஈன்றிடு நூற்று மூன்றான

பண்களும்பின் கல்யாணப் பாவையரா- எண்கொளும்

மனத்தால் உயர்வாக எண்ணப்படும் கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி, சஞ்சக்கருாகஒ மிடற்றுக்கருவி ஆகிய ஐந்து இசைக்கருவிகள் பெற்ற நூற்றுமூன்று பண்களும் பின்னர் ஏற்றுக் கொண்ட காமக்கிழத்தியராகவும் விளங்க, [பின் கல்யாணப் பாவையர் - காமக் கிழத்தியர்] (31)

**நவரசம்**

32. நல்தாரகமா நவரசமாம் பிள்ளைகளைப்

பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே- உற்று அகலாப்

அனைவரும் மதிக்க, ஆதரவான நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், பெருமிதம், கோபம், மகிழ்ச்சி சாந்தம் ஆகிய ஒன்பது சுவைகளையும் பிள்ளைகளாகப் பெற்றெடுத்தாய். அதனால் பெருமை மிக்க வாழ்வைப் பெற்றாய். (தாரகம் - ஆதரவு] (32/

33. பண்கள்முதல் பெண்களோடும்பாலரொடும் நாடகமாம்

பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே- மண்புகழத்

உன்னைச் சேர்ந்தபின் என்றும் விலகாத பண்கள் முதலிய பெண்களுடனும், பிள்ளைகளுடனும் கூடிப் பெண்கள் நிறைந்திருக்கிற நாடகமாகிய அவையில் வீற்றிருக்கும் பேறு பெற்றாய்.(33)

34. தாழ்விலா அட்டாதச வன்னனைகள் எனும்

வாழ்வுஎலாம் சுண்டு மகிழ்ந்தாயே - ஆழ

உலகோர் புகழக் குறைவில்லா (மலை, கடல், நாடு. நகர் சிறுபொழுது ஆறு பெரும்பொழுது ஆறு. சுகிரவன் நிலவு ஆகிய) பதினெட்டு வர்ணனைகள் எனும் சிறப்புக் களுடன் மகிழ்ந்திருந்தாய். [அட்டாதசம்- பதினெட்டு ] (34)

35. நெடுங்கோல வையையில் என் நேசர்மேல் பட்ட

கொடுங்கோல் செங்கோலாகக் கொண்டாய்- அடங்காத

ஆழம் நிறைந்த நெடிய, அழகிற வையை ஆற்றில் என் காதலர் சிவபெருமான் மீது பாண்டிய மன்னன் அடித்த கொடிய பிரம்பை நீ உன் செங்கோலாக ஏற்றுக் கொண்டாய். [கோலம் அழகு] நேசர் - காதலர்.) (35)

36. எம்கோவே பத்தென்று இயம்பு திசைக்குள்ளே நின்

செங்கோல் செலாத திசைபுண்டோ- இங்கே உன்

யாருக்கும் அடங்காத வலிமை கொண்ட பேரரசனே! உலகோர் கூறும் பத்துத் திசைகளுக்குள்ளே நீ செங்கோல் செலுத்தி ஆளாத திசைகள் உண்டோ? (36)

37. தேசம் ஐம்பத்தாறில் திசைச்சொல் பதினேழும்

மாசற நீ வைத்த குறுமன்னியரோ- வீசு

இவ்வுலகில் ஐம்பத்தாறு தேசங்களிலும் வழங்கும் பதினேழு திசைச் சொற்களும் இவ்வுலகைக் குறைவற ஆளும்படி நீ நியமித்த சிற்றரசர்களோ? [ திசைச்சொல்- பிறமொழிகள், குறுமன்னியர்- சிற்றரசர்;] (37)

38 குடகடலும் கீழ்கடலும் கோக் குமரியாறும்

வடவரையும் எல்லை வகுத்தாய் –இடை இருந்த

அலைவீசும் மேற்குக் கடலும், கிழக்குக் கடலும். வாய்ந்த குமரியாறும் வடவேங்கட மலையும் உன் ஆட்சியின் எல்லை என வகுத்துக் கொண்டாய். தலைமை கோ-தலைமை, வட வரை - திருவேங்டமலை ] (38)

39. முன்உறும் தென்பாண்டி முதல் புனல்நாடு ஈறான

பன்னிரண்டு நாடும் அப்பால் நாடோ - அந்நாட்டுள்

இவ்வெல்லைக்குள்ளே இருந்த முதல் பன்றிநாடு. அகுடநாடு. கற்காநாடுகள் பாண்டி, பூழிநாடு, பன்றிநாடு. அருவாநாடு, அருவா வடதலை நாடு, சீத நாடு, மலாடு உள்ளிட்ட) புனல்நாடுவகரயி லான பன்னிரண்டு நாடுகளும் அத்தமிழ்நாட்டின் பருதி யான நாடுகளோ? (பால்- பகுதி] (39)

40 வையை கருவை மருதாறு மருவூர் நடுவே

ஐய! நீ வாழும் அரண்மனையோ- செய்யபுகழ்

அந்நாடுகளுள் வையை, கருவூர், மறுதாறு, மருவூர் இவற்றின் இடையேதான் தமிழென்னும் தலைவா! நீ வாழும் அரண்மனை உள்ளதோ? [ஐய- தலைவ செய்ய - சிறந்த] (40)

41. மூவேந்தர் வாகனமா மூவுலகும் போய் வளைந்த

பாவேந்தே நீ பெரிய பார்வேந்தோ - கா ஏந்து

சிறந்த புகழ்வாய்ந்த சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள் மூவரையும் உன் வாகனமாகக் கொண்டு விண், மண், பாதலம் ஆகிய மூவுலகுகளையும் வளைத்து வென்ற பாவேந்தனே ! நீ பெரிய பார்வேந்தனோ?(பார்- உலகம், கா - கற்பக மரம்.]

42. விண்ணவரும் காணரிய வேத ஆகமங்கள் எலாம்

புண்ணியனே உன்றன் புரோகிதரோ-எண்ணரிய

புண்ணியம் திறைந்தவனே! கற்பக மரத்தைக் கொண்டுள்ள தேவர்களும் கூடக் கண்டுணர இயலாத வேதங்களும், ஆகமங்களும்உன் புரோகிதர்களோ? (62)

43. நல்ல பெருங்காப்பியங்கள் நாடகம் அலங்காரம்

சொல்லரசே உன்னுடைய தோழரோ- தொல் உலகில்

சொற்களின் அரசனே! எண்ணில் அடங்காத தல்ல பெருங்காப்பியங்களும். நாடகங்களும், அணி இலக்கணங்களும் உன் நண்பர்களோ? [அலங்காரம் - அணி இலக்கணம். பெருங்காப்பியம் என்றது இராமாயணம் முதலிய வடமொழிக் காவியங்களை. அலங்கார நூல்கள் என்றதும் அம்மொழி நூல்களை.] (43)

44. சார்புரக்கும் கோவே நல்சாத்திரங்கள் எல்லாம் உன்

பார் புரக்கும் சேனாபதிகளே -வீரர் அதிர்

பழமைமிக்க இவ்வுலகில் அண்டினவர்களைக் காக்கும் அரசனே ! சாத்திரங்கள் எல்லாம் உன் பூமியைக் காக்கும் சேனாதிபதிகளோ? (44)

45. போர்ப் பாரதமும் புராணம் பதினெட்டும்

சீர்ப்பாவே உன்னுடைய சேனைகளோ - பார்ப்பார்கள்

சிறந்த பாடலே! வீரர்களை அதிரவைக்கும் போர் பற்றிப் பாடும் பாரதமும், பதினெட்டுப் புராணங்களும் உன் படைகளோ?

46. அக்கரவர்த்தி எனலாம் என்பார் பூலோக

சக்கரவர்த்தியும் நீதான் அன்றோ - சக்கரம்முன்பு

உன்னைப் பார்ப்பவர்கள் உன்னை அக்கரவர் த்தி னலாம் என்பார்கள். ஆனால் நீ உன்றோ? [அட்சரம் - எழுத்து, பூவுலகின் சக்கரவர்த்தி அக்கரவர்த்தி சித்திர ஒன்று. இது முதலாக முரசபந்தம்ம் வரை குறித்தவை சொல்லணிகள். சக்கரம் ஓர் அணி.] (46)

47. ஏந்தி நெடுந் தேர்மேல் ஏறிச் சுழிகுளம்

நீந்திஓர் கூடநிறை சதுக்கம்-போந்து"

சக்கரம் கையில் ஏந்தி நெடிய தேர்மேல் ஏறிக் கூ நிறைந்த குளத்தை நீந்திக் கடந்து நான்கு தெருக்கள் கூடும் சதுக்கத்தில் வந்தமர்ந்து, (தேர் இரதபத்தம் என்னும் அணி ; சுழிகுளம், கூடசதுக்கம் - அணிகள்] (47)

48. மதுரம் கமழ் மாலைமாற்று அணிந்து சூழும்

சதுரங்க சேனை தயங்கச் - சதுராய்

இனிய தேன்மணக்கும் மாறுபட்ட பலமாலைகளை அணிந்து, குதிரை, யானை, தேர்,காலாள் ஆகிய நான்கு வகைப் படைகளும் சூழ்ந்து நிற்க, (மாலை மாற்று- அணி ; சாதுரங்கம் - சதுரங்கபந்தம் என்னும் அணி; சதுர்- சிறப்பு ] (48)

49. முரசம் கறங்க முடிவேந்தர் சூழ

வர சங்கம் மீதிருந்து வாழ்ந்தே-அருள் வடிவாய்

நலமாய் முரசு முழங்க முடிவேந்தர் சூழ்ந்து வரப் புலவர்கள் கூடிய சங்கத்தில் உயர்ந்து வாழ்ந்திருந்து [முரசம்- முரசபந்தம் என்னும் அணி ]

50. ஓங்குபுகழ் மூவர் ஒருபாஒருபஃதும்

ஆங்கு அவை சொல் வாதவூராளி சொல்லும் - ஓங்கும் அவன்

அருள் வடிவமான, பெருகும் புகழ் படைத்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் பாடிய பதிகங்களால் ஆன தேவாரமும். (ஒருபா ஒருபஃது ) அவற்றைப் போலவே வாதவூரர் (மாணிக்கவாசகர்) பாடிய திருவாசகமும் (ஒருபா ஒருபஃது - பதிகம்) (50)

51. கூற்றாய் அரன் எழுதும் கோவையும் கோதில்தாய்

மாற்றா இரட்டைமணி மாலையும் - தேற்றம் உற

உயர்ந்த அம் மாணிக்கவாசகர் சொல்லச் சிவபெருமான் எழுதிய திருக்கோவையாரும். குற்றமற்ற காயா ராகிய காரைக்கால் அம்மையார் சொல்லிய இரட்டை மணி மாலையும்,(மாற்று தெளிவு ] - சொல்; தேற்றம் (51)

52. பற்றாம் இலக்கண நூற்பாவும் நூற்பா அறிந்து

கற்றார் வழங்கு பஞ்சகாப்பியமும்-கொற்றவருக்கு

கற்றோர் தெளிவு பெறப் பின்பற்றும் இலக்கணங் களின் நூற்பாக்களும். அந்நூற்பாக்களை அறிந்து கற்ற புலவர் பெருமக்கள் பாடிய ஐம்பெருங்காப்பியங்களும், [நூற்பா - சூத்திரம் கொற்றவர் - அரசர்] (53)

53. எண்ணிய வன்னனைகள் ஈரொன்பதும் அறியக்

கண்ணியம் மிக்க பெருங்காப்பியமும் - நண்ணியே

அரசர்க்குரியவை என்று எண்ணப்பட்ட நாடு, நகரம் முதலிய பதினெட்டு வர்ணனைச் சிறப்புக்களும் நன்கு விளங்குமாறு பாடப்பெற்றபெருமைமிக்க (இராமாயணம் முதலிய) பெருங்காப்பியங்களும், [ கண்ணியம்-பெருமை]

54. இன்புறு சேரன் அரங்கேற்ற மகிழ்ந்து அம்பலத்தான்

அன்புறு பொன்வண்ணத்து அந்தாதியும் முன்பு அவர்சொல்

தில்லையை அடைந்து மகிழ்ந்த சேரமான் பெருமான் நாயனார் பாடி அரங்கேற்ற, அம்பலத்தாடும் மான் கேட்டு மகிழ்ந்து அன்புகொண்ட பொன் வண்ணத் தந்தாதியும். (54)

**மும்மணிக்கோவை**

55. மாத்தமிழாம் மும்மணி மாலையும் பட்டினத்தார்

கோத்தணிந்த மும்மணிக் கோவையும்- மூத்தோர்கள்

அந்நூலுக்கு முன்பே அச்சேரமான் பாடிய பெருந் தமிழ் நூலாம் திருவாரூர் மும்மணிக்கோவையும், பட்டி னத்தார் தம் பாமலர்களைக் கோத்து இறைவனுக்கு அணி வித்த திருவிடை மருதூர் மும்மணிக்கோவையும், (55)

**சங்க இலக்கியம்**

56. பாடியருள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்

கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும் - ஆடக மா

அறிவால் மூத்த சங்கப் புலவர்கள் பாடிய பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும், கேடுகள் அற்ற பதினெண் கீழ்க்கணக்கும், [ஆடகம் - பொன்; மாவெற்பு - பெரிய மலை ] (56)

57. வெற்புஅனையார் மாதை விமலரிடத்தே இருவர்

கற்பனையால் சொன்ன கலம்பகமும் - முற்படையோடு

பொன்னிறம் கொண்ட பெரிய மேருமலை போன்ற வனும் மாதை என்னும் ஊரில் கோயில் கொண்ட தூய வனும் ஆகிய ஈசனிடம் சென்று இரட்டைப் புலவர்கள் தம் கற்பனையால் பாடிய திருவாமத்தூர்க் கலம்பகமும். ஆடகமா வெற்பு - மகாமேருமலை, மாதை - திருவாமத் தூர் ; விமலர் - தூயவர்]

**கலிங்கத்துப்பரணி**

58. ஆடல் கலிங்கம் அழித்து ஆயிரம் ஆனைகொன்ற

பாடற்கு அரிய பரணியும்-கூடல்

முன்னணிப் படையுடன் சென்று வலிமையால் கலிங்கத்தை அழித்து, அப்போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று, வென்றது பற்றிப் பாடப்பட்ட, பிறபுலவர் பாடுவதற்கு அரிய கலிங்கத்துப் பரணியும், [ ஆடல் - வெற்றி; கூடல் - காவிரிப்பூம்பட்டினம்) (58)

59. நராதிபன் கூத்தன்எதிர் நண்ணி ஓர்கண்ணிக்கு

ஓராயிரம்பொன் ஈந்த உலாவும்- பராவும் அவன்

கூடல் என்னும் பேர்கொண்ட காவிரிப்பூட்டினத் தின் மக்களுக்கு அரசனான இராசராசசோழன், தனக்கு எதிரே அமர்ந்து ஒரு கண்ணிக்கு ஓராயிரம் பொன்வீதம் பரிசளிக்க ஒட்டக்கூத்தன் பாடிய இராசராச சோழன் உலாவும், (நரர் - மனிதர், பராவும் - போற்றும்.] (59)

**பிள்ளைத் தமிழ்**

60. பிள்ளைத் தமிழும் முன்னாம் பேராத பல்குரவர்

வெள்ளத்தினும் மிகுத்தோர் மெய்காப்ப - உள்ளத்து

யாவரும் போற்றும் அவ்வொட்டக்கூத்தன் பாடிய குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழும், முதலிய என்றும் நிலையில் பெயராத வெள்ளம் எனும் பேரெண் ணையும்விட அதிகமான, தமிழ் நூல்களாகிய வீரர்கள் மெய்காவலராகக் காத்து நிற்க, [குரவர் - சான்றோர், வீரர்; வெள்ளம் - ஒரு பேரெண்.] (60)

61. வீரியம் செய்து வினை ஒழியவே ராச

காரியம் செய்யும் கவிதையே - பாரில்

உள்ளத்தில் வீரம் மிக, தீவினைகள் ஒழிய அரசுப் பணிகளைச் செய்யும் கவிதையே!

62. அரியாசனம் உனக்கே ஆனால் உனக்குச்

சரியாரும் உண்டோ தமிழே - விரி ஆவூர்

இவ்வுலகில் உனக்கே அரியாசனம் உண்டு இங்கனம் இருக்க உனக்குச் சமமாக அமரும் தகுதி வாய்ந்தவர் எவரும் உண்டோ, தமிழே! [ அரியாசனம் கரிந்த பனை ஏடு. சிங்காசனம்.]

63. திகழ்பா ஒருநான்கும் செய்யுள் வரம்பாகப்

புகழ் பாவினங்கள் மடைபோக்கா நிகழவே

விரிவான, பொருள் நிறைந்து திகழும் வெண்பா, அகவல், வஞ்சி, கலிப்பா ஆகிய நான்கும் உன் செய்யும் எல்லையாகவும், புகழ்மிக்க தாழிசை, துறை,

விருத்தம் என்னும் பாவினங்கள் மடைப்போக்காகவும் திகழ, [செய்யுள் - வயல்,பாடல்,)

64. நல்ஏரினால் செய்யுள் நால்கரணத்து ஏர்பூட்டிச்

சொல்லேர் உழவர் தொகுத்து ஈண்டி நல்லநெறி

நல்ல அழகு பொருத்திய செய்யுளின் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்கரணங்களை ஏராகப் பூட்டிச் சொல்லேர் உழவர்களாகிய புலவர்கள் திரண்டு வந்து, (04)

65. நாலே விதையா கனிவிதைத்து நாற்பொருளும்

மேலே பலன்பெறச் செய்விக்கும் நான் மேலோரில்

வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாசுதம் ஆகிய நான்கு நல்ல கவதை நெறிகளையும் விதைபாக நன்கு விதைத்து, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களும் நற்பயனாக வர விளைவித்துக் கொணடிருக்கும் நாளில்,

66. பாத்தனாகக் கொண்ட பிள்ளைப்பாண்டியன் வில்லி ஒட்டக்

கூத்தன் இவர் கல்லாது கோட்டி கொளும்- சீத்தையரைக்

மேன்மைமிக்க புலவர்களுள் பாடுவதைத் தன் உரிமை யாக்கிக் கொண்ட அதிவீரராம பாண்டியன், வில்லி புத்தூர் ஆழ்வார், ஒட்டக்கூத்தர் ஆகியோர் பல நூல் களையும் கற்றுப் புலமை அடையாமல் அவையில் புலவ ரென அமர வரும் கீழ்மக்களை, [கோட்டி - கூடும் அவை, சீத்தையார் - கீழ்மக்கள்.] (66)

67. குட்டிச் செவி அறுத்துக் கூட்டித் தலைகள் எல்லாம்

வெட்டிக் களைபறிக்க மேலாய்த் தூர் கட்டி

தலையில் குட்டியும், காதுகளை அறுத்தும், தலை களை ஒன்றாகக் கூட்டி வெட்டியும் தமிழ்ப்பயிரின் இடையே வளர்ந்த களைகளைப் பறிக்க நீ மேன்மை யுடன் அடிபருத்து, (67)

68. வளர்ந்தனை பால் முந்திரிகை வாழைக் கனியாய்க்

கிளர்ந்த கரும்பாய் நாளிகேரத்து - இளங்கனியாய்

வளர்ந்தாய்! பாலாய், முந்திரிப் பழமாய், வாழைப் பழமாய், கிளர்ச்சியூட்டும் இனிய கரும்பாய்,தென்னை யின் இளங்கனியாய் (பாடல்களின் பொருள் விளங்கும் எளிய - நடுத்தரமான கடின இயல்புகள் இங்கே பால், முந்திரி,வாழை,கருமபு, தேங்காய் என பிரித்துச் சுட்டப்பட்டுள்ளன.) [நாளிகேரத்தின் கனி - தேங்காய்.) (68)

69. தித்திக்கும் தென்அமுதாய்த் தெள்ளமுதின் மேலான

முத்திக் கனியே என் முத்தமிழே-புத்திக்குள்

இனிக்கும் தெளிந்த அமுதமாய், அந்த அமுதினும் மேலான முக்தியைத் தரும் கனியே! என் இயல், இசை நாடகத் தமிழே!

70. உண்ணப்படும் தேனே உன்னோடு உவந்து உரைக்கும்

விண்ணப்பம் உண்டு விளம்பக் கேள்-மண்ணில்

புத்தியால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் விண்ணப்பம் ஒன்றுள்ளது. நான் கூறக கேள்! (70)

**சிற்றிலக்கியம்**

71. குறம்என்று பள்என்று கொள்வார் கொடுப்பாய்க்கு

உறவுஎன்று மூன்று இனத்தும் உண்டோ! திறம்எல்லாம்

குறம் என்றும், பள்ளு என்றும் அறிந்தும் இம் மண்ணுலகோர் உன்னிடம் இருந்து (பெண்) ஏற்றுக் கொள்கின்றனர். அப்பள்ளு, குறத்தைக் கொடுக்கும் உனக்கு தாழிசை, துறை, விருத்தம்; அனுலோமர், பிரதி லோமர், சங்கரா ஆகிய மூன்று தாழ்ந்த சாதிகளிலும் உறவுண்டோ?[குறம்- குறவஞ்சி, குறச்சாதி; பள்ளு - பள்ளுப் பாட்டு, பள்ளர் என்னும் சாதி, மூன்றினம் - தாழிசை துறை,விருத்தம், ஆகிய பாவினங்கள்.] (71)

72. வந்து என்றும் சிந்தாமணியா இருந்த உனைச்

சிந்துஎன்று சொல்லிய நாச் சிந்துமே - அந்தரம்மேல்

கவிதைத் திறம் அனைத்தும் பொருந்தி என்றும் சிதறாத மணியாய் (சீவக சிந்தாமணி) இருக்கும் உன்னைச் சிந்து (ஒரு பாவகை) என்று சொல்லும் நாக்குச் சிந்தும். [சிந்து - ஒரு பாவகை; சிந்தும் - விழும்; அந்தரம் விண்ணுலகு ] (72)

73. முற்றும் உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார் நீ

குற்றம் இலாப் பத்துக்குணம் பெற்றாய்-மற்றொருவர்

விண்ணில் உள்ள, அனைத்தையும் உணர்ந்த தேவர் களும் கூட சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களையே பெற்றுள்ளனர். ஆனால் சியோ குற்றமில்லாத செறிவு, தெளிவு, சமநிலை, இன்படு ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பெற்றுள்ளாய், (73)

74. ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோ நீ

நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய் – நாக் குலவும்

மனிதரால் ஆக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை ஆகிய ஐந்திற்கு மேலில்லை. நீயோ புலவர் நோக்கி மகிழும் குறில் அசுவல் தூங்கிசை வண்ணம் முதல் இடை மெல்லிசை வண் வரையிலான நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய். (வண்ணம் – நிறம், கவிதைகளின் இசைவண்ணம்] (74)

75. ஊரைசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள் உணவு

ஆன நவரசம் உண்டாயினாய்– ஏனோர்க்கு

நாக்கின் மீது பொருத்தும் சுவைகள் கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, காரம், இனிப்பு எனும் ஆறுக்கு மேல் இல்லை, அவையும் ஊன முடையவை. நீயோ காதுகளுக்கு உணவாக விளங்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றிருக் கிறாய் (பார்க்க: 32 ஆம் கண்ணிரசம் –சுவை. ] (75)

**வனப்பு வகைகள்**

76. அழியா வனப்பு ஒன்றுஅலது அதிகம் உண்டோ

ஒழியா வனப்பு எட்டு உடையாய் – மொழிவேந்தர்

மற்ற மக்களுக்கு வனப்பு ஒன்றுக்குமேல் உண்டோ! நீயோ அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகிய எட்டு வனப்புக்கள் உடையாய். [வனப்பு - அழகு, பாடல்களின் வனப்பு என்னும் உறுப்பு]

**பொருள்கோள் இலக்கணம்**

77. வாங்கு பொருள்கோள் வகை மூன்றே பெற்றார்நீ

ஓங்கு பொருள்கோள் வகை எட்டு உள்ளாயே- பாங்குபெற

புலவர்கள் புகழ்ந்து பேசும் மன்னர்கள் தானே வந்துற்ற பொருள், வரியாகக் கிடைக்கும் பொருள், பகை வரிடம் கவர்ந்த பொருள் எனப் பொருள் பெறும் வகை மூன்று மட்டுமே உடையவர்கள் நீயோ ஆற்றுநீர், மொழி மாற்று, நிரல்நிறை, பூட்டுவில், தாப்பிசை, அளை மறிபாப்பு, கொண்டு கூட்டு, அடிமறிமாற்று எனப் பொருள் கோள் வகை எட்டு உடையாய். (77)

78. ஓர் முப்பால் அன்றி ஐம்பால் உள்ளாய் உனைப்போலச்

சீர் முப்பதும் படைத்த செல்வர் ஆர் - சேரமான்

பாங்குள்ள அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் எனும் ஐம்பாலும் கொண்டுள்ளாய். (உலகோர் பசு, எருமை, ஆடு இவற்றின் முப்பாலே உடையவர்கள்) உன் போல முப்பது சீர்கள் படைத்த செல்வர் யாருண்டு? (சீர் 30: ஓரசைச் சீர் 2. ஈரசைச் சீர் 4. மூவசைச் சீர் 8, நான்கசைச் சீர் 16) [சீர் - சிறப்பு. கவிதைச் சீர்.] (78)

79. தன்னடிக் கண்டு தளை விடுத்தாய் ஏழ்தளை உன்

பொன்னடிக்கு உண்டு என்பது என்ன புத்தியோ- என் அரசே

சேரமான் கணைக்கால் இரும்பொறையின் கால்களில் பூட்டப்பெற்ற தளைகளைக் கண்டதும் அவற்றை நீ விடு வித்தாய். உன்னுடைய பொன் அனைய (செய்யுள்) அடி களுக்கு (நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்

தளை, வெண்சீர் வெண்தளை, இயற்சீர் வெண் தளை, கலித்தளை ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என) ஏழு தளைகள் உண்டு எனக் கூறுவது அறிவுள்ளோர் செயலாமோ? (தளை - விலங்கு, கவிதைபின் யாப்புறுப்பு களுள் ஒன்று ] (79)

80. திண் பாவலர்க்கு அறிவாம் செந்தமிழாய் நின்றஉன்னை

வெண்பா என்று ஓதுவது மெய்தானோ - பண்பு ஏர்

என் அரசனோ! ஆற்றல் மிக்க பாவலர்க்கு அறிவூட்டும் செந்தமிழாக இருக்கும் உன்னை வெண்பா என்று கூறுவதில் உண்மை சிறிதேனும் உண்டோ? (செந்தமிழ் - செந்நிறத் தமிழ், செம்மையான தமிழ் வெண்பா - ஒரு பா. உள்ளே ஒன்றுமற்ற பா. வெண்மை- அறிவின்மை] (80)

**சங்கத்தமிழ்**

81. ஒலிப்பாவே சங்கத்து உகம் மூன்று இருந்தாய்

கலிப்பா என்று ஓதல் கணக்கோ - உலப்பு இல்

பண்பும் அழகும் கலந்து ஒலிக்கும் பாடலே! நீ கிருத யுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய மூன்று முந்தைய யுகங்களிலும் கூடச் சங்கத்தில் இருந்தாய். உன்னைக் கலியுகத்தை மட்டுமே சேர்ந்தனை என்பது போல் கலிப்பா என்று கூறுவது முறையோ? [கலிப்பா - ஒரு பா. உலப்பு -அழிவு] (81)

82. இருட்பா மருள் மாற்றி ஈடேற்றும் உன்னை

மருட்பா என்று ஓதல் வழக்கோ - தெருள்பாய்

அழியா இருள் வடிவில் பரவிய மயக்கத்தை மாற்றி மக்களை அறியாமையிலிருந்து கரையேற்றும் உன்னை மருட்பா என்று கூறல் நல்வழக்கமாமோ? [பா -பரவும், பாடல். மருட்பா - ஒரு பா, மயக்கம் தரும் பா தெருள் தெளிவு ]

83. பொருத்தம் ஒருபத்துப் பொருந்தும் உனைத்தானே

விருத்தம் என்று சொல்லல் விதியோ - இருள்குவையை

சிந்தையைத் தெளிவிக்கும் உன் பாடலின் முதற்சீரி லேயே மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி. வருணம், நாள், கதி கணம் என்னும் பத்து விதப் பொருத்தங்கள் அமைந்திருக்கும் உன்னை விருத்தம் என்று கூறுதல் உன் தலைவிதியோ? [விருத்தம் - ஒரு பாவினம், பொருந்தாமை.] (83)

84. முந்தி ஒளியால் விலக்கும் முச்சுடர் என்பார் உனைப் போல்

வந்து என் மனத்து இருளை மாற்றுமோ - சிந்தா

இருளின் கூட்டத்தைக் கதிரவன், நிலவு நெருப்பு என்னும் முச்சுடரும் முந்திவந்து தம் ஒளியால் விலக்கும் என்பார்கள். ஆயினும் அவை உன்னைப் போல வந்து என் மனத்தின் இருளை மாற்றுமோ? (84)

85. மணி கொடையின் மிக்கது என்பார் வண்கொடையும் உனபேர்

அணியும் பெருமையினால் அன்றோ - தணியும்

விண்ணுலகில் உள்ள சிந்தாமணி கொடைத்திறம் மிக்கது என்பார்கள். சீவக சிந்தாமணி என்னும் உன் நூலின் பெயரைத் தாங்கியுள்ளதால் தானே அதற்கு அக் கொடைத் தன்மை வாய்ந்தது? (தணியும்- தாழ்ந்து தொங்கும்.] (85)

86. துலங்கு ஆரம் கண்டசரம் தோள்வளை மற்று எல்லாம்

அலங்காரமே உனைப்போல் ஆமோ - புலம்காணும்!

தாழ்ந்து தொங்கப் பெண்கள் அணியும் ஒளியுள்ள மாலைகள், கண்டசரம், தோள்வளை ஆகிய நகை அணிகள் எல்லாம் உன் அலங்காரம் போல் ஆகுமோ? [ ஆரம் மாலை, கண்டசரம்- கழுத்தில் அணியும் மாலை, அலங் காரம் - அணி இலக்கணம், புலம் - அறிவு] (86)

87. உன்னைப் பொருள்என்று உரைக்கும் தொறும் வளர்வாய்

பொன்னைப் பொருள் என்னப் போதுமோ- கன்னமிட்டு

அறிவுப் புலனால் மட்டுமே காணக்கூடிய உன்னைப் புலனால் மட்டுமே கா பொருள் கூறி உரைக்கும் [பேசும் ] போதெல்லாம் நீ வளர் கிறாய். [உரைத்தால்]

தேயும் இயல்புடைய பொன்னைப் பொருள் எனக் கருதுதல் பொருந்துமோ? [கன்னமிட்டு- திருடி, காதில் கேட்டு] (87)

88. மன்னர் கவர்ந்தும் வளர்பொருளே கைப்பொருள்கள்

என்ன பொருள் உனைப்போல் எய்தாவே - நல்நெறியின்

வளர் பொருளே! மக்கள் கையில் உள்ள பொருள்கள் என்ன பொருள்கள். அவை உன்னைப் போல உற்றுழி உதவாவே? (88)

89. மண்ணில் புகழ்உருவாய் வாழ்வதற்கும் வாழுநர்

விண்ணில் போய்த் தேவுருவாய் மேவுதற்கும் - எண்ணி உனைக்

நல்ல நெறியுடன் இம்மண்ணுலகில் புகழுடன் வாழ் வதற்கும். வாழ்ந்து முடித்து விண்ணுலகில் தெய்வ வடிவுடன் சேர்ந்திருப்பதற்கும். (89)

90. கொண்டு புகழ் கொண்டவர்க்கே கூடும் உனைக்கூடாத

தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால் - தண் தமிழே

ஆய்ந்தறிந்து உன் துணை கொண்டு புகழ் பெற்ற புலவர்க்கே இயலும். உன்னுடன் கூடாது (தம் ஆசை களுக்கே) தொண்டு செய்வோர்களுக்குத் தென் திசைக் காவலனான எமன் உலகே தெரியும். [தென்பால் தென் திசை; எமனுக்குரியது. ஆல்- ஆசை) (50)

91. ஈங்குஉனது சங்கத்தால் ஈசர் உயர்ந்தாரோ

ஓங்கும் அவரால் நீ உயர்ந்தாயோ - பூங்கமல

குளிர்ந்த தமிழே ! இங்கே உனது சங்கத்தால் ஈசன் உயர்ந்தாரோ? அல்லது உயர்ந்த அவரால் நீ உயர்த் தாயோ? [சங்கம்-சேர்தல், தமிழ்ச் சங்கம்] (91)

92. வீடு ஆளும் வாணி அங்கை மேலே இருந்தாயோ

ஏடா உன்மேல் இருந்தாளோ - ஆடு அரவத்

தாமரைப் பூஎனும் வீட்டிலிருந்து கலைகளை ஆளும் கலைமகளின் உள்ளங்கையின் மேலே (உள்ள ஏட்டுச்சுவடி யாக) நீ இருந்தாயோ? அல்லது ஏடுகளாகிய உன்மேல் அவள் அமர்ந்திருந்தாளோ? (உன்னைத்தான் அவள் தாங்கி இருக்கிறாள்) (92)

93. தாழ் பாயலாளரை நீ தானே தொடர்ந்தாயோ

சூழ் பாயோடு உன்னைத் தொடர்ந்தாரோ - வாழ்வே என்று

ஆடும் பாம்பைச் சரிந்து நழுவப் பாயாகச் சுருட்டிக் கொண்டு சென்ற திருமாலை நீ தொடர்ந்து சென்றாயோ? அல்லது சுருட்டிய பாயுடன் அத்திருமால் (கணிகண்ணன் பொருட்டு வெளியேறிய திருமழிசை ஆழ்வார் வடிவாகிய) உன்னைப் பின் தொடர்ந்தாரோ? [தாழ்பாய்- சரியும் பாய்]

94. ஓதி முனிகேட்க உனை முருகர் சொன்னாரோ

சோதி யவரை நீ சொற்றனையோ-பேதியா

என் வாழ்வே தமிழ்தான் எனத் துதித்து அகத்திய முனிவன் கேட்க முருகன் உன்னை அவருக்கு விளங்க உரைத்துக் கற்பித்தாரோ? அல்லது ஒளிவடிவான அவரை நீ சொன்னாயோ? (சொற்றனையோ - சொன்னாயோ?. பேதியா - வேறுபடா] (94)

95 நேசர் உனக்கே பொருளாய் நின்றாரோ-நீள்மதுரை

வாசருக்கு நீ பொருளாய் வந்தாயோ-பாசமுறும்

கருத்து வேறுபடாத என் காதலராகிய ஈசன் உனக்கு முன் பொருளாக (செல்வமாக) வந்தாரோ? அன்றி மதுரைப் பெருநகரில் வாழும் அவருக்கு நீ பொருளாக வந்தாயோ? (நீயே இறையனார் களவியலுக்கு அகப் பொருளாக வந்தாய்) (பாசமுறும் - கட்டுப்படும்] (15)

96. என்செய்தி நீ கண்டு இரங்குவது நீதி அல்லால்

உன் செய்தி நானோ உரை செய்வேன் - இன்சொல்லாப்

காதலில் கட்டுண்டு வருந்தும் என்செயலை த் பார்த்து இரங்கி அருளுவதே நீதியாகும். அன்றி உள் செய்திகளை என்னால் உரைக்க இயலுமோ? (96)

**திருக்குறள் சிறப்பு**

97. கற்க சசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக என்ற - சொற்குள்ளே

இனிய சொற்கள் கொண்ட தமிழே! 'கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்க நெறியில் நிற்க வேண்டும்' என்ற குறள் வார்த்தைகளுக்குள்ளே. (97)

98. எல்லார்க்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற

வல்லாய் உனக்கு உரைக்க வல்லேனோ-சொல்லியஉன்

எல்லோருக்கும் புத்திச் சொல்லிக் கரையேற்ற நீ வல்லாய், உனக்கு அறிவுரை கூற நான் வல்லவளோ? (98)

99. ஈரடிக்குள்ளே உலகமெல்லாம் அடங்கும் எனின்

நேரடிக்கு வேறே நிலன் உண்டோ-ஓரடிக்கு ஓர்

முன்பு நான் குறிப்பிட்ட உன் [ திருக்குறளின்] ஈரடிக் குள் எல்லா உலகும் அடங்கும் என்னும் போது நாலடி யால் உரைக்க வேறு நிலமுண்டோ? [வாமன அவதாரக் கதை சிலேடையாகச் சுட்டப் பட்டுள்ளது. (நேரடி - நாலடி நாலடியார்] (99)

100. ஆயிரம் பொள் இறைக்கும் ஐயரை வீதியிலே

போய் இரந்து தூது சொல்லப் போக்கினோய்-ஆயிருந்தும்

[சுந்தரர் பாடிய] ஒவ்வொரு பாடல் அடிக்கும் ஓரா யிரம் பொன்னைப் பரிசாக அள்ளி இறைக்கும் என் தலை வனாகிய ஈசனைத் தெருவில் அலைந்து [பரவை நாச்சியா ரிடம்] வேண்டித் தூது சொல்லி வரும்படி [சுந்தரராய்] அனுப்பினாய். [இறைக்கு - அள்ளிவீசும்] (100)

**தூது சொல்லுதல்**

101. மாண்பாய் ஓர் தூது சொல்லி வா என்பேன் என் வருத்தம்

காண்பாய் என் பெண்மதி நீகாணாதே–ஆண்பனைநல்

அங்ஙனமிருந்தும் (பெருஞ்செல்வச் சிறப்புள்ள) உன்னை எனக்காகச் சிறப்புள்ள ஒருதூது சொல்லி வா என்று கூறுகின்றேன். நீ என் துயரத்தை மட்டும் பார். என் பெண் புத்தியைப் பாராதே.

102. பெண்பனை ஆக்கினையால் பெண்களிலே

வண்பதியார் ஔவைனை வந்து உறித்தாய் – கண்டிச்

நீ (திருஞான சம்பந்தர் மூலம்). ஆண் பலையைப் பெண்பனை ஆக்கினாய் நீவளம் நிறைந்த காரைக்கால் என்னும் பதியில் (காரைக்கால்) அம்மையராகவும். ஔவையாராகவும் பெண்களாகப்) பிறந்தாய் ( அசை ] (108)

**சைவ சிறப்பு**

103 திலதவதியா ருடனே சென்மிந்தாய் மாடக்

குல தவ தியானத்தர் கூடல் – பல தவம் சேர்

நட்புள்ள திலகவதியாருடன் (அவர் தம்பி திருதாவுத்) கரசராக) நீ பிறந்தாய், வரிசையான மாளிகைகளும் தவமும், தியானமும் உடைய பெரியோரும் நிறைந்துள்ள மதுரை நகரில் – [மாடக்குலம் – மாளிகை வரிசை] (103)

104. மேனியார் கண்டிகையும் வெண்ணீறும் கண்டுஉருகும்

மானியார் தேசிகனா வந்துஉதித்தாய்–ஞானியார்

நிறைந்த தவம் சேர்ந்த, உருத்திராட்சமும் வெண்ணீறும் அறிந்த சிவனடியாரைக் கண்டு உள்ள முருகும் மானமிகு மங்கையர்க்கரசியாரின் குரு திருஞான சம்பந்தராக வந்து தோன்றினாய் (கண்டிகை– உருத்தி ராட்சப்] (104)

105. துங்க மகவாகத் தோன்றி வனப்பகைக்கும்

சிங்கடிக்கும் தாதையாய்ச் சீர் செய்தாய் –இங்குநீ

இசைஞானியாரின் உயர்ந்த மகனான சுந்தரராகத் தோன்றி கோட்புலி நாயனாரின் மகளிராகிய வனப்பகை யார், சிங்கடியார் என்னும் இருபெண்களுக்கு வளர்ப்புத் தந்தையாக இருந்து (பாடல் சீர்களில் அவர்களைச் சிறப்பித்துப் பாடிச்) சீர் செய்தாய், [தாதை – தந்தை]

106. பெண்கள் எல்லாம் வாழப் பிறந்தமையால் என்மனத்தில்

புண்கள் எல்லாம் ஆறப் புரிகண்டாய்–ஒண்கமலத்து

நீ இவ்வுலகில் (இவ்வாறு) பெண்கள் நல்வாழ்வு பெறப் பிறந்துள்ளமையால் என் மனத்துள்ள புண்கள் ஆற அருள் புரிய வேண்டும்.

**அன்னம்**

107. அன்னம்தனை விடுப்பேன் அன்னந்தான் அங்கு அவரை

இன்னம்தான் கண்டு அறியாது என்பரே - மன்எந்தாய்

ஒளியுள்ள தாமரை மலரில் வாழும் அன்னத்தை தூது விடுக்கக் கருதினேன். ஆனால் (பிரமனாகிய) அன்னம் அந்த ஈசனை இன்னும் கண்டறியவில்லை என்கின்றனரே?

**வண்டு**

108. அப்பால் ஓர் வண்டை அனுப்பின் அவர் காமம்

செப்பாதே என்றால் திகைக்குமே – தப்பாது

நிலையான என் தந்தையே! அவர்பால் ஒரு வண்டினைத் தூதனுப்பலாம் என்றால் (முன்னர் தருமி யின் பொருட்டுக் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி காமம் செப்பாது கண்டது மொழிமோ என்று குறுந்தொகைப் பாடல் ஒன்றில் பாடியது போல) அவர் காமம் செப்பாதே என்றால் திகைத்து நிற்குமே? (108)

**மான்**

109. மானைப் போய்த் தூது சொல்லி வா என்பேன்வல்லியப் பூத்

தானைப் பரமர்பால் சாராதே -ஏனைப்பூங்

ஒரு மானைத் தவறாமல் போய்த் தூது சொல்லி வா என்று வேண்டலாம். ஆனால் புலித்தோலால் ஆன அழகிய ஆடை அணிந்த அப்பரமனிடம் (புலித் தோலாடை கண்டு அஞ்சி) மான் செல்லாது. [வல்லியம் -புலி, பூந்தானை - அழகிய ஆடை]

**குயில்**

110. கோகிலத்தை நான் விடுப்பேன் கோகிலமும் காக்கையினம்

ஆகி வலியானுக்கு அஞ்சுமே - ஆகையினால்

இனிய குயிலை தூது விடுக்கலாம் எனின் காக்சையினம் ஆகிய அக்குயில் தன் பகையினமாகிய வலியான் என்னும் கரிக்குருவி சிவன் அருகிள் இருப்பது கண்டு அஞ்சி அவரிடம் செல்லாது. (கோகிலம் - குயில், வலியான் - கரிக்குருவி] (110)

**மனம்**

111. இந்த மனத்தைத் தூதாய் ஏகுஎன்பேன் இம்மனமும் அந்த மனோதீதர்பால் அண்டாதே - எந்தவிதம்

ஆதலால் இந்த என் மனத்தைத் தூது செல் எனக் கேட்கலாம் என்றால் மனத்திற்கு எட்டாதவரான அவரை அதுவும் அணுக முடியாதே? [மனோதீதா : மன அதீதர்- மனத்திற்கு எட்டாதவர்.] (111)

112. என்று என்று இரங்கினேன் என் கவலை எல்லாம்பொன்

குன்று அனையாய் உன்னுடனே கூறுகேன-சென்றாலும்!

என் காதலை எந்த வகையில் அவரிடம் தெரிவிப்பது என ஏங்கினேன். பொன் மலை அனைய என் தமிழே! என் துயரனைத்தையும் உன்னிடமே கூறுகின்றேன் (112)

**தொடை வகைகள்**

113. பண்ணிய பத்தொன்பதின் ஆயிரத்து இருநூற்று

எண்ணிய தொண்ணூற்று ஒன்றெனும் தொடையாய்- நண்நீ டீ

இலக்கணத்தார் இயற்றிய (எதுகை, மோனை முதலிய) 19291 தொடைகளைக் கொண்டுள்ள நீ சென்று,

114. ஒரு தொடை வாங்கி உதவாயோ ஓர்சே

விருது உடையார்க்கு நீ வோறோ-தருமிக்கே

அவ்விறைவனிடமிருந்து எனக்கு ஒரு தொடை (மாலை) வாங்கி வந்து உதவ மாட்டாயோ?

**திருவிளையாடல்**

115. ஓர் வாழ்க்கை வேண்டி உயர்கிழி கொல்லான்கொங்கு

தேர் வாழ்க்கை என்று எடுத்த செய்தியும் கீ-ரன்

தருமி என்னும் புலவனுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ள, அரசன் அறிவித்த பொற்கிழி கிடைக்க, உதவும் பொருட்டுக் 'கொங்கு தேர் வாழ்க்கை என்று தொடங்கிப் பாடிய செய்யுளும் (பார்க்க: கண் 108) (115)

116. இசையா வகையின் இயம்பினான் என்றே

வசையாடித் தர்க்கித்த வாக்கும் இசையான

நக்கீரன் தனக்கு இசைவில்லா வகையில் பேசினான் என்றே அவனை இகழ்ந்து சொற்போரிட்ட உன் வாக்கும். (116)

117. பாட்டுக்கு இரங்கி ஒருபாணனுக்குச் சேரலன்மேல்

சீட்டுக்கவி விடுத்த சீராட்டும் - பாட்டியலில்

இசையுடன் கூடிய பாடல் கேட்டு இரங்கிப் பாண பத்திரனுக்கு உதவும்படி கேட்டுச் சேரமான் பொருமான் நாயனாரிடம் சேருமாறு (மதிமலி புரிசை)

என்னும் சீட்டுக்கவி விடுத்த சிறப்பும், [சீட்டுக்கவி கடிதக் கவிதை. திருமுகப்பாசுரம்.]

118. நாத்திரமா மேவுபொருள் நன்றா அறுபதெனும்

சூத்திரமாப் பாடியருள் தோற்றமும் - மாத்திரமோ

பாடல் இலக்கணங்களில் நாவாற்றல் நிறைந்த அகப் பொருள் இலக்கணத்தை நன்கு ஆராய்ந்து அறுபது சூத்திரங்களில் பாடியருளிய இறையனார் அகப்பொருள் நூலின் காட்சியும், (118)

**சொக்கநாதர்**

119. உன்னோடு அவர்விளையாட்டு ஒன்றோ வடமதுரைக்கு

அந்நேரம் உன்பிறகே யார் வந்தார் - மன்னவன் மேல்

ஆகிய இவை மாத்திரமோ? தமிழே! அவர் உன்னுடன் கூடி ஆடிய விளையாட்டு ஒன்றோ? அன்று வடமதுரைக்கு உன் பின்னர் யார் வந்தார்? (இடைக்காட நாயனார் பின் சென்றவர் சொக்க நாதரல்லவா?) (119)

120. காரியார் நாரியார் கண்ட கவியைப் பகிர

வாரிஇலாக் கானகத்தில் வந்தவர்ஆர்-நாரினொடும்

பாண்டிய வேந்தன் மேல் காரியார், நாரியார் என்ற புலவர்கள் பாடிய கவிதைகளைப் பகிர்ந்து கொள் வதற்காக வழியறிய இயலாக் காட்டில் இடையனாக வந்தவர் யார்? [வாரி - வழி, நார் - அன்பு] (120)

121. போற்றிஉறும் பத்திரற்காப் போந்து கிழஉருவில்

தோற்றி விறகு சுமந்தவர்ஆர்-தேற்றி அவற்கு

அன்புடன் தம்மைப் போற்றி வழிபடும் பாண பத்திரருக்காகக் கிழவடிவில் தோன்றி விறகு சுமந்தவர் யார்? (121

122. ஈயரிய பொற்பலகை இட்டவர்ஆர் மற்றுஅவன்தன்

நேய மனைவிக்கு எதிரா கேர்ந்தவளைப் - போய் அவையில்

அப்பாணபத்திரரைத் தெளிவித்து அவருக்கு வேறு யாரும் கொடுக்க முடியாத அழகிய ஆசனப் பலகையை உட்காருவதற்காக இட்டவர் யார்? இன்னும், அவர் அன்பு மனைவிக்கு எதிராக வந்த விறலியை, (122)

123 தள்ளி இசை தாபிக்கத் தக்கவர்ஆர் தென்மதுரைக்கு

உள்ளிருந்த சொக்கர் உனக்குள் அன்றோ - எள்ளி

அவைக்குச் சென்று இசையால் வென்று, விலக்கி வெற்றியைப் (பாணபத்திரன் மனைவிக்கே) நிலைக்கச் செய்தவர் யார்? இவ்வரிய செயல்களைச் செய்து தென் மதுரையில் வீற்றிருக்கும் சொக்கர் உனக்குள் அடக்கம் அல்லவா? [தாபிக்க - நிலை நிறுத்த] (123)

124. வடமொழியில் வேத வசனமே ஈசர்

திட மொழியாம் என்பார் சிலரே - அடரும்

தமிழ்மொழியை இகழ்ந்து வடமொழியில் உள்ள வேத வார்த்தைகள் தாம் ஈசனுக்கு உகந்த உறுதிமொழி சுள் என்பார் சிலர். [ஈசனைப் பற்றி உணராதோரே அங்ஙனம் உரைப்பார்.) [அடரும் - அழிக்கும்] (124)

125. பரசமய கோளரியாய்ப் பாண்டி நாடுஎங்கும்

அரசமயம் நீ நிறுத்தும் அக்காள் - விரசு

அழிக்க வரும் வேற்றுச் சமயங்களை அழிக்கும் சிங்கமாக (திருஞான சம்பந்தராக) வந்து பாண்டிய நாடெங்கும் நீ அரனுக்குரிய சைவ சமயத்தை நிலை நிறுத்திய அந்தாளில்-[பரசமயம் -பிறமதம், அரசமயம் சைவ சமயம்; கோளரி - சிங்கம், விரசு - விரைவு.)

126. ஆதிக்கண் வையையில் வேதாகமத்தைத் தாபித்தாய்

சோதிக்கின் ஏடகமே சொல்லாதோ-வேதத்தேவு

விரைந்து வந்து முதலில் வையையில் சமணப் புலவர் களுடன் புனல்வாதம் நிகழ்த்தி வென்று சைல வேதங் களை நிலைக்கச் செய்தாய்,

ஆய்ந்து நோக்கின் அவ் வேடுகள் சுரையில் ஒதுங்கிய திருவேடகம் என்னும் திருத் தலமே அந்நிகழ்ச்சிக்குச் சான்று கூறாதோ? (126)

127. ஆதவன் அங்கு அண்டாது அடைத்த கதவம  திறந்தாய்

வேதவனம் கண்டால் விளம்பாதோ - வேதம்

வேதம் என்னும் தெய்வம் கதிரவன் ஒளியும் நுழையா வண்ணம் அடைத்த கதவை நீ திறந்தாய். வேதலனம் என்னும் திருமறைக் காட்டைக் கண்டால் அச்சிறப்பைச் சொல்லாதோ? [வேதத் தேவு - வேதத் தெய்வம்] (127)

## தமிழ் அமுது

128. அமிழ்தினும் மிக்கென்னும் முனிக்கு அன்பர் உனைச் சொன்னார்

தமிழ்முனி என்னும் பேர் தாராதே - தமிழால்

வடமொழியிலான வேதம் அமிழ்தினும் சிறந்தது என்று எண்ணிய அகத்திய முனிவருக்கு என் அன்பராகிய ஈசன் உன்னைக் கற்பித்தார். அகத்தியனுக்குள்ள தமிழ் முனிவன் என்னும் பெயரே அதற்குச் சான்று தராதோ? (128)

129. அறம் பொருள் இன்பம் வீடு ஆரணர் சொன்னார் அத்

திறம் பரமர் வாக்கே செப்பாதோ - மறந்திடல்இல்

தமிழில் தான் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற் பொருளை முப்பாலில், வேதம் வகுத்தவனாகிய பிரமன் (திருவள்ளுவராகப்பிறந்து) பாடினார். அச்செயல் பற்றி (திருவள்ளுவமாலை என்னும் நூலில்) இறையனார் பாடிய பாடலே கூறாதோ? [ஆரணர் - பிரமன்] (129)

130. கற்பு அலகை ஓதுமறை காணார் கீழ் நிற்கவும் நீ

பொன்பலகை மேலிருந்தாய் போதாதோ-தற்பரரோடு

மறக்கவியலாத கல்வியின் அளவைக்கூட அறிந்து உரைக்கும் வேதங்களாலும் சுண்டுணர முடியாதவரான ஈசன் கீழே நிற்க நீ சங்கப்புலவராக அழகிய சங்கப்பலகை யின் மேலே வீற்றிருந்தனையே, அது ஒன்றே உன்

பெருமைக்குப் போதாதோ? [கற்பு-கல்வி, அலகை - அளவு, பொன் - அழகிய, தற்பரன் - இறைவன்] (130)

**சதுர் வேதம்**

131. எண்இறந்த வாசி அழைத்திட்டாய் சதுர்வேதப்

பண்நிறைந்த வாசி பகராதோ - அண்ணலார்

இறைவனுடன் எண்ணற்ற நரிகளாகிய குதிரைகளை மாணிக்கவாசகர் பொருட்டு நீ வரவழைத்தாய். அப் பரமன் ஏறி வந்த நான்கு வேதங்களாகிய குதிரை அதற்குச் சான்றாகாதோ? [வாசி- குதிரை, சதுர் வேதம் நான்கு வேதங்கள்] (131)

132.தென்பால் உகந்தாடும் செய்தி எல்லாம் உன்னிடத்தில்

அன்பா என்று அப்பாலும் ஆரறியார் - உன்பேர்

அனைவர்க்கும் தலைவராகிய ஈசன் தென்திசையை விரும்பி வந்து ஆடும் செயலெல்லாம் உன்னிடத்தில் அவர் கொண்ட அன்பால்தான் என்பதை அயல் நாடுகளிலும் அறியார் யார்? [அப்பால் - அயல் நாட்டில்] (132)

133. பழிஆர் திசைச்சொல்லார் பன்னார் திருவாய்

மொழியார் குழறி மொழிவார் - அழியா

தமிழ் என்னும் உன் பெயரை பழிநிறைந்த பிறதிசை மொழியாளர் (ழ கரத்தை உச்சரிக்க அறியாமையின்) திருத்தமாகச் சொல்லார். திருவாய் மொழி பாடும் வைணவர்கள் (மணிப்பிரவாள நடையில் நாட்டமுள்ள வராதலின்) குழறிக்குழறியே உரைப்பர். [பழி ஆர்-பழி நிறைந்த. திசைச் சொல்லார் - பிறமொழி பேசுவோர்] (133)

134. உருவால் அவாய் இருக்கும் ஒதரிய முத்தித்

திருவாலவாய் இருக்கும் செல்வர் -ஒரு மால்

தம்முடைய அழியாத உருவினை விரும்பி இருக்கு முதலிய வேதங்கள் ஓத முயன்றும் அவற்றுக்கு அரியவராக முதலிய முக்தி அளிக்கும் திருவாலவாய்

என்னும் மதுரை யில் எழுந்தருளி இருக்கும் செல்வன், [அவாய்- விரும்பி, இருக்கு - இருக்கு வேதம்] (134)

135. வடமதுரை ஏறுமுன்னே வந்த வடிவுஎன்னத்

தடமதுரை மீன்உயர்த்த தாணு - படர்தீர்க்கும்

ஒப்பற்ற திருமால் வடமதுரைக்கு வருவதற்கு முன்னரே எடுத்த (மச்ச) வடிவம் இதுதான் என்று சொல்லும்படி பெரிய மதுரை நகரில் மீன்கொடியை உயர்த்தி அரசாண்ட சுந்தர பாண்டியனாகிய சிவன். [தாணு - சிவன், படர்- துயரம்] (135)

136. சத்திபுரத்து ஓர்பால் தழைத்து மகிழ்ந்தோர் சீவன்

முத்திபுரத்து ஓர்பால் முளைத்து எழுந்தோர் – அத்திசைபோல்

அடியவர் துயர்தீர்க்கும் சக்தி தேவியின் திருமேனியில் ஒரு பாகத்தில் தழைத்து மகிழ்ந்திருந்தவன், அங்கே பிறந்தமையினாலேயே அடியவர்க்கு முக்தி அளிப்பதால் சீவன் முக்திபுரம் எனப் பெயர் பெற்ற மதுரையில் ஒரு பகுதியில் சுயம்புலிங்கமாக முளைத்துத் தோன்றியவன்,

137. ஆங்குஓர் இருநான்கு அயிராவதம் சுமக்கும்

பூங்கோயிற்குள் உறைந்த புண்ணியனார் - பாங்காம்

இவ்வுலகை எட்டுத்திசைகளிலும் யானைகள் சுமப்பது போல் எட்டு யானைகள் சுமக்கும் அழகிய கோயிலுள் உறைந்திருக்கும் புண்ணியன், [அயிராவதம் - தெய்வ யானை (137)

138. இடம் பவனம் ஈது ஆக இந்திரன் வந்து ஏத்தும்

கடம்பவனம் மீதிலுறை காந்தர் - அடும்பேர்

இறைவன் உறையப் பொருந்தும் இடமும், கோயிலும் இதுவே என வந்து வாழ்த்தித் துதிக்கும். என்னைக் கவர்ந்த காந்தன், [பவனம் - கோயில்] (138)

139. அலகு அம்பு அரிக்கும் அரியார் முடிவேய்ந்து

உலகம் பரிக்கும் முறை உள்ளார் - பலநாளும்

கொல்லும் பெரிய நுனியுடைய அம்பாகி முப்புரம் எரிக்கும் போது தன் கையிலிருந்த திருமாலுக்கும் அறிய அரியவர், முடிசூடி இவ்வுலகத்தைப் பாதுகாத்து ஆளும் முறையுடைவர், [அலகு அம்பு-அம்பின் நுனி, அரி- திருமால்] (139)

**பூசலார் நாயனார்**

140 நின்றவூர்ப் பூசலார் நீடு இரவெலாம் நினைந்து

குன்று போலே சமைத்த கோயிலும் நன்றிதரும்

திருநின்றவூரைச் சேர்ந்த பூசலார் நாயனார் பல நீண்ட இரவுகளில் எல்லாம் நினைந்து நினைந்து தன் உள்ளத்திலேயே குன்று போலப் பெரிதாக அமைத்த கோயிலும், (நன்றி - நன்மை] (140)

141. தாயான கங்கைமுடி தான் குளிரக் கண்ணப்பர்

வாயால் உமிழ்ந்த திருமஞ்சனமும் - தூயமழைத்

அனைவர்க்கும் நன்மை தரும் தாயான கங்கையைச் சூடியுள்ள சடைமுடி குளிரும்படி கண்ணப்ப தம் வாயிலிருந்து உமிழ்ந்த சிறந்த நீராட்டு நீரும். திருமஞ்சனம் -நீராட்டு]

142. துள்புஆர் திருக்குறிப்புத் தொண்டர் துணித்துறையில்

அன்பாய் அளித்த பரிவட்டமும் - இன்பாத்'

தூய மழையைத் தந்து துன்புறுத்திச் சோதனையின் பின் ஆட்கொள்ளப்பட்ட திருக்குறிப்புத் தொண்டர் துணிதுவைக்கும் துறையில் அன்புடன் அளித்த உடையும், (பரிவட்டம் - தெய்வங்களுக்குச் சாத்தும் உடை] (142)

143 தணிவு அரிய மானக்கஞ்சாறனார் சாத்தும்

மணிமுடி சூழ் பஞ்சவடியும் - அணிவிடையார்

அன்பு என்றும் தணியாத மானக்கஞ் சாறனார் இன்பமாகச் சாத்தும் அழகிய தலைமயிரைச் சுற்றி அணி யும் பஞ்சவடியும், [பஞ்சவடி - துறவிகள் தலைமுடியின் மேல் அணிந்து கொள்வது. விடை - காளை] (143)

144. காமன்பால் முன்சேந்த கண்போல மூர்த்தியார்

தாம் அன்பால் முன்சேர்த்த சந்தனமும் - பூமன்போல்

அழகிய காளை வாகனமுடைய ஈசன் காமனைக் கண்டு முன்னர் சினந்து சிவந்த கண்போல், மூர்த்தி நாயனார் அன்பினால் தம் முழங்கையைத் தேய்த்துத் தந்த சிவந்த சந்தனமும், [பூ மன் - நிலமாளும் அரசன்]

145. காக்கும் அரிபுனைந்த கண்மலரும் காதலோடு

சாக்கியர் தாம் சாத்திய ண்மலரும் - போக்கியமா

தாடாளும் மன்னன் தன் குடிமக்களைக் காப்பது போல அவர் கிண்ணாலனத் தையம் காக்கும் திருமால் கொண்ட பெருங் காதலினால் சாக்கிய நாயனார் சாத்திய அழகிய குளிர்ந்த (கல்) மலரும். [போக்கியம்-உணவு] (145)

146. ஆக்கிய மாறன் அமுதும் சிறுத்தொண்டர்

மாக்கறியும் தாயர் தரு மாவடுவும் நீக்கரிய

உண்ணுதற்காக இளையான்குடி நாயனார் அளித்த பெருமை உணவும், சிறுத்தொண்ட நாயனார் அளித்த பெருமை மிக்க பிள்ளைக்கறியும், அரிவாள்தாயர் தந்த மாவடுவும், [தாயர் -அரிவாள்தாய நாயனார் ]

147. கார்ஆர் இரவில் கணம்புல்லர் தம்முடிமேல்

சீராக ஏற்றிய செந்தீபமும் - ஆரால்

விலக்க இயலாத காரிருள் நிறைந்த இரவில் கண புல்ல நாயனார் தம் தலைமுடிமேல் சிறப்புடன் ஏற்றி சிவந்த விளக்கும்,

148. அமைத்து வணங்கல் உறும் அங்கணர்க்குப் பூசை

சமைத்து வணங்கத் தகுமோ - உமைக்கு அன்பர்

ஆகிய அரும்பொருட்களைப் படைத்து வண படும் அழகிய நெற்றிக்கண்ணனுக்கு இவற்றி உயர்ந்த பூசைப் பொருள் தந்து யாரால் இயலும்?

அற்சனை பாட்டேயாம் என்று ஆரூரர்க்கு ஆதியிலே சொற்றமிழ் பாடுகஎனச் சொன்னமையால்

149. அற்சனை பாட்டோம் என்று ஆறுறர்க்கு ஆதியிலே

சொற்றமிழ் பாடுகஎனச் சொன்னமையால்

உமையவள் அன்பராகிய ஈசன் ஆதியில் நம்பி ஆரூரராகிய சுந்தரரைப் பார்த்து 'எனக்கு இனிய அர்ச் சனை (தமிழ்ப்) பாட்டே ஆகும். எனவே தமிழ்ச்சொற்கள் கொண்டு என்னைப் பாடுக' எனக் கூறியுள்ள மையால்' (சொற்றமிழ்- தமிழ்ச்சொல்]

150. செய்தாய் நால்வேதம் திகைத்து ஒதுங்கப் பித்தன் என்று

வைதாய் நீ வைதாலும் வாழ்த்தாமே - மெய்தான்

அவர் சொல்லிய படியே நீ செய்தாய். அவரைத் துதித்துக் கொண்டிருக்கும் நான்கு வடமொழி வேதங் களும் திகைத்து ஒதுங்கி நிற்க நீ அவரைப் பித்தன் என்று (சுந்தரர் மூலம்) வைதாய். அப்படி நீ வைத்தும் அவருக்கு வாழ்த்தாகி விட்டது. (150)

**தமிழின் பெருமை**

151, இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்

விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன் வருந்தினன் மால்

நான் கூறியது முற்றும் உண்மையே. பெருமை மிக்க தமிழே! உன் துணையால்தான் நான் இவ்வுலகில் வாழ்ந் திருக்கிறேன். கண்ணிமைக்காத தேவர்கள் உண்ணும் புதிய அமுதமே கிடைத்தாலும் விரும்பேன் [விருந்து- புதியது, மால் - மயக்க ] (151)

182. பாலைநிலம் நெய்தலாப் பண்ணினாய் இன்னும் அதைச்

சோலைநிலம் ஆக்குவை நான் சொல்லுவதுஎன் - மேலானார்

செல்லும் வழியில் திருநனிபள்ளி என்னும் ஊரில் பாலை நிலத்தைஞானசம்பந்தர் மூலம் நெய்தல் நிலமாகப் பண்ணினாய். இனனும் நீ அந்தப் பாலையைச் சோலை யாகக் கூட மாற்றிவிடுவாய். உனக்கு நான் என்ன சொல்வது? [நெய்தல் - கடலும் கடல் சார்ந்த பகுதியும்] (182)

183 கூறும் பொதிசோறு கொண்டுவரின் உனக்கு

வேறும் பொதிசோறு வேண்டுமோ- வீறாகக்

அனைவர்க்கும் மேலானவராகிய ஈசன், யாவரும் புகழ (திருப்பைஞ்ஞீலி எனும் ஊரில் நாவுக்கரசராகிய) உனக்குக் கட்டுச்சோறு கொண்டு வந்து தந்தார். இப்படி இருக்க உன் பயணத்துக்காக நான் வேறு கட்டுச் சோறு கட்டித் தர வேண்டுமோ? [பொதி சோறு - கட்டுச்சோறு)

184. கற்பார் பொருள் காணார் காசுபணம் காணில்

விற்பார் அவர்பால் நீ மேவாதே - கற்றாரை உனை

தற்பெருமை கொண்டு, நூற்பொருள் உணராமல் உன்னைச் சிலர் கற்பார்; அவர்கள உண்மைப் பொருள் உணரார்; மேலும் அவர்கள உன்னை விற்று செல்லாதே. காசுபணம் கிடைத்தால் விடுவார்கள். அத்தகையோர்பால் நீ (184)

228. பெண்நீராள் கண்ணீர் பெருகத் தழுவித் தம்

கண்ணீரால் ஆற்றி அருள் கண்களும்-சண்

மைல்களிகுலத்தைச் சேர்ந்த பெண் ஒருத்திய அன் பொய் வழக்குத் சுவர அவள் தாயத்தாரி பெருக்கி அழுதபோது மாமனாக ஸந்து அரவணைத்து, துயரத்தை ஆற்றியருளிய தம் எண்களையும், நீர உடையாள், தெண்ணீரார் - தெளிந்த தன்மையை உடையவர்]

229. பண்சுமந்த பாட்டினுக்கும் பாவைதந்த பிட்டினுக்கும்

மண்சுமந்த சோதி மணிமுடியும் -கண் சுமந்து

தெளிந்த நற்பண்புகளையுடைய மாணிக்கவாகள் பாடிய இசையுடன் கூடிய பாடலுக்காகவும், லந்தி என்ற பெண் தந்த பிட்டினுக்காகவும், (பார்க் ஆம் கண்ணி) வையையில் வெள்ளம் வந்தபோது மண்சுமந்து பேரொளி வாய்ந்த அழகிய தலையையும். (239)

230 கண்டு களிகூர்ந்து கசிந்து கசிந்து உள்உருகித்

தொண்டு செய்து தாள்முடிமேல் சூடியே - மண்டும்

கண் நிறையக் கண்டு களிப்படைந்து, உள்ளம் கசி உருகிப் பெருகத் தொண்டு செய்து அவர் திருப்பாதன் கள் முடிமேல் பட வணங்கி, இறைவனின் (230)

231. உடுக்குலம் தம்கோக்குலம் என்று உற்றறிந்தால்என்ன

அடுக்கு இலங்கு தீபம் எதிராகக்- கடுத்திடேல்

விண்மீன் கூட்டங்கள், சோமசுந்தரர் தங்கள் அரசன் சந்திரனின் குலமாகிய பாண்டிய குலத்தில் வந்தவா என்று அறிந்து அருகில் நெருங்கி வந்துற்றது

260. வேளைளரித்தாய்க்கு இயல்போ மின்னார்கலைகவர்தல்

காளையிடை இருந்து கற்றதோ - மீளாது

உன் பார்வையில் பட்ட காமனை எரித்தவனாகிய உனக்குக் (காதல் நோயால் இடைமெலியச் செய்து ) கன்னி யரின் உடை கவர்தல் தகுமோ? உடையைக் கவரும் வேலையை நீ ஆயர்பாடிக் காளையாகிய கண்ணணிடம் கற்றாயோ? [வேள் - மன்மதன்; மின்னார் - பெண்கள்; கலை - உடை ] (260)

261 சென்று இலகு நாரை அன்று சென்ற சிவலோகத்தே

இன்று எனை அங்கு எய்தவிடல் ஆகாதோஅன்றி அழல்

என்றும் விலகாது சிவலோகத்தே சென்று தங்கி இருக்குமாறு ஒரு நாரைக்கு அன்றே முக்தி அளித்து அருளினாய். இன்று இம்மங்கையையும் அச்சில லோகத்தைச் சென்றடைய விடக்கூடாதா. [ அழல் குன்று -நெருப்பு மலை; ] (261)

262 குன்றே விருத்த குமாரர் இளம்பாலர்

என்றே ஓர் பெண் வீட்டு இருக்கலாம்- சென்று ஒருநாள்

தவிர, அண்ணாமலையாராகிய நெருப்புக் குன்றே! முதியவராகவும், இளைஞராகவும், பாலகராகவும் பல வடிவம் மாறிக் கௌரி என்னும் ஒருபெண்வீட்டில் நீ இருக்கலாம் (262)

263. பொன்னனையாள் வீடும் புகுந்திருக்கலாம் எனின்என்

பொன் அனையாள் வீடும் பொருந்தாதோ என்னும் மொழி

பொன்னனையாள் என்னும் ஒரு பரத்தை வீட்டிற்குச் சென்று ( இரசவாதத்தால் இரும்பைப் பொன்னாக்கி தந்து) ஒரு நாள் தங்கி இருக்கலாம் என்றால் என் திரு மகள் அனைய தோழியின் இல்லம் நீ வந்து தங்கி இருக்கப் பொருந்தாதோ? என [பொன்னனையாள் - ஒரு பரத்தை; பொன் - திருமகள்.]

264. எல்லாம் திருச்செவியில் ஏறும்படி உரைக்க

வல்லாய் உன்போல் எவர்க்கு வாய்க்குமே - நல்லாள்

நான் கூறும் இம் மொழிகளை எல்லாம் இறைவன் திருச்செவியில் ஏறும்படி உரைக்க நீயே வல்லமை உடை யாய். உன் போலச் சொல்லாற்றல் வேறு எவர்க்கு வாய்க்கும்(264)

265. கருணை விழியாள் அங்கயற்கண்ணி தன்னோடு

அருள் புரிய வாழ்ந்திருக்கும் ஐயர் - திருமதுரை

நல்லவளும், கருணை நிறைந்தவிழிகளை உடையவளு மான அங்கயற்கண்ணம்மையுடன் கூடி, அடியவர்க்கு அருள் புரிய வாழ்ந்திருக்கும் தலைவர்.[ஐயர் - தலைவர்] (265)

266.தானே சிவ ராசதானி என்று வீற்றிருந்தால்

தேனே நம் பாக்கியத்தின் செய்தியே - ஆளமையால்

செல்வத் திருமதுரை நகரமே சிவன் இருந்து அரசாளத் தகுந்த தலைநகர் என்று அவர் அங்கே வீற்றிருந்தால், அது நாம் செய்த புண்ணியத்தால் விளைந்த செயல்தான்; தேன் என இனிக்கும் தமிழே! [ராசதானி - தலைநகர், செய்தி - செயல்.

267. அந்தரலோகத்தின் மேலான திருஆலவாய்ச்

சுந்தர மீனவன் நின் சொற்படியே - வந்து

எனவே, வானுலகினும் மேலான சிறப்புடைய திரு வாலவாய் என்னும் மதுரையில் வாழும் சோம சுந்தர பாண்டியன் உன் சொற்வடி. [அந்தரலோகம் - வானவர் உலகம்; மீனவன் - பாண்டியன்.] (267)

268. துறவாதே சேர்ந்து சுகாநந்தம் நல்க

மறவாதே தூதுசொல்லி வா.

என்னிடம் வந்து, என்னை என்றும் பிரியாது சேர்ந் திருந்து சுகமும் இன்பமும் தருமாறு, நான் கூறியது எதையும் மறவாமல் தூதுசொல்லி, அவர் இசைவறிந்து வா.

*****

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | வனப்பு வகைகளை கூறுக. | K3 | CO2 | PO4 |
| 2 | தூது சொல்லுதல் பற்றி கூறுக. | K5 | CO4 | PO2 |
| 3 | தூது இலக்கியங்கள் பற்றி விளக்குக. | K2 | CO1 | PO1 |
| 4 | பொருள்கோள் பற்றி விளக்குக. | K3 | CO5 | PO2 |
| 5 | தூது பொருட்கள் குறித்து விளக்குக. | K1 | CO6 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் விடு தூது பற்றிக் கட்டுரைக்க | K2 | CO1 | PO4 |
| 2 | தூது இலக்கியம் பற்றி விவரிக்க | K4 | CO2 | PO5 |
| 3 | கலிங்கத்துபரணி - கட்டுரைக்க | k2 | CO3 | PO2 |
| 4 | பிள்ளைத் தமிழ் பற்றி விவரிக்க. | K1 | CO2 | PO1 |
| 5 | தொல்காப்பிய தூது நூல்கள் குறிப்புகளை தொகுத்துரைக்க | K4 | CO4 | PO3 |

## அலகு 3

### குற்றாலக் குறவஞ்சி

குற்றாலம் என்ற இடத்தின் பெயரால் திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற நூல் பெயர் பெற்றது. குற்றாலம் என்பது தமிழகத்தின் தென்பகுதியில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தின் தென்காசி வட்டாரத்தில் உள்ள ஊர் ஆகும். இந்த இடத்தில் குறும்பலா மரத்தின் அடியில் இறைவன் ஆகிய சிவபெருமான் எழுந்து அருளி உள்ளான். இந்த இறைவனுக்குத் திரிகூடநாதர் என்ற பெயரும் உண்டு. இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது இந்நூல்.

இந்த நூலின் ஆசிரியர் திரிகூடராசப்பக் கவிராயர் ஆவார். இவர் பிறந்த இடம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மேலகரம் என்பது ஆகும். இந்த நூலில் 128 பாடல்கள் உள்ளன.

ஒரு நூலை இயற்றும் புலவர் அந்த நூல் இனிது முடிவதற்காகக் கடவுளை வேண்டி வாழ்த்துவது மரபு ஆகும். இந்த மரபுக்கு ஏற்பத் திரிகூடராசப்பக் கவிராயரும் நூலின் தொடக்கத்தில் கடவுள் வணக்கம் பாடுகின்றார்.

நூலின் தொடக்கத்தில் விநாயகர், முருகன், திரிகூடநாதர், குழல்வாய் மொழி அம்மை, திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், அகத்தியர், மாணிக்கவாசகர், கலைமகள் (சரசுவதி) ஆகியோரை வணங்கி நூலைத் தொடங்குகின்றார்.

***பூமலி இதழி மாலை புனைந்த குற்றாலத்து ஈசர்***
***கோமலர்ப் பாதம் போற்றிக் குறவஞ்சித் தமிழைப் பாட***
***மாமதத்து அருவி பாயும் மலை என வளர்ந்த மேனிக்***
***காமலி தருப்போல் ஐந்து கை வலான் காவலானே***

திருக்குற்றால நாதர் கொன்றை மலர் மாலையை அணிந்துள்ளார். அவருடைய தாமரை மலர் போன்ற பாதங்களை வணங்குகின்றேன். குறவஞ்சி என்ற இந்த நூலைப் பாட, பிள்ளையார்ப் பெருமானை வணங்குகின்றேன். எத்தகைய

பிள்ளையார்ப் பெருமான்? மதமாகிய அருவி பொழிகின்ற மலைபோன்ற உடம்பை உடையவர். கற்பக மரம் போல் கேட்டவற்றைக் கொடுப்பவர். இத்தகைய விநாயகரை வணங்குகின்றேன் என்று புலவர் பாடுகின்றார். இப்பாடலில் பிள்ளையாருடைய உடம்புக்கு மலை உவமையாகக் கூறப்படுகிறது. கேட்ட வரங்களை அளிப்பவர் என்பதற்குக் கற்பகத்தருவை உவமை கூறுகின்றார். தாம் இயற்றும் குறவஞ்சி நூலைக் குறவஞ்சித் தமிழ் என்கிறார்.

குறவஞ்சி என்ற இந்த இலக்கிய வகையினுள் இடம் பெறும் செய்திகளில், குறத்தி குறி கூறுதல், குறவனுடன் உரையாடுதல் என்பன பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே, இந்த இலக்கிய வகைக்குக் குறவஞ்சி என்ற பெயர் ஏற்பட்டது என்பர். குறவஞ்சி என்ற சொல்லுக்குக் குறப்பெண் என்பது பொருள். வஞ்சி என்றால் பெண் என்று பொருள். இந்த இலக்கிய வகையில் குறத்தியின் செயல்களும், குறி வகைகளும் தலைமை இடம் பெறுகின்றன. எனவே, இந்த இலக்கிய வகைக்குக் குறவஞ்சி என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

**திருக்குற்றால நாதர் உலா**

குறவஞ்சி நூலின் பாட்டுடைத் தலைவன் ஆகிய திருக்குற்றால நாதர் என்னும் இறைவன் உலா வருகின்றார். தலைவன் உலா வருவதைக் கட்டியக்காரன் அறிவிக்கிறான். மக்கள் திரண்டு வந்து பார்க்கிறார்கள்.

திருக்குற்றாலத்து இறைவன் உலா வருகின்றார். உலக மக்கள் யாவராலும் வணங்கத்தக்கவர்; குறும் பலா மரத்தின் அடியில் எழுந்து அருளி உள்ளவர்; என்றும் இளமை ஆனவர்; சிவன் வடிவம் ஆனவர்; அதனுடன் திருமால், பிரம்மன் ஆகிய கடவுளர்களின் உருவத்தையும் கொண்டவர்; இத்தகைய சிறப்புடைய இறைவன் உலா வருகின்றார். தன் வாகனம் ஆகிய காளை மீது ஏறி உலா வருகின்றார் என்று கட்டியக்காரன் கூறுகின்றான்.

தலைவனாகிய குற்றால நாதர் உலா வருகின்றார் என்பதைப் பெண்கள் அறிகின்றனர். உலா வரும் தலைவனைக் காண ஓடோடி வருகின்றனர். இந்த

நிகழ்ச்சி திருக்குற்றாலக் குறவஞ்சியில் நகைச் சுவையாக விவரிக்கப்படுகிறது. சான்றாக ஒரு பாடலைப் பார்ப்போமா?

***ஒருகை வளை பூண்ட பெண்கள் ஒரு கைவளை***
***பூணமறந்து***
***ஓடுவார் நகைப்பவரை நாடுவார் கவிழ்வார்***
***இருதனத்து ரவிக்கைதனை அரையில் உடை***
***தொடுவார்பின்***
***இந்தஉடை ரவிக்கைஎனச் சந்தமுலைக்கு இடுவார்***
***கருதும்மனம் புறம் போக ஒரு கண்ணுக்கு மை எடுத்த***
***கையுமாய் ஒரு கண்இட்ட மையுமாய் வருவார்*** ***(பாடல் 16: 5 - 7)***

என்று கூறுகின்றார்.

ஒரு கையில் வளையல்களை அணிகின்றனர். மற்றொரு கையில் வளையல் அணிய மறந்து ஓடுகின்றனனர். தாம் ஓடுவதைப் பார்த்துச் சிலர் சிரிக்கின்றனர். எனவே தலை கவிழ்கின்றனர். மார்புகளில் அணிய வேண்டிய ஆடையை இடையில் உடுக்கின்றனர். பின் இது மேல் ஆடை என உணர்கின்றனர். எனவே, அதை மார்புகளில் அணிகின்றனர். ஒரு கண்ணுக்கு மை இட்டுள்ளனர். மற்றொரு கண்ணுக்கு இடவேண்டிய மையைக் கையில் வைத்துள்ளனர் என்று கூறுகிறார். இவை உலாவைக் காணவரும் பெண்களின் விரைவையும் ஆசையையும் விளக்குகின்றன.

**உலாவைக் காணும் பெண்கள்**

குற்றால நாதர் உலா வருகின்றார். உலாவைக் காண வந்த பெண்கள் உலாவரும் தலைவனைப் பார்க்கின்றனர். அவன் அழகில் மயங்கிய பெண்கள் இந்தத் தலைவன் யாராக இருக்கும் என ஐயம் கொள்கின்றனர். இறுதியில் தலைவன் திரிகூடராசனே என்று துணிகின்றனர்.

***ஒரு மானைப் பிடித்துவந்த பெருமானைத் தொடர்ந்துவரும்***
***ஒரு கோடி மான்கள் போல் வரு கோடி மடவார்***

*புரி நூலின் மார்பன் இவன் அயன்என்பாற் அயன்ஆகில்*

*பொங்கு அரவம் ஏது தனிச் சங்கம் ஏது என்பார்*

*விரிகருணை மால் என்பார் மால் ஆகில் விழியின்மேல்*

*விழி உண்டோ முடியின்மேல் முடிஉண்டோ என்பார்*

*இருபாலும் நான்முகனும் திருமாலும் வருகைபோல்*

*ஈசன் இவன் திரிகூடராசனே என்பார்*

***(பாடல் 15 : 1 - 4)***

(**பெருமான்** = சிவபெருமான்; **மடவார்** = பெண்கள்; **புரி நூல்** = முப்புரி நூல்; **அயன்** = பிரம்மன்; **அரவம்** = பாம்பு; **சங்கம்** = சங்கக் குண்டலம்; **விரி** = பரந்த; **மால்** = திருமால்; **விழி** = நெற்றிக்கண்; **முடி** = தலை, சடை, கூந்தல்; **இருபாலும்** - இரண்டு பக்கமும்; **நான்முகன்** - பிரம்மன்)

உலாவைக் காண வந்த பெண்கள் தலைவனைப் பார்க்கின்றனர். இவன் பிரம்மனாக இருக்குமோ என எண்ணுகின்றனர். பிரம்மன் ஆனால் அவனுக்குப் பாம்பு ஆகிய அணிகலன் ஏது? சங்குக் குழை ஆகிய காது அணி ஏது? எனவே, இவன் பிரம்மன் அல்ல. திருமாலாக இருக்குமோ? திருமால் ஆனால் அவனுக்கு நெற்றிக்கண் ஏது? தலையில் சடைமுடி ஏது? எனவே திருமால் அல்ல. மேலும், தலைவனின் இரண்டு பக்கமும் பிரம்மனும் திருமாலும் வருகின்றனரே. எனவே, இவன் திரிகூடராசன் ஆகிய இறைவனே என்று ஐயம் நீங்குகின்றனர். பெண்களின் இந்த இயல்பான பேச்சுப் படிப்பவர் மனத்தை ஈர்த்து ஆசிரியரின் திறனை எண்ணி இன்புறச் செய்கிறது.

**வசந்த வல்லி**

குற்றாலக் குறவஞ்சி நூலின் தலைவியின் பெயர் வசந்த வல்லி. அவள் குற்றால நாதர் உலாவரும் காட்சியைக் காண வருகின்றாள். அப்போது அவளைப் பற்றிய செய்திகள் நூலில் இடம்பெறுகின்றன.

**வசந்த வல்லியின் தோற்றம்**

உலாவைக் காணவரும் வசந்தவல்லியின் தோற்றம் காட்டப்படுகிறது.

*பொன் அணித் திலகம் தீட்டிப்*

*பூமலர் மாலை சூட்டி வன்ன மோகினியைக் காட்டி*

*வசந்த மோகினி வந்தாளே*

***(பாடல் 16: 3 - 4)***

என்கிறார்.

(**திலகம்** = பொட்டு; **தீட்டி** = இட்டு; **வன்ன** = அழகிய; **மோகினி** = மோகினிப் பெண் வடிவம்; **காட்டி** = தோற்றம் கொண்டு)

நெற்றியில் நல்ல அழகு உடைய திலகம் இட்டு உள்ளாள். தலையில் பூமாலை சூடியுள்ளாள். அழகிய மோகினிப் பெண் போல் தோற்றம் கொண்டு உள்ளாள். இத்தகைய வசந்த வல்லி என்ற பெண் உலாவைக் காண வருகின்றாள்.

**வசந்த வல்லியின் பந்தாட்டம்**

தலைவியாகிய வசந்த வல்லி தலைவன் உலா வரும்போது பந்து விளையாடிக் கொண்டிருக்கிறாள். பந்து விளையாடும் காட்சி மிக அழகாக வருணிக்கப்படுகிறது.

*பொங்கு கனம் குழை மண்டிய கெண்டை*
  *புரண்டு புரண்டு ஆடக் குழல்*
*மங்குலில் வண்டு கலைந்தது கண்டு*
  *மதன் சிலை வண்டு ஓட இனி*
*இங்கு இது கண்டு உலகு என்படும் என்படும்*
  *என்று இடை திண்டாட மலர்ப்*
*பங்கயமங்கை வசந்த சவுந்தரி*
  *பந்து பயின்றனளே*

வசந்த வல்லி காதுகளில் குழை என்ற அணிகலனை அணிந்து உள்ளாள். அது அவளுடைய கெண்டை மீன் போன்ற கண்களின் மீது புரண்டு புரண்டு ஆடுகின்றது. மேகம் போன்ற கூந்தல். அதிலிருந்து வண்டுகள் கலைந்து செல்கின்றன. அது கண்டு

மன்மதனின் வில்லில் இருந்து நாண் ஆகிய வண்டுகளும் பறந்து போகின்றன. இதைப் பார்த்து உலகம் என்ன பாடுபடுமோ என்று இவள் இடை துவண்டு துவண்டு நடுங்குகின்றது. இவ்வாறு திருமகளைப் போன்ற வசந்த வல்லி பந்து விளையாடுகிறாள் என்கிறார் புலவர்.

சொற்களின் ஓசைநயம் அந்த உணர்வை உங்களுக்குத் தர வேண்டும். தந்தால் எழுதிய ஆசிரியருக்கு அது வெற்றி இலக்கியத்தைச் சுவைக்கத் தெரிந்துள்ளது என்பதால் படிக்கின்ற உங்களுக்கும் அது வெற்றிதான்!! வசந்த வல்லியின் கண்களுக்குக் கெண்டை மீன்களும் கூந்தலுக்கு மேகமும் ஒப்புமை கூறப்படுகின்றன.

**தலைவி தோழியைத் தூது அனுப்புதல்**

தலைவன் ஆகிய திரிகூடராசரின் அழகில் மயங்கிய தலைவியாகிய வசந்தவல்லி தலைவனிடம் தோழியைத் தூது அனுப்புகிறாள். இந்த நிகழ்ச்சி இடம்பெறும் பாடல்களில் ஓர் அடியைக் காண்போம்.

*தூது நீ சொல்லி வாராய் பெண்ணே*
*குற்றாலர் முன்போய்த் தூது நீ சொல்லி வாராய்*

என்று தலைவி தோழியிடம் தூது சென்று வருமாறு வேண்டுகிறாள். தோழி தலைவனிடம் தூது செல்கிறாள். தூது சென்ற தோழி வருவதற்கு முன்னால் வசந்த வல்லி கூடல் இழைத்துப் பார்க்கிறாள்.

**இறைவனின் திருவுலா**

**கட்டியக்காரன் வந்தான்**

மன்மதன் தன் தேராகிய தென்றலிலே ஊர்ந்து வருபவன். அங்ஙனம் அவன் வருவதனால் வசந்தவீதிகளை உடையதாகத் திருக்குற்றால நகரம் விளங்கியது. அதன்கண் திருக்கோவில் கொண்டிருக்கும் செல்வர், குற்றாலத்து ஈசர் ஆவர். அவர் வீதியூடே பவனி வரப் போகின்றார். நில மகளைத் தன் மனைவியாக உடையவன் திருமால்; அவனே எருது ஊர்தியாக அந்த இறைவனைத் தாங்கி வருபவன். அந்த விடையிலே ஏறியமர்ந்து அவர் இதோ பவனி வரப்போகின்றார். அதனைப் பற்றி

ஊரவர்க்குக் கூறி எச்சரிக்கை சொல்லுவதற்காகக் கட்டியக்காரன் முற்பட்டு வந்தனன் நேர்மை கொண்ட முப்புரிநூல் விளங்கும் மார்பினையும், தன் கையிலே நெடிய கைப்பிரம்பினையும் உடையவனாக மழைக் காலத்தைக் கொண்ட மழைமேகங்களுள் சிறந்து விளங்கும் கருமையான ஒரு மேகத்தைப் போலக் கருநிறமுடையனான அக் கட்டியக்காரனும் குற்றாலத் தெருவிலே வந்தனன்.

தேர்கொண்ட வசந்த வீதிச் செல்வர்குற் றாலத் தீசர் பார்கொண்ட விடையில் ஏறும் பவனி எச் சரிக்கை கூற நேர்கொண்ட புரிநூல் மார்பும் நெடியகைப் பிரம்பும் ஆகக் கார்கொண்ட முகிலேறு என்னக் கட்டியக் காரன் வந்தான்.

(வசந்தம் - தென்றல். 'காமன் உலாவரும் வீதி, என்னவே இளமைப் பருவத்தாரிடம் காமவேட்கை முகிழ்க்கும் பருவம் அது என்பதுமாயிற்று. மன்மதனுக்குரிய தேர் தென்றலாதலினால், 'தேர்கொண்ட வீதி, வசந்த வீதியாயிற்று. 'பார்கொண்ட விடை' திருமால் என்பது, சிவபுராணங்களுள் சொல்லப்படும். 'இறைவன் பவனி வருவதனால் ஊரவர் அந்த உலாவைக் காண வருக; வீதியிலே ஒதுங்கி நிற்க' என்றபடி முன்னறிவிப்புக் கூறவே முன்னதாக எச்சரிக்கை கூறிக் கட்டியக்காரன்

அவன், புரிநூல் மார்பினையும் உடையவன் என்பதனால் அவனும் பூணலினன் ஆயன் அவன் புரிநூல், வேதமுறைமைப்படி அமைந்தது என்பார், 'நேர்கொண்ட' என்றனர் கார்கொண்ட முகில் மழை முகில், அதன் நிறம் கருமை, சுட்டியம் கூறுவோன் கட்டியக்காரன். பண்டையோர் இத்தகையோரைச் சூதர், மாகதர் என்பர்.)

கண்ணிகள்

உலகத்து மக்களை எல்லாம் முறைசெய்து காப்பவர்கள் மண்ணுலகத்து அரசர்கள். தேவருலகத்துப் பலரையும் காப்பவர் தேவேந்திரன் முதலாகிய அவ்வவ்வுலகத்து இறைவர்கள் இவர்கள் முதலியோரை எல்லாம். சிவ சன்னதியிலே நெறிமுறை தவறாமற் காத்தருளும் செங்கோலான பிரம்பினை உடையவன் அவன் மகாமேரு பர்வதத்தையே வில்லாக வளைத்துக் கைக்கொண்டவர், மேலான உயர்வினையுடையவர். திருக்குற்றாலநாதர், அவருடைய திருக் கோவிலின் திருவாசலிலே, கட்டியங்கூறி நிற்கும்

கட்டியக்காரனாகிய அவனும், அவருடைய பவனிவரும் எச்சரிக்கைபற்றிய செய்தியை, அனைவருக்கும் கூறுவதற்காக நகரத்து வீதியிலே எழுந்தருளி வந்தனன்

பூமேவு மனுவேந்தர் தேவேந்தர் முதலோரைப்

புரந்திடும்செங் கோலான பிரம்புடையான்

மாமேருச் சிலையாளர் வரதர்குற் றாலநாதர்

வாசற் கட்டியக் காரன்வந் தனனே!

முழுமுதலாகிய சிவபெருமானே அனைத்துயிர்களையும் தன் அருட் கருணையினாலே காக்கும் தனிப்பெரு முதல்வனாவான். மனு வேந்தரையும் தேவேந்தரையும் நெறிப்படுத்திக் காப்பவனும் அவனே, அவனுடைய கட்டியக் காரனின் கைப்பிரம்பு, அதனால் அவரனைவரையும் புரந்திடும் செங்கோலாகும் சிறப்புடையதும் ஆயிற்று! என்று கொள்க. 'செங்கோலான் பிரம்புடையான்' என்பது பாடமாயின்; 'செங்கோல் செலுத்துபவன்; கையிற் பிரம்பும் உடையவன்.

**ஞாயிறுபோல் மேவினாரே!**

தன்னுடைய வாக்கின்படியே வடதிசையினின்றும் எழுந்து தென்திசை நோக்கிப் போந்த குறுமுனியாகிய அகத்தியருக்காக, மானைத்

தாங்கிய தன் திருக்கையை அபயமாகக் காட்டியருளிய அரு தேக்கமா குற்றாலநாதர், சீர்மைகளின் வேதங்களும் அவை சிலம்புகளாக முழங்கும். அவன் ஏறியமர்ந்து இளஞாயிறுபோல செறிவுற்று எழுந்தவை திருப்பாதங்களிலே அமைந்து கிடந்து ஒலி வருகின்ற விடையோ மலை போன்றதாகும். அதன்மீது மேற்குத் திசையிலே தோன்றும் இளம்பிறையைத் தன் சடையி சூடியவனாகக் கிழக்குத் திசையிலே எழுத்து வரும் அவன் அதோ காட்சியளிக்கின்றான் மூக்குகளிலே எடுப்பாகத் தோன்றும் போல் இரு மருங்கும் திரண்டு நிற்கின்ற, நன்மை பொருந்திய மூதுராஜ பெறல் நகரத்தின் வீதியிலே, அவன் இதோ எழுந்தருளி வருகின்றாள். குற்றாள் காண்பீர் இப்படி அறிவித்துக் கொண்டே வருகின்றான் அந்த கட்டியக்காரன்.

**விருத்தம்**

மூக்கொழுந்த முத்துடையார் அணிவகுக்கும் நன்னகர மூதூர் வீதி வாக்கெழுந்த குறுமுனிக்கா மறியெழுந்த காரங்கட்டும் வள்ள லார்சீர்த் தேக்கெழுந்த மறைநான்கும் சிலம்பெழுந்த பாதர்விடைச் சிலம்பில் ஏறி மேக்கெழுந்த மதிசூடிக் கிழக்கெழுந்த ஞாயிறுபோல் மேவினாரே.

(மூக்கெழுந்த முத்துடையார் - முத்து மூக்குத்தி அணிந்தவரான நங்கையர் - அணி - வரிசை வகுக்கும் - வகுத்து நிற்கும். 'வருக்கை' பாடமாயின் குறும்பலாவினையுடைய நன்னகரம் என்க. நன்னகர மூதூர் வீதி - மூதூராகிய நன்னகரத்தின் வீதி வாக்கு - திருவாக்கு; கட்டளை - குறுமுனி - அகத்தியர். மறி - மான்மறி வள்ளலார் வள்ளன்மை உடையவர்; சிவபெருமான். திருமாலாயிருந்தவர் சிவனாகிக் காட்சியளித்ததைக் குறிப்பது. சீர் சீர்மை. தேக்குதல். மிக்குப் பெருகித் தேங்கி இருத்தல்.'மறை நான்கும் சிலம்பெழுந்த பாதர்' - 'எழுதரிய மறைச் சிலம்பு கிடந்து புறந்தலம்ப' என்பார் பிறரும். மேக்கு எழும் மதி: மூன்றாம் பிறை - அது மணங்கொள்ளும் வளர்பிறைக் காலம் என்பதும் இதனால் உணரலாம்.)

ஒரு மானைப் பிடித்து வந்த பெருமானாகிய குற்றால நாதரைக் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற ஒருகோடி மான்களைப்போல் ஒருகோடி மடவார்கள் வந்தனர். அவர்களுள் அவனைப் பார்த்தவர்கள் தமக்குள் இவ்வாறாகப் பேசத் தொடங்குகின்றனர்: முப்புரி நூலணிந் திருக்கும் மார்பினையுடையவன் இவன். அதனால், 'இவன் அயனே என்பார் சிலர். 'அயனாக இருந்தால் சினங்கொண்டு விளங்கும் பாம்பாபரணம் அவனுக்கு ஏது? காதுகளிலே ஒப்பற்ற சங்கக் குண்டலங்கள் ஏது? ஆகவே 'இவன்' அயன் அல்லன்' என்று, அவருக்குப் பதிலுரைப்பாளர்கள் சில பேர்.

ஒருமானைப் பிடித்துவந்த பெருமானைத் தொடர்ந்துவரும் ஒரு கோடி மான்கள்போல் வருகோடி மடவார். 1புரிநூலின் மார்பனிவன் அயனென்பார் அயனாகில் பொங்கரவம் ஏதுதனிச் சங்கம்ஏ தென்பார்.

2. (ஒருமான், பெருமான், ஒருகோடி மான் என்பன சொற்பின் வரநிலையணி. மடவார் - மடப்பத்தையுடையவரான கன்னியர். * பொங்கரவம் - சினத்துடன் படம் விரித்துத் தோன்றும் பாம்பு. தனிச்சங்கம் - ஒப்பற்ற சங்காபரணமாகிய காதணிகள்.

பரந்த கருணைக்கடலான திருமாலே இவன் என்பார் சிலர் இவன் திருமாலானால் இருவிழிகளின் மேலாக நெற்றிக் கண்ணாகிய மூன்றாவது விழியும் அந்தத் திருமாலுக்கு உளதாமோ? அவன் தலைமேல் சடை முடியும் உண்டோ?' எனக் கேட்டு, அவன் மாலும் அல்லன்' என்பார்கள் சிலர் 'அவனுடைய இரு பக்கங்களிலும் நான்முகனும் திருமாலும் வருகின்றனர். ஆகையால், அவன் ஈசனே! அவன் திரிகூட ராசனே!' என்பார்கள் அவனை அறிந்தவராகிய சிலா!

விரிகருணை மாலென்பார் மாலாகின் விழியின்மேல்

விழியுண்டோ முடியின்மேல் முடியுண்டோ என்பார்.

இருபாலும் நான்முகனும் திருமாலும் வருகையால்

ஈசனிவன் திரிகூட ராசனே என்பார்.

(விரிகருணை பரந்த பெருங்கருணை, முடி - தலை, சடா முடி திரிகூடராசன் - குற்றாலநாதன். திரிகூடராசன் என்றறிந்தும் பெண்களுக்கு அவன்மீது ஆர்வம் பொங்கி எழுகின்றது. ஒவ்வொருவரும் அவன்மேற் காமுற்றுத் தத்தம் நிலை தடுமாறுகின்றனர். 'ஆடவரைப் பொருது வெல்வோம்' என வந்த அவர்கள், பெருமானின் பேரழகினால் தாமே மாலேறி மயங்கித் தம் நிலை தடுமாறி விடுகின்றனர். அவர்களுடைய மயக்க நிலையினைக் காட்டுவன அடுத்து வரும் சில கண்ணிகள்)

ஒரு கையிலே வளையலை அணிந்துகொண்ட பெண்கள், தம் அடுத்த கையிலேயும் வளையலைப் பூண மறந்தவராக அவனைக் காணுவதற்கு ஓடுவார்கள். அவர்களின் நிலை தடுமாற்றத்தினைக் கண்டு நகைப்பார்கள் சிலர். அவர்களருகே சென்றதும் அப்பெண்கள் வெட்கித் தலை கவிழ்ந்து நிற்பார்கள். இரு தனங்களுக்கும் மேலாக அணியும் இரவிக்கையினைத், தம் மயக்கத்தினால் அரையிலுடுக்கும் உடையெனக் கருதி உடுக்க முயல்வார்கள் அவர்கள். பின்னர், அறையிலே அணியும் உடையினை ரவிக்கையென மயங்கிச் சாந்தம் பூசிய தம் முலைகளுக்கு மேலே இடுவார்கள் அப்பெண்கள்.

ஒருகைவளை பூண்ட பெண்கள் ஒருகைவளை பூணமறந்து

ஓடுவார் நகைப்பவரை நாடுவார் கவிழ்வார். 5

இருதனத்து ரவிக்கைதனை அரையிலூடை தொடுவார்பின்

இந்தவுடை ரவிக்கையெனச் சந்தமுலைக் கிடுவார்.

**வசந்தவல்லி வந்தாள்**

பொன்போலும் அணி செய்வதாகிய பொட்டினை நெற்றியிே தீட்டிக் கொண்டாள்; கூந்தலிலே அழகிய மலர் மாலையினைச் சூட்டித் கொண்டாள்: அழகிற் சிறந்த மோகினியைப் போலத் தன்னை அழகு புனைந்து காட்டிக் கொண்டாள்; நன்மையுடைய குற்றால நகரத்துப் பெருமானின் முன்னர்ச் சென்று, நம் நாணமும் ஆடையும் இழந்து நின்ற கன்னியர்களுக்குத் தானும் ஒரு துணையாவாள் போலக் காட்டிக் கொண்டவளாக, ஆடவர்கள் பகுதி எங்கணுமே காமவேளின் கல்க செயலை மூட்டிவிடுபவளே போல. வசந்தமோகினி என்பவள், தன் வீட்டினின்றும் புறப்பட்டு வெளியே தெருவில் வருவாளாயினாள்.

**விருத்தம்**

நன்னகர்ப் பெருமான் முன்போய்

நாணமும் கலையும் தோற்ற

கன்னியர் சநுப்போற் காட்டிக்

காமவேள்கலகம் மூட்டிப்

பொன்னணித் திலகம் தீட்டிப் பூமலர் மாலை சூட்டி

வன்னமோ கினியைக் காட்டி

வசந்தமோ கினிவந் தாளே.

(கலை - ஆடை, சநு - உதவி. சநுப்போல் - உதவிபோல; அதாவது அவளும் துணையாவாள் போல, காமவேள் - மன்மதன். வன்ன மோகினியைக் காட்டி -

அழகுள்ள மோகினிப் பெண் கண்டாரைத் தன் பேரழகால் கவர்ச்சித்து அவர் உயிரை வருத்துவாள் என்பர். அவள்போலக் காட்டி என்க. 'அணங்கு கொல்' என்று

கூறும் பொன் அணிக் சிலகம் - பொன் அணியாகிய நெற்றிச் சுட்டியுடன் விளங்கும் பொட்டுமாம்.

**அவள் வரும் அழகு!**

பொன்னாலாகிய ஆபரணங்கள் பலவற்றையும் பூட்டிக் கொண்டாள். நெற்றிக்குத் திலகம் இட்டுக் கொண்டாள். மாரனையும் தன் கண் பார்வையினாலேயே மயங்கச் செய்பவள் போலத் தோன்றினாள். சிருங்காரத்துக்கு ஏற்ற அந்த மோகனப் பெண்ணாளான வசந்த வல்லியானவள் இப்படியாகத் தேவலோகத்த அரம்பையைப் போல வீதியிலே வந்து கொண்டிருந்தாள்.

தன்னை ஏறெடுத்துப் பார்ப்பவரின் கண்களுக்குத் தன் இரண்டு கண்களுமே ஏற்ற பதிலைக் குறிப்பாலேயே சொல்லத் திரிகூடக் கண்ணுதலைத் தன் பார்வையினாலே வென்று வசப்படுத்தப். பெண்ணுக்குப் பெண்ணும் மயங்கக் கொள்ளும்படியான பேரெழிலுடன், வசந்தவல்லியானவள், அன்னத்தின் பேடையைப் போலே, மெல்ல மெல்ல நடை பயின்று வெளியே வந்து கொண்டிருந்தாள்.

வங்காரப் பூஷணம்பூட்டித் - திலகந்தீட்டி

மாரனைக்கண் ணாலேமருட்டிச்

சிங்கார மோகனப் பெண்ணாள் - வசந்தவல்லி தே

வரம்பை போலவே வந்தாள்.

கண்ணுக்குக் கண்ணினை சொல்லத் - திரிகூடக்

கண்ணுதலைப் பார்வையால் வெல்லப்

பெண்ணுக்குப் பெண்ம யங்கவே - வசந்தவல்லி

பேடையன்னம் போலவே வந்தாள்.

(வங்காரம் - பொன், பூஷணம் - ஆபரணம், மருட்டி -மய்ங்கி. சிருங்காரம் - சிற்றின்பம்; அழகுமாம். மோகனம் - மயக்கும் எழில், 'கண்ணுக்குக் கண் இணைசொல்ல 'அவள் ஒரு கண்ணுக்கு இவளுடைய மற்றொரு கண்ணே இணையாகுமேயன்றி வேறொருவர் கண்ணும் இணையாகாது என்று சொல்லும்படியாக என்றும் சொல்லலாம். பெண்ணுக்குப் பெண் மயங்குதல் - பெண்ணும் மிக விரும்பிக் காமுறும் பேரழகினள் அவள்' எனக்காட்டுவதாகும் பேடையன்னம் நடையழகிற்குச் சிறப்புடையது அன்னப்பேட்டின் நடை)

கைகளிலே தன் ஆர்வம் தீரும் அளவுக்குச் சூடகங்களை இட்டு கொண்டாள். பிற இளமங்கையர்களை வெற்றி கொள்ளும் பொருட்டுத் தன் கண்ணிலே, தான் போலேயொரு நாடகத்தையும் இட்டுக் கொண்டாள். ஒய்யாரமாக நடை நடந்து, இந்த வசந்தவல்லியானவள். ஓர் ஓவியத்தைப் போலே தானும் வீதியிலே வந்து தோன்றினாள். எல்லார் ஏதுமறியாதவும்

சல்லாபத்துக்குரிய, தன் மனைவியான குழல்வாய் மொழி அம்மையுடன் இன்புற்று மகிழ்கின்றவர் குற்றாலநாதர். அவர் உலாவந்து கொண்டிருக்கும் நீண்ட சங்கவீதியிலே உல்லாசம் பொருந்திய நடனம்தான் இரதிதேவியைப் போல விளங்கும் வசந்தவல்லியானவன் நடர்னதயும் தன்னைக் கண்டு வெட்கமுறுமாறு ஒயிலுடன் நடத் வந்தாள்

கையாரச் சூடகம் இட்டு - மின்னாரை வெல்லக்
கண்ணிலொரு நாடகம் இட்டு
ஒய்யாரமாக நடந்து - வசந்தவல்லி
ஓவியத்தைப் போலவே வந்தாள்.

சல்லாப மாதுலீலர் - குற்றால நாதர்
சங்கநெடு வீதியினிலே
உல்லாச மாது ரதிபோல் - வசந்தவல்லி

உருவசியும் நாணவே வந்தாள்.

(சூடகம் - பெண்கள் கையணிகளுள் ஒன்று, வளைபோல்வது எனினும் அதனினும் வேறான அமைப்பும் உடையது. கண்ணில் நாடகமிடல் - கண் அசைவின் மூலம் பல வகையான கருத்துக்களை உணரக்காட்டுதல். சல்லாபம் - சரச சல்லாபம் லீலர் - லீலைகளைப் புரிபவள். சங்கம் - கூட்டம். அரம்பை, ஊர்வசி - தேவலோகத்து நடன மாதர்.)

**வசந்தவல்லியின் அழகு**

இருண்ட மேகங்கள் தம்முள் சுற்றிச் சுருண்டு சுழி கொண்டு எறிந்தாற்போல விளங்கும் சுருண்ட மயிரடர்ந்த கொண்டையினா

அவள் கயல்மீன் விழியினார் ஆடவர்களது நெஞ்சையெல்லாம் குறை வரும் பூவினது அரும்பினைட் திருத்தமான அழகினையுடைய இள உடையவள் அவள் அழபோல செக்கச் சிவந்திருக்கும் இதழ்கறையின் வடிவினைப் பொனிய வில்லைப் போல வளைந்து, இளம்பிறையின் வடிவினைப் போல் விளங்கி, ஒளியுடன் திகழுகின்ற நெற்றியினையும் உடையவள் அவள் '

(2) அரம்னபயரின் தேசமாகிய வானுலகத்து வில்லாகிய வானவில்லும், இவள் புருவத்தின் அழகைப் பெறல் வேண்டும் என விருப்பமுற்று ஆசையாகச் சொல்லுமளவுக்கு அழகாகத் தோன்றும் புருவங்களையுடையவள் அவள். ஆடவராகிய பிறரின் அறிவை எல்லாம் மயக்குகின்ற, ஒப்பற்ற ஒரு கர்வமானது குடிகொண்டிருக்கும் மங்கைப் பருவத்தினள் அவள் கருப்பஞ்சாறு போல இனித்தும், அமுதம்போல வாழ்வு தந்தும் விளங்கும் சொல்லினை உடையவளும் அவள். ஆரவரிக்கும் கடல்லைகள் கொணர்ந்து குவித்த முத்துக்களை, நிரையாகப்பதித்து வைத்தாற்போன்ற பல்வரிசையினையும் உடையவள் அவள்.

கண்ணிகள்

இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு,

சுழி எறியும் கொண்டையாள்

ஏறியாடி நெஞ்சைச் சூறையாடும்

விழிக் கொண்டையாள்.

திருந்து பூமுருக்கின் அரும்புபோ

லிருக்கும் இதழினாள்

சிலையைப் போல்வளைந்து பிறையைப் போல்

இலங்கும் நுதலினாள்.

அரம்பை தேசவில்லும் விரும்பி

ஆசை சொல்லும் புருவத்தாள்

அறிவை மயக்குமொரு கருவம் இருக்கும்

மங்கைப் பருவத்தாள்.

கரும்பு போலினித்து மருந்துபோல்

வடித்த சொல்லினாள்

சுத்துற் திரைகொழித்து முத்து

நிரை பதித்த பல்லினாள்.

(இருண்ட மேகம் - மழைக் காலத்து மேகம்; அவள் கூந்தல் சுருண் கருமையாகத் திகழ்ந்தது என்பது கருத்து. குழை - காதணி; காதைக் குறித்தது. சூறையாடல் கொள்ளையடித்தல், வரிச்சினை பருவம் பிறரை மயக்கி வெல்வோம் என்ற கர்வம் குடி கொண்டிருக்கும் பூரித்த எழிற்பருவம். மருந்து அமுதம், கத்தும் - ஒலிக்கும்,)

பல்வரிசையின் அழகினை எட்டி எட்டிப் பார்ப்பது போல மூக்கிலே விளங்கும் ஒப்பற்ற முத்துப் புல்லாக்கினையும் அவள் திங்களும் பழகுவதற்குரிய ஒளியுடைய வடிவு நிலை பெற்று அழகு குடிகொண்டிருக்கும் முகத்தினையும் உடையவள். ஒன் பொருந்திய "வகையான அணிகளை எல்லாம் புனைந்து, அதனா பல கொடி படர்ந்திருக்கும் கமுகையும் வெற்றி கொண்ட கழுத்தினை யுடையவள்.

உலகனைத்தையும் தனக்குரிய விலையாக இட்டு எழுத் அத்துடன் இன்பநிலை இதுவே' எனவும் எழுதியது போன்ற தொய்யிலாகிய எழுத்தினையும் உடையவள். உடையவ

மணிகள் பதித்த தங்கத்தாற் செய்த அழகிய கடகங்கள் இட்டு விளங்கும் சிவந்த கைகளையும் உடையவள். எவ்விடத்தும் கச்சுக்குள் அடங்கிக்கிடப்பனவாயினும் காணக் காணத் தித்தித்துக் கிடக்கும் இரு கொங்கைகளையும் உடையவள். இறைவனடிகளிலேயே ஒன்றிக் கிடக்கும் கருத்தினரான தவசிகளின் கல்லானா மனமும் சுழலம்படியாக செய்யும் அழகிய உந்திச் சுழியினையும் உடையவள். அந்த உந்திச் சுழிக்கும் மேலாக, ஒழுங்குகொண்டு, ஆடவரின் உள்ளத்தை விழுங்கும் சிறிய ரோம பந்தியினையும் உடையவள் அவள்.

பல்லின் அழகைஎட்டிப்பார்க்கும்

மூக்கிலொரு முத்தினாள்

பழகும் வடிவுதங்கி அழகு

குடிகொளும் முகத்தினாள்.

வில்லுப் பணிபுனைந்து வல்லிக்

கமுகைவென்ற கழுத்தினாள்

விலையிட் டெழுதியின்ப நிலையிட்

டெழுதுந் தொய்யில் எழுத்தினாள்

கல்லுப் பதித்ததங்கச் செல்லக்

கடகம்இட்ட செங்கையாள்

கச்சுக் கிடக்கினும்தித்

திச்சுக் கிடக்குமிரு கொங்கையாள்.

ஒல்லுங் கருத்தர்மனக் கல்லுஞ்

சுழிக்குமெழில் உந்தியாள்

ஒழுங்கு கொண்டுளத்தை விழுங்குஞ்

சிறிய ரோம பந்தியாள்

**நாதனைக் கண்டாள்**

தொண்டர்களின் கூட்டம் நிரம்பியிருக்கின்ற அந்தச் சங்க வீதியிலே அந்த வசந்தவல்லியானவள் அப்படியாக வந்தனள். அவள் குதிகால் களாகி இரு பந்துகளும் தாவித் தாவி ஆடுவன போலக் குதியிட்டு வந்தன அவள் நடக்கும்பொழுது இரு பந்துகள் போன்ற முலைகளுமோ அவள் நடைன் அசைவிற்கு ஏற்பத் தாமும் குதித்தாடின தாந்த ஆடிய ஒரு பந்தினைக் கையிலே கொண்டாடியவளாக அவளும் வந்தாள், செப்புப் பதுமை போன்ற அவளிடத்தே அப்படியாக ஐந்து பந்துகளும் தெளிவு கொண்டு ஆடும் வண்ணம் வித்தையாடுகின்ற சித்தரான திரிகூடநாதரை அவளும், தனக்கு எதிராகப் பவனி வரக் கண்டனள்.

வீதி தன்னில் வசந்தப் பூங் கோதை காலில் இருபந்து குதிகொண்டாட இருபந்து முலைகொண் டாட ஒரு பந்து கைகொண்டாட ஒரு செப்பில் ஐந்து பந்தும் தெரி கொண்டு வித்தை யாடும் சித்தரை எதிர்கண்டாளே.

(பந்து என உருட்சிபற்றி உவமித்தனர் என்க. அனைத்தையும் உள்நின்று இயக்குபவனும் ஈசனே! அதனால் அவளை அவ்வாறு ஆடிவரச் செய்து வித்தை ஆடும் சித்தன் அவள்; என்கிறார். அன்றிப் பஞ்சபூதங்களையும் ஊழி முடிவிலே மாயையும் ஒடுக்கி விளையாடுபவன் அவன்' என்றும் பொருள் கொள்ளலாம்.)

**கண்டாள்! வியந்தாள்!**

"சித்து வேலையில் வல்லவர் இவர்தாம் யாவரோ? வெகு வேடிக்கைக்காரராக எருதின் மேலே ஏறி வருகின்றாரே? இவர் யாவரோ?

"மார்பினிலே நாகாபரணத்தைப் பூண்டுள்ளார். நஞ்சுக் கறையைக் கழுத்திலே கொண்டுள்ளார். காகங்கூட அணுகவராதபடி எப்புறத்தும் காடு கட்டிக் கொண்டு, தம்

இடப் பாகத்திலே, பச்சைக் கிளிபோல ஒரு பெண்ணையும் வைத்திருக்கின்றார். அதனாலும் தீராத மோகம் தீரப்பெறுவதற்கு போலும், மற்றொரு பெண்ணைத் தன் சடை முடியிலும் வைத்திருக்கின்றார்? இவர்தாம் யாவரோ?

"திருமேனியிலே சிவப்பு வண்ணத்தின் அழகு இருக்கின்றது. திருக்கையில் மழுவாயுதத்தின் அழகும் விளங்குகின்றது. மைதீற்றிக் காண்பராயின் மயக்கங்கொள்ள மாட்டார்களோ? சிவந்த சடையின் மேலேயோ திங்கட் கொழுந்தான ஒர பிறை இருக்கவும், அது நடுங்குமே எனக் கூடப் பாராமல் அவர் அணிந்துள்ள பாம்பு அடிக்கடி படத்தை விரித்துக் கொண்டிருக்கின்றதே? அம்மாவோ?

**வெதுப்பினார்கள்**

'வானவரான திருக்குற்றாலநாதரின் மீது கொண்ட மையலினாலேயே வசந்தவல்லியானவள் தன்னுடல் சோர்ந்து வீழ்ந்தனள்'என்பதை அப் பாங்கியர் முடிவிலே அறிந்தனர். அறிந்த உடனே,அவளைத் தூக்கிக் கொண்டு போய்த், தமனிய மாடத்திலே சேர்த்தனர்.அரிய அழகுத் தோற்றத்தினையுடையவரும் மின்னலைப் போன்ற ஒளிபொருந்திய சாயலினை உடையவருமான அப்பெண்கள், கிணற்றுனுள்இறக்கி விட்டாலும், அறியாமல், அதனால் மேலும் அவரை அந்தநீரினுள்ளேயே அமிழ்த்துகின்ற அறியாமையுடைவர்களைப் போலே,வசந்தவல்லியின் உடலின் வெப்பம் தணியுமாறு, குளிர்ச்சியான கலவைகளைப் பூசிப் பூசி, மேலும் அவளுடைய உடல் நோயை அதிகமாக்கிக் கொண்டேயிருந்தனர் .

**கொடும்பாவி நிலவே!**

சற்றுங் குளிர்ச்சியே இல்லாதுபோன கொடிய பாவியாகிய வெண்ணிலாவே! பெண்களுக்குள்ளே குழல்வாய் மொழிக்கு ஓர் உடற்பாதியையே கொடுத்தவர். எனக்குத் தந்த மயக்கத்தின் காரணமாக, யான் இப்படி மண்ணிலே மதிமயங்கிக் கிடக்கின்றேனே? என்போலவே உனக்கும் மதியமக்கந்தானோ? நம் நெற்றிக் கண்ணிலே நெருப்பை வைத்துக் கொண்டு, பிறரையெல்லாம் எரியச் செய்கின்ற அவருடன் கூடிக் காந்திக் காந்தி, விண்ணிலேயும் இப்படி நெருப்பை வைத்து விட்டாயோ? இது என்ன முறையோ?

பெண்ணிலே குழல்மொழிக்கோர் பங்கு கொடுத்
தவர்கொடுத்த பிரமை யாலே
மண்ணிலே மதிமயங்கிக் கிடக்கின்றேன்
உனக்கும்மதி மயக்கந்தானோ
கண்ணிலே நெருப்பை வைத்துக் காந்துவா
ருடன்கூடிக் காந்திக் காந்தி
விண்ணிலே நெருப்பை வைத்தாய் தண்ணிலாக்
கொடும்பாவி வெண்ணிலாவே!

**நிலவைப் பழித்தல்!**

வெண்ணிலாவே! தண்மையான அமுதத்துடனன்றோ அந்நாளிலே பாற்கடலில் நீ பிறந்தாய்! இருந்தும், அந்தக் குளிர்ச்சியான தன்மைகளை எல்லாம் ஏன்தான் மறந்து விட்டாயோ? திருமகளாகிய பெண்ணுடன் உடன் பிறப்பாகவும் அன்று நீ தோன்றியதும் உண்டல்லவோ வெண்ணிலாவே! என் பெண்மையைக் கண்ட பின்னும், என்னை நீயுட இப்படிக் காய்ந்து வருத்தலாமோ?

வானவர் திருக்குற் றாலர் மையலால் வசந்த வல்லி தானுடல் சோர்ந்தாள் என்று தமனிய மாடஞ் சேர்த்து மேனியார் அழகு தோற்ற மின்னனார் விழுந்த பேரைக் கூனை கொண்டமிழ்த்து வார்போல் குளிர்ச்சியால் வெதுப்பு வாரே!

(வானவர் - வானகத்தவர், மேலானவர். தான்னுடல் தன்னுடைய மேனி, தமனியம் - பொன் மேனியார் அழகு ஆர் மேனி எனக் கூட்டுக. கூனை - நீர் இறைக்கும் உலோகத்தாலான சால் குளிர்ச்சி - குளிர்ச்சிப் பொருள்கள்.)

**தாபத்தின் வேகம்!**

மணமிகுந்த சந்தனக்குழம்பினை அவளுடலிலே பூசுவார்கள். விரகத்தீயை மூட்டி மூட்டி மேலும் கொழுந்து விட்டு எரியச் செய்வது போல் விசிறி வீசிக் கொண்டிருப்பார்கள். "இவள் உடலனைத்தும் கருகுகின்றதே! இவள் மேனி

உருகுகின்றதே!" என்றும் அங்கலாய்ப் பார்கள். "மேலே பரப்பிய பூக்கள் கருகுகின்றனவே! முத்துமாலையின் முத்துக்களும் பொரிகின்றனவே!" என்று சொல்லித் துடிப்பார்கள் சிலபேர்

அவளருகிலேயே அமர்ந்து கொண்டு. அவளுக்கு வெப்புத் தணிவிக்கும் அந்தக் கதைகளையே அவர்கள் மீண்டும் மீண்டும் விடாது நடத்திக் கொண்டேயிருப்பார்கள். அவளை மெதுவாக அணைத்து எடுத்து, மெல்லிய வாழைக் குருத்திலே கிடத்துவார்கள். அவ்வேளை யிலே, நன்மை பெருகும் குற்றால நகரத்துக் குறும் பலாவினடியிலே எழுந் தருளிருப்பவரின் திருமுடியின் மீதுள்ள நிலவின் மீது, வசந்த வல்லியானவள் சினங்கொண்டு அதனைப் பழித்துப் புலம்பத் தொடங்கினாள்.

**வேனிலானே!**

தண்மையான நிலவினையே குடையாகக் கொண்டவரான குற்றாலநாதர் தந்த மையலின் விளைவே இது இதனை அறிந்திருந்தும், என் தோழிப் பெண்கள் எண்ணற்ற பகைகளை எல்லாம் எடுத்துக் கொணர்ந்து அவற்றால் என்னைத் தெளிவிக்க முயலுகின்றனரோ? 'அண்ணலார் திரிகூடநாதர்' என்று போற்றுவார்களோ! அவர், என்னை கெதிடவும் மாட்டான்னை வெண்ணிலவினைக் குடையாகப் பிடித்துக் கொண்டு, மகரமீன் கொடி பிடித்து, இளந்தென்றலிலே ஊர்ந்து வருகின்ற மன்மதனே நீயாவது சொல்வாயாக.

தண்ணிலா மௌலிதந்த மையலா னதையறிந்தும் தைய லார்கள்
எண்ணிலாப் பகையெடுத்தார் இந்நகரை நன்னகரென் றெவர்சொன் னாரோ
அண்ணலார் திரிகூட நாதரென்ப தென்னளவும் அமைந்தி டாரோ வெண்ணிலாக்
குடைபிடித்து மீனகே தனம்பிடித்த வேனி லானே!

(தையலர்கள் எடுத்த பகை - செய்த உபசரணைகள், அதனால் அவள் வெப்பம் அதிகமானதால் அவற்றைப் பகை என்றனள். 'அண்ணலார்' என்ற பேருக்குரிய அருள் அற்றவராயினர் போலும் என்று புலம்புகிறாள் அவள்.)

**மதனனைப் பழித்தல்!**

மன்மதா! நின் கையிலேயுள்ள கரும்புவில் எதற்காக? அதிற் பூட்டி எய்யும் மலர்க்கணைகள் தாம் எதற்காக? நீதான் எதற்காக? செக்கச் சிவந்து தோன்றுகின்றதே. இந்தப் பாவி நிலவு இது ஒன்றே போதாதோ என்னை வதைப்பதற்கு? மையிட்ட கருங்கண்ணினளான இரதிதேவியி னிடத்திலே மோகமயக்கம் கொண்டவனே! இடபத்தின் மேலேறிவரும் குற்றால நாதரிடத்திலே நான் மையல் கொண்டால், உனக்கு என்மீது என்னதான் பொல்லாப்போ! அதனைக் கூறுவாயாக!

எல்லாத் திசைகளிலேயிருந்தும் தென்றலாகிய புலிவந்து என்மேத் பாய்கின்றதே. மன்மாத! குயிலின் குரலாகிய எக்காளம் ஒலித்தபின்னர், எனக்கு அன்னமும் பிடியாமற் போய்விட்டதே, மன்மதா! 'என் அக்காள் என்று சொல்லத் தக்க என் தோழியானவள், வெட்கமில்லாமல் என்னை என் மன்மதியற்ற பொல்லாத, நீலியாயிற்றே! என்ன செய்வேன் மன்மதா!

**கண்ணிகள்**

கைக்கரும் பென்ன கணையென்ன

நீயென்னமன்மதா - இந்தச்

செக்கரும் பாவி நிலவுமே

போதாதோ

மைக்கருங் கண்ணாள் இரதிக்கு

மால்கொண்ட மன்மதா விடை

வல்லார்க்கு மால் கொண்டாற்

பொல்லாப் பென் மேலுண்டோ

திக்கெல்லாம் தென்றற் புலிவந்து

பாயுதே மன்மதா - குயிற்

சின்னம் பிடித்தபின்

அன்னம் பிடியாதே

அக்காள் என்னுஞ்சகி வெட்காமல்

ஏசுவான் மன்மதா - அவள்

அல்லாமல் தாயொரு

பொல்லாத நீலிகாண்

கணை - மலர்க்கணைகள். அவற்றை எய்யும்போது ஏற்படுகின்ற தாபங்கள் முதலியவற்றைக் கொக்காக நூலிலே காணலாம். 'செக்கரும் பாவி நிலா' என்றதனால் மாலைக் காலத்தினையடுத்து இருள் மயங்கிக் கொண்டிருக்கும்நேரம் என்க. என்னை வருத்த லவொன்றே போதுமே! நின் கணை எதுவும் வேண்டாமே! என்றனள். தாபமிகுதியால். இரதியிடம் நீ மால் கொண்டவனா யிற்றே; அங்ஙனம் மையலின் இயல்பை எல்லாம் அநுபவித்து அறிந்தும் என்னை ஏன் இப்படி வருந்துகின்றாய்? என்கிறான். அக்காள் - மூத்தவள்; காதலின் போதையைத் தான் அ வளாயிருந்தும்கூட, அவள் என்னை ஏசுவாள் என்பது

கொடி போன்றவளே இனிமை முதிர்ந்து ஒழுகிக் பூங்கொம்பினைப் போன்றவளே னால் இறுக்கப் பெற்றும் வ அதனுடன் எப்போதும் மோதிக் கொண்டேயிருக்கும் மதர்த்த பிடி போன்றவளே! எங்கள் உடையவர் திரிகூடநாதர் அவருடைய திரிகூட நகரிலே ஐம்படைகளுடன் வரும் மன்மதனைப் பயிற்று முகத்தால், நீ சொல்லிய வரும் மன்மக தோழியாயிருக்கையிலே மும் சொல்வானும் தெரிந்து கொண்டால் ஆகாதோ? அதனை என்னிடமும் குடிக்கு ஒே ஏழினையும் சொற்களை

படியே முடையார் திரிகூடப் படைமா மதனைப் பயிற்றியசொல் அடியேன் சகியா யிருக்கையிலே அதுநான் பயின்றால் ஆகாதோ கொடியே மதுரம் பகுத்தொழுகு கொம்பே வம்பு பொருதமுலைப் பிடியே எமது குடிக்கொருபெண் பிள்ளாய் கருத்து விள்ளாயே.

(படி - உலகம். பயிற்றிய - கற்பித்த மதுரம் -இனிமை. வம்பு பெருகுதல் - சச்சை ஊடறுப்பது போலப் பூரித்தல்.)

**கேளாய் பாங்கி!**

சகியே! மெய்யடியார்களுக்கு மெய்யனாக விளங்கும் நம் திரி நாயகரின் மீதிலே நானும் மிகவும் மையல் கொண்டவளானேன் அந்த செய்தியை நீயும் கேட்பாயாக. சிவந்த அவருடைய சடையும், அதன்களு அவர் சூடியுள்ள அழகிய கொன்றை மாலையின் அழகும். அ கையிலே விளங்கும் மழுவும். என் கண்களைவிட்டுச் சற்று அகலாதிருக்கின்றனவே?

கங்கையாகிய பெண்ணைத் தலையிலே வைத்துள்ள தெய் களுக்குள் உயர்வான அந்தப் பொருளைக் கண்டேன். குளிர்ச்சிய திங்கட்கொழுந்தாகிய மூன்றாம் பிறையினையும் என்னளவி தீக்கொழுந்தாக ஆக்கிக் கொண்டேன். சங்கக் குழைகள் அணிந்த அவ அடியார் கூட்டம் நிறைந்த சங்க வீதியிலே உலாவரக் கண்டேன். என்

மெய்யர்க்கு மெய்யர் திரிகூட

நாயகர் மீதில் - மெத்த

மையல்கொண் டேனந்தச் செய்தியைக்

கேளாய்நீ பாங்கி,

செய்ய சடையும் திருக்கொன்றை

மாலை அழகும் - அவர்

கையில் மழுவுமென கண்ணைவிட்

டே அக லாவே.

கங்கைக் கொழுந்தணி தெய்வக்

கொழுந்தை நான் கண்டு - குளிர் தி

ங்கட் கொழுந்தையும் தீக்கொழுந்

தாக்கிக்கொண் டேனே.

சங்கக் குழையாரைச் சங்க மறுகினிற்

கண்டு -இரு

செங்கைக்குள் சங்கமும் சிந்தி

மறுகிவிட் டேனே!

('மெய்யர்க்கு மெய்யர்' ஆகவே, பொய்யர்க்கு அவனும் பொய்யனே யாவாள் என்க. கொழுந்து - சிறப்புடையது; சுடர் )

அழகிய இளம்பிறையினைச் சூடியவரான திருக்குற்றாலநாதரைக் கண்டேன். அதனால், சிறு தென்றல் என்னும் குளவி தினமும் என்னைக் கொட்டிக் கொண்டே இருக்கிறதே! அதனால் மிகவும் நொந்த போய் விட்டேனே! மேருவை வில்லாக வளைத்துக் கைக்கொண்டவர் திருக் குற்றாலநாதர். அவர் முன்னர்ப் போயினேன். அதனால், மதன வேளானவன் தன் வெற்றி பொருந்திய கரும்புவில்லைக் கொண்டு என்மீது மெல்ல மெல்லப் போரிடத் தொடங்கி விட்டானே?

நம் பெருமானை நல்ல நம் நகரின் பெரிய ராஜவீதியிலே உலாவரக் கண்டேன். அவர் கையிலேந்தியிருக்கும் மானைக் கண்டதும் என் ஆடையையும் நெகிழவிட்டேன். செம்பவழ மேனியிடத்திலே சிறு கறுப்புக் கறையினையுடையவரை நான் உலாவரக் கண்டேன் அம்மவோ!

**ஒரு பெண் கண்டாய்!**

குறும் பலாமரத்தின் வேரிலே பழமானது பழுத்து, அது நன்கு முற்றி அதன் அடியிலே வெடிப்பு ஏற்பட்டுச் களைகள் வெளிவந்தன அதனின்றும் இனிய தேனானது, 'பூமியிலே பாதாள கங்கை பீதிட்டு வந்ததோ' என்று சொல்லும்படியாகக் குதித்து வந்தது. அப்படிக் குறித்து வந்த புத்தம் புதுத் தேனானது பெருகிக் கொண்டிருக்கும் கொலுவீற்றிருக்கின்ற. அருகிலிருந்த ஆற்று நீரிலே கலந்து இப்படிப்பட்ட குறும்பலா மரத்தினடியிலே மெய்யறிவின் உருவினரான தலைவர் நம் குற்றாலநாதர், அவர் பேரிலே பிரமை கொண்ட பெண்களோடமிகப்பனர் அவர்களுள் நானும் ஒருத்தியே என்பதைக் காண்பாயாக.

**விருத்தம்**

வேரிலே பழம்பழுத்துத் தூரிலே

சுளைவெடித்து வெடித்த தீந்தேன்

பாரிலே பாதாள கங்கைவந்த

தெனக்குதித்துப் பசுந்தேன் கங்கை

நீரிலே பெருகுகுறும் பலாவிலே

கொலுவிருக்கும் நிமல மூர்த்தி

பேரிலே பிரமைகொண்ட பெண்களிலே

நானுமொரு பெண்கண் டாயே,

(பசுந்தேன் பசுமையான தேன்; புதிய தேனுமாம். அது பாய்தலால் ஆற்றிலே வெள்ளம் பெருக்கெடுத்தது என்பார் கங்கை நீரிலே பெருகு' என்றார் நிமலன் மலத்தால் பற்றப்படாதவன். பிரமை - மயக்கம்.)

**கருமம் ஏதோ?**

இளந்தென்றலைப் போலே உல்லாசமாக உலாவரும் பூங் கொடியே! பூங்கொடிக்குப் பூங்கொடி பேசுவது போல என்னிடம் பேசும்போதே நின்மேனியிற் படர்ந்து கொண்டிருக்கும் இப் பசலை நோயினையும் காண்பாயாக. உண்மையாகவே நீ பரமாமீதில் ஆசை கொண்டு விட்டனை. உண்மையான பேரின்பத்தை நல்கும் குற்றாலநாதராகிய நிலையான நம்பெருமான் உன்பால் இசைந்து கூடுமாறு செய்வதற்குரிய செயல்தான் யாதோ? அதனை நானும் அறியுமாறு எனக்குத் தெரிவிப்பாயாக.

**கூடாய் கூடலே!**

பாடிய பழைய வதங்கள் நான்கும் தேடியும் அறியாத நாயகள். நாகர்களும் வந்தபணிகின்ற நல்ல திருக்குற்றாலநகரின் நாயகன். பாவலர்கள், மக்களின்

காவலர்கள், ஆகியோரின் நாயகன்; பதஞ்சவி முனிவர் பணியும் பாதங்களை உடையவன்; வளைந்த இளம்பிறை யினைச் சூடியிருக்கும் நாயகள், குழல்வாய் மொழியானவள் சேர்கின்ற அழகிய நாயகன்: குறும்பலாவினருகே என்னைக் கூடுவார் என்பது உண்மையானால், கூடலே! நீயும் இப்போது எனக்குக் கூடிவர மாட்டாயோ?

பாடியமறை தேடிய நாயகர் பன்னகர்பணி நன்னகர் நாயகர் பாவலர்மனுக் காவலர் நாயகர் பதஞ்சலி பணிதாளர். கோடியமதி சூடிய நாயகர் குழல்மொழி புணர் அழகிய நாயகர் குறும்ப லாவினிற் கூடுவர் ஆமெனிற் கூடலே நீ கூடாய்

வளைந்த மதி: இளம்பிறை யே என்ணி னிடி என் எனில் குறும்பலாவினருகிலேயே என்னைக் கூடி என் தாபத்தைத் தணிப்பர் என்றாள்.)

தாமரை மலர்வாசனாகிய பிரமதேவனையும், நீலமேக வண்ன னாகிய திருமாலையும் அந்நாளிலே அடிமுடி தேடர் செய்து களைத்த சோர்ந்து போரும்படி செய்தவர் காம தேவனை எரித்தவர்; சந்திரணை சடையிலே முடித்தவர், எல்லா நன்மைகளுக்கும் காரணமாக விளங்கும் மறையாகிய வேதங்ளை அருளிச் செய்தவர்; அந்த வேதங்கக அனைத்தும் கருதிய ஒரே மூலப்பொருளாக விளங்குபவர்! யானை முதலிய பலவகை உயிரினங்களும் பூசித்த நாயகர், குறுமுனியாகிய அகத்தியரின் தமிழை மிகவும் விரும்பிக் கேட்டு இன்புற்ற தலைவர் குற்றாலப் பெருமானாகிய அவர், குறும்பலாவிடத்திலே என்னைன கூடுவாரானால், கூடலே! நீயும் இப்போது கூடி வருவாயாக.

கஞ்சனைமுகில் மஞ்சனை நொடித்தவர்

காமனைச் சிறு சோமனை முடித்தவர்

காரணமறை ஆரணம் படித்தவர்

கருதிய பெருமனார்.

குஞ்சரமுதற் பூசித்த நாயகர்

குறுமுனிதமிழ் நேசித்த நாயகர்

குறும்ப லாவினிற் கூடுவ

ராமெனிற் கூடலேநீ கூடாய்.

(கஞ்சன் - தாமரை மலரிலே வாசஞ் செய்பவன்; பிரமன், முகில் மஞ்சன் - கருநிற மோகம் போன்ற வண்ண முடையவன் திருமால், நொடித்தல் - இளைத்தல், மறை ஆரணம் - மறையாகிய வேதம், சுருதிய பெருமான் அவள் கருதிய பெருமானாகவும் கொள்ளலாம்.)

**குறவஞ்சி நாடகம்**

**குறவஞ்சி வருகிறாள்!**

இறையவர் திருவிளையாடல் புரிந்த குற்றாலத்துச் சங்க வீதியிலே, அழகிய நெற்றிக் கண்ணினரான அவர் முன்னே, தரையில் நழுவ விட்டுவிட்ட தன் சங்கு வளையல்களை உள்வீட்டிலே சென்று தேடுவதற் காக இடத்தை வளைத்துக் கொண்டிருக்கும் அடையாளத்தைப் போலக் உடலிழைத்தவளாக இருந்துகொண்டு வசந்த வல்லியானவள் மயங்கிக் கொண்டிருந்தாள். அந்த வேளையிலே வளையல்கள் நிரம்பிய தன் கைகளை அசைத்தவளாக, மாத்திரைக் கோலினை ஏந்திக் கொண்டு. மணிக்கூடையினையும் இடுப்பிலே தாங்கிக் கொண்டு, மாளிகைகள் நிரம்பிய திருக்குற்றாலநகரின் தெருவினூடே, குறவஞ்சி ஒருத்தியும் வருவாளாயினாள்.

ஆடல்வளை வீதியிலே அங்கணர்முன்

சங்கு வளையல் போட்டசங்கம் அரங்குவீட்டில்

தேடல்வளைக்குங் குறிபோற் கூடல்வளைத்

திருந்துவல்லி தியங்கும் போதில்

கூடல்வளைக் கரம் அசைய மாத்திரைக் கோல்

ஏந்தி மணிக் கூடைமலைக்

குறவஞ்சி வருகின்றாளே.

(ஆடல் - திருவிளையாடல்; வளை - சங்கம்; சங்கவீதி, அங்கணர் -அம் கண்ணர்; அழகிய நெற்றிக் கண்ணினையுடையவர். அரங்கு வீடு - உள்வீடு. தேடல் வளைக்கும் - தேடுதற்காகச் சுற்றி வளைத்துக் கொள்ளும். குறவஞ்சி - குறப்பெண்)

**வஞ்சி வந்தனள்!**

சைவத்தின் அடையாளமாகிய திரிசூலக் குறியினை வானின் உடையதாகி மேலாகவும் தரித்திருப்பது போன்று விளங்கும். தெய்வத்தன்மை பொருத்திய மூன்று சிகரங்களையுடைய திரிகூட மலைக்கு உரியவன். வான்புனலாகிய மழைநீரை உண்டு அதனால் திகட்டுதல் அதனை உமிழ்ந்து வருகின்ற இளங்குருகிற்குத் தேன்கலந்த நீரையுண்டு புரையேறும்படி செய்கின்ற சித்திரா நதிக்கு உரியவன், ஏரிகள் எல்லாம் நீர்ப்பெருக்கால் செழிக்குமாறு, கடல் நீரை முகந்து பொழியும் மழைநீர் மிகுதியினையுடைய தென்னாரிய நாட்டினுக்கு உரியவன்: இளைய மாமரங்கள் பழுத்தும் கதலிகள் பழுத்தும் வடியும் தேன் எப்புறத்தும் பெருகிப் பாய்ந்து செந்நெல் வயல்களைக் காத்து, ஏராளமான விளைவுப் பெருக்கத்தினை உண்டாக்கும் நன்மை பொருந்திய குற்றால நகரிவே கோவில் கொண்டிருருப்பவன்; ஓராயிரம் சாகைகளையுடைய வேதங்களாற் சிறப்புற்ற பரியினையுடையவன்; இரண்டாயிரம் கொம்புகளையுடைய அயிராவணம் என்னும் யானையினை உடையவன்.

சைவமுத் திரையை வானின்மேல் தரிக்கும்
தெய்வமுத் தலைசேர் திரிகூட மலையான்
வான்புனல் குதட்டும் மடக்குரு கினுக்குத்
தேன்புரை ஏறுஞ் சித்திரா நதியான்;
ஏரிநீர் செழிக்க வாரிநீர் கொழிக்கும்

மாரிநீர் வளர்தென் ஆரிய நாட்டான்
கன்னிமாப் பழுத்துக் கதலிதேன் கொழித்துச்

செந்நெல்காத் தளிக்கும் நன்னகர்ப் பதியான்;

ஒராயிரமறை ஓங்கிய பரியான்;

ஈராயிரமருப்பு ஏந்திய யானையான்;

(சைவமுத்திரை - சூலக்குறி. மடக்குருகு - இளையபுள். குதட்டுதல் - திகட்டுதல். புரை ஏறுதல் - மூக்கில் நீர் ஏறுதல் - கன்னிமா - இளைய மாமரம்.)

**மலைவளம் கேட்டாள்!**

தேவலோகத்து வாத்தியங்கள் எப்போதும் முழங்கிக் கொண்டிருக்கின்ற நன்மை பொருந்திய நகரமான அவ்வூரிலே கோவில் கொண்டிருக்கின்ற திருக்குற்றாலநாதரின் அருளைப் பாடிக் கொண்டே குறவஞ்சியைக் கண்டு, வசந்தவல்லியானவள் மிகவும் மனமகி கொண்டாள், 'சாந்தம் பூசிய கொங்கைகளும், துவள்கிதை இடைகம் முத்துப்போன்ற பற்களும், பவளம் போன்ற இதழ்களும் உடைய வளாகிய குறப்பெண்ணே! உன்னுடைய சொந்த மலை எந்த மவைா அந்த மலையின் வளத்தைப் பற்றி எனக்குச் சொல்வாயாக! என்றாள்.

அந்தரதுந் துபிமுழங்கு நன்னகர்க்குற்

றாலலிங்கர் அருளைப் பாடி

வந்தகுற வஞ்சிதன்னை வசந்தவல்லி

கண்டுமன மகிழ்ச்சி கொண்டு

சந்தமுலை துவளும் இடைத் தவளநகைப்

பவள இதழ் தையலேயுன்

சொந்தமலை எந்தமலை அந்தமலை

வளமெனக்குச் சொல்லென்றாளே!

**எங்கள் மலையே!**

ஆண்குரங்குகள் பலவகையான பழங்களையும் பறித்துக் கொண்டு வந்து கொடுத்துத் தம் மந்திகளோடு கொஞ்சிக் கொண்டிருக்கும்; அப்போது அம் மந்திகள் கீழே சிந்துகின்ற கனிகளுக்காக எதிர்பார்த்துத் தேவர்களும் கெஞ்சிக் கொண்டிருப்பார்கள். கானவராகிய வேடுவர்கள் தம் கண்களால் உறுத்து நோக்கி அந்த வானவர்களைக் கீழே வருமாறு அழைத்துக் கொண்டிருப்பார்கள். வானிலே இயங்கும் சித்தர்கள் பலரும் அடிக்கடி வந்துவந்து காயசித்தி மூலிகைகளை வளர்த்துக் கொண்டிருப் பார்கள், தேனருவியானது அலைகள் மேலே எழுப்பிச் சென்று வானி வழியாக ஒழகிக் கொண்டிருக்க, அதனால் செங்கதிரோனின் தேர் குதிரைகளின் கால்களும் தேர்ச்சக்கரங்களும் வழுக்கிவிழவும் நேரும்ட் வளைந்த இளம்பிறையினைத் தம் சடையிலே முடித்திருக்கும் அழகினையுடையவரான குற்றாலநாதரின் அத்தகைய வளமுடை திரிகூட மலைதான் எங்களுடைய மலையுமாகும்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்

மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

கானவர்கள் விழியெறிந்து வாணவரை அழைப்பார்

கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்

தேனருவித் இயாட்டும் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்.

செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்

கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்

குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.

முழக்கமிடும் அலைகளையுடைய நீர்வீழ்ச்சியானது தானும் கழங்காடுவது போல முத்துகளைச் சொரிந்து கொண்டிருக்கும் கானவர் மனைகளின் முற்றங்களிலெல்லாம் பரவிப் பெண்களின் சிற்றில்களையும் அவ்வருவி நீரானது கொண்டு ஓடிக் கொண்டும் இருக்கும் மலைச் சாரல்களிலே கிழங்குகளைக் கிள்ளி

எடுத்தும், தேன் இறால்களை எடுத்தும், மலைவளங்களைப் பாடியும் நாங்கள் நடனமாடுவோம். களிற்றி யானைகளின் கொம்புகளை ஒடித்துக் கொணர்ந்து, பூண்கட்டி, அதனாலே வறுத்த தினையினை உரலிலேயிட்டு இடிப்போம். குரங்குகள் இனிய மாமரத்தின் வளமான பழங்களைப் பறித்துப் பறித்துப் பந்தாடுவது போல எறிந்து கொண்டிருக்கும். தேன் பெருகியிருக்கும் செண்பக மலர்களின் வாசமோ வானுலகிலும் சென்று பரவும். அருளோடு அடியவர்களும் வழங்கும் கொடைத்தன்மையினையுடைய மகராசர் திருக்குற்றாலநாதர். குறும்பலாவினடியிலே கோவில் கொண்டிருக்கும் ஈசராகிய அக்குற்றாலநாதருடைய, வளம் பெருகிக் கொண்டிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையுமாகும்.

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்

முற்றம்எங்கும் பரந்து பெண்கள்

சிற்றிலைக் கொண்டோடும்

கிழங்கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்

களிறு கிம்புரியின் கொம்பொடித்து

வெம்புதினை இடிப்போம்

செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்

தேனலர்சண் பகவாசம்

வானுலகில் வெடிக்கும்

வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்

வளம் பெருகும் திரிகூட

மலை எங்கள் மலையே.

ஆடும் நாகப் பாம்புகள் நாகரத்தினங்கள் கோடி ஒளிபரப்பிக் கொண்டிருக்கும். கோயாகக் தாம் உண்ணும் வெண்ணிலவைத் வெண்சோற்றுக் கவளமென நினைத்து,

யானைகள் அதனை வழிமறித்து நிற்கும். வேடுவர்கள் தினைப்பயிரினை விதைப்பதற்காகப் தினைப்புனங்கள்தோறும் அவர்கள் காடழித்து நெருப்பிடலா வியப்பான அகில், குங்குமம், சந்தனம் முதலியவற்றின் | கமழ்ந்து கொண்டிருக்கும் காட்டின் எம்மருங்கும். குதித்துப் பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கும். காகமும் அணுகாத உயர்ந்த மலையுச்சிகளிலே, மேகக்கூட்டங்கள் வந்து படிந்து நெடிய குறும்பலாவினடியிலே இருக்கும் ஈசர்; கயிலாச மலையினைத் தமக்கு வாசமாகக் கொண்டவர்; அவர் நிலையாகத் தங்கியிருக்கும் திரிகூட மலைதான் எங்கள் மலையுமாகும். பண்படுத்தும் நறுமணம் வரையாடுகள் கொண்டிருக்கும்

ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்
வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தை அகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்
காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்கும் திரிகூட மலைஎங்கள் மலையே.

கயிலைமலை என்று போற்றப்படுகின்ற வடதிசையிலுள்ள மலைக்கு ஒப்பாகத் தென்திசையிலே விளங்கும் மலை இந்தத் திரிகூட மலையே யாகும். 'பொன்னிறமான மகா மேரு மலைபோலும்' என்று சொல்லும் படியாக உயர்ந்து நிற்கும் மலை, இந்த மலையேயாகும். சிவசயிலமலை என்று கூறப்படும் தென்திசையிலேயுள்ள மலைக்கு வடதிசையிலே இருக்கும் மலை இந்த மலையேயாகும். சகல மலைகளும் கொண்டிருக் கும் சிறப்புகள் எல்லாவற்றையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் மலையும் இந்த மலையேயாகும். வயிரக் கற்களும் மாணிக்கங்களும் விளைகின்ற மலையும் இந்த மலையேயாகும்.

வானத்துக் கதிரவன் மலைக் குகைகள்தோறும் நுழைந்து நுழைந்து ஒளிபரப்பும் மலையும் இந்த மலையேயாகும். திருப்பாற்கடலிலே பாம்பணைமேல் துயில் கொண்டிருப்பவரான திருமாலும் கண் விழித்துக் கொண்டவராகிய, அகிலமெல்லாம் தேடித்திரிகின்ற மேன்மையாளராகிய திருக்குற்றால தரின், இந்தத் திரிகூட மலையே எங்கள் மலையுமாகும்.

கொல்லிமலை என்பது எனக்கு இளையவளாகப் பிறந்த என் தங்கையான செல்லி என்பவள் இருக்கும் மலையாகும். என் கொழுநனுக்குக் காணியாட்சியான மலை பழநிமலையாகும் கதிரவன் படிந்து செல்லும் விந்தியாமலை என் தந்தைக்குரிய மலையாகும் . இமயமலை என்னுடைய தமையனுக்குரிய மலையாகும். சொல்வதற்கு அருமையுடையதான சுவாமி மலை என்னுடைய மாமியின் மலையாகும். என் தோழியின் மலை நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்விமலையாகும். மேகக் கூட்டங்கள் முழவுகளைப் போல இடி முழக்கினைச் செய்ய, அதற்கிணங்க மயிலினங்கள் ஆடிக் கொண்டிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் அம்மே
திரிகூட மலையெங்கள் செல்வமலை அம்மே

(சொல்லரிய - சொல்லால் போற்றுதற்கும் அருமையுடைய செல்லினங்கள் - மேகக் கூட்டங்கள். எல்.சூரியன்.)

எங்கள் குலத்தைத் தவிர வேறொரு குலத்திலே பெண் கொடுக்கவும் மாட்டோம். பெண் கொள்ளவும் மாட்டோம். எங்கள் சாதியினரை ஒருவர் உறவு பிடித்துக் கொண்டனரென்றால், எந் நாளும் அந்த உறவை நாங்கள் கைவிடவும் மாட்டோம். அப்படிப்பட்ட குறவர் குலத்தவர். நாங்கள் அச்சங்கொண்டு நடுங்கும்படியாகத் தினைப்புணத்திலே வந்த பெரிய மிருகமாகிய யானையை விலக்கி, வேங்கைமரமாகி நின்று எமக்கு நிழல் செய்த அந்த நன்மையினை எண்ணியே அருளாளரான இலஞ்சி வேலவர்க்கு, எம்குலத்துப் பெண்களுள் ஒருத்தியை மனைவியாக நாங்கள் கொடுத்தோம். அதற்காக, எங்கள் ஆதினத்திலிருந்த பிற மலைகளையெல்லாம் அவளுக்குச் சீதனமாகவும் கொடுத்தோம் ஞாயிறும் திங்ல சுற்றி வருகின்ற மகாமேரு மலையினைத் துருவன் கொடையாகக் கொடுத்து உதவினோம். அத்தகைய பெருமையு எங்களுடைய மலையானது, பரமனாகிய மலையாகிய பழைய மலையேயாகும். குற்றாலநாதர்க்கு என்பவனுக்கு ஒருருவத்தில் பெண்கள் கொடோம் ஒரு குலத்திற் உறவுபிடித் தாலும்விடோம் குறவர்குலம் நாங்கள் பாங்குதனைக் அருளிலஞ்சி வேலர்தமக்கு ஒரு பெண்ணைக் கொடுத்தோ மலைகளெல்லாம் பருதிமதி சூழ்மலையைத் துருவனுக்குக் கொடுத்தோம் பரமாதிரி கூடமலை பழையமலை அம்மே. கொள்ளோம்

(ஒரு பெண் - ஒப்பற்ற பெண்ணாகிய வள்ளிநாயகி ஆதினத்து மலை - ஆட்சியிலிருக்கும் மலைகள்.)

**வசந்தவல்லி சொன்னது**

சங்கக் குழைகளின் வளம் செறியுமாறு விளங்கும் காதுகளை உடையவர் திருக்குற்றாலநாதர். அவருடைய மலையிலே வாழ்ந்து வருகின்ற இளமயிலினைப் போன்றவளே! "யானைத் தந்தங்களினுடை அழகினை உன் கொங்கைகள் காட்டும். பூங்கொடியின் நுண்மை வள தினை உன்னுடைய நுண்மையான இடையானது காட்டும், குறிஞ் மலர்கள் பூத்துள்ள காட்டின் வளத்தினை உன் கரிய கூந்தலானது

காட்ட கொண்டிருக்கும், இப்படி நின் தோற்றமே மலை வளத்தின் சிறப்பினை காட்டிக் கொண்டிருக்கும் போது, நீ நின் வாயினால் உரைத்து அவற் யெல்லாம் காட்டுவது எதற்காகவே ? உமது நாட்டின் வளத்தினை குற்றாலத்தலத்தின் வளத்தினையும் எனக்கு இனி எடுத்த சொல்லுவாயாக.

கோட்டுவளம் முலைகாட்டும் கொடியின்வளம்

இடைகாட்டும் குறிஞ்சிபூத்த

காட்டுவளம் குழல்காட்டும் மலைவளந்தான்

நீயுரைத்துக் காட்டு வானேன்

தோட்டுவளம் புரிகாதல் குற்றால

மலைவளரும் தோகை யேஉன்

நாட்டுவளம் எனக்குரைத்துக் குற்றாலத்

தலவனமும் தவிலு வாயே

**நாட்டு வளம் கூறுதல்**

மாமரங்களிலே இருந்து கொண்டு குயில்களாகிய திருச் சின்னங்கள், 'காமத்துரை வந்தான் வந்தான் என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கும் பருத்த முலைகளிலே முத்தாரங்கள் கிடந்து புரளும், மின்னல் போன்ற அழகினையுடையவரான பெண்கள், அவரவர் களுடைய அல்கு தேர்களை அலங்காரம் செய்து கொண்டிருப்பார்கள். மிகப் பெரிய திங்களாகிய வெண்கொற்றக் குடையானது மேலே கவித்து கொண்டிருக்கும் பறக்கின்ற கிளிகளாகிய குதிரைகள் தேர்களின் முன்னே கொஞ்சிச் சென்று கொண்டிருக்கும் இப்படியாகிய இளன் தென்றலாகிய தேரினையுடையவளாகக், காமதேவன் வந்து உலா வருகின்ற சிறப்பினையுடையது திருக்குற்றால நாதரின் தென்னாரிய நாடாகும்.

**கண்ணிகள்**

சூர மாங்குயிற் சின்னங்கள் காமத்

துரைவந் தான்துரை வந்தானென்றூத

ஆர மாமுலை மின்னார் அவரவர்

அல்குல் தேர்கள் அலங்காரஞ் செய்யப்

பார மாமதி வெண்குடை மிஞ்சப்

பறக்கும் கிள்ளைப் பரிகள்முன் கொஞ்சத்

தேரின் மாரன் வசந்தான் உலாவுந்

திருக்குற் றாலர்தென் ஆரியநாடே

மேகத்தை ஒப்பான கருமையுடைய கூந்தலை உடையவரான பெண்களைக் கண்டு நாணங் கொண்டவையாகக் கடலை நோக்கிச் சென்று சேர்ந்தன கறுப்பான மேகங்கள். அங்கே கடல்நீரை முகந்து கொண்டு, கச்சுகளைச் சேர்ந்த கொங்கைகளுக்கு ஒப்பான மலைகளைச் சேர்ந்து, அங்கே வானத்தே வில்லினை இட்டு, நீரைச் சேர்ந்த மழைத் தாரையாகிய அம்புகளுடன், நெடிய கீழ்க்காற்றாகிய தேரிலே ஏறி, வெம்மை யாளனாகிய கதிரவனின் தேரைச் சுற்றி முற்றுகையிட்டுக் காலத்தையும் கார்காலமாக மாற்றி, முதுவேனிலை வெற்றிகொள்ளும் யுடையது. திருக்குற்றாலநாதரின் தென் ஆரிய நாடாகும்.

காரைச் சேர்ந்த குழலார்க்கு நாணிக்

கடலைச் சேர்ந்த கறுப்பாக மேகம்

வாரைச் சேர்ந்து முலைக்கிணை யாகும்

மலையைச் சேர்ந்து சிலையொன்று வாங்கி

நீரைச் சேர்ந்த மழைத்தாரை அம்பொடு

நீளக் கொண்டலம் தேரேறி வெய்யவன்

தேரைச் சூழ்ந்திடக் கார்காலம் வெல்லும்

திருக்குற்றாலர்தென் ஆரிய நாடே.

எருமை மாடுகள் கூட்டங் கூட்டமாக இறங்குகின்ற நீ துறையிலே, அவை சொரிகின்ற பாலினைப் பருகிய வாளைமீன் களானவை. மணம் பொருந்திய கூழைப் பலாவினை நோக்கிப் பாயும் கானல் கொழுவிய பலாக்களின் வாழை மரங்களின் மேலே உதிரும். வாழை மரங்கள் சாய்ந்து ஒப்பற்ற தாழை மரத்தினைத தாக்கும் வரு வரும் மாக்குச் சோறிட்டு உபரிப்பாறு பே பே செ. நயும். அப்போது விருந்தினர்க்கு கூடிய பூக்களைச் சோரம் போலச் சொரியும் வாழை தன்று குருத்தினை விரித்து அச் சோற்றினை ஏந்திக் கொண்டிருக்கும். இத்தகைய வளமுடையது சந்திரசூடரின் தென்னாரிய நாடு.

சூழ மேதி இலங்குந் துறையிற்

சொரியும் பாலைப் பருகிய வாளை

கூழை வாசப் பலாவினிற் பாயக்

கொழும்ப லாக்கனி வாழையிற் சாய

வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க

வருவி ருந்துக் குபசரிப் பார்போல்

தாழை சோறிட வாழை குருத்திடும்

சந்த்ரசூடர்தென் ஆரிய நாடே.

(மேதி - எருமை, துறை - ஆற்றின் இறங்குமிடம். வாளை - வாளை மீன். உழைப்பலா - பலாவிலே ஒரு வகை. தாழைச் சோறு - தாழைப் பூக்களின் மகரந்தம். சந்திரசூடர் - சந்திரனைச் சடையிலே சூடியவர்; குற்றாலநாதர்.)

இங்கே ஓடிக்கொண்டிருக்கக் காண்பதெல்லாம் பூக்களுட வரும் புதுவெள்ளப் பெருக்கமின்றி மக்கள் அல்லர். இங்கே ஒடுங்க காண்பதெல்லாம் யோகியரின் உள்ளங்களேயன்றி மக்கள் அல்வா இங்கே வாடக் காண்பது எல்லாம் நங்கையரின் இடைகளேயன் மக்களுள் எவரும் அல்லர். இங்கே வருந்தக் காண்பதெல்லாம் மு களை ஈன வருந்தும் சங்கினங்களே யன்றி மனிதர்கள் அல்லர். இங் போடக் காண்பதெல்லாம் கிண்கிணிக் கொத்துகளே யல்லாமல் ஏ யரான மக்கள் அல்லர். இங்கே அனைவரும் தேடிக் கொண்டிருக் காண்பதெல்லாம் நல்ல அறநெறிகளும் புகழுமே யல்லாமல் போ செல்வங்கள் அல்ல. இத்தகைய சிறப்புடைய திருக்குற்றாலந் வாழுகின்ற ஆரிய நாடே எங்கள் நாடாகும்.

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்

ஓடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்

வாடக் காண்பது மின்னார் மருங்குல்

வருந்தக் காண்பது சூலுளைச் சங்கு

போடக் காண்பது பூமியில் வித்து புலம்பக் காண்பது கிண் கிணிக் கொத்து தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே.

**நகர்வளம் உரைப்பேன்**

திருமால், அயன் ஆகியோரும், வேதங்கள் ஆகியவையும் கடத் தினந்தினந் தேடியும் காணுதற்கு அரிதாக நிற்கின்றவன் சிவபெருமான். அவனுக்கு உரியது திரிகூட நகரம். அது இருக்கின்ற திரிகூட நாட்டில் இனிமையினை ஆண் களிறுகளுடன் பெண்பிடிகள் கலந்து கூடித் திரிகின்ற மலை சாரலிலே, ஒரு வேடனானவன் தன் கையிலே வில்லினை ஏந்தியவனாக நாயினைத் துரத்தியவாறே கயிலமலையைச் சென்றடைந்து முத்து பெற்றவன். அத்தகைய சிறப்புடையது இத் திரிகூடமலை. இதல் மகிமையையும் இனி நான் சொல்வேன்; நீ கேட்பாயாக உடையதாகும்

அரிகூட அயன்கூட மறைகூடத்

தினந்தேட அரிதாய் நின்ற
திரிகூடப் பதியிருக்கும் திருநாட்டு
வளமுறைக்கத் தெவிட்டாதம்மே
கரிகூடப் பிடிதிரியுஞ் சாரலிலே
ஒருவேடன் கைவில் ஏந்தி
நரிகூடக் கயிலைசென்ற திரிகூடத்
தலமகிமை நவிலக் கேளே

(அவர்கள் தேடற்குமரிதாய் நின்ற பெருமான். அடியார்க்கு அருள் புரிவானாகக் கோவில் கொண்ட காட்சி தரும் பதியாதலால், அதன் சிறப்பு உரைக்க உரைக்கத் தெவிட்டாதது என்றனர். வேடன் முக்திபெற்ற வரலாறு புராணங்களுட் காண்க.)

**நகர்வளம்**

மெய்யறிவினை உடையவரான முனிவர்களும் சித்திரா நதி யினுடைய மூலத்தை இன்னவிடத்து என்று அறிய மாட்டார்கள். அதசை நான் அறிந்த வகையினைச் சிறிது சொல்வேன் கேட்பாயாக, மேன்மை பெற்றிருக்கின்ற திரிகூடத்திலே தேனருவித் துறையினிடத்தே தேவர் களும் அறிய மாட்டாத இரகசியம் உடையதாக வந்து ஒரு சிவலிங்கமானது தோன்றியிருந்தது. அத்தகைய தேனருவித் துறையினைப் பற்றிச் சொல்லப்பட்ட இடமானது. எவ்விடத்தே இருக்கின்றதென்று அறிய மாட்டாமல், தான் அவ்விடத்தேயிருந்து தவஞ்செய்வதற்காக வந்த அயனானவள், பலவிடங்களிலும் தேடித் தேடித் திரிந்து அலைந்தனன். அந்தக் காலத்திங்கள் இனத்த ரொபி னான எய்திய தேவனாகிய அந்த பெனுக்கு, சருங்கள் இனத்தவரான கானவர்கள் 'பழைளகியு டைய சயதிகமிருக்கும் துககை வே வழங்கப்படிக்கொடுத்த ஆறே, இத்தாளிலே சிவமதுகங்கை என வழங்கப் பெறுகின்ற ஆறாகும்.

ஞானிகளும் அறியார்கள் சித்ரநதிமூலம்

நானறிந்த வகைசிறிது பேசக்கேள் அம்மே!

மேன்மைபெறுந் திரிகூடத் தேனருவித் துறைக்கே

மேவுமொரு சிவலிங்கத் தேவரக சியமாய்

ஆனதுறை அயனுரைத்த தானம் அறியாமல்

அருந்தவத்துக் காய்த்தேடித் திரிந்தலையும் காலம்

மோனவா னவர்க்கெங்கள் கானவர்கள் காட்டும்

முதுகங்கை ஆறுசிவ மதுகங்கை ஆறே.

(மோனம் - மௌனநிலை. முதுகங்கை - பழைமையினுடையதான தேவகங்கை.)

அந்தச் சிவமதுங்கையின் மகிமையினை உலகமெல்லாம் புகழ்ந்து கூறிக் கொண்டிருக்கும். அத்தகைய ஆற்றின் கரையிலே விளங்கும் செண்பகாடவித் துறையின் பண்பினையும் நான் சொல்லுகின்றேன் கேட்பாயாக; தவஞ் செய்யும் முனிவர்களுடைய கூட்டமும் அவர்கள் தங்கியிருக்கின்ற மலைக்குகைகளும், சஞ்சீவி முதலான வியப்பான பலப்பல மூலிகைகளும் உடையதாக, வான் வழியே செல்லும் சித்தர்கள் முதலானோரும் மோன நிலையினைப் பெற்றுள்ள யோக புருஷர்கள், இறைவனின் தரிசனத்தை வேண்டிக் காத்துக் கிடக்கின்ற திருக்கைலா பத்தினைப் போன்றிருக்கும் அந்தஅடவி. நவ நதிகளும் விளைகின்ற சிறப்பினையுடைய அவ்விடத்தினைக் கடந்து சென்றால் நங்கையர்களின் நீர்வையொலியினைப் போலே அலையெறிந்து ஒலி முழங்கிக் கொண்டிருக்கும். 'பொங்கு மாங்கடல்' என்ற தீர்த்தத் துறையைக் காணலாம்.

சிவமதுகங் கையின் மகிமை புவனமெங்கும் புகழும்

செண்பகா டவித்துறையின் பண்புசொல்லக் கேளாய்

தவமுனிவர் கூட்டாரவும் அவரிருக்கும் குகையும்

சஞ்சீவி முதலான விஞ்சைமூ லிகையும்

கவனசித்தர் ஆதியரும் மவுனயோ கியரும்

காத்திருக்கும் கலிலாயம் ஒத்திருக்கும் அம்மே!

நவநிதியும் விளையுமிடம் அவிடம் அது கடந்தால்

நங்கைமார் குரவையொலிப் பொங்குமா கடலே.

(செண்பகாடவித் துறை - செண்பகமரக் காடுகள் செறிந்த துறை கூட்டரவும் - கூட்டத்தாலே எழும் அரவமும் நவநிதி நவமணிகளாகிய செல்வங்கள்.)

அந்தப் பொங்குமாங் கடலானது கங்கை, யமுனை, சரசுவதி நதிகள் ஒன்று கலக்கும் திரிவேணி சங்கமத்தினைப் போன்ற புண்ணிய பொன்னும் முத்தும் கொழிக்கும் வளமுடையனவாகும் துறைகள்ர் என்று சொல்லும்படியாக வான வில்லிட்டு விழுக்ை கங்கையிள் எதீர்த்தத்திலே கலந்து போடி, நா கமுவப்பட்ட நிலவள அழுக்குகள் கரைந்து ஓடுவதைப் போல, நீராடுவோரின் பாவங்கள் அனைத்தும் அவரை விட்டுத் தொலைந்து ஓடிப்போகும். அந்தச் சித்தி நதியானது சங்க வீதியிலே பரவிச் செல்ல, அங்கே சங்கினங்கள் மேய்ந்து கொண்டிருக்கும். பெரிய மதில்களின் உச்சிகளிலே எப்புறரும் கொழுமையான கயல் மீன்கள் துள்ளிப் பாய்ந்து கொண்டிருக்கும் பூங்கொத்துகள் இதழ் விரிந்து மணம் வீசிக் கொண்டிருக்கும் செண்பக சோலையுடைய குறும்பலானடியிலே கோவில் கொண்டிருக்கு பெருமானின், குற்றாலத்தலம் என்னும் திரிகூடத்தலமே. எங்களுடை நகரமாகும்.

பொங்குகடல் திரிவேணி சங்கமெனச் செழிக்கும்

பொருந்து சித்திரா நதித்துறைகள் பொன்னுமுத்தும் கொழிக்கும்

கங்கையெனும் வடவருவி தங்குமிந்த்ர சாபம்

கலந்தாடிற் கழுநீராய்த் தொலைந் தோடும் பாவம்

சங்கவீ தியிற்பரந்து சங்கினங்கள் மேயும்

தழைத்தமதிற் சிகரமெங்கும் கொழுத்த கயல்பாயும்

பொங்கலர் செண் பகச்சோலைக் குறும்பலா ஈசர்

குற்றாலத் திரிகூடத் தலமெங்கள் தலமே.

குற்றாலநாதர் திருநடனம் செய்யும் மன்றமாகிய சித்திரசபையிலே தேவ முரசமானது எப்போதும் மேன்மையாக ஒலி முழங்கி கொண்டிருக்கும். வளமை பெற்றவனான நான்கு யுகங்களுங்கூட இத்தலத்திலே இருப்பவர்க்கு நான்கு கிழமைகளைப் போலக் கழிந்து போகும். மதயானையானது நாள் தவறாமல் வந்து நின்று, அந்நாளிவே சிவ பூசை செய்து பேறுபெற்ற தலமும் இதுவேயாகும் அனைவரும் பழித்துப் பேசிய புட்பகந்தன் என்பவன், வழிபாடு செய்து பேறு பெற்ற நலமும் இதுவேயாகும். பன்றியுடன் வேடனும் கூடி வலஞ்செய்து முத்தி யவராக இறையவர் வீற்றிருக்கின்ற குற்றாலத்தலம் இதுவேயாகும் வெத்திகளாவும் உருமாறி வந்து தவஞ் செய்று ங்கூடக் குன்றுகளாகவும். மிருகங்களாவும் உருவறி வந்து தவயசெய்து கொண்டிருக்கும் பெருஞ் சிறப்பினையுடைய தலமும் இதுவேயாகும்.

மன்றுதனில் தெய்வமுர சென்றுமேல் முழங்கும்

வளமைபெறுஞ் சதுரயுகம் கிழமைபோல் வழங்கும்

நின்றுமத கரிபூசை அன்று செய்த தலமே

நிந்தனை செய் புட்பகந்தன் வந்தனைசெய் தலமே

பன்றியோடு வேடன் வலஞ் சென்றதிந்தத் தலமே

பற்றாகப் பரமர்உறை குற்றாலத் தலமே

வென்றிபெறுந் தேவர்களும் குன்றமாய் மரமாய்

மிருகத்தாய்த் தவசிருக்கும் பெரியதலம் அம்மே!

(மன்று - சித்ரசபை, சதுரயுகம் - நான்கு யுகங்கள். புட்ப கந்தன் குசலன் என்பவன்.)

**கிளை விசேடம் கேட்டல்**

'வார்த்தைகளை மிகவும் நயமுடனே பேசுவதற்குக் கற்றவளான, மலைநாட்டைச் சேர்ந்த குறவஞ்சியே! பூங்கொடி போன்றவளே! தீர்த்தங்களின் பெருமையையும் தலத்தினுடைய சிறந்த பெருமையையும் இதுவரை சொன்னாய், திருக்குற்றால மூர்த்தியின் சிறப்பும் நின் சொற்கள் தோறும் விளங்குவதை நீ உரைத்த முறைமையினாலேயே நானும் அறிந்தேன். இனிக் குறும்பலாவினடியிலே வீற்றிருப்பவருடைய கீர்த்தி விசேடங்களையும் பெரிதான உறவினர்களின் விசேடங்களையும் எனக்குச் சொல்லுவாயாக! இவ்வாறு, வசந்தவல்லியானவள் குறவஞ்சி மினிடம் கேட்கிறாள்.

தீர்த்தவிசே டமுந்தலத்தின் சிறந்தவிசே

டமும் உரைத்தாய் திருக்குற்றால

மூர்த்திவிசே டந்தனையும் மொழிதோறும் நீ

யுரைத்த முறையிற் கண்டேன்.

வார்த்தைவிசே டங்கள் கற்ற மலைக்குறவஞ்

சிக்கொடியே வருக்கை வாசர்

கீர்த்திவிசே டம்பெரிய கிளைவிசே

டத்தைஇனிக் கிளத்துவாயே.

**கிளை விசேடம் கூறுதல்**

அடி அம்மையே! குற்றாலநாதரின் பாக; அவருடைய ருன எல்கிறது. நீ கேட்டபடியே கூறுகின்றேன்; கேட்பாயாக; அவருடைய குலத்தினை பார்த்தோமானால் எல்லாத் தேவர்களையும் காட்டிலும் பெருமையுடைம் குலமாகும். அவரைப் பெற்ற தாய் எவரோ? தந்தை எவதோர் குலறெருமாம் உன்னிப்புடன் என்னை தோட்டா யாலைய அவற்றை யாட அறியேன். அவருக்குப் பெண் கொடுத்தானே மலையரசன், அவென தான் கேட்டு நீ தெரிந்து கொள்ளல் வேண்டும். சிறப்புப் பொருந்திய ஒப்பற்ற பனிமலையினனாகிய வெற்றி வேந்தனுக்கும்

உயர்வுடைய மதுரை நகருக்குரியவனாகிய பாண்டியனுக்கும் இவர் வெற்றிச் சிறப்புடைய மருகனார் ஆவர். பாற்கடலில் பாம்பிணையிலே உறங்கி கொண்டிருக்கும் வெற்றி கொள்ளும் சிறப்புடையோனான திருமாலுக்குது கண்ணுக்கு கண்ணான மைத்துனரும் இவர், அம்மையே!

**கண்ணிகள்**

குற்றாலர் கிளைவளத்தைக் கூறக்கேள் அம்மே
குலம்பார்க்கில் தேவரினும் பெரியகுலம் கண்டாய்
பெற்றதாய் தந்தைதனை உற்றுநீ கேட்கில்
பெண்கொடுத்த மலையரசன் தனைக் கேட்கவேணும்
உற்றதொரு பனிமலையின் கொற்றவேந் தனுக்கும்
உயர்மதுரை மாறனுக்கும் செயமருகர் கண்டாய்
வெற்றிபெறும் பாற்கடலிற் புற்றரவில் உறங்கும்
வித்தகர்க்குக் கண்ணான மைத்துனர்காண் அம்மே!

(கிளைவளம் - குலப்பெருமை. பெரிய குலம் - பெருஞ்சிறப்பு உடைய சிவகுலம். உற்றுக் கேட்டல் - உன்னிப்பாகக் கேட்டல் மதுரை மாறன் - மதுரைப் பாண்டியன், புற்றரவு - புற்றிலே வாழும் இயல்பினையுடைய பாம்பு: இங்கே ஆதிசேடன்)

**குறியின் தன்மை யாது?**

நீரிலே வளர்கின்ற செம்பவளத்தைப் போன்ற திருமேன் வண்ணத்தையுடையவர், இயல்பாகவே பாசங்களினின்றும் நின்மலர்; குற்றாலநாதர். அவருடைய மிகுதியான யெல்லாம் பாடி ஆடி வருகின்ற குறவஞ்சிப் பெண்ணே!

கேட்பாயாக கார்மேகத்தைப் போன்ற கூந்தலையுடைய நீங்கியவரான பெருமைகளை நங்கைமார்களுக்கெல்லாம் விருந்து போல இனிக்கும்படியாக நீ ஆராய்ந்து சொல்லுகின்ற சிறப்பு மிகுந்த குறியின் தன்மைகளை எல்லாம், நானும் தெரிந்து கொள்ளுடி சொல்லுவாயாக' (என்று வசந்தவல்லி குறவஞ்சியிடம் கேட்டாள்.)

**விருத்தம்**

நீர்வளர் பவளமேனி

நிலமலர்குற் றாலநாதர்

கூர்வளம் பாடியாடும்

குறவஞ்சிக் கொடியே கேளாய்

கார்வளர் குழலார்க் கெல்லாம்

கருதிநீ விருந்தாச் சொல்லும்

சீர்வளர் குறியின் மார்க்கம்

தெரியவே செப்பு வாயே.

(விருந்தாகச் சொல்லும் - புதுமையாகச் சொல்லும் - சீர்வளர் குறி - சிறப்பு மிகுந்த குறி.)

**குறியின் சிறப்புகள்!**

மிகவும் வித்தாரமானது எனது குறி அம்மையே! மணியாரத் தினையும் முத்தாரத்தினையும் பூணுகின்ற, மேலெழுந்து முகிழ்த்திருக்கும் கொங்கைகளையுடைய பெண்ணே! என் குறியானது மிகவும் வித்தாரமானது அம்மையே

வஞ்சி நாடு, மலையாள நாடு. கொச்சி நாடு, கொங்கு நாடு. மக்கம். மராடம், துலுக்காணம் ஆகிய நாடுகளில் எல்லாம் என் குறியினைய பலரும் பாராட்டியுள்ளனர். செஞ்சி, வடகாசி பரந்த சீனநாடு, சிங்களம் ஈழம், கொழும்பு, வங்காளம், தஞ்சை, திருச்சிராப்பள்ளிக் சிேங்களம் தமிழ்ச் சங்கம் வீற்ருந்த மதுரை,

தென்மங்கலப்பேட்கோட்டை பலவிடங்களிலும் மிகுதியாகக் குறிசொல்லிப் பேரும் பெற்றேன். பல நீசைகளையும் வென்று நான் பெற்றிருக்கின்ற விருதுகளையும் நீ இதோ காண்பாயாக.

நன்னகராகிய இத் திருக்குற்றால நகரிலே, எங்கும் தன் பெரும்புகழை நிலை நாட்டிய கொல்லம் எண்ணூற்று எண்பத்தேழாம் ஆண்டிலேயே, பதஞ்சலி மாமுனிவர் போற்றும் வண்ணம் தமிழ் வளர்த்த பாண்டியனார். முதன் முதல் சிறிய கூரை ஓடுகள் வேய்ந்த அழகு பொருந்திய சித்திரசபையை எங்கள் சின்னணஞ்சாத்தேவன் செப்போடு வேய்த்தனன் அதற்கு முன்பாக, அவனுக்குக் குறி சொல்லி நான் பரிசாகப் ருத்துபெற்ற இந்த மோகனமாலையினை மோகவல்லியே நீ பார்ப்பாயாக. அதனால், மிகவும் வித்தாரம் பொருந்தியது என் குறி அம்மையே!

நன்னகர்க் குற்றாலந் தன்னில் எங்கும்
நாட்டும் எண்ணூற்றென்பத் தேழாண்டு தன்னில்
பன்னக மாமுனி போற்றத் தமிழ்ப்
பாண்டிய னார்முதற் சிற்றோடு மேய்ந்த
தென்னாரும் சித்ரசபையை எங்கள்
சின்னணஞ் சாத்தேவன் செப்போடு வேய்ந்த
முன்னாளி லேகுறி சொல்லிப் பெற்ற
மோகன மாலைபார் மோகன வல்லி

அதற்கு வடகீழ்த் திசையிலே, கொல்லத்து ஆண்டு நானூற்ற நாற்பத்து நாலிலே; அன்பாகத் தென்காசி ஆலயமானது சிறந்து நாற்பத்து நாலிச், சென்பகமாற பாண்டியனக்குக் குறி சொன் பேர்களும் நாங்களேயாவோம். நல்ல பாண்டிய நாடானது. உய்யும்படி யாகச் சொக்க நாயகர் வந்து மணக்கோலம் செய்வதற்கு முன், மது மீனாட்சியம்மை யானவள் இன்பமுடன் எங்களைக் குறி கேட்டதற்கு மதுரைச்

சங்கத்தார்களே சாட்சியுரைப்பார்கள். அதனால், மிகவும் வித்தாரமுடையது என் குறி அம்மையே!

அன்பாய் வடகுண பாலிற் கொல்லத்து

ஆண்டொரு நானூற்று நாற்பத்து நாலில்

தென்காசி ஆலயம் ஓங்கக் குறி

செண்பக மாறற்குச் சொன்னபேர் நாங்கள்

நன்பாண்டி ராச்சியம் உய்யச் சொக்க

நாயகர் வந்து மணக்கோலஞ் செய்ய

இன்பா மதுரை மீனாட்சி குறி

எங்களைக் கேட்டதும் சங்கத்தார் சாட்சி.

**எனக்கு ஒரு குறி!**

நின்னுடன் கலந்து மகிழ்வதற்குக் காமதேவனே வரவேண்டுமெ நீ விரும்பினாலும், விழிப்பார்வையாகிய வாளினைக் கொண்டு அக் காமனையும் நின் வசமாக்கிக் கொள்ளக் கூடியவளே! நின்னுடைய குலவித்தை குறி சொல்லுதலே யாகுமேயானால், குறவஞ்சி! எனக்கும் ஒரு குறைவைத்தோ சொல்லப் போகின்றாய்? பலாமரத்தினுள்ளே விளங்கும் கனியினைப் போல, என்னுள்ளே நிலை பெற்றிருக்கும் குற்றால நாதருடைய நாட்டினிலே, இலவம் பூவினும் சிவந்த நின் வாயினால் எனக்கும் ஒரு குறியினைச் சொல்லுவாயாக.

கலவிக்கு விழிவாள் கொண்டு

காமனைச் சிங்கி கொள்வாய்

குலவித்தை குறியே ஆனால்

குறவஞ்சி குறைவைப் பாயோ

பலவுக்குள் கனியாய் நின்ற

பரமர்குற் றாலர் நாட்டில்

இலவுக்கும் சிவந்த வாயால்

எனக்கொரு குறிசொல் லாயே.

**குறி ஏற்பாடுகள்**

அம்மே! என்ன குறியானாலும் நான் சொல்லுவேன் அம்மே! இதற்காகச் சபை ஏறவும் செய்வேன். என்னை எதிர்த்த பேர்களை வெல்லவும் செய்வேன். மன்னவர்கள் கூட மெச்சுகின்ற குறவஞ்சி நான். என் வயிற்றுக்கு இத்தனை கஞ்சிபோதும். அதனை நீ வார்ப்பாயாக. அம்மையே! எந்த வேறுபாடும் இல்லாமல் கூழானாலும் அதனைக் கோண்டு வந்தால் என் பெரிய குடுக்கை நிறையக் குடித்து விடுவேன் அம்மே! அதன்பின் தின்பதற்கு வெற்றிலையும் வெட்டுப் பாக்கும் அள்ளித் தருவாயாக. கப்பலிலே வந்திறங்கும் சீனத்துச் சரக்கான புகையிலையிலும் கொஞ்சம் கிள்ளித் தருவாயாக, அம்மையே!

**கண்ணிகள்**

என்னகுறி யாகிலும்நான் சொல்லுவேன் அம்மே - சதுர்

ஏறுவேன் எதிர்த்த பேரை வெல்லுவேன் அம்மே!

மன்னவர்கள் மெச்சுமொரு வஞ்சிநான் அம்மே! - என்றன்

வயிற்றுக்கித் தனைபோதும் கஞ்சிவார் அம்மே!-

பின்னமின்றிக் கூழெனினும் கொண்டுவா அம்மே!

பெரிய குடுக்கை முட்ட மாண்டுவேன் அம்மே. வந்தால்

தின்ன இலை யும்பிளவும் அள்ளித்தா அம்மே - கப்பற்

சீனச்சரக் குத்துக்கிணி கிள்ளித்தா அம்மே.

(பெரிய குடுக்கை - பெரிய வயிறும் ஆம் - புகையிலை அந்நாளிலே சீனத்திலிருந்து கப்பலிலே வந்திறங்கியதால் போலும் சீனச் சரக்கு என்கிறார்.)

**மீண்டும் வினவுதல்**

நன்றாயிருக்கிறது குறவஞ்சியே! நீ ஒரு பெரிய நாடகக் காரி, இந்த நாட்டிலேயுள்ளவர்களுக்குத் தக்கவாறு நீ பேசும் வார்த்தைகளை நான் அறியேன் என்று நினைத்தாயோ? முதலிலே ஒன்றும் விடாமல் குறிசொல்லி வந்தாய, பின்னர் குறியை உழப்பிப் போட்டாய்; குழப்பிப் போட்டாய். திருவிழாவிலே வரும் சேனையைக் கண்ட பயத்தால் இந்த மயக்கமும் கிறுகிறுப்பும் பெண்களுக்கு வருவதுண்டோ? இன்று வரைக்கும் உடலிலே குளிரும் காய்ச்சலும் இருப்பதுமுண்டோ? பின்னே அவை ஏற்பட்டது எந்த வகை? அதனை ஆராய்ந்து பார்த்துக் குறி சொல்லடி.

**கண்ணிகள்**

நன்றுநன்று குறவஞ்சி நாடகக்காரி - இந்த
நாட்டானபேர்க் கானவார்த்தை நானறியேனோ
ஒன்றுபோ டாமற்குறி சொல்லியேவந்தாள் - பின்னை
உழப்பிப்போட் டாய்குறியைக் குழப்பிப் போட்டாய்
மன்றல்வருஞ் சேனைதனைக் கண்டுபயந்தால் - இந்த
மையலுங் கிறுகிறுப்பும் தையலர்க் குண்டோ
இன்றுவரை மேற்குளிரும் காய்ச்சலும் உண்டோ - பின்னை
எந்தவகை என்றுகுறி கண்டு சொல்லடி!

காமக் காய்ச்சலடி!

ஆனேறாகிய தன் வாகனத்திலே ஏறி வருகின்ற யோக புருஷன் அவனுடைய கோலாகலமான திருவுலாவினைக்கான ஆசை கொண்ட பெண்களுக்குள்ளே தோகையே! நீ அவனைக் கண்டு அவன் மீது மோகங் கொண்டாய் அம்மையே. அதனைச் சொல்லப் பயந்திருந்தேன்.

இப்பொழுது நின்முன் வெளிப்படையாகச் சொல்வேன் கேட்பாக காகம் அணுகாத திரிகூடமலைக்கு உன்மேல் எவ்விதக் காய்ச்சலும் கிடையாது; தீ கொண்டிருப்பது காமக் காய்ச்சல் என்றறிவாயாக. மோகினியே! உன்னுடைய கிறுகிறுப்பெல்லாம் அவனுடைய மோகத்தால் ஏற்பட்ட கிறுகிறுப்படி மோகனக் கள்ளி!

**கண்ணிகள்**

வாகனத்தில் ஏறிவரும் யோகபுருடன் - அவன்

வங்காரப் பவனியாசைப் பெண்களுக் குள்ளே

தோகைநீ அவனைக்கண்டு மோகித்தாய் அம்மே - அது

சொல்லப் பயந்திருந்தேன் சொல்லுவேன் முன்னே

காகம்அணு காததிரி கூடமலைக்கே உன்மேற்

காய்ச்சலல்ல காய்ச்சலல்ல காமக் காய்ச்சல்காண்

மோகினியே உன்னுடைய கிறுகிறுப் பெல்லாம் - அவன்

மோகக்கிறு கிறுப்படி மோகனக் கள்ளி!

**தாரும் பேரும் ஊரும்!**

குறப் பெண்ணே! இந்த நல்ல நகரத்தின் உள்ளே கன்னிப் பெண்ணாக நான் இருக்கும்போது சற்றும் வாய் கூசாமல் என்னைக் 'காமக்கள்ளி * என்றும் சொல்லி

விட்டாய். நீ குறிப்பாகச் சொன்ன குறியினை உண்மையே என்று நிலை நாட்டுபவளானால் மாலையும், பேரும்,ஊரும் விவரங்களையும் இப்போதே சொல்லடி!

**சினங்கொள்ளல்**

பெரிய காடடர்ந்த மலை நாட்டிலேயுள்ள குறத்தியே! கள்ளியே மயில் போன்றவளே! உன்னுடைய மேனி வலிமையின் குறும்போ வாய்மதமோ? அல்லது உனக்குத் தெரிந்த வித்தையின் செருக்கோ என்முன். கொஞ்சமும் மதியாமல், என் காதலனைப் பெண்சேர வல்லலன் என்று தூற்றினாய்! கண் மயக்கால் என்னை மயக்கப் பார்க்காதே உண்மையைச் சொல்லடி.

வண்மையோ வாய்மதமோ வித்தை மதமோ - என்முன்

மதியாமற் பெண்சேர வல்லவன் என்றாய்

கண்மயக்கால் மயக்காதே உண்மை சொல்லடி - பெருங்

கானமலைக் குறவஞ்சி கள்ளி மயிலி!

**குறத்தியின் பதில்**

பெண்களுக்கு அரசி போன்றவளே! 'பெண்' என்றால் 'திரி' என்றும் பொருள் உண்டு. ஒரு பெண்ணுடனே சேர என்றால் 'கூட' என்றுப் சொல்லலாம். உறுதியாக வல்லவன் என்பதும், 'நாதன்' என்பதும் ஒே பொருள் தரும். அதனால், அவன் பெயரைத் திரிகூடநாதன் என்று சொல்லலாம் அம்மையே!

பெண்ணரசே பெண்ணென்றால் திரியுமொக்கும் - ஒரு

பெண்ணுடனே சேரவென்றாற் கூடவும் ஒக்கும்

திண்ணமாக வல்லவனும் நாதனுமொக்கும் பேரைத்

திரிகூட நாதனென்று செப்பலாம் அம்மே!

கக்கத்தில் இடுக்குவாயோ?

நின் உள்ளத்தில் இடம்பெற்ற மன்னவர் திரிகூட நாதர் என்று குறி சொன்னவுடனே, மாணிக்க அணிகள் பூண்ட வசந்த வல்லியானம் முகத்திலே நாணங் கொண்டு தலை கழ்விந்தாள். 'நன்னகரிலேயுள்ள உன்னை அணைவதற்கு விரைவிலேயே வரப் போகிறார். நாணத்தின் வயணமெல்லாம் நாளைக்கு நானும் காணத்தாநே போகிறேன்.

உனக்குப் பொன்னிற முடைய கொன்றைப்பூ மாலை உன் தோழியின் மூலம் வந்து விடுவதைக் காண்பாயாக இனிமேல், உன் வெட்கத்தை எல்லாம் சுக்கத்தில் இடுக்கிக் கொள்வாயேர்.அம்மே? இப்படிக் குறவஞ்சி கேலி பேசினாள் அதனைக் கேட்டதும் மனங் களிப்புற்ற வசந்தவல்லியானவள் அனுப்பி வைத்தாள் தான் தேடி வைத்திருந்த ஆபரணங்கள் அனைத்தயும் அந்தக் குறவஞ்சிக்குப் பூட்டி அவளை மகிழ்வுடன் அனுப்பி வைத்தாள்.

**கண்ணிகள்**

மன்னர்திரி கூடநாதர் என்னும் போதிலே -
முகம் மாணிக்க வசந்தவல்லி நாணிக் கவிழ்ந்தாள்
நன்னகரில் ஈசருண்ணை மேவவருவார் - இந்த
நாணமெல்லாம் நாளைநாலும் காணவே போறேன்
கைந்நொடியில் பொன்னிதழி மாலைவருங்காண் - இனிக்
கக்கத்தில் இடுக்குவாயோ வெட்கத்தை அம்மே
என்னுமொரு குறவஞ்சி தன்னை அழைத்தே - அவட்கு
ஈட்டுசரு வாபரணம் பூட்டினாளே.

குறவஞ்சியிலே வசந்தவல்லிக்கு முதன்மையான பகுதி முடிகிறது. இனிமேல் அந்தக் குறவஞ்சியையும் அவள் காதலனையும் முதன்மையாகக் கொண்டு நாடகம் மேலே தொடர்கிறது. அந்தப் பகுதிகள் மிகவும் சுவையுடையன; இயற்கை உணர்வுகளை இனிதாக எடுத்து இயம்புவன ஆகும்.

குறவஞ்சி நாடகத்திற்கான இலக்கணம் மற்றும் கதை அமைப்புடன் திருக்குற்றாலக் குறவஞ்சி இயற்றப்பட்டுள்ளது.

- குற்றாலநாதர் திருவுலா வரும் செய்தியை கட்டியங்காரன் அறிவிக்கிறான்.
- திருவுலா தொடங்குகிறது. மூவர் தமிழும் நான்மறைகள் முழங்கக் குற்றலாநாதர் வீதியில் உலா வருகிறார்.
- அப்பொழுது பந்து ஆடிக்கொண்டிருந்த வசந்தவல்லி (நாயகி) திருவுலாக்காண வருகிறாள்.
- தோழியின் வாயிலாக குற்றாலநாதரின் பெருமை அறிந்த வசந்தவல்லி இறைவன் மீது காதல்கொண்டு தோழியைத் தூதனுப்புகிறாள்.
- இந்நிலையில் குறிசொல்லும் குறத்தி தெருவழியே வருகிறாள்.
- தோழி அவளைக் குறிசொல்ல அழைத்தவுடன் குறப்பெண் தன்நாட்டு மலையழகையும் தங்கள் வாழ்வியலையும் பாடுகிறாள்.
- வசந்தவல்லியின் உள்ளங்கையைப் பார்த்து அவள் குற்றாலநாதர் மீது காதல் கொண்டுள்ள செய்தியையும், வசந்தவல்லியின் எண்ணம் நிறைவேறும் என்றும் குறி சொல்லிப் பரிசு பெறுகிறாள்.

******

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | வசந்த வல்லி - குறிப்புவரைக. | K4 | CO1 | PO4 |
| 2 | குறத்தி பாடல் வரிகள் கூறி விளக்குக | K5 | CO2 | PO2 |
| 3 | நிலவை பழித்தல் - குறிப்பு தருக. | K2 | CO4 | PO1 |
| 4 | குறவஞ்சி நாடகம் குறித்து எழுதுக. | K5 | CO5 | PO2 |
| 5 | குறத்தி வருணனை கூறுக. | K3 | CO3 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றாலக் குறிவஞ்சி பற்றி கட்டுரைக்க. | K4 | CO3 | PO4 |
| 2 | திரு குற்றாலநாதர் உலா குறித்து தொகுத்துரைக்க | K2 | CO2 | PO5 |
| 3 | பெண்கள் குறித்த குறவஞ்சி செய்திகளை விவரிக்க | k3 | CO1 | PO2 |
| 4 | மலைவளம் குறித்து கட்டுரைக்க | K5 | CO2 | PO1 |
| 5 | குறவன், குறத்தி வருணைனையை விவரிக்க. | K1 | CO5 | PO3 |

# அலகு 4

## முக்கூடற்பள்ளு

### முக்கூடற்பள்ளு

தமிழ்நாட்டில் வளமான ஒரு பகுதி திருநெல்வேலி மாவட்டம். திருநெல்வேலியை 'நெல்லை' என்றும் கூறுவர். இதோ தாமிரபரணி ஆற்றைக் காணுங்கள். திருநெல்வேலிக்கு வடகிழக்கே சித்திரா நதி, கோதண்டராம நதி ஆகிய இரு நதிகளும் தாமிரபரணி ஆற்றில் கலக்கும் இடம் முக்கூடல் என்று அழைக்கப்பட்டது. இவ்வூரில் எழுந்து அருளி இருக்கும் அழகர் என்னும் தெய்வத்தின் மீது பாடப்பட்டதே முக்கூடற் பள்ளு ஆகும்.

முக்கூடற் பள்ளு என்பது இடத்தால் பெற்ற பெயர் ஆகும். முக்கூடல் இன்று சீவலப்பேரி எனக் குறிக்கப்படுகிறது. பாண்டியன் மாறவர்மன் ஸ்ரீவல்லபன் கி. பி. 12- ஆம் நூற்றாண்டில் தன் பெயரில் ஓர் ஏரி கட்டினான். அது ஸ்ரீவல்லபன் ஏரி எனப்பெயர் பெற்றது. இதனால் இவ்வூர் சீவலப்பேரி என வழங்கப்படுகிறது. இங்கு மூவேந்தர் கல்வெட்டுக்களுடன் கூடிய தொன்மையான திருமால் கோயில் உள்ளது. இங்குக் கோயில் கொண்டிருக்கும் திருமாலை 'அழகர்' என்றும் 'செண்டு அலங்காரர்' என்றும் முக்கூடற் பள்ளு புகழ்ந்து போற்றுகின்றது.

இந்நூலின் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு எனலாம். காவை வடமலைப் பிள்ளையன், ஆறை அழகப்ப முதலியார், திருமலைக் கொழுந்துப் பிள்ளையன் ஆகிய செல்வர்கள் முக்கூடற் பள்ளில் பாராட்டப்பட்டுள்ளனர். இவர்களின் காலம் கி. பி. 1676 முதல் கி. பி. 1682 வரை ஆகும். எனவே முக்கூடற் பள்ளுவின் காலத்தை 17-ஆம் நூற்றாண்டு என்று கணக்கிடலாம்.

### ஆசிரியர்

இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. புலவர் பெயரை அறிய முடியாவிட்டாலும் அப்புலவர் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்

ஆகிய முத்தமிழையும் நன்கறிந்த கவிஞர் என்பதைப் பாடல்கள் புலப்படுத்தி உள்ளன.

**நூலின் தன்மை**

பாத்திரங்கள் நாடகத் தன்மையுடன் அறிமுகப்படுத்தப் டுகின்றன. மேலும் உரையாடல் வழியே கதை நிகழ்த்தப்படுகின்றது. இந்நூல் இயல், இசை, நாடகம் கலந்த முத்தமிழ் நூல் என்று கூறுவது மிகையாகாது.

பள்ளு இலக்கியங்களில் **திருவாரூர் தியாகப் பள்ளு** என்பது தான் முதற்பள்ளு இலக்கியம் என்ற கருத்து உண்டு. **முக்கூடற் பள்ளு** முதற்பள்ளு என்பாரும் உள்ளனர். 1642-இல் இயற்றப்பட்ட ஞானப் பள்ளே முதற்பள்ளு என்ற கருத்தும் உண்டு.

சில பள்ளு இலக்கியங்கள் வருமாறு:

கதிரைப்பள்ளு

தென்காசிப்பள்ளு

மோகனப்பள்ளு

வைசியப்பள்ளு

வேதாந்தப்பள்ளு

வையாபுரிப்பள்ளு

செந்தில்பள்ளு

சிவ சயிலப் பள்ளு

இவ்வாறாக ஏராளமான பள்ளு இலக்கியங்கள் தோன்றி உள்ளன

**முக்கூடல் நகரின் சிறப்பு**

புலவர் முக்கூடல் நகரின் சிறப்பினைக் கற்பனை நயம்பட விவரித்துள்ளார் முக்கூடலில் அழகர் கோயில் கொண்டிருக்கும் கோயிலின் கோபுரம் மிக உயரமானது. மேகத்திரள் அந்தக் கோபுரத்தைச் சூழ்ந்து நிற்கும்; வானத்திலிருந்து

மழைத்துளிகள் படியும். கொடி மரத்துக் கொடிகள் வானத்தையே மூடி மறைத்துக் கொண்டு இருக்கும். பேரண்டப் பறவைகள் கோயிலின் உச்சியை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும். பொற்கோயிலின் முற்றத்தில் உள்ள மழைநீரில் அன்னங்கள் விளையாடிக் கொண்டிருக்கும். சூரியன், கோயிலின் மதிற்சுவர்களில் தான் புகுந்து செல்வதற்குரிய வழியைத் தேடிக் கொண்டிருப்பான்.

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்

கொடிகள் வானம்

படிதர மூடும்

கண்ட பேரண்டம் தண்டலை நாடும்

கனக முன்றில்

அனம் விளையாடும்

விண்ட பூமது வண்டலிட்டு ஓடும்

வெயில் வெய்யோன் பொன்

எயில் வழி தேடும்

அண்டர் நாயகர் செண்டலங் காரர்

அழகர் முக்கூடல்

ஊர் எங்கள் ஊரே

இவ்வாறு முக்கூடல் ஊரின் அழகு சிறப்பை பாடுகிறார்.

**வீதியும் சோலையும்**

ஒளி வீசும் சிறந்த மணிவகைகள் பதித்த மாளிகைகளை உடையன வீதிகள். வீதிகளின் நெருக்கம் அதிகமாக இருக்கும். மலர்ச் சோலைகளில் திரியும் வண்டு இனங்கள் தம் ரீங்காரப் பண்ணினைப் பாடும். அப்பாடல் இரும்பு

உள்ளங்களையும் உருகச் செய்துவிடும். நால்வகை வருணத்து மக்களும் தம் வேற்றுமையை மறந்து ஒன்றுபட்டு நீதியைப் பெருக்குவர். நீர் நிலைகளில் உள்ள வாளை மீன்கள் நீர் முகப்பார் குடங்களில் புகும். புகுந்து குடத்தை நெருக்கும். இளம் எருமை மாடானது கழனிகளிலே உள்ள நீர்ப்பூக்களை மேயும்; அதில் உள்ள மதுவை உட்கொண்டு செருக்கித் திரியும். மேட்டு நிலங்களில் எல்லாம் குளிர்ந்த மலர்கள் இதழ் விரித்து மலர்ந்திருக்கும்.

இவ்வாறாக முக்கூடல் நகரின் இயற்கை வளத்தையும் செயற்கை வளத்தையும் புலவர் பாடியுள்ள திறத்தை அறிந்து மகிழலாம். இதனைப் பின்வரும் பாடல் விவரிக்கும்.

**குடிச்சிறப்பு**

மூத்த பள்ளி, இளைய பள்ளி, பள்ளன் ஆகியோரின் அறிமுகமும், அவர்களின் குடிச்சிறப்பும் நூலின் தொடக்கத்தில் சிறப்புடன் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

**மூத்த பள்ளியின் தொல்குலம்**

சித்திரா நதியானது முக்கூடலுக்கு வடப் பக்கமாக ஓடுவது. அதற்குத் தென்பக்கமாக ஓடுவது பொருநை ஆறு ஆகும். இவ்விரு நதிகளும் தோன்றி ஓடிவந்து முக்கூடலில் ஒன்று கலந்த காலம் மிகத் தொன்மையான காலம் ஆகும். உலகம் தோன்றிய தொடக்கக் காலத்திலேயே அவை ஒன்று கலந்தன. அப்படி அவை ஒன்று கலந்த காலம் தொட்டு வழி வழியாகத் தோன்றி வரும் மிகப் பழமையான குடும்பத்தில் பிறந்தவள் மூத்தபள்ளி ஆவாள். **(முக்.பள். 13)**

**இளைய பள்ளியின் பெருமை**

செஞ்சி நாட்டிலும, கூடலாகிய மதுரை நாட்டிலும் தஞ்சை நாட்டிலும், தம் ஆணையைச் செல்வாக்குடன் செலுத்தும் ஆட்சியாளன் வட மலையப்பப் பிள்ளையன் ஆவான். அவர் ஊரும் இளையபள்ளி ஊரும் ஒன்றே ஆகும். வடமலையப்பப் பிள்ளையன் உலக நன்மைக்காக ஐந்து குளங்களை வெட்ட நினைத்தான். குளம் வெட்ட, சக்கரக்கால் நிலை இட்ட போது (குளம்

வெட்டுவதற்குரிய எல்லைகளை அளந்து எல்லைக் கற்கள் பதிப்பித்த போது) அந்த நாளிலேயே இளைய பள்ளி பண்ணையில் வந்து சேர்ந்தாள் என்று இளைய பள்ளியின் பெருமை பேசப்பட்டுள்ளது. (முக்.பள். 15).

**பள்ளன்**

பள்ளனின் பெருமை சமய உணர்வு அடிப்படையில் கூறப்பட்டுள்ளது. முக்கூடல் அழகர் திருவடிகளைக் கருதாத மனத்தை உடையோரும் உள்ளனர். அவர்களின் மனத்தைத் தரிசு நிலம் என்று எண்ணி, கொழுப் பாய்ச்சி உழுபவன் பள்ளன் ஆவான். சுருதிகள் போற்றும் எட்டு எழுத்துகள் (ஓம் நமோ நாராயணாய) வைணவத்தில் முதன்மை பெற்றவை. இந்த எழுத்துகளைப் பெரிய நம்பியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாத துட்டர்களின் காதுகளைப் பாம்புப் புற்றுகள் என்று கருதி வெட்டி எறிபவன் பள்ளன். பெருமானுடைய நூற்று எட்டுத் திருப்பதிகளையும் வலம் செய்து வணங்காதவர் கால்களை வடத்தால் பிணித்து ஏர்க்காலில் சேர்த்துக் கட்டுபவன் பள்ளன். திருவாய்மொழிப் பாசுரங்களைக் கல்லாதவர்களை இருகால் மாடுகளாக ஆக்கி ஏரிலே பூட்டித் 'தீத்தீ' என்று கோலால் அடித்து ஓட்டுபவன் பள்ளன். இவ்வாறாகப் பள்ளனின் பெருமை கூறப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் பாடல் விளக்கக் காணலாம்:

**குடிச்சிறப்பு**

மூத்த பள்ளி, இளைய பள்ளி, பள்ளன் ஆகியோரின் அறிமுகமும், அவர்களின் குடிச்சிறப்பும் நூலின் தொடக்கத்தில் சிறப்புடன் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

**மூத்த பள்ளியின் தொல்குலம்**

சித்திரா நதியானது முக்கூடலுக்கு வடப் பக்கமாக ஓடுவது. அதற்குத் தென்பக்கமாக ஓடுவது பொருநை ஆறு ஆகும். இவ்விரு நதிகளும் தோன்றி ஓடிவந்து முக்கூடலில் ஒன்று கலந்த காலம் மிகத் தொன்மையான காலம் ஆகும். உலகம் தோன்றிய தொடக்கக் காலத்திலேயே அவை ஒன்று கலந்தன.

அப்படி அவை ஒன்று கலந்த காலம் தொட்டு வழி வழியாகத் தோன்றி வரும் மிகப் பழமையான குடும்பத்தில் பிறந்தவள் மூத்தபள்ளி ஆவாள். (முக். பள். 13)

**இளைய பள்ளியின் பெருமை**

செஞ்சி நாட்டிலும, கூடலாகிய மதுரை நாட்டிலும் தஞ்சை நாட்டிலும், தம் ஆணையைச் செல்வாக்குடன் செலுத்தும் ஆட்சியாளன் வட மலையப்பப் பிள்ளையன் ஆவான். அவர் ஊரும் இளையபள்ளி ஊரும் ஒன்றே ஆகும். வடமலையப்பப் பிள்ளையன் உலக நன்மைக்காக ஐந்து குளங்களை வெட்ட நினைத்தான். குளம் வெட்ட, சக்கரக்கால் நிலை இட்ட போது (குளம் வெட்டுவதற்குரிய எல்லைகளை அளந்து எல்லைக் கற்கள் பதிப்பித்த போது) அந்த நாளிலேயே இளைய பள்ளி பண்ணையில் வந்து சேர்ந்தாள் என்று இளைய பள்ளியின் பெருமை பேசப்பட்டுள்ளது. (முக். பள். 15).

**பள்ளன்**

பள்ளனின் பெருமை சமய உணர்வு அடிப்படையில் கூறப்பட்டுள்ளது. முக்கூடல் அழகர் திருவடிகளைக் கருதாத மனத்தை உடையோரும் உள்ளனர். அவர்களின் மனத்தைத் தரிசு நிலம் என்று எண்ணி, கொழுப் பாய்ச்சி உழுபவன் பள்ளன் ஆவான். சுருதிகள் போற்றும் எட்டு எழுத்துகள் (ஓம் நமோ நாராயணாய) வைணவத்தில் முதன்மை பெற்றவை. இந்த எழுத்துகளைப் பெரிய நம்பியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாத துட்டர்களின் காதுகளைப் பாம்புப் புற்றுகள் என்று கருதி வெட்டி எறிபவன் பள்ளன். பெருமானுடைய நூற்று எட்டுத் திருப்பதிகளையும் வலம் செய்து வணங்காதவர் கால்களை வடத்தால் பிணித்து ஏர்க்காலில் சேர்த்துக் கட்டுபவன் பள்ளன். திருவாய்மொழிப் பாசுரங்களைக் கல்லாதவர்களை இருகால் மாடுகளாக ஆக்கி ஏரிலே பூட்டித் 'தீத்தீ' என்று கோலால் அடித்து ஓட்டுபவன் பள்ளன். இவ்வாறாகப் பள்ளனின் பெருமை கூறப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் பாடலில் காணலாம்:

ஒருபோதும் அழகர் தாளைக்

கருதார் மனத்தை வன்பால்

உழப் பார்க்கும் தரிசுஎன்று

கொழுப் பாய்ச்சுவேன்

சுருதி எண்எழுத்து உண்மைப்

பெரிய நம்பியைக் கேளாத்

துட்டர் செவி புற்று எனவே

கொட்டால் வெட்டுவேன்

பெருமாள் பதிநூற்று எட்டும்

மருவி வலம் செய்யார்தம்

பேய்க்காலை வடம் பூட்டி

ஏர்க்கால் சேர்ப்பேன்

திருவாய் மொழிகல்லாரை

இருகால் மாடுகள் ஆக்கித்

தீத்தீ என்று உழக்கோலால்

சாத்துவேன் ஆண்டே

**உழவர் வாழ்க்கை**

உழவர்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்ட முக்கூடற் பள்ளுவில், பள்ளன், பள்ளி ஆகியோரிடம் நடைபெறும் சண்டைகளும், பிறவும் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

**மூத்த பள்ளியின் முறையீடு**

மழை வெள்ளம் வந்து ஆற்றில் நீர் பெருகி உழவு வேலை தொடங்கும் சூழ்நிலை உருவாயிற்று. இந்நிலையில் பள்ளன் இளைய பள்ளியிடம் காதல் கொண்டு வேலை மறந்து கிடக்கிறான். இதனால் மூத்த பள்ளி பண்ணைக்காரனிடம் முறை இடுகின்றாள்.

வரவை மீறிச் செலவு செய்பவனுக்குத் தரித்திரந்தான் வளர்ந்து கொண்டே போகும். கூத்தாட்டக்காரர்களுக்கும் கொட்டுக்காரர்களுக்கும் வாரி வாரி வழங்கி ஊதாரி ஆகிவிட்டான் ஆண்டே! காளை மாடுகள் சிலவற்றை அந்தப் புதியவனுக்குத் தந்து விட்டான். மற்றும் சிலவற்றை வில்லடிப் பாட்டுக்காரனுக்கு அளித்து விட்டான். பரத்தியிடம் (நெய்தல் நிலப்பெண்) வாங்கிய கருவாட்டிற்கும் கள்ளிற்கும் பணம் கொடுப்பதற்காக இருந்த ஐந்து பசு மாடுகளையும் கொண்டுபோய் விற்றுவிட்டான். இப்படிச் செய்வது அவமானம் அல்லவா என்ற எண்ணத்தையும் விட்டுவிட்டான். ஆண்டையே! இவன் இரண்டு கால்களிலும் விலங்கைப் பூட்டி வைப்பீரே! என்கிறாள்.

**பள்ளரின் தொழில்**

பள்ளன் விடுதலை ஆனவுடன் உழவுத் தொழில் தொடங்குகிறது. உழவு முகூர்த்தம் செய்வதற்காகச் சோதிடர்கள் நல்ல நாள் குறிக்கிறார்கள். சப்தமி திதியும், (சப்தமி நாள்) புதன்கிழமையும், சுவாதி நட்சத்திரமும் கூடிய நல்ல நாள் குறிக்கப்படுகிறது. இந்த நல்ல நாளில் நாள் ஏர் பூட்டப் பள்ளன் செல்கிறான். (முக். பள். 114)

சாத்தன், பெரியான், கூத்தன் முதலாகச் சேரியிலுள்ள பள்ளர் எல்லாம் கூடிக் குரவை இட்டு ஏர்மங்கலம் பாடி நாளேர் பூட்டி உழவைத் தொடங்கினார்கள் (முக். பள். 115). ஏர்பூட்டி உழுது பின்பு அங்குள்ள பள்ளர்களை எல்லாம் கூப்பிட்டான், பள்ளன். எல்லோருடனும் கூடித் தொழுது தெய்வக் கடன்களை எல்லாம் செய்து கழித்தான். அதன்பின் விதைகளை எடுத்துத் தெளிக்கத் தொடங்கினான். (முக். பள். 12)

அதன்பின் விதைகளை எடுத்துத் தெளிக்கத் தொடங்கினான். (முக். பள். 121) விதைகள் முளைக்கத் தொடங்கின. நாற்றுகள் வளர்ந்தன. முறையாகத் தண்ணீர் விடப்பட்டது. அழகருடைய முக்கூடல் நகரிலே நாற்று நடுவதற்குரிய நாள் குறிக்கப்பட்டது. உழத்திகள் முக்கூடல் அழகரின் திருப்பாதங்களை வணங்கினர். நாற்று முடிகளை எடுத்து நெற்றியிலே வைத்துக் கொண்டு

நாலுதிசையும் நோக்கி வாழ்த்திக் கும்பிட்டார்கள். பிறகு வயலில் நடத் தொடங்கினர். (முக். பள். 125).

பதிந்த நடவுகள் தேறிப் பசுமை நிறம் கொண்டன. பின்பு குருத்து அடர்ந்து நிலத்தில் பரந்து செறிந்தன. கதிர் விட்டு முற்றின. கதிர்கள் எல்லாம் நன்றாக முற்றி விளைந்த செய்தியைப் பண்ணைக்காரனிடம் பள்ளன் சென்று சொன்னான். பின்பு அறுவடைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. நாட்கதிர் கொள்வதற்குத் தெய்வ வழிபாடுகளைச் செய்தனர். உரிய பொருள்களையும் படையலாக இட்டனர். (முக். பள். 138)

பின்பு கதிர்களைக் கட்டிக் கொண்டு வந்து எருமைகளை விட்டுக் கதிர் அடித்தனர். தூசிகளைத் தூற்றித் தூய நெல்மணிகளைக் குவித்துப் 'பொலிபொலி' என்ற மங்கல ஒலியோடு அளந்து கட்டினர் (முக். பள். 139). எது எதற்கெல்லாம் நெல் அளந்து கொடுக்கப்பட்டது என்பதைப் புலவர் பட்டியல் இட்டு உள்ளார்.

அடியார்க்குச் சோறிடும் தினச்சத்திரம் பெரியநம்பி அய்யங்காருடைய திருமாளிகைச் செலவு ஏழு திருப்பதிகள் காவை வடமலையப்பப் பிள்ளையன் மடம் முதலியவற்றிற்கு நெல் கொடுக்கப்பட்டது. மேலும் ஆடித் திருநாளுக்கு 1000 கோட்டைகள் பங்குனித் திருநாளுக்கு 1000 கோட்டைகள் மண்டகப்படி (திருவிழாக்காலங்களில் செய்யும் செலவு) சாத்து (கடவுளுக்கு மாலை முதலியன அணிவித்தல்) வகைகளுக்கு 1000 கோட்டைகள் நா வாணர்களுக்கும் மறையவர்களுக்கும் (அந்தணர்) 4000 கோட்டைகள் தினப்பூசைக்கு 8000 கோட்டைகள் (முக். பள். 141-149) இவ்வாறாக வயல் வேளாண்மை முடிந்து நெல் பங்கிட்ட முறை விளக்கப்பட்டுள்ளது.

**பண்புகள்**

பள்ளு நூல்களில் பாட்டுடைத் தலைவனின் பெயர் மட்டும் கூறப்படும். மற்றவர்களின் பெயர்கள் கூறப்படுவது இல்லை. பள்ளனின் பெயர் பாட்டுடைத் தலைவனின் பெயருடன் சேர்த்துக் கூறப்படும். மூத்த பள்ளியின் பெயர் பாட்டுடைத் தலைவனின் ஊர் அல்லது நாட்டின் பெயருடன் சேர்த்துக் கூறப்படும். இளைய பள்ளியின் பெயர் பாட்டுடைத் தலைவனின் ஊரின் பக்கத்து

ஊர் அல்லது பக்கத்து நாட்டின் பெயருடன் சேர்த்துக் கூறப்படும். இரண்டு பள்ளியர்களில் ஒருத்தி சிவன் அடியாராகவும் மற்றொருத்தி திருமால் அடியாராகவும் காணப்படுவர்.

சான்றாக, **முக்கூடற்பள்ளு** என்ற நூலை எடுத்துக் கொள்வோம். இது ஒரு வைணவ சமய நூல். பாட்டுடைத் தலைவன் **அழகர்.** திருமாலின் மற்றொரு பெயர் இது. பள்ளனின் பெயர் **அழகக் குடும்பன்.** மூத்த பள்ளியின் பெயர் **முக்கூடற் பள்ளி**, இளைய பள்ளியின் பெயர்**மருதூர்ப் பள்ளி**.

சைவ சமய நூலாகிய **திருவாரூர்ப் பள்ளில்** பாட்டுடைத் தலைவன் **வன்மீக நாதன்.** பள்ளனின் பெயர் **வன்மீகப் பள்ளன்.** மூத்த பள்ளியின் பெயர் **வன்மீகப் பள்ளி.** இளைய பள்ளியின் பெயர் **சீரங்கப் பள்ளி** என்பது ஆகும்.

இவ்வாறு, பள்ளு என்ற இலக்கியம் திகழக் காணலாம்.

**பள்ளும் குறமும்**

பாட்டியல் நூல்களால் 96 என வரையறுக்கப்பட்டவை சிற்றிலக்கியங்கள். புத்திலக்கியங்களை 'விருந்து" எனக் குறிக்கின்றது தொல்காப்பியம்.

*விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே,*

என்பது தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுள் 231.

இவற்றுள் பள்ளு இலக்கியங்கள் 16-ம் நூற்றாண்டையும் குறம் 18-ம் நூற்றாண்டையும் சார்ந்தவை. நொண்டி, உழத்திப் பாட்டு, ஏசல் என்பனவும் இந்தக் குடும்பத்தைச் சார்ந்தவை.

35 பள்ளுகளும் 34 குறவஞ்சிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறம் என்பதன் பிறபெயர்கள் குறவஞ்சி, குறவஞ்சித் தமிழ், குறவஞ்சி நாடகம், குறத்திப் பாட்டு என்பன.

பள்ளு இலக்கியத்திற்கான இலக்கணம் ஏதும் இல்லை. கி.பி. பதினாறாம் நூற்றாண்டு முதல் பள்ளு நூல்கள் எழுதப்பட்டுள்ளன. உழவர்களின் வாழ்வியல் பேசப்படும் இலக்கியம் இது. பள்ளுவில் சிறந்தது முக்கூடற் பள்ளு எனவும்

குறவஞ்சியில் சிறந்தது குற்றாலக் குறவஞ்சி என்றும் புலவர் பெருமக்கள் உறுதியாகச் சொல்கிறார்கள். இந்த இரண்டைத் தவிர மற்றெதுவும் நான் வாசித்ததில்லை. எனவே என்னால் ஒப்பீட்டளவில் உரையாட இயலாது. வேறெந்தக் குறவஞ்சியின் பெயர் கூட எனக்குத் தெரியாது. செண்பகராமன் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு என்று இரண்டின் பெயர் மட்டும் அறிவேன். எனக்குத் தெரிந்ததை விளம்புவதில் தவறில்லை.

உழத்திப் பாட்டு எனும் வகையைப் பள்ளு என்பாரும் பள்ளு அன்று என்பாரும் உளர். உழத்திப் பாட்டு பற்றி எழுதும் உத்தேசம் இல்லை, கைவசம் நூலும் இல்லை.

பிற பிரபந்த வகைகளில் பள்ளும் குறமும் வாசிக்க இலகுவானவை, எளிதானவை, உரை எழுத அவசியம் அற்றவை. எனினும் முன்னூறு ஆண்டுகள் முந்தியன என்பதால் அரும்பத உரை அவசியமாகலாம்.

ஆண்டை அல்லது பண்ணையார் உறவு, பள்ளன்– பள்ளிகள் பூசல், உழவு செயல்வகை எனச் சுவைபட பேசப்படுகின்றன.

**உழவுத் தொழிலின் ஆதாரம்**

உழவுத் தொழிலைத் தொடங்குவதற்கு மழை வேண்டும். உழவர்கள் / பள்ளர்கள் மழை வேண்டி வழிபாடு நடத்துகின்றனர். மழை பெய்வதற்கான அறிகுறியும் தோன்றுகிறது. அது மிகவும் சுவையாகச் சொல்லப்பட்டுள்ளது.

**மழை வழிபாடு**

அழகருடைய நல்ல நாட்டிலே மழை வளம் சிறக்க வேண்டும் என்று மன்னர்கள் வழிபாடு நடத்துகின்றனர்; மழை வரம் வேண்டுகின்றனர்; சேரியிலே குரவை ஒலிக்கத் தெய்வத்தைப் போற்றினர் (முக். பள். 32)

பூலா உடையாருக்குப் பொங்கல் இட்டுத் தேங்காயும் கரும்பும் நிறைய படைத்தனர். குமுக்கா உடையார் அய்யனுக்குக் குங்குமத்தையும் சந்தனத்தையும் கலந்து சாத்திப் போற்றினர். கரையடிச் சாத்தானுக்குக் காப்புக் கட்டி ஏழு செங்கிடாய்களை வெட்டிப் பலியிட்டனர். புலியூர் உடையார் ஏற்றுக்

கொள்ளுமாறு சேவலைச் சாத்திர முறைப்படி பலியிட்டனர். சாராயத்தையும், பனையில் இருந்து இறக்கும் கள்ளையும் வடக்குவாசல் செல்லி உண்ணுமாறு வைத்தனர். பள்ளர்கள் எல்லோரும் ஒன்று கூடினர். பண் பாடிப் போற்றினர். கூத்தாடித் தொழுதனர். அழகரின் திருநாமங்களை ஏத்தினர். (முக். பள். 33, 34) (பூலா உடையார், கரையடிச் சாத்தான், புலியூர் உடையார், செல்லி – நாட்டுப்புறத் தெய்வங்கள்)

**மழை அறிகுறி**

பள்ளர்கள் அனைவரும் மழை வேண்டித் தெய்வங்களை வழிபட மழைமேகம் சூழ்ந்தது. மழைக் குறி தென்பட்டது. எல்லாத் திசைகளில்இருந்தும் மேகங்கள் வரத் தொடங்கின.

மழைக் குறி பற்றிப் புலவர் பாடிய பாடல் சிறந்த இசைநயமும் அழகுணர்வும் கொண்டது. அறிவியல் செய்தி பொதிந்தது. நாளைய தினம் ஆற்றிலே வெள்ளம் வர இருப்பதற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன. தென்மேற்குத் திசையிலே மலையாள மின்னல் மின்னிக் கொண்டுள்ளது. தென் கிழக்குத் திசையிலே ஈழத்து மின்னல் மின்னிக் கொண்டுள்ளது. நேற்றும் இன்றும் மரக்கொம்புகளைச் சுற்றியவாறு காற்று அடிக்கிறது. கிணற்றிலே உள்ள சொறித்தவளைகள் கூப்பாடு போடுகின்றன. நண்டுகள் தம் வளைகளுள் மழை நீர் புகுந்து விடாதபடி வாயில்களைச் சேற்றினால் அடைக்கின்றன. மழை நீரைத் தேடிக் கோடி வானம்பாடிகள் அங்கும் இங்கும் பறக்கின்றன.

ஆற்று வெள்ளம் நாளை வரத்

தோற்றுதே குறி – மலை

யாளமின்னல் ஈழமின்னல்

சூழ மின்னுதே

நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக்

காற்று அடிக்குதே – கேணி

நீர்ப்படு சொறித் தவளை

கூப்பிடுகுதே

சேற்று நண்டு சேற்றில் வளை

ஏற்று அடைக்குதே – மழை

தேடி ஒருகோடி வானம்

பாடி யாடுதே

போற்றுதிரு மால்அழகர்க்கு

ஏற்றமாம் பண்ணைச் – சேரிப்

புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்

துள்ளிக் கொள்வோமே (முக். பள். 30)

**அறுவடை நெல் பங்கீடு**

அடியார்க்குச் சோறிடும் தினச்சத்திரம் பெரியநம்பி அய்யங்காருடைய திருமாளிகைச் செலவு, ஏழு திருப்பதிகள், காவை வடமலையப்பப் பிள்ளையன் மடம் முதலியவற்றிற்கு நெல் கொடுக்கப்பட்டது. மேலும் ஆடித் திருநாளுக்கு 1000 கோட்டைகள், பங்குனித் திருநாளுக்கு 1000 கோட்டைகள் மண்டகப்படி (திருவிழாக்காலங்களில் செய்யும் செலவு), சாத்து (கடவுளுக்கு மாலை முதலியன அணிவித்தல்) வகைகளுக்கு 1000 கோட்டைகள், நா வாணர்களுக்கும் மறையவர்களுக்கும் (அந்தணர்) 4000 கோட்டைகள், தினப்பூசைக்கு 8000 கோட்டைகள் (முக். பள். 141-149). இவ்வாறாக வயல் வேளாண்மை முடிந்து நெல் பங்கிட்ட முறை விளக்கப்பட்டுள்ளது.

**நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகள்**

அழகரை வழிபட்டதோடு பள்ளர்கள் பூலா உடையார், கரையடிச் சாத்தான், புலியூர் உடையார், செல்லி ஆகிய தெய்வங்களையும் வழிபட்டனர். பூலா உடையாருக்குப் பொங்கல் இட்டுத் தேங்காயும் கரும்பும் நிறைய படைத்தனர்.

குமுக்கா உடையார் அய்யனுக்குக் குங்குமத்தையும் சந்தனத்தையும் கலந்து சாத்திப் போற்றினர். கரையடிச் சாத்தானுக்குக் காப்புக் கட்டி ஏழு செங்கிடாய்களை வெட்டிப் பலியிட்டனர். புலியூர் உடையார் ஏற்றுக் கொள்ளுமாறு சேவலைச் சாத்திர முறைப்படி பலியிட்டனர். சாராயத்தையும், பனையில் இருந்து இறக்கும் கள்ளையும் வடக்குவாசல் செல்லி உண்ணுமாறு வைத்தனர். பள்ளர்கள் எல்லோரும் ஒன்று கூடினர். பண் பாடிப் போற்றினர். கூத்தாடித் தொழுதனர். அழகரின் திருநாமங்களை ஏத்தினர்.

**குடிமை! பெருமை!**

**பள்ளியரின் வரவு**

உலகு அனைத்துக்கும் காத்தல் பொறுப்புடையவராக விளங்கும் திருமாலினைக் கைதொழுது போற்றினேன். அதன் பின்னரும், அனைவருமே அவனைப் போற்ற வேண்டும் என்று எழுந்தது என்னுடைய ஆவல். அந்த என் ஆவலினாலே அழகருடைய ஆசூர் வளநாடும் சீவல நாடாகிய நல்லநாடும் இந்தப் பள்ளினை இசையோடு தெளிவாக உரைக்கவேண்டும்; உரைத்து அவரைப் போற்ற வேண்டும் எனவும் எண்ணினேன். அதற்கு முதலாவதாகப் பண்ணைகளிலே வேலை செய்யும் படியா கத் தம் ஆண்டையின் ஏவலைப் பெற்றிருக்கும் பள்ளி யர்கள் வந்து, அவ்வயல்களை அடைந்ததைப் பற்றிச் சொல்லத் தொடங்குகின்றேன்.

காவலராந் தேவரைமுன் கைதொழுது பின்னரும்என்

ஆவலினா லே அழகர் ஆசூர் வளநாடும்

சீவலநன் னாடும்இசை தேர்ந்துஉரைக்கப் பண்ணைதனில் '

'ஏவலுறு பள்ளியர்வந் தெய்தியது சொல்வேனே!

காவலராம் தேவர்- காத்தற் கடமை பூண்ட தேவ ராகிய திருமால் பின்னரும் என் ஆவலினாலே' என்றது, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்றாற் போலத் தம்மைப்போலவே பிறரும் திருமாலின் சீர்களைப் போற்றவேண்டும் என எழுந்த ஆவல். 'ஆசூர் வளநாடு', ஆசூர் வடகரை நாடு

எனப்படும் தண்பொருநைக்கு வட கரையிலேயுள்ள நாடு இஃது அழகருக்கு உரியது என்பர். சீவல நன்னாடு– சீவல மங்கைத் தென்கரை நாடு எனப் படும் பொருநைக்குத் தென் கரையிலேயுள்ள நாடு. இசை தேர்ந்து – இசைப் பயிற்சியிலே தெளிவுற்று. பண்ணை – மருத நிலம்; பெரிய நிலச்சுவான்தாரர்களுக்கு உரியவான விளை வயல்கள்; இதற்கு உரியவர் பண்ணையார்' .

**முக்கூடற் பள்ளி**

நெற்றியிலே மஞ்சணைப் பொட்டு விளங்கியது. அதன் மேலாக மற்றொரு திருநாமப் பொட்டும் இலங் கியது நெகிழ்ந்த சுருங் கொண்டயாகக் கூந்தல் முடியிடப் பட்டுப் பின்புறம் தொங்கியது. உச்சியிலே, தலைமயிரை இரண்டாக வகிர்ந்த வகுப்பும தோன்றியது.

கைகளிலே இரும்பு காப்புக்கள் பொருந்தியிருந்தன். கையிலே வெற்றிலையும், வாயிலே ஒதுக்கிய பாக்குமாக, வாயிலிடும் ஒவ் வொரு வெற்றிலைச் சுருளுக்கும் ஒரு தடவை விரிந்து கொடுக்கும் இதழ்களுடனே, அவள் வந்து கொண்டிருந்தாள்.

ஆடவரைத் தம் பார்வையால் ஊடுருவி வெற்றி கொள்ளும் ஆற்றல் படைத்தன அவளுடைய விழிகள். அவற்றுக்குப் பகைகொண்டு எழுந்த இருகொம்புகளைப் போல விளங்கும் கொங்கைகளின் முகங்கள், அதனாற் கருமையுற்றன. அந்தக் கருப்பு அந்த இருவரின் சந்திப்பு இன்னும் அதிகமானால் மிகுதியாகப் பரந்து விடுதலும் கூடுமோ என எண்ணிச், சற்றே சரிந்து விளங்கின அக் கொங்கைகள். ஒடுக்கமான இடையும், 'எடைக்கு எடை செமபொன் பெறும்' என்று போற்றத்தகுந்த பட்டுச் சேலையும் அவ்விடையிலே இலங்கத், திருமுக்கூடலிலே பிறந்த அந்த மூத்த பள்ளியானவள் வந்து தோன்றினாள்.

நெற்றியில் இடும் மஞ்சணைப் பொட்டும்

மற்றொரு திருநாமப் பொட்டும்

வகிர்ந்தவருடங் கொண்டையும் ரெண்டாய்

வகிர்ந்த வகுப்பும்

பற்றிய கரும்பொற் காப்பும் கையில்

வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய

பாக்கும்ஒரு சுருளுக் கொருக்கால்

நீக்கும் இதழும்

வெற்றிவிழிக் கெதிர் கொண்டிருகோடு

உற்றகருப் பின்னும் எதிர்ந்தால்

விரிந் திடுமென் றெண்ணிச் சற்றே

சரிந்த தனமும்

சிற்றிடையும் செம்பொன் இடைக்கிடை

பெற்றிடும் பட்டாங்கும் இலங்கத்

திரு முக்கூடல் வாய்த்த பள்ளி

தோன்றி னாளே.

[மஞ்சணை– மஞ்சள் நிறமுள்ள மெழுகு, கோடு– கொம்பு கண்கள் தமமையொப்பக் கருமை மை கொண்டும், ஆடவரை வெல்லும வகையிலே தமக்குப் போட்டியாகவும் விளங்கினமையினாலே கொங்கை முகம் கருத்தன என்க. முகங் கடுமை படர்வது அதனாலேயே எனவும் உணர்க.)

**பார்க்க முடியாதே**

காண்பவர்களின் உள்ளத்திலே ஊசலிட்டுக்கொண்டே யிருக்கின்ற, உல்லாசமான பார்வையினைக் கொண்ட அவள் விழிகளிலே தோன்றுகின்ற கள்ளத்தினாலே, இரும் பும் கல்லும கரைந்து விடாவோ? பாற்கடல் என்று சொல்லப் படும் ஊழிவெள்ளத்திலே,அறிதுயில் செய் கின்ற கருமேனி அழகராகிய திருமாலுக்கு உரியதான முக்கூடல் நகரிலே பிறந்தவளான, அந்தப்

பள்ளத்தியாரின் அழகினைப் போல, வேறு எங்குமே பார்க்க முடியாது. அத்துணை அழகுடையவள் அவள்!

உள்ளத்தி லூசலிடும் உல்லாசப் பார்வைவிழிக்
களைத்தி னாலிரும்பும் கல்லும் கரையாதோ
வெள்ளத்தி லே துயில் கார் மெய்யழகர் முக்கூடல்
பள்ளத்தி யார் அழகு பார்க்க முடியாதே

(ஊசலிடுதல் - அசைந்தாடுதல்; தோன்றியும் மறைந் தும் நிலையற்று வருந்துதல். உல்லாசப் பார்வை - ஒயிலான கவர்ச்சிப் பார்வை. கள்ளம-களவு 'ஓரக்கண் கொண்டு நோக்கும் கண் களவு. கல்லும் இருமபும் கரையும்போது ஆடவர்களின் உள்ளம் கரைவதிலே வியப்படைவதற்கு ஏதுமில்லை என்றபடி வெள்ளம் இங்கே ஊழிப் பெரு வெள்ளம். கார்மெய் அழகர்- கருத்த திருமேனியனரான முக்கூடல் அழகர் எனக்கொள்சு. பள்ளத்தியார்- பள்ளததி யானவள் என்க. ஆர்- மரியாதை ஒருமை]

**மருதூர்ப் பள்ளி**!

சிவந்த பாதங்களிலே கொச்சி மஞ்சளை அழகாகப் பூசியிருந்தாள் கூந்தலிலே சூடிய அழகிய மருக்கொழுந்தின் மணம் எங்கும் கமழ்ந்து கொண்டிருந்தது. சிறுத்த நெற்றி யான பிறையிலே வெண்ணீற்றுக் குறியின் ஒளியும் வீசிக் கொண்டிருந்தது பசுமை வண்ணம் பூசிக்கொண்ட கொண்டை மீன்களைப் போல அஞ்சன மை தீற்றிய அவளுடைய கண்கள் இரண்டும் அவள் ஒரு பக்கமாகப் போட்டிருந்த கொண்டை மீதும், மற்றொரு பக்கத்துக்காதின் குழை யினும் தைக்கப் போவன போலக் குதித்தாடிக் கொண் டிருந்தன.

காண்பவரின் நெஞ்சங்களைத் தம்பால் கவர்ந்து கொள்ளக் கூடிய பருத்த கொங்கைகளான, மிக்க மதங் கொண்ட யானையின் இரு கொம்புகள் அசைந்து கொண் டிருந்தன. அவற்றின்மேல் நீலக்கல் பதித்து மாலையும் கோவைத் கோவைத் தாலியும் விளங்கின. கொடி போன்ற அவளுடைய ஒடுக்கமான இடையிலே அதற்கு அழகுதரும் பட்டும், அதன்மேல் அவள் அணிந் துள்ள

பஞ்சவர்ணம் என்னும் அணியின் அழகும் ஒளிவீச, மருதூர்க்குச் சிறப்பாக வந்து வாய்த்த பள்ளியானவள் பண்ணையிலே வந்து தோன்றினாள்.

செஞ்சரணப் படமிடுங் கொச்சியின்

மஞ்சளும்பூ பச்சையும் மணக்கச்

சிறியநுதற் பிறைவெண் ணீற்றுக்

குறி யொளி வீசப்

பஞ்சலைமீன் கெண்டைகள் எனவே

அஞ்சனந் தோய் கண்கள் இரண்டும்

பக்கக் கொண்டையினும் குழையினும்

தைக்கக் குதிக்க

நெஞ்சு கவர் கனதன மாமதக்

குஞ்சரவிணைக் கோடுகள் அசைய

நீலவடக் கல்லுடன் கோவைத்

தாலியும் இலங்க

வஞ்சிமருங்கில அணிதரும் பட்டும் பஞ்சவர்ணத்து அழகும் துலங்க மருதூர்க்கு வாய்த்த பள்ளி தோன்றி னாளே

சரணப் படம் - காலின் பாதங்கள். பூம்பச்சை-மருக் கொழுந்து பிறை- மூன்றாம் பிறை. பஞ்சலைமீன்- ஒரு வகை மீனும் ஆகும். அஞ்சனம் - கண் மை பக்கக் கொண்டை -ஒருபுறமாக இட்டிருக்கும் கொண்டை; பங் கொண்டை என இந்நாளிலே மருவி வழங்கும். மாமதக் குஞ்சரம் - களிற்றியானை அதிகமான மதநீர் ஒழுகினை யுடைய யானை கனதனம் - பருத்த கொங்கைகள். கோடு -கொம்பு. கோவைத்தாலி-கோத்து அணியும் தாலி. மத்தியிலே சிவலிங்க வடிவும். இருபுறமும் பாவை விதை போன்ற வடிவும் பெற்று, மூன்று உருக்களாகக் கோத்துச் சிவ மதத்தார் அணியும் தாலி. வஞ்சி- கொடி.

அணிதரும் பட்டு- இடைக்கு அழகு தந்து கொண்டிருக்கும் அழகிய பட்டு பஞ்சவர்ணம்- ஒருவகை இடையணி

**ஐந்து போகம் பயிராகும்!**

சகலத்துக்கும் ஆதியாகிய விளங்குபவர் மருதூரிலே கோயில் கொண்டிருப்பவரான சிவபெருமான். அவருக்கு வழிவழியாக அடிமைப்பட்டவள் இந்த மருதூர்ப் பள்ளி இவள், இப்போது பாதியிலே முக்கூடல் அழகருக்கு அடிமைப்படுவாளோ? இந்த மருதூராளாகிய இளமை உடையவள், தன்னுடைய ஒளியுடைய முகம் மள்ளருக்கு மட்டுமே தோன்ற, வயலிலே இறங்கி நாற்றினை நட்டா ளானால், அந்த ஒரு போகத்திலேயே ஐந்துபோ விளைச்சலுக்குரிய கண்டு முதலும் காணுமே! அவ்வளவு கைராசிக்காரி யல்லவோ இவன் சிவபெற்றி கொச்சகக் கலிப்பா

ஆதிமரு தீசருக்கும் ஆட்பட்டு அழகருக்கும்

பாதியடி மைப்படுமோ பள்ளிமரு தூரிளையாள்

சோதிமுகம் மள்ளருக்கே தோன்றவய லுற்றுநட்ட

போதிலொரு பூவில்ஐந்து பூவும் பயிராமே'

['ஆதி மருதீசருக்கும் ஆட்பட்டு-ஆதியிலே மருதீசருக்கும் ஆட்பட்டு எனவும் கொள்ளலாம். முக்கூடற்பள்ளனை மணந்ததனால் அவள் அழகருக்கு ஆட்படுவாளோ? மாட்டாள் என்க. இளையாள்-இளைய குடியாள். இளமைப் பருவம் உடையவளும் ஆம். பள்ளர்- உழவர். பூ-போகம். ]

**குடும்பன் வந்தான்**

சீற்றங்கொண்டு பாயும் செம்மறி ஆட்டுக்கிடாயின் கொம்புகளைப்போல விளங்கும். முறுக்கிவிட்டிருக்கும் மீசையும், அழகுடன் கத்தரிகையினாலே மயிர்கள் கத்தரித்து விடப்பட்ட அழகான கன்னங்களின் எழிலும், குறுக்கிலே வளைதடி சேர்த்து இறுக்கிக் கட்டியிருக்கும் இடுப்புக்கச்சையும், கழுத்திலே செம்பொன்னால் பொட் டிட்டது போல அழகாகப் புள்ளியுடன் விளங்கும் உருமா

லும் கருநீல நிறக் கொண்டையும் காலிலே யாதாயினும் சுறுக்கெனத் தைக்குந்தோறும் ஓர் அலட்சியமான தலை யசைப்பும் உடையவனாகக் டயவனாகக் கையிலுள்ள தடியினைச் சுழற்றியவாறே, ஏப்பமிட்டுக் கொண்டே, மெல்ல மெல்ல அடி எடுத்து வைப்பதும் தன் நினைவை மறுதலைப்படுத் தும் கள் வெறி கொண்டு அதனால் காண்பவருக்கு அச்ச முண்டாக்கும் சிரிப்புத்தோன்ற நடப்பதுமாக நல்ல வடி வழகனாகிய அழகக் குடும்பனும் தோன்றினான். அங்கே வந்து

கறுக்கும் கடாய் மருப்பின்

முறுக்கு மீசையும் சித்ரக்

கத்தரிகை இட்ட வன்னக்

கன்னப் பனிகம்

குறுக்கில் வளைதடி சேர்த்து

இறுக்கும் கச்சையும் – செம்பொற்

கோலப் புள்ளி உருமாலும்

நீலக் கொண்டையும்

சுறுக்குந் தொறும் குதிப்பும் சறுக்குந் தலை – யசைப்பும்

தடி சுற்றி ஏப்பமிட்டே

அடி வைப்பதும்

மறுக்கும் மதுவெறி–கொண்டு

உறுக்கும் சிரிப்பும் தோன்ற

வடிவழகக் குடும்பன் வந்து

தோன்றி னானே.

கறுத்தல்–சினங்கொள்ளல். வளைதடி–கச்சு இறுகு மாறு இடையிலே செருகிச் சுழற்றி வைக்கும் வளைந்த சிறு கொம்பு ஏப்பம்–அதிகமான மதுக்குடியால் வந்தது. மறுக்கும் மதுவெறி– பேச்சுக்கு பேச்சு எதிர் எதிராகப் பசும் குடிவெறியுமாம். சுறுக்குதல் பேசும் தைத்தல்.) சுறுக்கெனத்

**பள்ளன் பெருமை**

ஆண்டையே! ஒரு பொழுதாகிலும் முக்கூடல் அழக ரின் பாதாரவிந்தங்களைக் கருதாத மனத்தை எல்லாம், முரம்பு நிலமாகப் பார்க்கும் தரிசுகள் என்று எண்ணி, அவற்றை அவ்வாறு போகவிடாமல், கொழுப்பாய்ச்சி உழுவேன்; அந்தப் பள்ளன் நான்

ஸ்மிருதிகள் பரவும் எட்டெழுத்துக்களின் உண்மைப் பொருள்களை எல்லாம், எங்கள் பெரிய நம்பியைக் கேட்டு அறிந்து கொள்ள முன்வராத துட்டர்களின் காதுகளைப் பாம்புப் புற்றுக்கள் எனக் கருதிக் கொட்டால் வெட்டி எறிவேன்; அத்தகையவன் நான்!

பெருமாளுடைய நூற்று எட்டுத் திருப்பதிகளையும் உள்ளங்களிலே கொண்டு. வலங்செய்து வணங்காதவர் களுடைய பேய்த் தன்மையுடைய கால்களை, வடத்தால் பிணித்து ஏர்க்காலிலே சேர்த்துக் கட்டுவேன்.

திருவாய்மொழிப் பாசுரங்களைக் கல்லாதவர்களை எல்லாம் இருகால் மாடுகளாக்கி, ஏரிலே பூட்டித் 'தீத்தீ' என்று உழக்கோலால் சாத்தி ஓட்டுவேன். அத்தகைய பள்ளள் நான்!

ஒருபோ தழகர் தாளைக்

கருதார் மனத்தை வன்பால்

உழப் பார்க்குந் தரிசென்று

கொழுப் பாய்ச் சுவேன்

சுருதிஎண் ணெழுத்து உண்மைப்

பெரியநம் யியைக் கேளாத்

துட்டர் செவி புற்றெனவே

கொட்டால் வெட்டு வேன்

பெருமாள் பதி நூற்றெட்டும்

மருவி வலம் செய்யார்தம்

பேய்க் காலை வடம் பூட்டி

ஏர்க்கால் சேர்ப் பேன்

திருவாய் மொழி கல்லாரை

இருகால்மா டுகளாக்கித்

தீத்தீயென் றுழக் கோலால்

சாத்துவே னாண்டே!

**மூத்த பள்ளி**

சித்திரா நதியானது முக்கூடலுக்கு வடபக்கமாக விளங்குவது. அதற்குத் தென்பக்கமாக ஓடுவது பொருநை. இவ்விரு நதிகளும் தாம் தோன்றி ஓடி வந்து தம்முள் முக் கூடலிலே ஒன்று கலந்த காலம் உலகந் தோன்றிய மிகமிகப் பழைய காலம் ஆகும். அப்படி அவை கூடும்போதே, அதிலிருந்து, பின்வந்து கொண்டிருக்கிற இத்துணைக் காலமும் கண்டு, அடியடி வாழையாய்த் தோன்றி, நிலவி வரும் மிகப் பழமையான குடும்பத்திலே நான் பிறந்தேன்.

'ஏதோ பத்திலே பதினொன்றாக இவளையும் வைத்துக் கொண்டிருக்கிறேன்' என்றாற்போலக், குடும் பன் என்னுடன் உறவு. கொண்டவனுமில்லை முதன் முதலாகவே, என்னை மாங்கல்யச் சரடு கட்டி மணந்து, உரிமையுடன் மனைவியாக்கிக் கொண்டான்.

முத்தமிழ் செழுமையுடன் வழங்கும், தென் பாண்டித் திருநாட்டிலே விளங்கும் அழகர் பெருமானுக்கு வழிவழி அடிமையாளனாகிய என் குடும்பனுக்கு வந்து வாய்த்த மூத்த பள்ளி நானேயாவேன், ஆண்டையே! தாளம் –அடதாளம்

உத்தர பாக மான சி

த்திர நதிக்குத் தென்பால்

ஓடும் பொருநையுடன்

கூடும் போதே

அத்தனை காலமுந் தொட்டு

இத்தனை காலமும் கண்டு

'அடியடி வாழையாய் நான்

குடியில் வந்தேன்

பத்திலே பதினொன்றாக

வைத்தா னில்லை குடும்பன்

பண்டே சரடு கட்டிக் கொண்டான் என்னை

முத்தமிழ் நாட் டழகர்

கொத்தடி யானுக் கான

முக்கூடல் மூத்த பள்ளி

நானே யாண்டே

[உத்தர பாகம் - வட பகுதி நாடு. சித்திர நதி - சிற்றாறு. அடியடி வாழையாய்- வாழையடி வாழையாய் 'பத்திலே பதினொன்றாக வைத்தல்' பழமொழி; உரிமை மனைவி யாக இல்லாமல் வெறும் வைப்பாட்டியாக வைத்தல் என்பது கருத்து. கொத்தடிமை - வழிவழி அடிமை. ஆண்டை - ஆள்பவனாகவுள்ளவன்; பண்ணைக்கு உரிமை யாளன் ; இங்கே மேற்பார்வையாளன் ]

**இளைய பள்ளி**

செஞ்சி நாட்டிற்கும், கூடலாகிய மதுரை நாட்டிற்கும் தஞ்சை நாட்டிற்கும் தன் ஆணையானது செல்வர்க்குடன் செல்லுபடியாகும் சிறந்த ஆட்சியாளன் வடமலையப்ப பிள்ளையன் என்பவர். அவர் ஊரும் எங்கள் ஊரே யாகும்.

அவர், தம் நெஞ்சிலே உலகுக்கு உபகாரமாக வெட்டு தல் வேண்டும் என நினைத்த ஐந்து குளத்திற்கும் சக்கரக் கால் நிலைபெறுத்திய அந்த நாளிலேயே, நான் இந்தப் பண்ணையிலே வந்து சேர்ந்தவள்.

கஞ்சிக்கு வழியில்லாமல் கெஞ்சிக் கேட்டு நான் குடும் பனை வந்து கட்டிக் கொண்டவள் அல்ல அவன், என் அழகைக் கண்டு ஆசைப்பட்டு விரும்ப அதன்மேல் அவன் என்னை வந்து மணந்துகொள்ள அவனுடைய மனைவி யானவள் நான்.

மேகத்தைப் போன்ற கருமை நிறத்தினை உடையவர் அழகர் அவருக்குத் தஞ்சமாக அடிமைத் தொழில் செய்யும் பள்ளனுக்குப், பொருத்தமான மருதூராளாகிய இளைய பள்ளி நான்தான் ஆண்டையே!

செஞ்சிக்கும் கூடலுக்குந்

தஞ்சைக்கும் ஆணை செல்லும்

சொங்கோல் வடம லேந்திரன்

எங்கள் ஊரே

நெஞ்சிற் குறித்த குளம்

அஞ்சுக்குஞ் சக்கரக கால்

நிலையிட்ட நாளிற் பண்ணைத்

தலையிட் டேன் நான்

கஞ்சிக்குந் தன்னிலே தான் கெ

ஞ்சிப் புகுந் தவளல்ல

கண்டாசைப் பட்டே கொள்ளும்

பெண்டா னவள்

மஞ்சிற் கறுப்பழகர்

தஞ்சைப்பள் ளனுக் கேற்ற

மருதூர் இளைய பள்ளி

நானே யாண்டே.

செஞ்சி – செஞ்சி நாடு; தென்னார்க்காடு மாவட்டத்துத் திகழும் செஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு, முதலில் நாயக்கர்களாலும், பின் மராட்டியக் குறுநில மன்னர் களாலும் ஆளப்பட்டு வந்த நாடு. மதுரை, தென்பகுதி யிலே நாயக்க மன்னர்களின் தலைமைக் காரியாலயமாக விளங்கிய நகரம். தஞ்சை முதலில் நாயக்கர்களுக்கும் பின் மராட்டிய மன்னர்களின் ஆளுகைக்கும் உட்பட்டிருந்த பிரதேசம் அங்கெல்லாம் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே அவர்களின் தளவாயாக இருந்த தளவாய் வடமலையப்ப பிள்ளையனின் ஆட்சியாணை நிலவிற்று என்கிறாள் பள்ளி சக்கரக்கால் நிலையிடல் – குளம் வெட்டுவதற்கு உரிய எல்லையினை வகுத்து மூலைகளிலே எல்லைக்கற்கள் பதித்தல். அரசின் அநுமதியுடன் பதிக்கப் மாவட்டத்துள் காணலாம். பல ஊர்களுள் நெல்லை பெறுவது இது இன்றும், 'கஞ்சிக்கு இல்லாமல் அவகைகு வைப்பாட்டியாகப்புகுந்தவள் அல்லள், அவனே தன்னைக் கண்டு ஆசைப்பட்டு மணந்துகொள்ள இளையா பாசு வந்தவள்' என்ற கர்வத்துடன் கூறுகிறாள் இளைய பள்ளி. பெண்டானவள்–மனைவியானவள்.

**வடிவழகக் குடும்பன்**

பள்ளியர்கள் இருவரும் தத்தம் குடிப் பெருமையும் உரிமையும் கூறவே. பள்ளன் தன்னுடைய குடியின் சிறப்பினையும் கூறுகின்றான். சுக்கிராச்சாரியா ருடைய தாயானவள் அசுரர்களுக்காக இந்திரன் ஒழிய வேண்டுமெனத் தவம் செய்தாள். அப்போது, திருமால் அவள் நவத்தைக் கலைக்கச் சென்று அவளையே

கொன்று விட்டார். சக்கரத்து ஆழ்வாரான திருமால் அப்படி அவளைக் கொன்றதனால் அவரைப் பிரமஹத்தி பற்றிக் கொண்டது. அது தன்னை விட்டுப் போகத் தெட்சண பூமியிலே வந்து தவம் இயற்றித் தெக்கண விட்டுணு வானவர் முக்கூடல் அழகர்.

அவர், முக்கூடலிலே வந்து திருவடி வைத்த அந்நாளிலே இருந்து, அவருடைய அடியவராகவரும் பழையகுடியிலே வந்து பிறந்தவன் அடியேன் அந்த உண்மையினை அறியாத சிலர் என்னைத் 'தூர விலகிப் போடா'என்பார்கள். அப்படி அவர்கள் பக்கமிருந்து நான்தூரமாக விலகிப் போனாலும், அவர்களுக்குத் தகுதியானசோறாக அமைவது என்னுடைய வெள்ளாண்மையினால்வருவதுதான். இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் தாம் என்னைப் 'பள்ளா பள்ளா!' என்பார்கள்.

கருங்கடலினின்று கிடைக்கும் முத்துக்கு ஈடாக, மிகுதியான செந்நெல் முத்துக்களை விளைவிப்பவனான வடி வழகக் குடும்பன் என்பவன் நானே என்று ஆண்டையிடம் உரைக்கிறான்.

சுக்கிரத் தேவர் தாயைச்

சக்கரத் தாழ்வார் கொன்ற

துட்டப் பிரம கத்தி

விட்டுப் போகத்

தெக்கண விட்டுணு வான

முக்கூடலுற் றழகர்

திருவடி வைக்கும் அன்றே

வரும் அடியேன்

பக்கமே தூரப் போயும்

தக்கசோ றென்வெள் ளாண்மை

பள்ளா பள்ளா என்பார்

மெய் கொள் ளாதவர்

மைக்கடல் முத்துக் கீடாய்

மிக்கநெல் முத்துண் டாக்கும்

வடிவழ கக்கு டும்பன்

நானே யாண்டே.

'சுக்கிரர்' பிரம்மாவின் மானச புத்திரர்களுள் ஒருவராகிய 'பிருகு' வின் பேரர். அதனால், அவர் தாய் பிராம்மணியாகிறாள் அவளை க் கொன்றதனால், விஷ்ணுவைப் பிரம்மஹத்தி பற்றியது என்பர். பிருகுவின் மனைவியருள் ஒருத்தியும். தாதா, விதாதா என்பவரைப் பெற்றவளும் ஆன 'கியாதி' என்பவளைக் குறித்தும் இதே கதையானது கூறப்படும். துட்டப் பிரமகத்தி– துஷ்டத் தன்மையினையுடைய பிராமணரைக் கொன்ற பாவம். சக்கரத் தாழ்வார்– சக்கரப் படையினையுடைய ஆழ்வார். இப்பாடலுள் பள்ளன் வாயிலாகக் கவிஞர் தீண்டாமையை எதிர்த்து முழக்கும் எதிர்க்குரலினைக் கண்டு நாம் பெருமிதம் கொள்ளலாம்

**வளம் சொல்வர்**

மலைவளத்திற்கு ஒப்பாகக் கூறிச் சிறப்பிக்கப் பெறு பவர் முக்கூடல் அழகர். அவருடைய திருநாட்டின் வளமையினைப் பேசுவதற்காகப் பள்ளியர்கள் தம்முடைய நாவினை அசைத்தனர். பாட்டின் வளம் அனைத்தும் ஒருங்கே அமையச், சிறந்த பக்தர்களாகிய பத்து அடியார் களும் சூட்டிய பாசுரங்களாகிய பாமாலைகளான அழகிய காட்டுவளம் அனைத்தையும் யாமும் காட்டுவோம் என்ப வரே போல, அந்தக் களமர்கள் சொல்லத் தொடங்கினார்கள்.

கோட்டுவளம் கூறியமுக் கூடல் அலங் காரர்திரு நாட்டுவளம் பேசமணி நாவசைத்தார் பள்ளியர்கள் பாட்டுவளஞ் சேரகுலப் பத்தனார் மாலிகைப்பூங் காட்டுவள மெல்லாம் களமருரை செய்வாரே.″

'காட்டுவள மெல்லாம் கள மருரை செய்வாரே' என்பதற்குப் பதிலாகக், 'காட்டுவள மென்னக் களமரு தூர் செய்வாரே' எனவும் பாடமுண்டு. கோட்டுவளம்

– மலைபோன்ற தோற்றமுடைய கருமேனி வண்ணம். அலங்காரர்– அழகர் மணிநா– அழகியநா முழங்கும் நாவுமாம். குலப் பத்தனார்–சிறந்த பத்தராகிய நம்மாழ் வார் எனவும் கொள்ளலாம்; ஆழ்வார்களாகிய பதின்மர் எனவும் கொள்ளலாம். அந்தப் பூங்காடு–நாலாயிரப் பிரபந்தம். 'ஆழ்வார் திருநகரி' என்பர் நம்மாழ்வாராகக் கொள்வோர். களமருதூர் பாடமானரல், நெற்களங்கள் மலிந்த மருதநிலத்து ஊர் என்க. அப்போது அவ்வளத்தைச் சொல்லுதல்.

**நாட்டுவளம்**

**வடகரை வளம்**

வசந்தகாலம் தொடங்கிவிட்டது அந்தக் களிப்பிலே மேட்டின்மீது ஏறி நின்று. தன் கால்களைப் பவிசுடன் எடுத்து வைத்துத், தன் தோகைகளை விரித்துக் கொண்டு, மயிலானது வானத்தை நிமிர்ந்து நோக்கிக் களிப்புடன் நடனமாடத் தொடங்கியது. ″வசந்த காலம் தொடங் கியதோ?" எனத் தன் ஆரலெடுத்துக் கூவிக்கேட்க நினைத்த, மாமரத்திலே இருந்த பெட்டைக் குயில் ஒன்று, அந்த மயிலின் காட்சியைக் கண்டு உண்மையறிந்து தன் பிளந்த வாயினைப் பேசாமல் அப்படியே மூடிக் கொண்டது. கோடை காலம் போய் விட்டதனால் ஏற்படும் மங்கல அடையாளங்களைக் கொண்டனவாக,மேகங்கள் குளிர்ந்த மழைத் துளிகளைத் தூவியனவாக வானிலே இயங்கத் தொடங்கின. தான் வரவேண்டிய காலம் வந்து விட்ட தென மழைத்துளி வீழ்ந்த நிலத்தினின்று நறுமண மும் ஓடி வந்து கொண்டிருந்தது. அதனால், நாட்டுமக்கள் அனைவரும், உள்ளத்திலே மகிழ்ச்சி கொள்பவராயினர். இத்தகைய இளவேனிலின் செழிப்பான தன்மையினை உடையது ஆசூர் வடகரை நாடு என்று கூறப்படும் எனது நாடு. மூத்த பள்ளி இப்படித் தன் நாட்டு வளமையினைக் கூறினாள்.

மேடை ஏறித்தன் காலைப் பவுசு

விரித்த பீலி

மயிலெட்டிப் பார்க்கப்

பேடை மாங்குயில் வாய்கொண்டு உசாவப்

பிளந்த வாய்தனைப்

பேசாமல் மூடக்

கோடை போய்விட்ட சோபனம் கொண்டு

குளிர்ந்த கொண்டற்

குறுந்துளி யோட

வாடை யோடி வரக்களி சூரும்

வளமை யாசூர்

வடகரை நாடே!

மேடை – மேடான இடம். பவிசு விரித்த– அழகுடன் விரித்த 'வாய்கொண்டு உசாவ'- வாய் கொண்டு சேவல்' எனவும் பாடல் உண்டு. குளிர்ந்தகொன்றை குறுந் தளிரோட' என வருமிடத்தில் வேறுபாடம் உரைக்கப் படும் 'வரக் களிகூரும,' 'வரக் கோழி கூவும் என்பதும் பாடம்.

பள்ளர்கள் தம் வேளாண்மையைத் தொடங்கும் காலம் அது ஆதலினால் அதன் வரவினை இவ்வாறு நய முடன் கூறினர். இதிற் கூறப்பட்ட வளமை மழைவளம் ஆகும். காதலர் தமமுட் கூடி மகிழும் காலம் .

**தென்கரை வளம்**!

வானகத்திலே தோன்றி வெண்குடை விரித்தாற் போல எழுந்த நிலவாகிய பகையினை, 'வெற்றி கொண் டல்லவோ விடுவேன், என்ற செருக்குடன், இரண்டு யானைகள் கூடி அந்தமதிக்குடையின்மீது தாலிச் செல்வது போல, வானிலே இருண்ட மேகங்கள் திரண்டு நிலவை மறைத்தன. அதனைக் கண்டு தம் உள்ளங் கலங்கிய ஆடவர்கள் தாம் ஒளிந்து கொள்வதற்குக் குன்று களும் பொருத்தமானவையன்று என ஒதுக்கி விட்டுப் பூங்கொடியனைய தம் காதலியரின் நகில்களாகிய குன்றுகளிலே சென்று பதுங்குவர். அவ்வாறு, இளையோரை இணைந்த புறாக்கள் போல மணஞ்சேர்த்து வைக்கும்

தன்பையுடையது இளவேனில் புறாக்களுக்கும் மாமரத் திலிருந்து கூவும் குயிலுக்கும் வசந்தம் தோன்றிய செய்தியை முன்னாக அறிவிக்க வருவதுபோலத் தென்றல் ஓடிவர, எல்லாவுயிருமே அது கண்டு மகிழ்ச்சி வெள்ளத் திலே திளைக்கும். இத்தகைய சிறப்பினையுடையது சீவல மங்கைத் தென்கரை நாடு. இப்படித்தன் நாட்டின் வளமையினைக் கூறுகிறாள் இளைய பள்ளி.

வென்றல் லோவிடு வேனென வேயிரு

வேழங் கூடி

மதிக்குடை தாவக்

குன்றே லாந்தர மில்லையென் றாடவர்

கொம்ப னார்முலைக்

குன்றிற் பதுங்க

மன்றல் சேரிள வேனிற் புறாக்கள்

மாங்குயி லுக்கு

மாராயஞ் சொல்லித்

தென்ற லோடி வரக்களி கூரும்

சீவல மங்கைத்

தென்கரை நாடே.

இருவேழம் – பெரிய வேழமும் ஆம். 'இருள் வேழம்' எனக்கொண்டு இருளாகிய வேழம் எனவும் கொள்வர். தரம் – பொருந்திய தகைமை மாராயம் – கட்டியம்; இருதுச் செய்தி அறிவித்தலுமாம். தென்றல் ஓடி வரக் களி கூரும்.' 'தென்றல் ஓடிவரக் கோழிகூவும்'

**முக்கூடலின் சிறப்பு**

முக்கூடல் அழகர் கோயில் கொண்டிருக்கும் திருக் கோயிலிள் சோபுரம் மிகவும் உயரமானது. மேகத் திரள் கள் அந்தக் கோபுரத்தருகே வந்து குழுமியிக்கக் காணலாம் வானம் மழைத்துளிகளாகிய தன் படித்தரத்தைத் தர, அத்திருக் கோயிலின் கொடிமரங்களிலே பறந்து கொண் டிருக்கும் கொடிகள், அவ்வானத்தையே மூடி மறைத்துக் கொண்டிருக்கும். கண்ட பேரண்டப் பட்சிகள் குளிர்ச்சியுடைய அந்த உச்சியை விரும்பிச்சென்று பொன்மயமான திருகோயிலின் அந்தத் தி பெருகியிருக்கும் மழைநீரில் அன்னங்கள் கொண்டிருக்கும் கொண்டிருக்கும் முற்றத்திலே விளையாடிக் மலர்களிலிருந்து வீழ்ந்தமகரந்தங்களைச் சொரிந்து ' பரவிய தேன் வண்டலிழைத்தவாறே ஓடிக் கொண்டிருக்கும். வெம்மையான கதிரவனானவன் அந்தக் கோயிலின் மதிற்சுவர்களிலேதான் புகுந்து செல்வதற்குரிய வழியினைத் தேடிக் கொண்டிருப்பான. தேவர்களுக்குத் தலைவர் அழகர், அ அவர் கோயில் கொண்டிருக்கிற முக்கூடல் என்னும் ஊரே எங்கள் ஊருமாகும். முத்த பள்ளி

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்

கொடிகள் வானம்

படிதர மூடும்

கண்ட பேரண்டம் தண்டலை நாடும்

கனக முன்றில்

அனம் விளை யாடும்

விண்டபூமது வண்டலிட் டோடும்

வெயில்வெய் யான்பொன்

னெயில்வழி தேடும்

அண்டர் நாயகர் செண்டலங் காரர்

அழகர் முக்கூடல்

ஊரெங்கள் ஊரே

கொண்டல்–மழைமேகம். படிதர– படியும் ஆம்' கண்ட பேரண்டம்– பழங்காலத்திருந்த ஒருவகைப் பெரும் பறவை. வண்டலிட்டு ஓடுதல்–மேடுகள் அமைத்து ஒதுக்கி ஓடுதல் அண்டர்–தேவர். எயில் – கோட்டை. செண்டு–ஒரு படை; அலங்காரர்– அழகுஉடையவர்; செண்டுகையேந்திய அழகுடன் விளங்குபவர் சில ஏட்டுப் பிரதிகளில் இப் பாடல் 23-வது பாடலாகவும் 23-வது பாடல் இந்த இடத்தினும் விளங்கும்.

**மருதூர் வளம்**

மேட்டு நிலப் பகுதிகள் அனைத்தும் நீருள் அமிழ அங்கே சங்கினம் உலவிக்கொண்டிருக்கும். பொன்மயமான அரங்கங்களிலே அலைகளால் ஒதுக்கப்பட்ட மீன்கள் துள்ளிவிளையாடும். சோலைகளின் வானளாவிய மரங் களைத் திங்களானது அராவிக்கொண்டு செல்லும். அப்படிச் செல்லும்போது தெருக்கள் தோறும் பூந்தாதுக் களை மரங்கள் தூவிவிடும். பூஞ்சோலைகளினூடே பசுங் கிளிகள் தத்தம் துணையுடன் பொருந்தி இன்புற்றிருக்கும். நாகணவாய்ப் புட்களும், புறாவினங்களும் தத்தம் துணை களை விரும்பிக்கூவிக் கொண்டிருக்கும் மரக்கலங்கள் செல்லும் கடலிலே அந்நாள் தோன்றிய கொடிய நஞ்சினை உண்டவரான மருதீசர் கோயில்கொண்டிருக்கும் மருதூரே எங்கள் ஊராகும்.

சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்

தரங்க மீன்பொன்

அரங்கிடை தாவும்

திங்கள் சோலை மரங்களை ராவும்

தெருக்கள் தோறும் மருக்கனைத் தூவும்

பொங்கர் ஊடிளம் பைங்கிளி மேவும்

பூவை மாடப்

புறாவினங் கூவும்

வங்க வாரிதி வெங்கடு உண்ட

மருதீசர் மருதூர்

எங்கள் ஊரே

**ஆதூர் நாட்டு வளமை**

வெண்மையான கலைகளையுடைய திங்கள் தான் கறைபட்டுக் காணப்படுமே தவிர மக்கள் உள்ளங்களிலே எவ்விதக் கறையுமே காணப்படுவதில்லை. கம்பத்திலே கட்டியிருக்கும் யானைகள் கடமாகிய மதம்பட்டு நிற்குமே யல்லாமல் அவ்வூர் மக்கள் கடன்பட்டு வாழ்வதில்லை. வானத்திலே எழுமபிச் செல்லும் பறவைகள் தாம் சிறை பட்டிருக்குமே யல்லாமல் மக்களுள் எவரும் சிறைபட்டிருப்பதே கிடையாது.

நெய் பொருந்திய விளக்குத் திரி யிருக்குமேல்லாமல் நடத்தையிலோ எவ்வகையான முடியாதிருந்தால், மக்கள் கள் கொத்திக் பொருத்தப்பட்டதா அறிவிலோ திரிபையுமே கண நன்றாக உண்ணும் வளம் உடைய அவர்கள் வீட்டு அப்ப ஆ குறைக்கப்பட்டிருக்கத் தழுவிப் படரும் மக்களின் வாழ்க்கைத் தரம் காணவே முடியாது. கொடிகளும் அவை பூங்கொம்புகளும் குழைகளை யுதையாயிருக்குமே தம் மக்களும் கொடிகள் போன்ற அவர் தழுவும் மகவரினும் குழைந்து கும்பிட்டு வாழ்பவராக எருவது கிடையாது. செய்யுட்களின் பொருள் நயங்கள் மறைபட்டிருக்குமே யல்லாமல் வயல்களுள் விளையும் விளைச்சலுள் எவ்விதமான ஒளிவு மறைவுமே காணப்படுவதில்லை. இப்படிப்பட்ட வளமுடைய நாடு எங்கள் ஆதூர் வடகரை நாடு. இப்படித் தன் நாட்டைப் போற்றிக் கூறினாள் மூத்த பள்ளி

கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்

கடம்பட் டுள்ளது

கம்பத்து வேழம்

யாமுள மதநீர்

சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு

திரிபட் டுள்ளது நெய்படும் தீபம்

குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி

குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு

மறைபட் டுள்ளது அரும்பெருட் செய்யுள்

வளமை ஆசூர்

வடகரை நாடே.

கம்பத்து வேழம்'-செருக்குடைய களிற்று யானையு மாம். கம்பத்து – செருக்கு; கர்வம், சிறை – இறகு; சிறைச் சாலை திரி – பஞ்சுத்திரி; திரிபு – குறை– தேய்வு; குறைவு. குழை– தழை; குழைவாம் தன்மை 'கப்பத்து வேழம்' எனவும் பாடம். அப்போது, 'பகைவர் திறையாகத் தந்த

வேழம்' என்க. சிறை–தடை எனக் கொண்டு, 'விண்ணெ மும் புட்போல, உயர்வுடன் எழும் மாந்தர்க்கு எண்டுத் தடையுமில்லை' என்பது பொருத்தும்″ பொருத்தும். 'மறை பட்டுள்ளது. அரும் பொருட் செய்யுள்' என்றது இப்பாடலுள் அரும் பொருள் மறைபட்டுக் கிடப்பதால். அதனை உய்த்துணர்க என்பதற்காம் மக்க மக்கள் உள்ளத்து மறைபட்டு வாழ்பவர் அல்லர் எனவும் கொள்க.

**தென்கரை நாட்டு வளமை**!

தன் வடகரை நாட்டை மூத்த பள்ளி இப்படிப் புகழ்ந்ததும் இளைய பள்ளிக்கு உற்சாகம் கம் கரைபுரண்டு எழுகிறது. அவள், தான் பிறந்த சீவலமங்கைத் தென்கரை நாட்டின் புகழைக் கூறத் தொடங்கி விடுகிறாள்.

சூரியனின் வெப்பமாகிய வெயில் காய்வதைக் காண லாமே தவிர மக்களின் வயிறு காய்வதை எங்குமே காண முடியாது வெண்மையான தயிர்த் துண்டுகள் கலங்கு வதைக் காணலாமே அல்லாமல், மக்கள் மனங்கலங்கு

வதைக் காண முடியாது. நாழிகைகளும் வாரங்களும் மாய்ந்து கொண்டு போகக் காணலாமேயன்றி, மக்கள் பசியால் மாய்தலை என்றும் காண முடியாது. மேகங்கள் சுழன்று இடித்துப் பொழியும் மழைவெள்ளத்தைத்தான் காணலாமே யல்லாமல், மக்கள் மறுகி வாடுவதைக் காண முடியாது. செந்நெற் குலைகள் காய்த்துச் சாய்ந்து கிடப் பதைக் காணலாமே யன்றி, 'மக்கள் தலைசாய்தது நடக் கும் நிலையினைக் காணவே முடியாது தாபத நிலையினர் தனித்து இருக்கக் காணலாமேயன்றிக் கணவன் மனைவியர் தனித்திருக்கக் காண முடியாது. உரைத்திடும் சந்தனம் தேயக் காணலாமே அல்லாமல் உரைத்திடும் செய்யுட் களிலே பொருள் தேய்வு காணப்படுவதே கிடையாது இப்படிப்பட்ட வளமைகள எல்லாம் உடையது எங்கள் சீவலமங்கைத் தென்கரை நாடு.

காயக் கண்டது சூரிய காந்தி

கலங்கக் கண்டது

வெண்தயிர்க் கண்டம்

மாயக் கண்டது நாழிகை வாரம்

மறுகக் கண்டது

வான்சுழி வெள்ளம்

சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்

தனிப்பக் கண்டது

தாபதர் உள்ளம்

தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்

சீவல மங்கைத்

தென்கரை நாடே.

தயிர்க் கண்டம் – தயிர்க் கட்டிகள். மறுகுதல் – உள்ளம் மறுகுதல். வான் சுழி வெள்ளம்– அதிகமான சுழித்தலுடன் ஓடிவரும் பெருவெள்ளம். இதனால்,

மக்கள் காய்தலின்றி யும், மறுகுதலின்றியும், சாய்தலின்றியும், தனித்து உழல் தலின்றியும், தேய்தலின்றியும் வாழும் வளநாடு

**வளமை செழுமை**

தெய்வ வழிபாடு

காரிமாறனாரின் புதல்வர் நம்மாழ்வார். வார் வேதசாரங் களை எல்லாம் கல்விச் செழுமையினையுடைய தமிழ்ப் பாசுரங்களாக அருளியவர் அவர். அந்தத் திருவாய் மொழியானது பரவியிருக்கும் அழகருடைய நல்ல நாட்டிலே மழை வளம் சிறக்க வேண்டும் என்னும் பொருட்டாக வரம் பெறுதலை நோக்கமாகக் கொண்டு மள்ளர்கள் எல்லோரும் தம் சேரியிலே குரவை ஒலியானது எழுந்து ஓங்கத் தெய்வநிலை போற்றினார்கள்.

காரிப் பிரான்புதல்வர் கல்வித் தமிழ்வேதம்

பாரித்த முக்கூடற் பண்ணவனார் நன்னாட்டில்

மாரிப் பொருட்டால் வரங்குறித்து மள்ளரெல்லாம்

சேரிக் குரவையெழத் தெய்வநிலை போற்றினரே

கல்வித் தமிழ் வேதம் நம்மாழ்வாரைக் குறிப்பதாக வும் கொள்ளலாம். பாரித்தல்–பரவுதல். 'மள்ளர்கள் மழைவளம் வேண்டி தெய்வ வழிபாடு செய்தனர் என்பது இது குரவை–ஒருவகைக் கூத்து; எழுதல்– அந்தக் கூத்துப் பாடலின் ஒலி எழுதல்

உலகமெல்லாம் மாதம் மும்மாரியாக மழை பெய்வதற்குத் தெய்வங்களை நாம் முறையாகப் போற்றி வந்தோமானால் கட்டாயம் அவை நமக்குக் கை கொடுத்து உதவி செய்யும். அதனால் பூலாவுடையா ருக்குப் பொங்கலிட்டுத் தேங்காயும் கரும்பும் நிரம்பப் படையலிடுங்கள் குங்குமத்தோடு சந்தனத்தையும் கலந்து குமுக்கா உடையார் அய்யனுக்குச் சாத்திப் போற்றுங்கள் கரையடிச் சாத்தாவின் விழாவுக்குக் காப்புக் கட்டி ஏழு செங்கிடாய்களையும் அவர் முன்னே விரைவாக வெட்டிப் பலியிடுங்கள்.

திங்கள்மும் மாரியுல கெங்கும் பெய்யவே

தெய்வத்தைப் போற்றி வந்தாற்

கைதருங் காண்

பொங்கலு மிட்டுத்தேங் காயும் கரும்பும்

பூலா வுடையாருக்குச்

சாலக் கொடுங்கள்

குங்குமத் தோடுசந் தனமுங் கலந்து

குமுக்கா வுடையா ரய்யர்

தமக்குச் சாத்தும்

கங்கணங் கட்டியே ஏழுசெங் கடாயும்

கரையச் சாத்தா முன்னே

விரைய வெட்டும்

உச்சியிலே கொண்டைப் பூவினையுடைய செஞ் சேவலைச் சாத்திர முறைப்படி புலியூருடையார் ஏற்றுக் கொள்ளுமாறு பலியிடுங்கள். வாய்ப்பான சாராயமும், பனையிலிருந்து இறக்கும் ஊற்றாய கள்ளும் வடக்கு வாசற் செல்லியானவள் உண்ணு உண்ணுமாறு குடங்களிலே வையுங்கள், பள்ளர் எல்லோரும் வாருங்கள். தோத்திரம் பண்ணுங்கள். பண்பாடிப் போற்றுங்கள். கூத்தாடித் தொழுது தொழுது வேண்டுங்கள். மழை மெய்யுமாறு அருள் செய்ய வேண்டி அழகரின் திருநாமங்களை வாழ்த்தி வாழ்த்தி அனைவரும் வேண்டுங்கள்.

பூத்தலைச் செஞ்சேவற் சாத்திரத் தாலே

புலியூ ருடையார்

கொள்ளப் பலிதானிடும்

வாய்த்தசா ராயமும் பனையூற்றுக் கள்ளும்

வடக்குவாய்ச் செல்லியுண்ணக் குடத்தில வையும்

தோத்திரம் பண்ணும் பண்ணுங் கூத்தாடியே

தொழுது தொழுது வேண்டும் மழைபெய்யவே

ஏத்தும் அழகர்பேரை வாழ்த்தி வாழ்த்தியே

எல்லோரும் வாரும்

பள்ளர் எல்லோருமே.

'வடக்குவாய்ச் செல்லி' என்பது, ஊர் அம்மன் ஆகிய பெண் தெய்வம். வடதிசைக் காவலாகிய இவள் கோயில் விளங்கும். கிராமதேவதையான இவளுக்குக் கொடையிட்டுப் போற்றுவது இன்றும் நாட்டிலே நிகழ்ந்துவரக் ஒரு சாத்தன். ] தென்பாண்டி காணலாம். புலியூருடையார்

**மழைக்குறி**

உயிர்களுக்கு முத்தி தரவேண்டும் என்ற பெருங் கருணைப் பெருக்கினால் எழுந்தருளி வந்து முக்கூட லிலே கோயில் கொண்டிருப்பவர், மாதவராகிய முக்கூடல் அழகர். அவருடைய திருவடிகளின்பால் பத்தியை மறவாத பண்ணைக்கு அடிமைப்பட்ட பள்ளச்சேரியி லுள்ள பள்ளர்கள் எல்லாம் புத்திசாலித் தனத்துடனே மேற்கண்டவாறு தெய்வநிலை போற்றினர். அதன்பின், வானத்து மேகங்கள் எல்லாத் திசைகளிலும் பெயவதற்கு உரிய மழையின் குறியும் உண்டாயிற்று.

முத்திதர வந்ததிரு முக்கூடல் மாதவர்தாட்

பத்திமற வாதபண்ணைப் பட்சேரிப் பள்ளரெல்லாம்

புத்தியுடன் தெய்வநிலை போற்றியபின் வான்முகில்

எத்திசையும் பெய்யமழை யின்குறியுண் டாகியதே

முத்தி- பேரின்பநிலை, மாதவர்- மிக்க தவங்களையுடை வரான திருமால், 'புத்தியுடன் தெய்வநிலை போற்றியபின் அவர்கள் பக்தியுடையவர்கள். அதனால் தெய்வநிலை போற்றி வழிபட்டனர் அவர்போல வழிம்படாதவர் புத்தி யற்றவர்கள் என்று சொல்ல வுரும்புகிறார் போலும் கவிஞர். [மழையின் குறி- மழை பெய்தற்கான குறிகள்

நாளைக்கு ஆற்றிலே வெள்ளம் வரப்போகிறதென்ப தற்கு உரிய குறிகள் தோன்றுகின்றன. தென்மேற்குத் திசையிலே மலையாள மின்னலும் தென்கிழக்குத் திசை யிலே ஈழத்து மின்னலும் சூழ வளைந்து மின்னிக் கொண் டிருக்கின்றன. நேற்லும் இன்றும் மரக்கொம்புகளை சுற்றியவாறு காற்று அடிக்கிறது. கிணற்று நீரிலே இருக் கின்ற சொறித் தவளைகள் கூப்பிடுகின்றன. சேற்றிலே வாழும் நண்டுகள் தம் வளைகளுள் மழைநீர் புகுந்து விடாதபடி சேற்றினால் வளைவாயில்களை அடைக்கின் றன மழை நீரைத் தேடி ஒரு கோடி வானம்பாடிப் பறவைகள் அங்குமிங்குமாக வானத்திலே பறந்து ஆடிக் கொண்டிருக்கின்றன. உலகமெல்லாம் போற்றும் திருமா லாகிய முக்கூடலின் அழகருக்கு ஏற்றவரான பெரிய பண்ணையைச் சார்ந்த சேரியிலுள்ள பள்ளர் வகையின ரெல்லாம் மழையினை வரவேற்று ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோம். வாருங்கள்

ஆற்றுவெள்ளம் நாளைவரத்
தோற்று தேகுறி-மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே!
நேற்று மின்றுங் கொம்பு சுற்றிக்
காற்ற டிக்குதே- கேணி
நீர்ப்படு சொறித்த வளை
கூப்பிடு குதே!

சேற்று நண்டு சேற்றில் வளை

ஏற்றடைக்கு தே- மழை

தேடி யொரு கோடி வானம்

பாடி யாடுதே!

போற்றுதிரு மாலழகர்க்

கேற்ற மாம்பண்ணைச்- சேரிப்

புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்

துள்ளிக் கொள்வோமே.

ஈழமும் கன்னியும் எதிர்த்து மின்னினால் நாளை மழை பெய்யும்' என்பது தென்பாண்டிச் சீமையிலே வழங்கிவரும் பழமொழி. அதனையே நயமுடன் முதற் கண்ணியிலே கவிஞர் கூறுகின்றார். கொம்பு சுற்றிக் காற்றடித்தல்- காற்றுச் சுழற்றி அடித்தல். மாம்பண்ணை. பெரியபண்ணை புள்ளி-வகையினர் சொறித்தவளை சொறிகளையுடையதவளை. கேணி - கினறு.

**பெய்த பெருமழை**!

கருப்பமானது உரிய கால முதிர்ச்சியினை அடை ந்து விட்டதென்றால் பிள்ளைப்பேறு உறுதியாகத் தோன் றாதோ? செங்கண்ணின தனான திருமாலின் ஆசூர் எனப் படும் நல்ல நாட்டிலேயும் அந்த வண்ணமாகவே மழை யும் உறுதியாகப் பெய்யும் அல்லவோ? உலகத்தின் வேலி போலச் சூழ அமைந்து கிடக்கும் கடலிலே மேய்ந்து கருக் கொண்ட மேகமும், அங்ஙனம் காலூன்றிப் பெய்யத் தொடங்கி, அந்தக் கார் காலத்தின் தன்மையைக் காட்டியது.

சூலானதுமுதிர்ந்தால் தோன்றாகோ பேறுசெங்கண்

மாலாசூர் நன்னாட்டில் மழையுமந்த வண்ணமன்றோ

வேலா வலயமுந்நீர் மேய்ந்துகருக் கொண்டமுகில்

காலான தூன்றியந்தக் காலமுறை காட்டியதே 38

[சூல் – கருப்பம். பேறு– பிள்ளைப் பேறாகிய செல்வம்; சூல் முதிர்ந்தால் தோன்றும் மதலைச் செல்வம் போலச் சூல் முதிர்ந்த மேகங்களினின்றும் மழையாகிய செல்வம் தோன்றும் என்றனர். வேலா–வேலி வலயம் – உலகம். முந்நீர் – கடல். காலமுறை காட்டுதல் – கார் காலம் என்ற முறைமையினைத் தோன்றக் காட்டுதல் ]

**வெளிறிய வானம்**

கற்பக மரங்கள் செறிந்த பூங்காவிற்கு இறைவனாக விளங்குபவன் இந்திரன். அவனுடைய ஏவலினால் தம்பணியினை மேற்கொண்டு எழுந்தன கார்மேகங்கள். அவை கடலிலே படிந்து, அழகிய வானவில்லை வளைவாக வானிலே இட்டு விளங்கும். அதனால், கடலிலே துயின்றவனும், சிவதனுசை வளைத்தவனுமாகிய முக்கூட லுக்கு இறைவனாகிய அரியைப் போல் விளங்கும். பூவுல கத்தினின்றும் உயர்ந்த கலைகின்ற மின்னலோடு கூடி விளங்கும்போது, தாமரைப் பூவின் மேல் உயர்வுடன் வீற்றிருக்கின்ற சுமலத்து வாசனாகிய அயனைப் போலவும் தோன்றும் உச்சியிலே நீரைச் சுமந்து கொண்டு மலையி லேறிக் கவிதலால் மின்னலாகிய கனலையும் உடைத்தாயி ருத்தலால், கங்கையையும் அனலையும் தாங்கிக் கயிலாச மலையில் ஏறியிருக்கும் சிவனாகவும் தோன்றும். பாம்பு கள் எல்லாம் ஓடி ஒளியத் தாவிப் பறந்து, கோபித்து எழுந்த கருடனைப் போல, வானிலே பறந்து, பாம்புகளை நடுக்கும் இடி முழக்குடனும் விளங்கும் அதனால் கருட னும் அதுவேயாகித் தோன்றும் இவ்வுலகிற்கு உரிமை யான ஊனும் உயிரும் அதுவேயாகி விளங்கும். மன்னர் களுள் பெரியவன் வடமலையப்ப பிள்ளையன். அவனுடைய போர் யானைகளைக் காட்டினும் சினந்து மழை பொழிந்தபின்னர் உலகம் எங்கும் குளிர்ச்சி பெறுகின்றது. வானமோ, அதன்பின், தன் தலைவனின் களிறாகிய வெள் ளை யானையைப் போலத் தானும் வெளிறுவதாயிற்று.

**சிலேடை**

காவுக்கு இறைவ னாகும் இந்திரன்

ஏவற் பணிகொண் டெழுந்தகார்

கடலிற் படிந்து திருவிற் கோட்டி

அடல்முக் கூடல் அரியுமாய்ப்

பூவுக் குயர்ந்த கலைமின் னோடு

மேவிக் கல்லத் தயனுமாய்ப்

புனலைத் தரிதது வரையி லேறிக்

கனலைத் தரித்த சிவனுமாய்த்

தாவிப் பறந்து பணிகள் பதுங்கக்

கோவித் தெழுந்து கருடனும்

தானே யாகி உலகுக் குரிமை

ஊனே யாகி உயிருமாய்க்

கோவிற் பெரிய வடம லேந்திரன்

மாவிற் கறுத்துப் பொழிந்தபின்

குளிரு கிறது கோன் களிற்றினில்

வெளிரு கின்றது வானமே!

**பொருநை வெள்ளம்- மீன் வகைகள்**

உதைத்து வேகங்கொண்டதாக எதிர்த்துச் சென்று, தயிற்றைக் கிழித்து ஆரவாரிக்கும் நீரானது, கடலின் வயிற்றை அந்த உதயவரைக்கும் மேற்கிலே அதன் உற்பத்தித் தான் மாகிய பொதிய வரைக்கும் இடையே ஒத்துப் போகும் படியாக அவற்றுக்கு இடைப்பட்டுக் கிடந்த நிலமெங் கணும் பரந்து போய்க் கொண்டிருக்கும்

வெள்ளத்திலே எதிரேற முடியாமல் பதைபதைத்து நெளியும் துதிக்கை, மூக்கன், பண்ணை சாலை எண்ணெய் மீன், பசலி, திருக்கை, கசலி, கெளுத்தி பண்ணாங்கு பழம் பாசி ஆகிய மீன் வகைகளும்.

எதிர்ப்பட்ட மனிதரை வதைக்கும் மகர மீன்கள், குதிக்கும் சள்ளை மீன், மத்தி, உல்லம். பொத்தி. மடந்தை. கட ந்தை செம்பொன் நொறுக்கி பஞ்சலைக்கெண்டை, கருங்கண்ணி ஆகிய மீன்களும் ஆகியவற்றை எல்லாம் தன் அடி மணலிலே புதைத்தும் மணல் மேடுகளிலே ஒதுக்கியும், நிறத்தாலும், பெருங்கணைப் பெருக்கத்தாலும் கடல் போன்ற நம் முக்கூடல் அழகரின் பெருங்கருணையானது பெருக்கெடுத்து வருவதுபோலப், பொருநையாறு பெருகி வருகின்றது

உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலின்

உதரங் கீறியதிரும் நீர்

உதய வரைக்கும் பொதிய வரைக்கும்

ஒத்துப் போம்படி முற்றும் போய்

பதைத்து நெளியும் துதிக்கை மூக்கண்

'பண்ணைச் சாலை எண் ணெய்மீன்

பசலி திருக்கை கசலி கெளுத்தி

பண்ணாங் கும்பழம் பாசிமீன்

வதைக்கும் மகரம் குதிக்குஞ் சள்ளை

மத்தி உள்ளம் பொத்திமீன்

மடந்தை கடந்தை செம்பொன் நொறுக்கி

மலங்கும் பஞ்சலை கருங்கண்ணி

புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலைப் பொருநம் அழகர் கருணைபோல் பொருநை யாறு பெருகி வார புதுமை பாரும் பள்ளீரே.

உதரம்- வயிறு கீழ் எல்லையும் மேல் எல்லையும் ஒத்துப்போக இடையே இணைந்திருப்பதுபோல ஆறு வெள்ளப் பெருக்குடன் விளங்கிற்று என்க பலவகை மீன் களும் வெள்ளத்தால் ஆற்றுமணலுட் புதையுண்டு போத லும் ஆற்றுக்கரைகளிலே ஒதுக்கப்பட்டுப் போதலும் கூறினார்.

சித்திரா நதியில் வெள்ளம்!

குற்றாலத்தைத் தன்னிடத்தே கொண்ட திரிகூடமாகிய பெரிய மலை முகடுகளிலே மேகங்கள் சென்று படிந்து பொழிந்து, மழை நீரானது ஒன்று சேர்ந்து, பொருநை நதியோடு சேர்தலை விரும்பி, முக்கூடற் பதியை வலங் கொண்டு வரும்.

நீர் வற்றுதல் இல்லாத மடுக்களிலே, பரவை, குரவை வாளை, கோளை,தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி கூனி, மணலி ஆறால், ஓராமின், பிடிக்கவே இயலாத அயிரை, கெண்டை, கெளிறு, பெரிய வரால்கள் ஆகியவை பலவும் கிடக்கும். அவை எல்லாம்புதுவெள்ளம் வரவும் எதிரேறிச் சென்று அணையிலே பாயும். அங்கிருந்து கால்வாய்களிலே பாயும் பின்னர், குளத்திலே பாய்ந்து வயல்களில் எல்லாம் பாயும் இத்தகைய வளமுடையது சிற்றாறு.

சிற்றாறு என்பதொரு பெயரினைப் பெற்றிருந் தாலும்கூட, ஒப்பற்ற சிறிய உருவத்தையுடைய வாமனரின் பெருமையைப். போல்வதாகும். அந்தச் சித்திராநதி பெருகிவருகின்ற அழகினைப் பாருங்களடி பள்ளியர்களே

குற்றாலத் திரிகூட மால்வரை

யுற்றே மேகம் பொழிந்தநீர்

கூடிப் பொருநை நாடித்திருமுக்

கூடற் பதியை வலங்கொண்டே

வற்றா மடுவிற் பரவை குரவை

வாளை தோளை தேளி மீன்

மயிந்தி உழுவை அயிந்தி கூனி

மணலி ஆறால் ஓரா மீன்

பற்றா அயிரை கெண்டை கெளிறு

பருவ ராலும் அணையிலே

பாயக் காலிற்பாயக் குளத்தில்

பாய வயலிற் பாயவே

சிற்றா றென்பது பெற்றா லும்மொரு சிறிய வாமனப் பெருமைபோல் சித்தி ராநதி பெருகி வார சித்திரம் பாரும் பள்ளீரே.

பலவகை மீன்கள் இதன்கண் உரைக்கப்படுகின்றன. மடுக்களிலே கிடந்த மீன்கள் புதுவெள்ளத்திலே மேலேறிச் சென்று எங்கும் பரவுகின்ற காட்சி நயம்பட உரைக்கப் பட்டிருக்கிறது சிறிய வாமனப் பெருமை-சிறிதாக மாவலிச் சக்கரவர்த்தி முன்னர்த் தோன்றி மூவடி மண் கேட்டுப் பின் நெடுமாலாகி அளந்த திருவிளையாடல். சிறிய உருவினராகி ஏழுகடலையும் குடித்த அகத்திய னாரின் பெருமை எனவும் கருதலாம். சிறியவர் மனப் பெருமைபோல்' எனப் 'பாடம் கொண்டு, சிறுமதியினரின் மனத்திலே எழுகின்ற அளவு படாத பெருமிதத்தைப் போல் எனலும் ஆம். சிற்றாறு பொருநையாகிய தன் துணையை நாடி முக்கூடலை வலங் கொணடு அடையப் பெற்றது யானோ வலங்கொண்டும் என் காதலனை அடையப் பெற்றிலேனே? என்ற ஏக்கம் எதிரொலிப்பது காண்க. சிற்றாறு என்பதே பழைய பெயர். பின்னர். அதன் வனப்பு நோக்கிச் சித்திராநதி எனவழங்குதல் பெற்றது.

**குமுறல் கொடுமை**

பண்ணை விசாரிப்பான்

ஆறு கரைபுரண்டு பரவிச் சென்றது, அதற்கப்பாலும் பெருகி ஓடிற்று. அதனால் அந்தப் பகுதியிலே உள்ளவர். கள் இந்தப் பகுதிக்கு வர முடியாமலும், இப்பகுதியிலே உள்ளவர்கள் அக்கரை சேரமுடியாமலும் இருந்தது, நீர் வடிந்து தாம் கரைகடக்கப் பெறுதலை நினைத்து அவர் கள் ஆவலுடன் காத்திருந்தனர் கரை கடந்து ஏறிய வெள்ளம் வற்றியதைக் கண்ட பின் அவர்கள் தம் விருப்பப் படி ஆற்றைக் கடக்கலாயினர். எம் பெருமானாகிய முக்கூடலழகரின் சிறந்த விளைவுகளைத் தரும் பண்ணையை விசாரிப்பவனும் ஆற்றைக் கடந்து வந்து சேர்ந்தான்.

ஆறுபரந் தப்பாலும் அந்நிலத்தார் இந்நிலத்திற்

பேறுடனே மற்றநிலப் பேறும் பெறநினைந்தே

ஏறுபுனல் கண்டதற்பின் எம்பெருமான் முக்கூடல்

வீறுதரும் பண்ணை விசாரிப்பான் வந்தானே

(ஏறுபுனல் – அதிகரிக்கும் புனலுமாம். கண்டது – தரை கண்டது வீறு– சிறப்பு; நல் விளைவாகிய சிறப்பு.)

**பண்ணைக்காரன் தோற்றம்**

அவனுடைய கண்களோ மாறு கண்கள். பருத்திப் பொதியைப் போலக் கூறுபாடமைந்தது அவனுடைய தொந்தி வயிறு கீரை மத்துப் போல விளங்குவது அவனுடைய வழுக்கைத் தலை. அவன் பற்களோ சுரை விதைகள் போலக் காணப்பட்டன. அவனுடைய மூக்கில் நீறுபோல வெண்மையான ஊளை வடிந்து கொண்டிருக் கும். தட்டி நெரித்த மாங்கொட்டையைப் போலத் தோன் றும் அவன் வாயிலே ஈ அரித்துக் கொண்டிருந்தது.

தாறுமாறாக சமைந்திருந்த அவன் மீசையிலே ஐந்தாறு மயிர்களே காணப்பட்டன. தூங்கலாகிப் போன சண்ணைக் கடாவைப்போலக் காணப்படும். அவனுடைய நடை.

அவன் முகம் மயிர் அடர்த்திபில்லாமல் மொண்ணை யாகவே இருக்கும். வேறாகக் கீறிப் பின் ஒட்டவைத்தாற் போன்ற ஏறுகாது உடையவன் அவன். இப்படியாகச் சக்கரப்படை வீரனாரான முக்கூடலழகரின் பண்ணைக் காரன் வந்தான்.

மாறு கண்ணும் பருத்திப்பைக்

கூறு வயிறும் – கீரை

மத்துப்போல் தலையும் சுரை

வித்துப் போல் பல்லும்

நீறுபோல் வெளுத்த வூளை

ஊறு நாசியும் – தட்டி

நெரித்தமாங் கொட்டை போல்ஈ

அரித்த வாயும்

தாறுமாறாய் மீசையில் அஞ்

சாறு மயிரும் – தூங்கற்

சண்ணைக்கடாப் போல்நடையும்

மொண்ணை முகமும்

வேறு கீறி ஒட்டவைத்த

ஏறு காது மாய் – நேமி

வீரனார்முக் கூடற்பண்ணைக்

காரனார்வந் தார்.

மாறு கண் – கோணற் பார்வையுள்ள சுண். பருத்திப் பை–பருத்தி பொதிந்த சாக்குப்பை. ஊளை–சளி, தூங்கல் மெலிவு. சண்ணைக் கடா– பிட்டி நகண்ட கடா. மொண்ணை – மழமழப்பு. இப்பாடல், பண்ணைக்காரனின் உருவமும் நடையும் எடுத்துக் கூறிற்று.

**விதை வகைகளும் மாட்டு வகைகளும்**

- உழவர்கள் பயன்படுத்திய நெல்விதைகளைப் பற்றியும், மாட்டுவகைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

**விதை வகைகள்**

முக்கூடற்பள்ளு உழவுத் தொழிலை மையமாக வைத்துப் பாடப்பட்டது. உழவுத் தொழிலுக்கு அடிப்படையான வித்து (விதை), மாடு, ஏர் ஆகியன பற்றிய விரிவான விளக்கங்களும் அவற்றின் வகைகளும் இங்கே கூறப்பட்டுள்ளன. இவை பழங்கால வேளாண்மைக் கலைச் சொல்லாக விளங்குவதை அறிய முடிகிறது. சீரகச் சம்பா, நெடுமூக்கன், மூங்கிற் சம்பா, கருங்குறுவை, புனுகுச்

சம்பா, பூம்பாளை முதலிய இருபதுக்கும் மேற்பட்ட நெல்விதை வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன (முக். பள். 109).

## மாட்டு வகைகள்

மேலே கூறப்பெற்ற பெயர்கள் நெல்வகையின் பெயர்களாகும். இதைப் போல் மாட்டுவகைகளுக்கும் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. குடைக் கொம்பன், குத்துக் குளம்பன், கூடு கொம்பன், மயிலை, மட்டைக் கொம்பன், கருப்பன், மஞ்சள்வாலன், வெள்ளைக்காளை முதலிய இருபதுக்கும் மேலான பல்வகை மாடுகளின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன (முக். பள். 110). இப்பெயர்கள் மாட்டு வகைகளைக் குறிக்கும்.

## வித்து வகை

நானும் பல பல வெள்ளாண்மை இட்டேன் என்ன பயன்? மணல் வாரியை முன் காலத்திலே நம் பெரு மானின் கட்டளைக்குச் செலவு செய்து விட்டார்கள் அது செலவாகிப் போனதும் சிறிதளவேயிருந்த பூம்பாளை நெல்லையும் செண்ட லங்காரருடைய தொண்டர் கூட்டத் திற்குப் பொங்கிப் போட்டு விட்டார்கள் கலகஞ் செய்யும் வேல் போன்ற கூர்மையான முனைகளையுடைய திரு மங்கையாழ்வான் என்ற நெல்லைத் திருமகள் விழா விற்குச் செலவிட்டனர். அதனையும் மிச்சம் காண வில்லை *மச்சு முறித்தான்' என்ற நெல்லைக் காட்டிச், சொல்லவொண்ணாத அழகுடைய தேவதாசிகளுக்கு, அவர் முன் அதுவும் தீர்ந்தமையால், சொறி குரும்பை நெல்லை விற்றவர் பலர் ஆண்டையே!

பலவெள் ளாண்மையிட் டேன்மணல் வாரியைப்

பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்

செலவு போனதும் போய்ச்சில பூம்பாளை

செண்டலங்காரர் தோப்புக்கே காணும்

கலக வேற்கைத் திருமங்கை யாழ் வானைக்

காணேன் மச்சு முறித்தானைக் காட்டிச்

சொலவொண் ணாத் தெய்வ தாசி களுக்கே

சொறி குரும்பை விற்றார்பலர் ஆண்டே.

**வித்து வகைகள்**

சித்திரக் காலி வாலான், சிறை மீட்டான், மணல் வாரி, கருஞ்சம்பா, செஞ்சூரை, சீரகச்சம்பா, முத்து விளங்கி, மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன் அரிக்கிராவி, மூங்கிற் சமபா, கத்தூரி வாணன், கடை கழுத்தன். இரங்கல் மீட்டான், கல்லுண்டை பூம்பாளை பாற்கடுக்கன், வெள்ளை, புத்தன், கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகளையெல்லாம் இரண்டு பூவுக்கும் காணுமளவுக்குத் தொகுத்து பள்ளன் சேரில் போட்டிருக்கிறான்.

சித்திரக் காலிவாலான் சிறைமீட்டான் மணல்வாரி

செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச்சம்பா

முத்து விளங்கிமலை லை முண்டன்பொற் பாளைநெடு

மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா

கத்தூரி வாணன் காடைக் கழுத்தன் இரங்கல் மீட்டான்

கல்லுண்டை பூம்பாளைபாற் கடுக்கண் வெள்ளை

புத்தன கருங்குறுவை புனுகுச்சம் பாவும் இரு

'பூவுக்கும் விதைசேரிற் போட்டேனா னாண்டே

அந்த நாளிலே வேளாண்மை எவ்வளவு நுட்பமான திறனுடன் நடந்து வந்தது, எவ்வளவு பெருமையுடன் போற்றப்பட்டது என்பதற்கு இந்தப் பாட்டிலே விளங்கும் பல்வேறு நெற்களின் பெயர்களும், அவற்றை வழங்கும் மரபுகளும் சான்று பகரும் நெல்லின் பெயர்கள் எல்லாம் பெரும்பாலும் அதன தன்மைகளை நுட்பமாக அறிந்தே.

**மாடு வகைகள்**

நடந்த அதிசயங்களை எல்லாம் நான் சொல்லக் கேட்பீரானால், முக்கூடலழகரின் பண்ணைக்கு உழவு மாடு எங்கே இருக்கிறது? ஆயிரமல்லியன் விதிவசத்தால் மேற்றிசை நோக்கிப் போனது எங்கு போயிற்றோ? அதனை இன்னமும் திரும்பி வரக்காணேன். எனன சதியாலோ செப்பறை போய்ப் புகுந்த மாட்டை, அது நம்முடைய மாடுதானா? என்பதற்குச் சடை அடையாளம் ஒத்திருக்கிறதா என்று இனித்தான் போய்ப் பார்க்க வேண்டும். எதிரில்லாத மயிலையை ஒரு செட்டி பிடித்துக் கொண்டுபோய் விட்டான் அது வெறும பெட்டை என்று வேறு பலரும் சொல்லுகிறார்கள். ஆண்டையே! நான் என்ன செய்வேன்?

அதிசயந் தன்னைக் கேட்கில் முக்கூடல்

அழகர் பண ணைக்கு உழவுமா டெங்கே?

விதிவசந் தன்னில் ஆயிர மல்லியன்

மேற்றி சைமுகஞ் சேர்ந்தது காணேன்

சதியி லேசெப் பறைபுகு மாட்டைச்

சடைய டையாளம் போய்ப்பார்க்க வேணும்

எதிரில் லாதம யிள்லயுஞ் செட்டிகொண்

டேகினான் பெட்டை என்றார்காண் ஆண்டே

ஆயிர மல்லியன்– ஆயிரமல்லி. என்ற ஊரிலே காளை, ஆயிரம் அல்லியன்' எனக்கொண்டால், அல்லி மலர்களை எனவும்; ஆயிரம் பிடித்த ஆயிரம் மலரச் செய்தலையுடைய சந்திரன் எளகிய கதிரவன் அகவினவும் பொருள் பைக்குக் கஅவன் கூட்டி, மேற்றிசை சேர்ந்தான் எனக் கொள்க. செப்பறை புகு செப்பறை பாசியடையாளம் போய்ப் பார்க்கவேணும் செப்பறை யாகிய தாமிர சபையிலே புகுந்து நந்திப் பெருமானார் இறைவன் திருநடனமிடுங்கால், அவனு டைய சடைகளின் ஆட்டத்திற் கிணங்கத் தாம் தாள எனப்பொருள் டும் அந்த நடனத்தைப் போய்க் காணவேண்டும் மிட்டு ஆடும் அந்த படுவதும் ஒன்று மயிலைச் செட்டி கொண்டேகினான்; பெட்டை என்றார் க பெட்டை என்றார் காண்'

மயிலைச் செட்டியாகிய முருகன் தன் வாகனமாகக் கொண்டு போனான் ; அந்த ஆண் மயிலின் சாயலைப் பலரும் பெண் களின் சாயலுக்கே ஒப்பிட்டு அதனைப் பெட்டையாக்கி யும் கூறுகிறார் பாருங்கள் என்றும் பொருள்.

**சிலேடை**

விதை வகைகள் மாட்டுவகைகள் முதலியவற்றைக் கூறும் புலவர் சிலேடை நயம் தோன்றுமாறு பாடலை அமைத்துள்ளார்.

**ஆயிரம் மல்லியன்**

மாடுகள் பற்றிப் பண்ணைக்காரனிடம் கூறிவரும் பள்ளன் ஆயிரம் மல்லியன் எனும் மாடு மேல்திசை நோக்கி ஓடிப்போனது; அது எங்குப் போயிற்றோ இன்னமும் திரும்பி வரக்காணோம் என்று கூறுகிறான். இக்கூற்றில் ஒரு சிலேடை மறைந்துள்ளது. ஆயிரமல்லியன் என்பது ஆயிரமல்லி என்ற ஊரில் வாங்கிய மாடு என்று பொருள்படும். இதனைப் பிரித்து ஆயிரம் அல்லியன் என்று பொருள் காணமுடியும். ஆயிரம் அல்லி மலர்களை மலரச் செய்த சந்திரன் என்று ஒரு பொருள் உண்டு. ஆயிரம் இதழ்களை உடைய தாமரையை மலரச் செய்த சூரியன் எனவும் ஒரு பொருள் உண்டு. இவ்வாறு மலரை மலரச் செய்தவன் மேல் திசையில் மறைந்தான் என்பது இத்தொடரின் சிலேடைநயம் ஆகும். **(**முக். ப. 70).

'ஒற்றைக் கொம்பன் எனும் காளையைத் தாண்டவராயன் என்பவன் உள்ளூர்க் கோயிலில் அடைத்து வைத்துவிட்டான் என்று ஒற்றைக் கொம்பன் காளையைப் பற்றிப் பள்ளன் கூறினான். இத்தொடரிலும் ஒரு சிலேடை உள்ளது. ஒற்றைக் கொம்பனாகிய யானைமுகனைத் (விநாயகன்) தாண்டவராயனாகிய சிவபெருமான் (நடராசன்) தன்னோடு கோயிலிலேயே வைத்துக் கொண்டான் என்பது சிலேடை ஆகும். **(**முக். ப. 71).

ஒற்றைக் கொம்பன் இருந்ததே! அதனைத் தாண்டவராயன் என்பவன் நம் உளளூர்க் கோவிலுக்கு உள்ளேயே அடைத்து வைத்துவிட்டான் மற்றைக் காளைகள் எல்லாம் நம் நயினார் வடமலையப்பர் இருக்கி றாரே அவர் பேரிட்டு

எல்லாம் கோயிற் காளைகளாகத் திரியும். வயற்காட்டையே காத்துக் கிடக்கும் செம்பருந்து நிறமுடைய ஒரு காளை. அது சுமையைத் தாங்கவும் சக்தியற்றது. புற்றைக் காத்துக் கிடக்கும் பாம்பு அதைக் கடித்துவிட அது அந்த நஞ்சைப் பொறுக்கமாட்டாமல், வானத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும்.

ஒற்றைக் கொம்பனைத் தாண்டவ ராயன்

உள்ளூர்க் கோவிலுக் குள்ளே யடைந்தான்

மற்றைக் காளைகள் எல்லாம் நயினார்

வடம லையப்பர் பேரிட்டு நிற்கும்

பற்றைக் காத்துக் கிடக்கும் ஒருசெம்

பருந்து சாயற்சு மைக்குத் தளப்பன்

புற்றைக் காத்திடும் பாம்பு கடித்துப்

பொருது விண்ணிற் பறக்குங்காண் ஆண்டே!

பணம் பதின் அஞ்சு'- ஐம்பது பணமும் ஆம். வீம்பு- வம்பு- பிடிவாதம். சொல் மோனைக் கட்டு வீண்வம்பு- சொற்கள் மோனையுடன் விளங்கும் சொற்கட்டு. J இவன் பலராலும் ஏசப்படுவதற்கு என்றேதான் வந்து பிறந்தானோ? வரவரக் கூச்சம் என்பதையேகூட மறந்து விட்டானே? இளையவளின் இளமையைத்தான் மறந்து பெரிதாகக் கருதிவிட்டான் திவிட்டான் முதிர்ச்சியடைந்து கொண் டிருக்கும் என்னுடலிலே இருந்த வளமையைக்காண பறித்துக் கொண்டான்.

நீந்தும் அளவுக்கு நீர் நிலைப்பின்றிப் பெருகிவிட்ட பின்பு நிலைப்பு என்ன இருக்கிறது? அதைப் பற் பற்றித்தான் என்ன வீண் பேச்சு; வயலிலே உழுவதைப் பற்றி இவன் கொஞ்சமும் நினைப்பதும் இல்லை; என்னைத் தேடி ஒரு கனைப்புக்கூடக் கனைப்பதும் இல்லை.

**மாட்டு வகைகள்**

குடைக்கொம்பன், செம்மறையன். குத்துக் குளம்பன். மோழை குடைச் செவியன், குற்றாலன், கூடுகொம்பன், மடப்புல்லை, கரும்போரான், மயிலை, கழற்சிக் கண்ணன் மட்டைக்கொம்பன், கருப்பன், மஞ்சள் வாலன் படைப்புப் பிடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன், பசுக்காத் தான், அணிற்காலன், படலைக் கொம்பன், விடத் தலைப்பூ நிறத்தான், வெள்ளைக் காளை, இந்தப்படியான விதங்களிலே ஆயிரம் மாடுகள் உண்மையாகவே இருக் கின்றன, ஆண்டையே!

குடைக் கொம்பன் செம்மறையன்

குத்துக் குளம்பன் மோழை

குடைச் செவியன் குற்றாலன்

கூடுகொம்பன்

மடப்புல்லைக் கரும்போரான்

மயிலை சுழற்சிக் கண்ணன்

மட்டைக்கொம் பன்கருப்பன்

மஞ்சள் வாலன்

படைப்புப் பிடுங்கி கொட்டைப்

பாக்கன் கருமறையன்

பசுக்காத்தான் அணிற்காலன்

படலை கொம்பன்

விடத்தலைப் பூ நிறத்தான்

வெள்ளைக் காளையும் இந்த

விதத்திலுண் டாயிரந்தான்

மெய்காண் ஆண்டே.

குடைக்கொம்பன் - குடைக்கொம்பு போன்ற கொம்பு உடையது. செம்மறையன் - செம்புள்ளிகள் அமைந்த வெண்ணிறக் காளை. குத்துக் குளம்பன் - குளம்புகள் குத்திட்டு நிற்கும் காளை மோழை - கொ. பற்றது. குடைச் செவி- குவிந்த காதுகளையுடையது. குற்றாலன்- குற்றாலத்திலே வாங்கியது. கூடு கொம்பன் - கொம்புகள் முனையிலே பின்னிக் கிடப்பது. மடப் புல்லை - மங்கலான வெள்ளை நிறக் காளை; வெண் சாம்பல் நிறம். கரும் போரான் - வெள்ளையிலே கருப்புப் புள்ளிகளை உடையது. மயிலை - கரு வெள்ளை கழற்சிக் கண்ணன் கழற்சிக் காய்கள் போலக் கண்களை உடையது மட்டைக் கொம்பு - கொமபு வெட்டப்பட்டது. கருப்பன் - காரி நிறக் காளை. படைப்புப் பிடுங்கி வைக்கோற் போரிலேயே பிடுங்கித் தின்னும் வழக்கம் உடையது. கொட்டைப் பாக்கன் · கொட்டைப் பாக்களவு புள்ளி களையுடையது. கரு மறையன் - கருமை அதிகமாகப் படர்ந்த சாம்பற் காளை. பசுக் காத்தான் - பசுக்கள் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருப்பது அணிற்காலன் - அணிற் பிள்ளை போலக் கால்களையுடையது. படலைக் கொம்பன் - பந்தற்கால் போலக் கொப்புகளையுடையது. விடத்தலைப் பூ நிறத்தான் - விடத்தலைப் பூவின் நிறத்தை உடையது. விடத்தலை - ஒருவகைப் பூண்டு வகை ; குளக் கரைகளிலே கிடப்பது. \

## திருக்குறள் வரிகள்

தீச்சுட்ட புண்ணாயிருந்தாலாவாது ஆறிவிடும். ஆனால் அவன் என்னைப் பழித்திடும் நாச்சுட்ட புண் ளோ நாளுக்கு நாள் புரையோடிக் கொண்டே போ. புண் முன்னமேயே அவனைச் 'சீ' என்று என் மனத்திலிருந்து ஒதுக்கிப் போட்டேன் இனி, அவனுடன் வாய்கொடுத்து ஒரு பேச்சுக்கூடப் பேசமாட்டேன்.

அவனோடு நீரும் பேச்சுக் கொடுத்துப் பாரும். மரத்தி லுள்ள கணு செதுக்குவாய்ச்சியால் செதுக்கினால் தான் போகும் இவன் பயப்பட

வேண்டுமானால், பிடித்தது பிடியாய் இவனைக் குட்டையில் மாட்டி அடித்துவையும் ஆண்டையே!

ஏச்சுக்குப் பிறந்தான் – வரவரக்

கூச்சத்தை மறந்தான் – இளையவள்

இளமையைக் குறித்தான் – முதிருமென்

வளமையைப் பறித்தான்

நீச்சுக்கு மேலே – நிலைப்பென்ன

பேச்சுக் கையாலே – உழச்சற்றே

நினைப்பதும் இல்லை – எனைத் தேடிக்

கனைப்பதும் இல்லை

தீச்சுட்ட தாறும் - பழித்திடும்

நாச்சுட்ட தேறும் – அவனைமுன்

சீயென்று கேட்டேன்– நானினி

வாயொன்றுங் காட்டேன்

பேச்சிட்டுப் பாரும்–மரக்கணு

வாச்சிக்குத் தீரும்– பயப்படப்

பிடித்தது பிடியாய்க் – குட்டையில்

அடித்திடும் ஆண்டே!

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு' என்பது குறள். அதன் கருத்தை மேலும் செறிவு உடையதாக்கித், தீச் சுட்டது ஆறும்? பழித்திடும் நாச்சுட்டது ஏறும்' என்று கூறும் நயத்தினை உணர்க. பழைய பதிப்பிலே இந்தக் கண்ணி' ஆனால் முதற் கண்ணியாக, இல்லை.

**பள்ளர்களின் பெயர்கள்**

**கூடி உழுதார்**

சாத்தன், பெரியான். கொன்னைத்தாண்டி அரியான், சடையான், உடையான். கட்டைச் சங்கன், புங்கன்' போத்தன், அருதன், கோணப்பூவன், மருதன். பூலான். வயித்தி வேலான், புலியன், சலியன், காத்தன், வெருகன். கப்புக் காலன், முருகன், கண்டன், கருத்தன், முண்டன், கங்கன், சிங்கன். கூத்தன் முதலாகச் சேரியிலேயுள்ள பள்ளர் எல்லாம் கூடிக் குரவையிட்டு ஏர்மங்கலம் பாடி நாளேர் பூட்டி உழவைத் தொடங்கினார்கள்.

சாத்தன் பெரியான் கொன்னைத்
தாண்டி அரியான்
சடையான் யான் கட்டைச்
சங்கன் புங்கன்
போத்தன் அருதன் கோணப்
பூவன் மருதன்
பூலான் வயித்தி வேலான்
புலியன் கலியன்
காத்தன் வெருகன் சுப்புக்
காலன் முருகன்
கண்டன் கருத்த முண்டன்
கங்கன் சிங்கன்
கூத்தன் முதலா யுள்ள
பள்ளர் எல்லாம்
குரவையிட் டேரைப் பூட்டிக்
கூடி யுழுதார்.

அந்த நாளிலே பள்ளர்களிடையே வழங்கி வந்த பல பெயர்கள் இதன்கண் காணப்படும். சிலகுணங்களை ஒட்டியும். சில மதச்சார்பு பற்றியும் அமைந்திருக்கக் காணலாம்.

**வழக்குச் சொற்கள்**

அங்கே அவன் வந்தால்தான் என்னடி மருதூர்ப் பள்ளி: ஊராருடைய ஆமக்களைத் தொடர்ந்து உன்னைப் போல எவளடி இதற்குமுன் வந்திருக்கிறாள்?

எங்கே வந்தாலும் என்னடி முக்கூடற்பள்ளி? வீட்டுக்குள் வந்து விட்டதனால் காடு கஸ்தூரிப் பூனையும், வீட்டுப் பூனைக்கு ஒப்பாகப் போய்விடுமோடீ? பூனையும்

அங்கேயவன் வந்தாலென்ன மருதூர்ப் பள்ளி–ஊரார்

ஆமக்களைத் தொடர்ந்துனைப் போல் ஆரடி வந்தாள்?

எங்கேவந் தாலுமென்ன முக்கூடற் பள்ளி – வீட்டில்

எய்திற் காட்டு நாவி பூனைக் கிணை யாமோடி?

[ஆமக்கள் – கணவர் 'அடுத்த ஊரிலிருந்து வந்தாலும் நான் கஸ்தூரிப் பூனை போன்றவள்; நீ விட்டுப் பூனை தான்' என்கிறாள் இளையவள். ]

நாவி என்றாய்! பூனை என்றாய்! மருதூர்ப்பள்ளி, இந்த நாவி நான் தானடீ; பூனை மட்டுமல்ல, மூளி நாயும் நீதானடீ. சாகத் துடிப்பவள் மாதிரி ஆட்டம் போட வேண்டாம். முக்கூடற்பள்ளி பேச்சிலே மிதமிஞ்சி ஏதாவது பேசினால் உன் நெஞ்சை அறுத்துவிடுவேன்.

நாவி என்றாய் பூனையென்றாய் மருதூர்ப்பள்ளி –நாவி

நானடி பூனை மூளி நாயும் நீயடி

வீவியாட்டம் ஆடவேண்டாம் முக்கூடற் பள்ளி–பேச்சில்

மிஞ்சிப் பேசில் நெஞ்சறுப்பேன் அஞ்சிப் பேசடி

வீவியாட்டம் – அணையப் போகும் விளக்குச்சுடர் ஆடுவது போன்று. சாவுக்குமுன் நேரும் துடிதுடிப்பு; துள்ளிக் குதித்து ஆடும் ஒருவகையான குந்தாட்டமும் ஆம்]

அஞ்சச் சொன்னது என்னை எதற்காகவடி மருதூர்ப் பள்ளி? உனக்கு ஆசைப்பட்ட குடும்பன் அவனை உனக்கு அஞ்சிக் கிடக்கச் சொல்லடி இருக்கிறானே,

உன்னைப்போலச் பயப்படுவேனோ நான் நான சிறுமைத்தனம் உடையவளுக்குங் கொண்டு போய்க் குட்டையிலே மாட்டிப் போடு; உனக்கு அவன் கும்பிட்டு அஞ்சிக் கிடப்பான்.

**மூத்த பள்ளி –இளைய பள்ளி சைவ–வைணவ பூசல்கள்**

சாதிக்கிற தந்திரமெல்லாம் உனக்குந்தான் வரும். மருதூர்ப்பள்ளி! நரிசுகளையே பரிகளாக மாற்றிச் சாதித் தவன் உங்கள் சிவபெருமான் அல்லவோடி? என்ன தவறு உண்டாக்குவதற்காக இப்படிப் பேசிச் சாதிக்க வருகிறாய். முக்கூடற்பள்ளி? கல்லையும் பெண்ணாக, சாதித்தவன உங்கள் கண்ணன் அல்லவோ....

சாதிப்பது உனக்கு வரும் மருதூர்ப்பள்ளி - நரிதான்

பரியாய்ச்சா தித்தானுங்கள் சம்புவல் லோடி?

பேதிக்கச்சா திக்க வாராய் முக்கூடற்பள்ளி – கல்லைப்

பெண்ணாகச் சாதித்தானுங்கள் கண்ணன் அல்லோடி!

நரி பரியாய்ச் சாதித்தது: மாணிக்கவாசகருக்காகச் சிவபெருமான் காட்டு நரிகளையெல்லாம் குதிரைகளாக கிய திருவிளையாடல். கல்லைப் பெண்ணாகச் சாதித்தது இராமாவதாரத்தில். கல்லாய்க் கிடந்த அகலிகைக்குச் சாப விமோசனம் தந்து அவளைப் பெண்ணாகச் செய்தது.

மங்கை யொருத்தி தன் தன் ஒரு பாகத்திலேயே இருக்கவும் தான் யோகியென்று சொல்லிக் கையிலே மழுவையும் ஏந்த நின்றானே, அவன், உங்கள் ஊமத்தை மாலையணிந்தி சிவன் அல்லவோடி?

மங்கையொரு பங்கிருக்க போகியென்று தான் –கையில்

மழுவேந்தி நின்றானுங்கள் மத்தன் அல்லோடி?

மன்மதனைத் தன் மரு மருமகன் என்றுகூட எண்ணிப் பார்க்காமல் முதலில் கோபித்துக் கண்ணிலே நெருப்பைக் கொட்டியவன் உங்கள் முதல்வன் அல்லவோடி?

மாமனென்றும் பாராமல் முன்னாளிலே கஞ்சனைக் கொன்றே கண்களில் என்றும் மாறாத பூவிழப்பெற்றவள் உங்கள் மாயவன் அல்லவோடி?

காமனை மருகனென்று

எண்ணிப் பாராமல் காய்ந்து

கண்ணிலேறு பட்டானுங்கள்

கர்த்தன் அல்லோடி?

மாமன் என்று பாராமல்முன்

கஞ்சனைக் கொன்றே – கண்கள்

மாறாதேபூப் பட்டானுங்கள்

மாயன் அல்லோடி?

மன்மதன்– திருமாலிடத்துப் பிறந்தவன்; ஆதலின் சிவனுக்கு மருமகனானான். அவனை எரித்ததனால் கள் ஏறுபட்டவர் சிவன் என்கிறாள் மூத்தவள்.

மாயவன் கண்கள் செந்தாமரைக்கண்கள். அதனைக் கஞ்சனைக் கொன்ற பாவத்தால் கண்ணிற் பூலிழுந்ததாக இளையவள் சொல்லுகிறாள். கண்ணிற் பூவிழுந்தால் கண்பார்வை கெடும்.

பெண் ஒருத்திக்காக ஆசைப்பட்டுப் பொன்னின் மய மான பனிமலையேறிப் போனவன், உங்கள் சிவபெருமான் அல்லவோடி?

காதல் கொண்டு தம்பியோடு சீதை பொருட்டாக. அந்நாளிலே கடல்கடந்து போனானே, அவன் உங்கள் கண்ணன் அல்லவோடி?

மாதொருத்திக் காசைப்பட்டுப்

பொன்னின் மயமாம் – பனி

மலையேறிப் போனா னுங்கள்

மத்தனல லோடி?

காதலித்துத் தம்பியுடன்

சீதை பொருட்டால் – அன்று

கடலேறிப் போனா னுங்கள்

கண்ண னல்லோடி?

தான் பசுப்போல நின்றுகொண்டு தன் கன்றைத் தேர்க்காலிலே வீழவிட்டு, அதனால் சோழனுடைய மகனைக் கொன்றானே, அவன் உங்கள் தாணுவல்லோடி

பெரிய பழிக்கு உள்ளாகித் தகவலிமையுடையவன் போல மறைந்தே நின்று வாலியைக் கொன்றானே, அவன் உங்கள் மாயன் அல்லவோடி?

தான்பசுப்போல் நின்று கன்றைத்

தேர்க்காலில் விட்டே – சோழன்

தன்மகனைக் கொன்றா னுங்கள்

தாணு வல்லோடி?

வான் பழிக்கு ளாய்த்தவசி

போல மறைந்தே - நின்று

வாலியைக் கொன்றா னுங்கள்

மாயன் அல்லோடி?

ஈசன் பசுவாகவும் இயமன் கன்றாகவும் வத்ததாகத் கூறுவர். பசுபதியாயிருந்தும் அதன் கன்றைக் கொல்லத் துணிந்தவன் அல்லவா? என்பது குறிப்பு. தவக்கோலங் கொண்டும் பழி செய்தானே திருமால்? என்பது மறுப்பின் குறிப்பு

சுந்தரன் திருமணத்திலே வல்வழக்குப் பேசிச் சென்று அன்று அவன் வாயால் வையக்கேட்டு நின்றானே, அவன் உங்கள் ஐயன் அல்லவோடி?

சிசுபாலன் புலிபோல எழுந்து வையவே, சபை நடுவிலே ஏழைபோல ஒடுங்கி நின்றானே. அவன் உங்கள் நீலவண்ணன் அல்லவோடி?

வலிய வழக்குப் பேசிச் சுந்தரன் வாயால் அன்று

வையக்கேட்டு நின்றா னுங்கள் ஐயன் அல்லோடி?

புலிபோல் எழுந்து சிசு பாலன் வையவே – ஏழை

போலநின்றான் உங்கள் நெடுநீலன் அல்லோடி?

சுந்தரன் வையக் கேட்டு நின்றது. தடுத்தாட் கொண்ட திருவிளையாடல். கண்ணனைச் சிசுபாலன் ஏசியது உருக்குமணி மணத்தின்போது.

இடுப்பிலே சுற்றிக் கட்டுவதற்கு ஒரு நாலுமுழத் துண்டு கூடக் கிடையாமல் புலித்தோலை எடுத்து உடுத் தானே அவன் உங்கள் சோதி அல்லவோடி?

கற்றையாகச் சடையையும் கட்டி மரவுரியையும் இடுப்பிலே முன்காலத்திலே கட்டிக் கொண்டானே அவன் உங்கள் சங்குக் கையனாகிய திருமால் அல்லவோடி?

சுற்றிக்கட்ட நாலுமுழத் துண்டு மில்லாமல் – புலித்

தோலை உடுத்தா னுங்கள் சோதி அல்லோடி?

கற்றைச்சடை கட்டிமர வுரியுஞ் சேலைதான் – பண்டு

கட்டிக் கொண்டான் உங்கள்சங்குக் கையன் அல்லோடி?169

சிவன் தாருகாவனத்து முனிவர் ஏவிய புலியைக் கொன்று அதன் உரியை உடுத்ததையும் இராமன் மரவுரி தரித்துக் கானகம் சென்றதையும் இவ்வாறு கூறினர்.

ஊருக்குள்ளே பிச்சை எடுத்துத் திரிந்தும் பசிக்கு ஆற்றமாட்டா தவனாகக், கடல் நஞ்சை எல்லாம் எடுத்து உண்டானே, அவன் உங்கள் நாதன் அல்லவோ.

மாட்டு மந்தைக்குப் பின்னாகவே திரிந்துங்கூடச் சோற்றுக்கு வழியில்லாமல் வெறும் மண்ணைத்தின்றானே அவன் உங்கள் உங்கள் மேகவண்ணன் அல்லவோடி?

நாட்டுக்குள் இரந்தும் பசிக்கு ஆற்ற மாட்டாமல் - வாரி

நஞ்சையெல்லாம் உண்டா னுங்கள் நாதனல் லோடி?

மாட்டுப் பிற கேதிரிந்தும் சோற்றுக் கில்லாமல் - வெறும்

மண்ணையுண்டான் உங்கள்முகில் வண்ணனல் லோடி?[சிவன் இரந்துண்டது பிரமனின் தலையோடு தன் கையினின்றும் போவதற்காகக் கொண்ட பிட்சாடனக் கோலம். வாரி நஞ்சையுண்டது பாற்கடல் கடைந்த நாளில். மாடு- செல்வமும் ஆம். மாட்டுப் பிறகே திரிந்தும் சோற்றுக்கு இல்லாமற்போன கதி அடைந்தானாம்; அதனாலே மண்ணை உண்டானாம். இது கண்ணன் மண்ணுண்ட கதை.

ஏறிச் செலுத்துவதற்குத் தகுந்த ஒரு வாகனமும் இல்லாமையினாலே மாட்டின்மேல் ஏறிக்கொண்டே திரிந் தான். அவன் உங்கள் ஈசன் அல்லவோடீ?

வீறாப்பான பேச்சு என்னடி? அந்த மாடுகூட இல்லாமற் போனதனால்தானே பறவை மீதிலேறிக் கொண்டான் உங்கள் கீதன், இது உண்மை அல்லவோடீ?

ஏறவொரு வாகனமும் இல்லா மையினால் -மாட்டில்

ஏறியே திரிந்தானுங்கள் ஈசன் அல்லோடி?

வீறு சொன்ன தென்னமாடு தானுமில்லாமல் - பட்சி

மீதிலேறிக் கொணடானுங்கள் கீதன் அல்லோடி?

(கீதன்-வேணு கானத்தை யுடையவன் . பட்சி -கருடன்]

**பள்ளியர் சமாதானம்**

பெருமாளுடைய அடியானுக்கு மனைவியாக இருந் துமே நீ எங்கள் பெருமாளைப் பழித்துப் பேசலாமோடீ? பள்ளனைத் திருமால் அடிமை என்றாய்? எவரும் மிகவும் பசி எடுத்தால் தின்னாது என ஒன்று இருக்கிறதோ? அதேபோலச் சினம வந்தால் சொல்லாதது உண்டோ?

பெருமாள் அடியானுக்குப் பெண்டிருந்துமே - எங்கள்

பெருமாளை நீ பழித்துப் பேசலா மோடி?

திருமால் அடிமையென்றாய் சாலப் பசித்தால் - ஆருந்

தின்னாததுண்டோ சினந்தால் சொல்லாத துண்டோ?

இருவருடைய ஆத்திரமும் இத்தனை வகையாகப் பேசவே கொஞ்சம் அடங்கிக்கொண்டே வந்தது. அவர்கள் பேச்சிலே பிறந்தது]

தீராண்மை மிகவும் நன்றாகச் சொன்னாய் மருதூர்ப் பள்ளி போ! போ! என்னதான் கோபப்பட்டாலும் சீர் அழியச் சொல்லலாமோ?

எனக்குக் கோபம் வராதோ முக்கூடற்பள்ளி? முதலிலே வைதவரை வாழ்த்தினவர் இதுவரை எவராவது இந்த உலகத்தில் தான் உண்டோ?

தீராண்மைநன் றாகச் சொன்னாய் மருதூர்ப் பள்ளி - போபோ

சினந்தாலுஞ் சீரழியச் சொல்லலா மோடி!

வாராதோ எனக்குக் கோபம் முக்கூடற் பள்ளி - முந்த

வைதவரை வரழ்த்தினவர் வையகத் துண்டோ?

(தீராண்மை - தன்னைச் சாட்டிய பழியினின்றும் விடுபடுவதற்கான திறமுடைய பேச்சு ']

*****

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | முக்கூடற் பள்ளு குறிப்பிடு பள்ளன் பெருமையை விளக்குக. | K3 | CO2 | PO4 |
| 2 | பள்ளு இலக்கியத்தில் கூறப்பட்ட விவசாயம் குறித்து எழுதுக. | K5 | CO4 | PO2 |
| 3 | மலை வளம் குறித்து எழுதுக. | K2 | CO1 | PO1 |
| 4 | நெல் வகைகள் பற்றி குறிப்பு வரைக. | K3 | CO5 | PO2 |
| 5 | நதியின் வருணைகுறித்து எழுதுக. | K1 | CO6 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் இலக்கியத்தில் பள்ளு வகை சிற்றிலக்கிம் பற்றி கட்டுரைவரைக. | K2 | CO1 | PO4 |
| 2 | மூக்கூடற் பள்ளுவின் சிறப்புகளை விவரிக்க | K4 | CO2 | PO5 |
| 3 | மூக்கூடற் பள்ளுவில் கூறப்பட்டுள்ள குடிச்சிறப்புகளை எழுதுக. | k2 | CO3 | PO2 |
| 4 | மூத்தப்பள்ளி, இளையபள்ளி இடையே உள்ள முரண்களை விவரிக்க | K1 | CO2 | PO1 |
| 5 | மூக்கூடற் பள்ளுவில் கூறப்பட்டுள்ள பள்ளர்களின் வாழ்வியயை குறித்து விவரிக கட்டுரைக்க. | K4 | CO4 | PO3 |

# அலகு 5

## மதுரைக் கலம்பகம் (புயவகுப்பு, அம்மானை)

பலவகை மலர்கள் கலந்த மாலையைக் கலம்பக மாலை என்று சொல்லலாம். பல வகைப் பொருட்களும், அகத்துறை சார்ந்த பாக்களும் பலவகை யாப்புக்களும் கலந்ததால் கலம்பகம் என்று பெயர். இக்கலம்பகத்தை இயற்றியவர் குமரகுருபர ஸ்வாமிகள். இவர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் சுமார் 650 வருடஙளுக்கு முன் பிறந்தவர். 5 வயது வரை வாய் பேசாமல் இருந்தவர், திருச்செந்தூர் முருகன் அருளால் ஊமை நீங்கப் பெற்று, "கந்தர் கலி வெண்பா" பாடினார். மதுரை சென்ற சமயம் அங்கு கோயில் கொண்டிருக்கும் மீனாக்ஷி அம்மையின் மேல் மீனாக்ஷி பிள்ளைத்தமிழ் பாடினார். மதுரைக் கலம்பகமும் இயற்றினார். இக்கலம்பகம் பல உறுப்புக்களைக் கொண்டு விளங்குகிறது.. மதங்கியார், பிச்சியார், கொற் றியார், இடைச்சியார், வலைச்சியார் என்றும் ,அறம், குறம், சித்து, களி, ஊர் அம்மானை, ஊசல் என்னும் உறுப்புக்கள் இதில் இடம் பெறுகின்றன.

### புயவகுப்பு

பாட்டுடைத் தலைவனுடைய தோள் வலிமையை மிகுத்துக் கூறுவது புயவகுப்பு.

ஐயனின் மலையொத்த தோள் களை வணங்கி புயவகுப்பு பாடுகிறார். ஐயனே! தாரு காவன முனிவர்கள் ஏவி விட்ட யானையின் தோல் போர்வையாக உன் தோள்களில் அலங்கரிக்கிறது. அவர்கள் ஏவிய புலியின் தோலை உன் இடுப்பில் ஆடையாக அணிந்திருக்கிறாய். தூணிலிருந்து உக்கி ரமாக ஆக்ரோஷத்துடன் வெளிப்பட்ட நரசிங்கத்தின் வலி அடக்கி உன் தோள்கள் பூரித்தன. அதே புயங்கள் திருக்கோலக்கா என்னும் தலத்தில் ஞான சம்பந்தப் பெருமானுக்குப் பொன் தாளம் வழங்கின. மிகவும் பெருமையோடும்,

கர்வத்தோடும் இடியென ஆரவார மிட்டு வந்த ஏமநாதனைத் தோற்கடிப்பதற்காக உன் திருப்புயங்கள் விறகு சுமந்து, சாதாரிப் பண் பாடி மதுரையை விட்டே அவன் ஓடும்படி செய்து பாண பத்திரனின் மானம் காத்தது.

அதே புயங்கள் வந்தி என்ற கிழவி தந்த பிட்டைக் கனிவோடு ஏற்று அவளுக்கென்று ஒதுக்கப்பட்ட கரையை சரிசெய்யக் கூடையில் மண் ணும் சுமந்தன. அதுமட்டுமா? உருவிய வாளுடன் வந்த பாண்டிய மன்னனின் பிரம்படி பட்டு நடுங்கின. தடாதகைப் பிராட்டியத் தழுவிய சுந்தரேசன் பொற் புயங்கள் இவ்வளவு திருவிளையாடல்களையும் நிகழ்த்தின.

பொரு சமரிடை யெதிர் பிளிறும் ஓர் களிறு
பிளந்தொரு போர்வை புறஞ்சுற்றி நின்றன
புகையெழ அழல் உமிழ் சுழல் விழி உழுவை
வழங்கும் ஓராடை மருங்குற்கு அணிந்தன
புல எயிறு அயில் தரு குருதியொடு உலவு
மடங்கலின் வீரம் ஒடுங்கத் துரந்தன
புகலியர் குரிசில் பண்ணொடு தமிழ் அருமை
அறிந்தொரு தானம் வழங்கப் புகுந்தன
உருமிடி யென வெடி பட எதிர் கறுவி
நடந்தொரு பாணன் ஒதுங்கத் திரிந்தன.
உருகிய மனமொடு தழுவி ஓர் கிழவி
கருந்துணி மேலிடு வெண்பிட்டுகந்தன
உறுதியொடு அவள் மனை புகும் வகை கடிது
சுமந்தொரு கூடை மண் உந்திச் சொரிந்தன
உருவிய சுரிகையொடு எதிர்வரு செழியன்

பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன

தமிழ் மதுரையில் ஒரு குமரியை மருவு

சவுந்தர மாறன் தடம் பொற் புயங்களே.

[களிறு–தாருகாவன முனிவர் ஏவிய யானை. போர்வை---யானைத்தோலாகிய போர்வை. உழுவை–முனிவர்கள் ஏவிய புலி. மடங்கல்---சிங்கம்; இங்கே நரசிங்கம். புகலியர் குரிசில்----திருஞான சம்பந்தர். வெடி---ஓசை. கறுவி–கோபித்து. நடந்த ஒரு பாணன்---ஏமநாதன். ஒதுங்க----ஓட. ஓர் கிழவி–வந்தி என்ற கிழவி. மனை–அடைப்பதற்காக அரசால் ஒதுக்கப்பட்ட இடம். சுரிகை--உடைவாள். என்று ஐயனின் புயவலிமையைப் போற்றுகிறார். குமரகுருபரர்.

**அம்மானை**

மதுரை நகரில் பால்போல் நிலாவீசும் முற்றங்களிலே பெண்கள் அம்மானை ஆடுகிறார்கள். அவர்கள் அணிந்திருக்கும் பூமாலைகளிலிருக்கும் வண்டுகள் ராகம் பாடுகின்றன. பெண்களுடைய கூந்தலிலுள்ள மலர்களில் தேன் கொப்பளிக்கிறது. அப்பெண்களுக்கு இடை இருக்கிறதா இல்லையா என்ற கேள்வி பிறக்கிறது புலவருக்கு. முத்துப் பந்தலில் அம்மானை ஆடும் பெண்கள் கண் இமைக்காமல் அம்மானைக் காய்களையே பார்த்து தேவலோகத்துப் பெண்களோடு விளையாடுகிறார்கள். அவர்கள் விளையாடும்போது இப்பொழுது இவர்கள் கண் இமைக்காமல் ஆடுவதாலும் இவர்களுடைய பேரழகாலும் இவர்களுக்கும் தேவமகளிருக்கும் வேற்றுமை தெரியவில்லையாம்! மதுரைப் பெண்கள் தேவமகளிர்போல் தோற்றமளிப்பதால் தேவர்களுக்கே மதுரைப் பெண்களுக்கும் தேவமகளிர்க்கும் வேற்றுமை தெரியவில்லை. மதுரை மகளிரின் அழகு, நாகரிகம். அம்மானையாடும் திறம் முதலியவற்றைப் பாராட்டுகிறார்.

மூன்று பெண்கள் ஒருவருக்கொருவர் கேள்வியெழுப்பிய வண்ணம் அம்மானைக் காய்களை வைத்து விளையாடுவது அம்மானையாகும்.

இருவருக்குங் காண்பரிய வீசர்மது ரேசனார்

விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்கா ணம்மானை

விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகில

அருமையுடம் பொன்றிருகூ றாவதே னம்மானை

ஆனாலுங் காயமிலை யையரவர்க்கம்மானை.

மூன்றுமகளிர் தம்முள் வாதஞ்செய்து அம்மானை யாடுவதைக் கூறுவது இது. இதில் முதலிரண்டடியும், அடுத்த இரண்டடியும், ஈற்றடியும் தனித்தனியே ஒவ்வொருத்தி கூற்று.

இருவர் – பிரமதேவரும் திருமாலும். (பி–ம்.) 'மதுரேசர்' . விருதுகட்டி – வெற்றிக்குரிய சின்னங்களை அணிந்து. அங்கம் வெட்டி – சித்தனென்பவனுட்ய அங்கத்தை வெட்டி; அங்கம் வெட்டுதல்: யுத்தபரிபாஷைகளுள் ஒன்று (திருவால. 35 :14.) இருகூறு – இரண்டு துண்டம்; இறைவன் கூறும், அம்பிகையின் கூறும்; அர்த்த நாரீசுவர வடிவத்தைக்குறித்தபடி; "ஒன்றே யுடம்பங் கிரண்டே யிடும்பங்கு" (110,) காயம் – புண், உருவத் திருமேனி;

**சிலேடை.**

தோற்றவருக்கு அல்லாமல் வென்றவருக்கு உடம்பு இரு கூறாதற்குக் காரணமில்லை யென்றபடி.

சிவபத்திச் செல்வம் வாய்ந்தவரும் ஆயுதக்கலைகளைக் கற்பித்து வந்தவருமான தன் ஆசிரியர்பால், அவருடைய மாணாக்கனான சித்தனென்பவன் பொறாமை கொண்டு, தானும் ஒரு கருடிக்கூடம் உண்டாக்கிச் சிலருக்குக் கற்பித்து அவருடைய வருவாயைக் குறைத்தற்கு முயன்று வேறு தீங்கும் இழைத்தபொழுது கருணையங்கடலாகிய சோமசுந்தரக் கடவுள் அந்த ஆசிரியரது வடிவங்கொண்டு அவனைப் போருக்கு அழைத்து அவனுடைய அங்கங்களை வெட்டி வென்றாரென்பது இங்கே குறிக்கப்பட்ட வரலாறு. இச்செய்தி அங்கம் வெட்டின படலத்தால் அறியப்படும்.

**திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்**

திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் பகழிக்கூத்தரால் திருச்செந்தூரில் கோவில் கொண்ட முருகனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம். இன்றும் சில முருகன் ஆலயங்களில் திருப்புகழ் ஓதியபின் இறுதியில் திருச்செந்தூர் பிள்ளைத்தமிழிலிருந்து சில பாடல்களைப் பாடும் வழக்கம் உள்ளது. இலங்கையில் வீட்டுக்குப் பூமி பூஜை செய்யும் போது திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் நூலைத் திருச்செந்தூர் தலபுராணத்துடன் வைத்து வழிபாடு செய்த பின்னரே கட்டட வேலைகள் துவங்கும் என்று கூறப்படுகிறது. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழை இயற்றியவர் பகழிக்கூத்தர். 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தீவிர வைணவரான கூத்தர் தீராத வயிற்றுவலி தீர முருகனை வேண்டிப் பாடியது எனக் கூறப்படுகிறது.

**வருகைப்பருவம்**

ஆறாவது பருவமாகிய வருகைப் பருவம் குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் நிகழ்வதாகும். இதனை வாரானைப் பருவம் என்றும் போற்றுவர். வரவேற்றல் என்பது தமிழர் பண்பாட்டில் தலை சிறந்த ஒன்றாகும். இப்பான்மையில் தோன்றியதே வருகைப் பருவமாகும். தத்தித் தத்தி தளர்நடை இட்டு வரும் குழந்தையை அருகில் வருக! வருக! என வாய் குளிர மெய்மகிழ அழைக்கும் பருவமே வாரானைப் பருவம் ஆகும். குழந்தையை அவ்வாறு வரவேற்கும் பொழுது அதன் சிறப்புகளையெல்லாம் எடுத்துச் சொல்வர்.

**வருகைப் பருவம் வாரனைப் பருவம்**

மூரிப்ப கட்டு வரிவாளை

முழங்கிக் குதிக்கக் கால்சாய்ந்து

முதிர விளைந்து சடைபின்னி

முடங்கும் பசுங்காய்க் குலைச்செந்நெல்

சேரிக் கருங்கை மள்ளர் குயந்

தீட்டி அரிந்த கொத்தினுக்குத்.

தெண்முத் தளக்கச் சிறுகுடிலிற்

சேரக் கொடுபோய் அவர்குவிக்க

வேரி குவளைக் குழியில்வரி

வெண்சங் கினங்கள் ஈற்றுளைந்து

மெட்டில் உகுத்த பருமுத்தை

வெள்ளோ திமந்தன் முட்டையென

வாரிக் குவிக்குந் திருச்செந்தூர்

வடிவேல் முருகா வருகவே வருகவே

வளருங் களபக் குரும்பை முலை

வள்ளி கணவா வருகவே.

கோடுகளை உடைய பெரியதான ஆண் வாளைமீன் பெரிய ஒலியுடன் குதித்ததனால் அடிப்புற மானது சாய்ந்து முற்றி விளைந்து சடை மாதிரி பின்னி வளைந்திருக்கின்றற பசுமையான நெல் கதிரை சேரியில் வாழ்கின்ற பெரிய கையினை உடைய மள்ளர்கள், அரிவாளை ட்டி அறுத்துக் குவித்த குவியலுக்குக் கூலியாகக் “ தெளிவான ஒளியுடைய முத்தினை அளக்க; மள்ளர்கள் அதனை எடுத்துச் சென்று தங்களின் சிறிய குடிசையில் குவித்துவைப்பார்கள். மணம் மிக்க குவளை மலர்கள் மலரும் பள்ளங்களில் கோடுகளை உடைய வெண்மை நிறமான சங்குக் கூட்டங்கள் கருக்கொண்டு வருத்தமுற்று மேட்டில் ஈன்று சென்ற பெரியதான முத்துக்களைத் தங்களுடைய முட்டைகள் என்று அன்னப் பறவைகள் வாரிக் குவிக்கும்.

அத்தகைய வளமான திருச்செந்தூர்க் தலத்தில் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமானே வருவாயாக. கூர்மையான வேலைத் தாங்கியிருக்கின்ற முருகப் பெருமானே வருவாயாக. வளர்கின்றதும் சந்தனக் குழம்பு பூசியதுமான தென்னங்குரும்பை போன்ற முலைகளை உடைய வள்ளியின் தலைவனே வருவாயாக.

புள்ளம் தீர்ந்தகதிற் சென்றனார்

போரிற் பகடுதனை நெருங்கப்

பூட்டி அடித்து வைகளைந்து

போதக் குவித்த பொலிக்குவையை

விள்ள அரிய குடகாற்று

வீசப் பகடு தனைநீக்கி

வெள்ளிக் கிரிபோற் கனகவட

மேரு கிரிபோல் மிகத்தூற்றிக்

கள்ளம் எறியுங் கருங்கடைக்கட்

கடை பிறித்த மணிமுத்தைக்

களத்தி லெறிய அம்முத்தைக்

கண்டுகுடித்த கட்குவிலை

மள்ளர் அளக்குந் திருச்செந்தூர்

வடிவேல் முருகா வருகவே

வளருங் களபக் குரும்பைமுலை

வள்ளி கணவா வருகவே.

அரிவாளால் அறுவடை செய்த செம்மை நிறமான நெல் கதிர்களைக் குவித்து வைத்த போரில் காளைகளைப் பூட்டி நெருக்கமாக ஓட்டி நெல் தனியாக, வைக்கோல் தனியாக பிரித்துக் குவித்துவைத்து நெல் குவியலை மேற்கிலிருந்து வீசுகின்ற மேலக் காற்றில் தூற்றி, வெள்ளி மலைபோலவும், பொன் மயமாக வடஇசையில் உயர்ந்திருக்கன்ற மேருமலை போலவு குவித்து, நன்றாகத் தூற்றி, உள்ளத்தில் இருக்கின்ற கள்ளக் குணத்தை வெளிப்படுததுகின்ற, கருமை நிறமான கண்களை உடைய உழத்தியர்கள், நெல்லில் இருந்து பிரித்து எடுத்து அழகான முத்து மணிகளைக் களத்தில் ஏறிந்துவிட்டுச் செல்ல, அதனைக் கண்ட உழவர்கள்

தாம் குடித்த கள்ளுக்கு விலையாக அளக்கும் வளம் மிக்க திருச்செந்தூரில் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமானே, வருவாயாக. வளர்கின்ற தன்மை உடைய முலையில் வந்தனம் பூசிய தென்னங் குரும்பை போன்ற முலைஇணைய உடைய வள்ளியின் கணவனே வருவாயாக.

**அம்புலிப்பருவம்**

அம்புலி என்பது சந்திரனைக் குறிக்கும். விண்ணில் விளங்கும் சந்திரனை விளையாட வருமாறு அழைக்கும் பருவம் அம்புலிப் பருவம். பிள்ளையின் பதினைந்தாம் மாதத்தில் இது நிகழும். நடக்கக் கற்றுக் கொண்ட குழந்தை அங்குமிங்கும் சென்று காட்சிகளைக் காண மிகுதியாக விரும்பும். வெண்ணிலவை குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கும் பொழுது

1. குழந்தையுடன் சரி நிகராக அம்புலியை எண்ணுதல்
2. அம்புலியும் குழந்தையும் வேறுபடுதல்
3. விளையாட வருவதனால் ஏற்படும் நலன்களைக் கூறுதல்
4. வருந்தி அழைத்தும் வரவில்லையாயின் இன்ன தண்டனை பெறுவாய் என்று கூறுதல்

எனச் சாம பேத தான தண்ட முறையில் அமைவது இப்பருவமாகும். அவ்வாறு அழைக்கும் பொழுது சிலேடை முதலிய அணி இலக்கணங்கள் பயன்படுத்தப்படும்

கலையால் நிரம்பாத கலை உனக்குண்டு நிறை

கலையுண் டி. வன் தனக்குக்

களங்கமரு குறமான் உனக்குண்டு குறமான்

கருதீதுண் டி. வன் தனக்குத்

தொலையாத கணமுன் டுனக்குமங் கலகணத்

தொகையுண் டி. வன் தனக்குத்

துளியமுத முண்டுனக் கிவனுக்கு மாறாத

சொல்லமுதம் உண்டு னக்குத்

கொலையா டராவழிப் பகையுண்டு கருவிடங்

கொப்பளிக் குங்கட் செவிக்

கொளரா வைக்கொத்து யெறியுமே காரமிக்

குமரனுக் குண்டு. கண்டாய

அலையாழி சூழ்திருச் செந்தில்வடி வேலவா

அம்புலீ ஆடவாவே

அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்

அம்புலீ யாடவாவே.

கலையால் முழுமையடையாத கலை உனக்கு உண்டு. முருகப்பெருமானுக்கு நிறைந்த கல்வி அறிவு உண்டு. உனக்குக் களங்கமாக உன்னிடம் வாழ்கின்ற முயலகன் என்னும் மான் உண்டு. முருகப்பெருமானுக்கோ குறவர் குலப் பெண்ணாகிய வள்ளியின் மனத்தில் அன்பு உண்டு. என்றும் உன்னைவிட்டு பிரிந்திடாத நட்சத்திரக் கூட்டங்கள் உனக்கு உண்டு. முருகப்பெருமானுக்கோ சிவ கணங்களின் கூட்டம் உண்டு.

சிறிதளவு மட்டும் அமுதம் உன்னிடம் உள்ளது. முருகனிடமோ என்றும் குறையாத சொல்லமுதம் உண்டு. உனக்கு கொலைத் தொழில் புரியும் இராகு, கேதுகளின் பகை உண்டு. கடுமையான விடத்தை உமிழும் தன்மை கொண்ட கண்ணே காதாக உடையதுமாகிய கொடிய பாம்புகளைக் கொத்தித் துண்டாக்கும் மயில் வாகனம் எம் முருகப்பெருமானுக்கு உண்டு.

அதனால் அலைகள் நிறைந்து விளங்கும் கடலால் சூழப்பட்ட திருச்செந்தூர்த் குலத்தில் கோயில் கொண்ட ரகூளும் கூர்மையான வேலாயுதத்தைக் கொண்டிருக்கின்ற முருகப்பெருமானுடன் நிலவே நீ விளையாட வருவாயாக. ஆதிசேடனின் தலை நெரியுமாறு மயில் வாகனத்தில்

அமர்ந்து நிலவுலகை வலம் வரும் முருகப் பெருமானுடன் நிலவே நீ விளையாட வருவாயாக.

நெடியவழி எறியுங் தழைச் சிறைக் கூருகிற

கருடவா கனனும்இகல்கூர்

கட்டைமுள் அரைஞாண் நெட்டிலை யுடுத்துப்பொற்

கமலையோ ளியுமெழுந்து

கொடியபெருங் குலைபுரி வராகமென ஒருவனெழு

குவலயம் இடந்துதேடக்

குறித்தொருவன் எகினமாய் அண்டபனி ரண்டமுங்

கொழுதிக் குடைந்துதேட

முடியஇது காணுமவர் அறிவுறா வகைநின்ற

முழுமுதற் கடவுள் அடியும்

முடியுநீ கண்டனை எனக்கருதி இன்றுதிரு

முகமலர்ந் துணை அழைத்தனன்

அடியவரை வாழ்வித்த செந்தில்வடி வேலனுடன்

அம்புலீ ஆடவாவே

அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்

அம்புலீ ஆடவாவே.

நெடிய வழியில் செல்லும் பெரிய சிறகுகளையும், கூர்மையான நகங்களையும் கொண்ட கருடனை வாகனமாக கொண்ட திருமாலும், வலிமையான மூட்களை அரையில் கொண்ட நாளத்தில் மலர்ந்திருக்கும் நீண்ட இதழ்களைக் கொண்ட தாமரையில் பிறந்த பிரம்மனும், தம் இடத்திலிருந்து புறப்பட்டதும், திருமால் கொடியவராக அவதாரம் எடுத்துத் தன் கொம்பினால் ஏழு உலகங்களையும் பிளந்து தேடவும்; பிரம்மதேவன் மனத்தில் நினைத்து அன்னப்

பறவையாய் மாறி உள் அண்டங்களையும் வெளி அண்டங்களையும் துழழ்ந்து கொண்டே தேடலவும். இதுநாள் வரை இருவருமே அறிய இயலாமல் ஒளிமயமாய் விளங்கும் சிவபெருமானின் அடியையும், முடியையும் நீ கண்டிருக்கிறாய் என்று நினைத்து மலர்ந்த முகத்துடன் விளையாட அழைத்தான்

தன்னை அடைந்த அடியார்களுக்கு வீடுபேறு அருளிய திருச்செந்தூர் முருகப்பெருமானுடன் நிலவே நீ விளையாட வருவாயாக. மலைகள் நடுக்கம் கொள்ளுமாறு மயில் மீது ஏறிவரும் முருகப்பெருமானுடன் நிலவே நீ விளையாட வருவாயாக.

பெரியமா கத்துளே வருவைநீ வஞ்சக்கண்டு

பசுமா கத்துள் வாரான்

பெருகநீ வேலையிற் புகுவாய் இவன்பார்

பிளக்கவோ வேலைவிட்டான்

உரியமா குணவரையில் உறுவைநீ இவன்

அன்புற்ற குணவரையுநான்

உடலிலே மறுவுனக்குண் டிவன்தனக்

கொருமறுவும் இல்லைமீளக்

கரியமா முகிலிலே மறையுவைநீ இவன்நெடுங்

கரியமா முகிலின் மறையான்

கருதிநீ இவையெலாம் உணரிவன் பெருமையைக்

கண்டுநீ அங்கிராதே

அறியமா நாயகன் எங்கள் செந்தில்வடி வேலனுடன்

அம்புலீ ஆடவாவே

அரவின் முடிநெளிய மயில் முதுகில்வரு முருகனுடன்

அம்புலீ ஆடவாவே.

பெரிய வானில் வலம்வருவாய் நீ. முருகப் பெருமானோ வஞ்சகம் கொண்டு பேசுபவர்களின் மனத்திறகுள் வரமாட்டான் நீ கடலில் குளிப்பாய் . இவன் நிலவுலகம் பிளக்குமாறும் கடல் வற்றுமாறும் அம்பு எய்தான். உனக்குரிய கிழக்கு மலையில் குதித்தெழுவாய் நீ. இவன் அன்பற்ற குணம் உடையவர்களை நெருங்கமாட்டான். உனக்கு உடலில் முயல் கறையாகிய மறு இருக்கிறது. இவனுக்கோ எவ்வகையான கறையும் இல்லை. மீண்டும் தோன்றுமாறு நீ கரிய மேகத்தில் மறைவாய். இவன் பெரிய மேகங்களால் தோல்வியடைவது இல்லை. இவற்றை எல்லாம் நீ ஆராய்ந்தறிய வேண்டும். இவனுடைய பெருமைகளை உணர்ந்து வானுலகில் இராமல் அரிய தவமுடைய முருகப்பெருமானுடன் விளையாட வரவேண்டும். மலைகள் நடுக்கம் கொள்ளுமாறு மயில் வாகனத்தில் ஏறிவரும் திருச்செந்தூர் முருகப்பெருமானுடன் நிலவே நீ விளையாட வருாவயாக. அம்புலிப் பருவம் முற்றும்.

**அபிராமி அந்தாதி பாடல்கள்**

அபிராமி அந்தாதி (அந்தம்-முடிவு, ஆதி-துவக்கம்) அபிராமி பட்டரால் இயற்றப்பட்டது. மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திருக்கடையூரில் அபிராமி அம்மன் அமிர்தகண்டேசுவரர் கோயில் உள்ளது. மார்க்கண்டேயருக்கு சிவபெருமான் காட்சியளித்த தலம் திருக்கடையூராகும். ஒரு பாடலின் ஈற்றடியின் கடைச்சொல் (அந்தம்), வரும் பாடலின் துவக்கச் சொல்லாக (ஆதி) அமையும் இலக்கணமுறை அந்தாதி ஆகும்.

**8.பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட**

சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரை எல்லாம்
வந்தரி; சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி; நீலி; அழியாத கன்னிகை; ஆரணத்தோன்
சுந்தரி; கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

என் தந்தையாம் ஈசனின் துணைவியான தேவியே! பேரழகு மிக்க அன்னையே! பாசமாம் தளைகளையெல்லாம் ஓடி வந்து அழிக்கும் சிந்தூர நிறம் கொண்டவள், மகிடன் என்னும் அசுரனின் சிரத்தின் மேல் நிற்கும் அந்தரி நீல நிறங்கொண்டவள், என்றும் அழிவில்லாத இளங்கன்னி, பிரமதேவனின் கபாலத் தைத் தாங்கும் திருக்கரத்தைக் கொண்டவள் ஆகிய அபிராமி அன்னையே! தாமரை மலரைப் போன்ற உன் அழகிய திருவடிகள் என் உள்ளத்தில் என்றென்றும் பொருந்தி நிற்கின்றன.

**10. மோட்ச சாதனம் பெற**

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை; என்றும் வணங்குவது உன்மலர்த்தாள்; எழுதாமறையின் ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

பொருள்: எழுதாமல் கேட்கப்படுவது மட்டுமான வேதத்தில் பொருந் தக் கூடிய அரும் பொருளாயும், சிவபிரானின் திருவருள் வடிவ மாயும் விளங்கும் உமையன்னையே! நான் நின்றவாறும், இருந்தவாறும் படுத்தவாறும், நடந்தவாறும், தியானம் செய்வதும் உன்னை த்தான்; என்றென்றும் மறவாமல் வழிபடுவதும் உன்னு டைய திரு வடித் தாமரையையேதான்.

**22. இனிப் பிறவா நெறி அடைய**

கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப் பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே! அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.

பொருள்: கொடிபோன்ற அபிராமி அன்னையே! இளம் வஞ்சிப் பூங் கொம்பை நிகர்த்தவளே! எனக்குக் காலமல்லாத காலத்தில் பழுத்துக் கனிந்த பழத்தின் உருவமே! வேதமாகிய மலரின் நறு மணம் போன்றவளே! குளிர்ச்சிபொருந்திய இமாசலத்தில் விளை யாடி மகிழும் பெண் யானையே!

பிரமன் போன்ற தேவர்களை ஈன்ற அன்னையே! நானும் இந்த உலகில் இறந்த பின்னர் மீண்டும் பிறவாதிருக்குமாறு என்பால் ஓடிவந்து உதவி செய்து என்னை ஆட்கொண்டருள் செய் வாயாக!

**24. நோய்கள் விலக**

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப் பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே! பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.

பொருள்: ஒளிவீசித் திகழும் மாணிக்கத்தைப் போன்றவளே! அந்த மாணிக்கத்தின் பிரகாசத்தைப் போன்றவளே! ஒளிமிக்க மாணிக் கங்களால் அழகிய முறையில் உருவாக்கப் பெற்ற ஆபர ணத்தைப் போன்றவளே! அந்த ஆபரணங்களுக்கும் அழகூட்டு பவளே! உன் னை அணுகாமல் வீணாகப் பொழுது போக்கு வோருக்கு நோய் போன்றும், உன்னை அணுகியவர்களின் பிறவிப் பிணிக்கு மருந்து போன்றும் விளங்குபவளே! தேவர்களனைவ ர்க்கும் பெரும் விருந்தாய்த் திகழ்பவளே! தாமரை மலரை நிகர்த்த உன் திருவடிகளைப் பணிந்த நான் வேறொருவரைப் பணியேன்.

**55. மோனநிலை எய்த**

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது அன்னாள்; அகமகிழ் ஆனந்தவல்லி; அருமறைக்கு முன்னாய் நடுளங்குமாய் முடிவாய முதல்விதன்னை உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.

பொருள்: பல்லாயிரம் மின்னல்கள் ஒரு திருமேனியாய் உருப் பெற்று விளங்குவதைப் போன்ற கோலத்தை யுடையவளும், அடியவர்க ளின் உள்ளங்களில் எல்லையற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துபவளும், அரிய வேதத்திற்கு முதலும், நடுவும் முடிவு மாகி முதல்வியாயும் விளங்கும் அபிராமித் தாயை

இந்த உலகத் தவர் நினைந்தாலும், நினையாமலிருந்தாலும் அவர் களாலெல் லாம் அன்னைக்கு வேண்டப்படுவது யாதொன்றும் இல்லை.

**69. சகல சௌபாக்கியங்களும் அடைய**

தனந்தரும்; கல்வி தரும்; ஒருநாளும் தளர்வறியா மனந்தரும்; தெய்வ வடிவுந்தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும்; நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

பொருள்: நறுமண மலர் சூடிய, மேகத்தைப் போன்ற கூந்தலையு டைய அபிராமி அன்னையின் கடைக்கண்கள், அவளை வழிபடும் அடியவர்களுக்கு எல்லா வகையான ஐசுவர்யங்களையும் அள்ளித் தரும். நல்ல கல்வியைத் தரும். ஒருநாளும் ஒரு பொழுதும் தளர் வறியாத உள்ளத்தைத் தரும். தெய்வீகமான அழகைத் தரும். உள்ள த்தில் கள்ளமில்லாத உறவினர்களின் நட்பைத் தரும். இவை தவிர நல்லவை என்று இன்னும் என்னென்ன உண்டோ அவை அத்தனை யையும் தரும்.

**72. பிறவிப் பிணி தீர**

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன்; இனி யான் பிறக்கின் நின்குறையே அன்றி யார் குறை காண்; இரு நீள்விசும்பின் மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்? தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.

பொருள்: தேவி! மின்னலையும் பழிக்கும்படியான நுண்ணிய இடையை உடையவளே! மெல்லிய இயல்பினளே! எம்பெருமானா கிய சிவபிரான் உன்னுடன் கொண்ட ஊடலைத் தீர்க்கும் பொரு ட்டு, தன் குறையை நீக்கி, தன் சடா மகுடத்தின் மேல் வைத்த உன் திரு வடித் தாமரைகளையே, நானும் என் குறைகளைத் தீர்க்குமா று வேண்டித் தொழுது நிற்கிறேன். இனி நான் மீண்டும் பிறவியை ப் பெற்றே னாயின் அது உன் குற்றமேயன்றி வேறு யார் குற்றம்?

**77. பகை அச்சம் நீங்க**

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர் உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

பைரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சர் களின் உயிர்களைப் பலியாய் ஏற்கும் சண்டிகா தேவி, காளி, ஒளிரும் கலைகளாகிய வயிரங்களையுடைய (மண்டலங்களை யுடைய) வட்டமான மேகலையையுடையவள், மாலினி, சூலி, வராகி என் றெல்லாம் குற்றம் தீர்ந்த நான்கு வேதங்களிலும் தேர்ந்த தேவியின் திருநாமங்களை அறிந்தோர் அவற்றை வரிசைப்படுத்திக் கூறுவதுண்டு.

**87. செயற்கரிய செய்து புகழ் பெற**

மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன் விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம் பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

பொருள்: தம்முடைய நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித் தழித்த எம்பிரான் சிவபிரானின் தவ விரதத்தைக் குலைத்து, அவரது திரு மேனியின் இடப்பாகத்தைக் கைக்கொண்டு அங்கு வீற்றிருந்து ஆட்சி புரியும் அபிராமித் தாயே! சொல்லுக்கும் எண்ணத்துக்கும் எட்டாத திருவுருவம், என் கண்ணுக்கும், நான் புரியும் பூசை முதலியவற்றிற்கும் மட்டும் வெளிப்பட்டுத் தரிசனம் தருவது என்ன விந்தை!

**95. மன உறுதி பெற**

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம் அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாத குணக் குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!

பொருள்: என்றுமே அழிவற்ற குணக்குன்றே! அருட்கடலே! இம வானின் திருமகளாகப் பிறந்த கோமளை என்னும் அபிராமித் தாயே! நன்மையே விளைந்தாலும் தீமையே விளைந்தாலும் நான் அதை ப்பற்றி நினைப்பதற்கேதுமில்லை. எனக்கென்ன நேர்ந்தாலும் அது வனைத்தும் உனக்குத்தான் உரியவை. ஏனெனி ல் எனக்கரிய உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் என் னை நீ ஆட்கொண்ட அன்றே உன்னிடம் ஒப்படைத்து விட்டேனே!

**அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து**

சிந்து என்பது இசைத் தமிழ் பாகுபாடுகளில் ஒன்றாகும். அது ஐந்து உறுப்புகளால் ஆன யாப்பு விசேடம். அவை பல்லவி, அநுபல்லவி, மூன்று கண்ணிகள் அடங்கிய சரணம் ஆகும். காவடிச் சிந்து பல்லவியும் அநுபல்லவியும் இன்றிச்

சரணங்களுக்குரிய கண்ணிகளை மாத்திரம் பெற்று வரும். முருகனிடம் பிரார்த்தனை செய்து காவடி எடுத்துச் செல்வோர் வழியில் துதி செய்து பாடும் பாடல்களே காவடிச் சிந்து எனப்படுகின்றன. இந்த நூலை இயற்றியவர் அண்ணாமலை ரெட்டியார். இவர் திருநெல்வேலி சங்கர நயினார் கோவிலை அடுத்த சென்னிகுளம் என்னும் ஊரில் 1865 ஆம் ஆண்டு பிறந்தார். திருநெல்வேலி இராமசாமிக் கவிராயரிடம் கல்வி கற்று, பின்னர் ஊற்றுமலை ஜமீந்தார் சுந்தரதாஸ் பாண்டியனின் சமஸ்தான வித்துவானாக விளங்கினார். இவர் நோய் காரணமாக 1891ல், தம் 26ஆம் வயதில் காலமானார்.

**1. விநாயகர் துதி**

திருவுற் றிலகுகங்க வரையில் புகழ்மிகுந்து

திகழத் தினம்உறைந்த வாசனை, - மிகு

மகிமைச் சுகிர்ததொண்டர் நேசனை, - பல

தீயபாதக காரராகிய சூரர்யாவரும் மாளவேசெய்து

சிகரக் கிரிபிளந்த வேலனை, - உமை

தகரக் குழல்கொள்வஞ்சி பாலனை,

மருவுற் றிணர்விரிந்து மதுபக் குலம்முழங்க

மதுமொய்த் திழிகடம்ப ஆரனை,- விக –

சிதசித்ர சிகிஉந்து வீரனை, - எழில்

மாகநாககு மாரியாகிய மாதினோடுகி ராதநாயகி

மருவப் புளகரும்பு தோளனை, - எனை

அருமைப் பணிகொளும்த யாளனை,

தெரிதற் கரியமந்தி ரமதைத் தனதுதந்தை

செவியில் புகமொழிந்த வாயனை,- இள

ரவியில் கதிர்சிறந்த காயனை,- அகல்

தேவநாடுகெ டாதுநீடிய சேனைகாவல னாகவேவரு

திறலுற்ற சிவகந்த நாதனை,- விரி

மறையத் தொளிருகின்ற பாதனை,

மருளற் றிடநினைந்து மனதிற் களிசிறந்து

மதுரக் கனிவுவந்து கூடவே,- பல

விதமுற் றிலகுசிந்து பாடவே,- விரி

வாரிநீரினை வாரிமேல்வரு மாரிநேர்தரு மாமதாசல

வதனப் பரன்இரண்டு தாளையே – நயம்

உதவப் பணிவம்இந்த வேளையே.

**2. முருகன் துதி**

சீர்வளர் பசுந்தோகை மயிலான்,- வள்ளி

செவ்விதழ் அலாதினிய தெள்ளமுதும் அயிலான்,

போர்வளர் தடங்கைஉறும் அயிலான் – விமல

பொன்னடியை இன்னலற உன்னுதல்செய் வாமே.

குஞ்சர வணங்கு ஆவல் வீடா – தபடி

கொஞ்சிமரு வும்சரச ரஞ்சிதவி சேடா!

பைஞ்சர வணம்காவல் வீடா – வளரும்

பாலன்என மாலையொடு காலைநினை வாமே.

வல்அவுணர் வழியாதும் விட்டு, - வெருள

வன்சமர்செய் கந்தனிடம் வழியடிமைப் பட்டு

நல்லஉணர் வழியாது மட்டு – மிஞ்சு

ஞானபர மானந்த மோனம் அடை வாமே.

ஒருதந்த மாதங்க முகத்தான், - மகிழ

உத்தம கனிட்டன்என உற்றிடு மகத்தான்,

வருதந்த மாதங்க முகத்தான் – எவரும்

வாழ்த்துகுக நாயகனை ஏத்துதல்செய் வாமே.

**3. கழுகுமலை நகர்**

தெள்ளுதமி ழுக்குதவு சீலன், - துதி

செப்பணாம லைக்கும் அனு கூலன் – வளர்

செழிய புகழ்விளைத்த கழுகு மலைவளத்தை

தேனே! சொல்லு வேனே.

வெள்ளிமலை யொத்தபல மேடை, - முடி

மீதினிலே கட்டுகொடி யாடை, - அந்த

வெய்யவன் நடத்திவரு துய்யஇர தப்பரியும்

விலகும் படி இலகும்.

[வெள்ளிமலை = கைலாசம்; மேடை = மாடி; முடி = உச்சி; வெய்யவன் = ஞாயிறு, சூரியன்;துய்ய = தூய, வெளுத்த; இரதப் பரி = தேர்க் குதிரை; இலகு = ஒளிவிடு

வீதிதொறும் ஆதிமறை வேதம், - சிவ

வேதியர்கள் ஓதுசாம கீதம் – அதை

மின்னுமலர்க் காவதனில் துன்னுமடப் பூவையுடன்

விள்ளும், கிள்ளைப் புள்ளும்,

[ஆதி மறை வேதம் = முந்திய பழைய நூலான வேதம்; சாம கீதம் = சாமவேதப் பாடல்கள்'

கா = பூங்கா, சோலை; காஅதனில் = அந்தக் காவில்; துன்னு = நெருங்கு, கூடியிரு;

மடம் = மென்மை; பூவை = பெண்; விள்ளும் = கூறும், சொல்லும்; கிள்ளைப் புள்ளும் = கிளிப் பறவையும்கூட;

வீதிதோறும் பழைய நூலான வேதமான சிவ அந்தணர்கள் ஓதும் சாமவேதப் பாட்டுக்கள்;

அந்தச் சாமகீதத்தை மின்னும் பூக்கள்கொன்ட பூங்காவிலே தன்னோடு கூடியிருக்கும் மெல்லிய பெண்கிளியோடு

கிளிப் பறவையுங்கூடக் கூறும்]

சீதள முகிற்குவமை கூறும் – நிறச்

சிந்துரங்கள் சிந்துமதத் தாறும், - உயிர்ச்

சித்திரம் நிகர்ந்தமின்னார் குத்துமுலைக் குங்குமச்செஞ்

சேறும் காதம் நாறும்.

நித்தநித்த மும்கணவ ரோடும் – காம

லீலையில் பிணங்கிமனம் வாடும் – கரு

நீலவிழி யார்வெறுத்த கோலமணி மாலைரத்னம்

நெருங்கும் எந்த மருங்கும்.

கத்துகட லொத்தகடை வீதி – முன்பு

கட்டுதர ளப்பந்தலின் சோதி – எங்கும்

காட்டுவதால் ஈரிரண்டு கோட்டுமத யானையிற்பல்

களிறும் நிறம் வெளிரும்;

முத்தமிழ்சேர் வித்வசனக் கூட்டம் – கலை

முற்றிலும் உணர்ந்திடும் கொண் டாட்டம் – நெஞ்சில்

முன்னுகின்ற போதுதொறும் தென் மலையில் மேவுகுறு

முனிக்கும் அச்சம் சனிக்கும்.

எத்திசையும் போற்றமரர் ஊரும், - அதில்

இந்திரன் கொலுவிருக்கும் சீரும், - மெச்சும்

இந்தநக ரம்தனை அடைந்தவர்க் கதுவும்வெறுத்

திருக்கும்; அரு வருக்கும்.

துள்ளிஎழும் வெள்ளையலை அடங்கும் – படி

சுற்றிலும் வளைந்த அகழ்க் கிடங்கும் – பல

சொன்னமலை போல்மதிலும் மின்னுவதி னாலேபுகழ்

தோன்றும் லோகம் மூன்றும்.

கள்ளிவிழ் கடப்பமலர் வாகன், - குறக்

கன்னியை அணைக்கும் அதி மோகன் – வளர்

கழுகுமலை நகரின்வள முழுமையும்என் நாவில்அடங்

காதே! மட மாதே.

[கள் = தேன்; அவிழ் = சொட்டு; கடப்ப மலர் = கடம்ப மரத்துப் பூ;

வாகன் = வாகெள உடையவன்; கடப்ப மலர் மாலை சார்த்திய தோளையுடையவனாகிய முருகன்;

குறக் கன்னி = வள்ளி; அதி = மிகுந்த; மோகன் = மோகங்கொண்டவன்;

மடம் = மென்மை; மாதெ = பெண்ணே; மடமாது = மெல்லிய பெண்ணே!

முருகன் செழிக்கும் கழுகுமலை நகரின் வளம் என் நாவில் அடங்காதே]

தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச் சிந்து எனலாம். முருகப் பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர். அவர்களின் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச் சிந்து எனும் பாவடிவம் தோன்றியது.

காவடி தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது. காவடி தூக்கிச் செல்வோர், அதைச் சுமையாக எண்ணாமல் பாடியவாறே செல்வதற்கு வழிநடைப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

**4. கோயில் வளம்**

சென்னி குளநகர் வாசன், - தமிழ்

தேறும் அண்ணாமலை தாசன் – செப்பும்

செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையில்புனை

தீரன்; அயில் வீரன்.

வன்ன மயில்முரு கேசன், - குற

வள்ளி பதம்பணி நேசன் – உரை

வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வளம்நான்மற

வாதே சொல்வன் மாதே!

கோபுரத் துத்தங்கத் தூவி, - தேவர்

கோபுரத் துக்கப்பால் மேவி, - கண்கள்

கூசப்பிர காசத்தொளி மாசற்று விலாசத்தொடு

குலவும் புவி பலவும்.

நூபுரத் துத்தொனி வெடிக்கும் – பத

நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் – அங்கே

நுழைவாரிடு முழவோசைகள் திசைமாசுணம் இடியோ என

நோக்கும் படி தாக்கும்.

சந்நிதி யில்துஜஸ் தம்பம், - விண்ணில்

தாவி வருகின்ற கும்பம் – எனும்

சலராசியை வடிவார்பல் கொடிசூடிய முடிமீதிலே

தாங்கும்; உயர்ந் தோங்கும்.

உன்னத மாகிய இஞ்சி,-பொன்னாட்டு

உம்பர் நகருக்கு மிஞ்சி – மிக

உயர்வானது பெறலால், அதில் அதிசீதள புயல்சாலவும்

உறங்கும்; மின்னிக் கறங்கும்.

அருணகிரி நாவில் பழக்கம் – தரும்

அந்தத் திருப்புகழ் முழக்கம், -பல

அடியார்கணம் மொழிபோதினில் அமராவதி இமையோர்செவி

அடைக்கும்; அண்டம் உடைக்கும்.

கருணை முருகனைப் போற்றித்–தங்கக்

காவடி தோளின்மேல் ஏற்றிக் – கொழும்

கனல்ஏறிய மெழுகாய்வரு பவர் ஏவரும், இகமேகதி

காண்பார்; இன்பம் பூண்பார்.

சென்னிகுளம் என்னும் நகரில் வாழ்கின்ற அண்ணாமலைதாசன் ஆகிய நான் பாடிய உலகம் போற்றும் காவடிச்சிந்து என்னும் மதுரமான கவிமாலையைத் தன் மலைபோன்ற அகன்ற தோளில் சார்த்திக்கொள்கிறான் முருகன். அந்தக் கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் வளத்தை நான் சொல்கிறேன். கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம் தேவர் உலகை விட உயர்ந்து ஒளி வீசுகிறது. அவ்வொளி உலகங்கள் பலவற்றிலும் கண்கள் கூசும்படி பரவுகிறது. பெண்ணே ! கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க, முருகன் கோவில் திகழ்கிறது. காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைக்கிறது. கழுகுமலை நகரின் கோட்டை உயரமானது. அதில் மேகங்கள் படிகின்றன. அவற்றிலிருந்து உருவாகும் மின்னல்கள் இருளைக் கிழிக்கின்றன. தமது நெஞ்சம் நெகிழ்ந்துருக, தங்கத்தினும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் அருளைப் பெறுவார்; இன்பம் அடைவார்.

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சென்னிகுளம் அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியமாகும். இப்பாடலின் மெட்டு அண்ணாமலையாராலேயே அமைக்கப்பட்டதாகும். தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால், காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கப்பட்டார்; 18 வயதிலேயே ஊற்றுமலைக்குச் சென்று அங்குக் குறுநிலத்தலைவராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார். இவர், இந்நூல் தவிர வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

**முத்தொள்ளாயிரம்**

இது வெண்பா யாப்பில் எழுதப்பட்ட நூல், இது சேர சோழ பாண்டியர்களின் புகழ் பாடுவது. எந்தக் குறிப்பிட்ட மன்னனையும் இது பாடவில்லை. மூன்று குடியினருக்கும் உரிய கோதை, கிள்ளி, மாறன் முதலான பொதுவான பெயர்களே இதில் இடம் பெற்றுள்ளன. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் தொகுதியில் இருந்து எடுக்கப்பட்ட 108 செய்யுட்களே இன்று முத்தொள்ளாயிரம் என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்நூல் தொல்காப்பியர் குறிப்பிட்ட விருந்து என்னும் வகையைச் சாரும்.

**பெயர்க்காரணம்**

இந்நூலின் பெயர் இருவகைகளில் விளக்கப்படுகிறது. மூன்று வேந்தர்களையும் பற்றிய 900 பாடல்கள் கொண்டது என்பது ஒரு சாரார் கருத்து. மூவேந்தருள் ஒவ்வொருவரையும் தனித்தனியே தொள்ளாயிரம் பாடல்களில் புகழும் நூல் இது என்பது இன்னொரு சாரார் கருத்து. இவ்விரண்டாவது கருத்தின் படி இந்நூலுக்குரிய செய்யுட்கள் 2700 ஆகும்.

இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், பதினெண்கீழ்க்கணக்கு நூலாசிரியர்களோடு முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியரையும் சேர்த்துப் பிற சான்றோர் எனக் குறிப்பிட்டார். எனவே இவர் சங்கப் புலவர் அல்லர் என்பது வெளிப்படையாகும். ஆராய்ச்சி அறிஞர் தி. வை. சதாசிவப் பண்டாரத்தார். இந்நூலின் உள்ள சில அகச் சான்றுகளை எடுத்துக்காட்டி, இந்நூலாசிரியரை கி. பி. 5ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தவர் என்கின்றார்.

**முத்தொள்ளாயிரம்** மூவேந்தர் புகழ் பாடுவது என்று முன்பே கூறப்பட்டது. மன்னர்களின் வீரம், கொடை, தலைநகர், அவர்கள் குதிரைகளின் மறம், களிறுகளின் மறம் ஆகியவையும், பகை மன்னர்களின் நாடுகளை அழித்துப் புகழ் பெற்றமையும், அவர்களிடம் திறை கொண்டமையும் புகழப்பட்டுள்ளன. மன்னர்களைப் புகழ்வதற்குக் **கைக்கிளை** என்னும் அகத்திணைப் பிரிவை இவ்வாசிரியர் பயன்படுத்தியுள்ளார். இடைக்காலத்துச் சமயச் சான்றோர்கள் இம்மரபைப் பின்பற்றியது நினைவிருக்கலாம். ஆழ்வார்களும் நாயன்மார்களும்

அகத்துறைகளைப் பயன்படுத்தி ஆன்மா இறைவனோடு கூடுவதற்குத் துடிக்கும் துடிப்பினை வெளியிட்டனர். அம்மரபினைப் பின்பற்றிய **முத்தொள்ளாயிரத்தின்** ஆசிரியரும் சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூன்று வேந்தர்களின் பாலும் தமக்குள்ள அன்பினை, ஒருதலைக் காதல் கொண்ட பெண்களின் கூற்றாகப் பாடி வெற்றி கண்டுள்ளார். இந்நூலின் பெரும் பகுதி பெண்பால் கைக்கிளையாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரகதப்பூண் மன்னவர் தோள்வளை கீழா
வயிரக் கடக்கை வாங்கித் - துயருழந்து
புண்ணுற் றழைக்கும் குறுநரித்தை பூழியனை
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.

சேரவேந்தன் பூழியன் போரிட்ட களத்தில் விழுந்துகிக்கும் மன்னவர்களின் கைவிரல்களைக் கௌவி இழுக்கும் குள்ளநரிகள் அவர்களின் முன்கையில் கடகமும், தோளில் மரகதக்கல் பதித்த பூணும் இருப்பதால் பெரிதும் துன்புற்று மற்ற நரிகளைத் துணைக்கு அழைக்குமாம்.

மரகதப்பூண் - பச்சைக் கல்லாலாகிய கழுத்திலணியும் கண்டி, தோள்வளை - தோளிலணியப்படும் பொன்வளையம். கீழே கீழாக, வயிரக் கடகக் கைவாங்கி வயிரம் பதித்த கடகமிட்ட கையைக் கடித்து இழுத்து. வாங்குதல் இழுத்தல், கையை வேகமாகக் கடித்து இழுக்கும் பொழுது மரகதப் பூண் மார்பில் அணிந்த மன்னர்களது தோளில் அணியப் பெற்றுள்ள தோள்வளையம் கீழே கழன்று விழுகின்றது. துயருழந்து - துன்ப மடிைந்து, புண்ணுற்று அழைக்கும் - புண்பட்ட காரணமாகத் தாய் கரியை கினைத்து ஊளையிடும். குறு கரித்தே-பல சிறு கரிகள் இவ்வாறு துயருழந்தன. பூழியனைக் கண்ணுற்று வீழ்ந்தார் . சேரனப் போரில் எதிர்ப்பட்டனர், அவ் வளவுதான் ; மார்பில் அம்பு தைத்து மண்ணக் கவ்வினர். பூழியன் - பூழி நாட்டையுடைய சேரன்.

வாகை வனமாலை சூடி அரசுறையும்
ஓகை உயர்மாடத் துள்ளிருந்து - கூகை

படுபேய்க்குப் பாட்டயரும் பண்பிற்றே தென்னன்

விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

வாகை வன மாலை சூடி அரசு உறையும் ஓகை உயர் மாடத்து உள் இருந்து கூகை படு பேய்க்குப் பாட்டு அயரும் பண்பிற்றே தென்னன் விடு மாற்றம் கொள்ளாதார் நாடு.

தென்னன் ஆணையை ஏற்றுக்கொள்ளாத பகைவர் பிறரை வென்ற மாலையை அழகுடன் சூடிக்கொண்டு உவகையுடன் (ஓகை) இருப்பர். எனினும் கூகை அவர்களது மாடத்துக்குள்ளே இருந்துகொண்டு அவர்கள் சாவப்போவதைப் பாட்டாகப் பாடும். பேய்களை அழைத்துப் பாட்டுப் பாடும். இது தென்னன் அழிக்கப்போகும் அறிகுறிப் பாட்

அரும்பவிழ் தார்க்கோதை அரசெறிந்த ஒள்வேல்

பெரும்புலவும் செஞ்சாந்தும் நாறிச் – சுரும்பொடு

வண்டாடு பக்கமும் உண்டு குறுநரி

கொண்டாடு பக்கமும் உண்டு.

சேர மன்னனின் வீரச்சிறப்பும் வெற்றிச்சிறப்பும் கூறுவது.

அன்றலர்ந்த மலர்மாலையணிந்த சேரன் பகையரசரை வென்றுகொண்ட ஒளிபொருந்திய வேலாயுதம் ஒருபக்கம் புலால் நாற்றமும் ஒருபக்கம் குங்குமம் கலந்த சந்தனத்தின் நறுமணமும் கலந்து விளங்குகின்றது. எனவே, அவ்வேலின்கண் நறுமணத்தை நாடிச் சுரும்புகளும் வண்டுகளும் மொய்க்கின்ற பக்கமும் உண்டு; புலாலை விரும்பிச் சிறு நரிகள் கொண்டாடும் பக்கமும் உண்டு.

சேரனது வேலின்கண் தோய்ந்துள்ள புலாலை நீக்குவதற்கும் நேரமின்றி வெற்றி கொண்டாடப்படுகின்றது; அக்கொண்டாட்டம் நடைபெறும்போதே மீண்டும் அவ்வேல் போர்முனைக்குக் கொண்டுசெல்லப்படுகிறது. இடைவிடாது சேரன் போருடற்றி வென்று வருகிறான் என அவனது வீரமிகுதி கூறப்பட்டுள்ளது.

கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்
பண்ணார் நடைப்புரவி பண்விடுமின் - நண்ணார்தம்
தேர்வேந்தன் தென்னன் திருவுத் திராடநாள்
போர்வேந்தன் பூசல் இலன்.

கண்ணார் கதவம் திறமின் களிறொடு தேர் பண் ஆர் நடைப் புரவி பண் விடுமின் நண்ணார் தம் தேர் வேந்தன் தென்னன் திருவும் திராட நாள் போர் வேந்தன் பூசல் இலன்.

தென்னனை நினைக்காத பகைவர்களே! உங்கள் கதவினைத் திறந்துகொள்ளுங்கள். களிறும், தேரும், குதிரையும் போருக்காகப் பூட்டுவதை விட்டுவிடுங்கள். இன்று தென்னன் பிறந்த திருநாள். உத்திரட்டாதி நாள். தேரில் வருவான். ஆனால் போர் செய்யமாட்டான். அஞ்சவேண்டா.

அந்தணர் ஆவொடு பொன் பெற்றார், நாவலர்
மந்தரம் போல் மாண்ட களிறு ஊர்ந்தார் –எந்தை
இலங்கிலைவேல் கிள்ளி இரேவதி நாள் என்னோ?
சிலம்பி தன் கூடிழந்தவாறு

கிள்ளி இரேவதி நாளில் பிறந்தான். அவனுக்குப் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டம். அன்று அந்தணர்கள் பசு, பொன் ஆகியவற்றைத் தானமாகப் பெற்றனர். நாவண்மை உடைய பாவலர் மலை போல் உயர்ந்த களிறு வழங்கப்பபட்டு அதில் ஊர்ந்தனர். ஆனால் சிலந்திப் பூச்சி மட்டும் தன் கூட்டை இழந்தது. அது ஏன்? இது முறை ஆகுமா?

(பொங்கல் நாள் அன்று பழம்பொருள்களைத் துடைத்துத் தூய்மை செய்வது போல் மன்னன் பிறந்த நாளிலும் அரண்மனை ஒட்டடை துடைத்துத் தூய்மை செய்யப்பட்டது. அப்போது சிலந்திப் பூச்சி தன் கூட்டை இழந்தது)

பிறந்த நாளில் கிள்ளி உலா வந்தான். அவனைக் கண்ட சிலம்பி என்னும் பெண் மட்டும் தன் கூடாகிய உடல் நலத்தை இழந்தாள். இதுவா அவன் தரும் பிறந்தநாள் கொடை?

பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்
திறைமுறையின் உய்யாதார் தேயம் - முறைமுறையின்
ஆன்போய் அரிவையர் போய் ஆடவர்போய் ஆயிற்றே
ஈன்பேய் உறையும் இடம்.

பறை நிறை கொல் யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த் திறை முறையின் உய்யாதார் தேயம் முறை முறையின் ஆன் போய் அரிவையர் போய் ஆடவர் போய் ஆயிற்றே ஈன் பேய் உறையும் இடம்.

பஞ்சவர் என்னும் பாண்டியர்க்குத் தோழனாகித் திறை தந்து பிழைத்துக்கொள்ளாதவர் தேசமானது ஆனிரைகள், மகளிர், ஆடவர் ஆகியோர் விட்டுவிட்டுச் சென்றதால் பிணம் தின்னும் பேய் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு வாழும் இடமாக மாறிவிட்டது.

மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன் - கண்டக்காற்
பூணாகந் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோ டுடன்பிறந்த நான்.

மாணார்க் கடந்த மற வெம் போர் மாறனைக் காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன் கண்டக்கால் பூண் ஆகம் தா என்று புல்லப் பெறுவேனோ நாணோடு உடன்பிறந்த நான்.

மாட்சிமை இல்லாதவர்களை வென்றவன் மாறன். அவனைக் காணாதபோது ஆயிரம் ஆயிரமாகப் பேசுவேன். கண்டால், “உன் பூண் அணிந்த மார்பை எனக்குக் கொடு” என்று கேட்டுத் தழுவமுடியுமா? நாணத்தோடு பிறந்தவள் ஆயிற்றே!

மாறடுபோர் மன்னர் மதிக்குடையும் செங்கோலும்
கூறிடுவாய் நீயோ குளிர்வாடாய் சோறடுவார்
ஆரத்தால் தீமூட்டும் அம்பொதியிற் கோமாற்கென்
வாரத்தால் தோற்றேன் வளை.

மாறு அடு போர் மன்னர் மதிக் குடையும் செம் கோலும் கூறிடுவாய் நீயோ குளிர் வாடாய் சோறு அடுவார் ஆரத்தால் தீ மூட்டும் அம் பொதியின் கோமாற்கு என் வாரத்தால் தோற்றேன் வளை.

சோறாக்குவோர் சந்தனக்கட்டையில் அடுப்புத் தீ மூட்டும் பொதியமலை நாட்டுக் கோமான் அவன். குளிரும் வாடைக்காற்றே! நீ அவனிடம் தூது செல். மாற்றாரைப் போரில் வெல்லும் அவனது குடை, மதியம் போன்ற வெண்கொற்றக் குடை, செங்கோல் ஆகியவற்றை முதலில் சொல். பின் அவனை நெஞ்சில் பங்குபோட்டுக் கொண்டிருப்பதால் என் வளையல்களைத் தோற்றுப் போயிருக்கிறேன் என்பதையும் சொல். (வாரம் = சரிபாதி பங்கு)

புல்லாதார் வல்லே புலர்கென்பர் புல்லினார்
நில்லா யிரவே நெடிதென்பர் - நல்ல
விராமலர்த் தார்மாறன் வெண்சாந் தகலம்
இராவளிப் பட்ட திது.

புல்லாதார் வல்லே புலர்(கு) என்பர் புல்லினார் நில்லாய் இரவே நெடிது என்பர் நல்ல விராம் மலர்த் தார் மாறன் வெண் சாந்து அகலம் இரா அளிப்பட்டது இது.

இரவே! உடனே விடிந்துவிடு (புலர்க) என்று மாறனின் வெண்ணிறச் சந்தனம் பூசிய மார்பைத் தழுவப்பெறாதவர்கள் வேண்டுவர். தழுவப்பெற்றவர்கள் இரவே விடியாமல் நீண்டுகொண்டே இரு என்று வேண்டுவர். இப்படி இரங்கத்தக்க (அளி) இரவு என்னிடம் வந்திருக்கிறதே!

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கலம்பகம் சொல் அமைப்பை எழுதுக | K2 | CO1 | PO4 |
| 2 | தூது சொல்லுதல் பற்றி கூறுக. | K3 | CO3 | PO2 |
| 3 | தூது இலக்கியங்கள் பற்றி விளக்குக. | K4 | CO4 | PO1 |
| 4 | பொருள்கோள் பற்றி விளக்குக. | K2 | CO2 | PO2 |
| 5 | தூது பொருட்கள் குறித்து விளக்குக. | K5 | CO5 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | மதுரைக் கலம்பகம் குறிப்பு வரைக | K4 | CO2 | PO4 |
| 2 | அபிராமி அந்தாதி பாடல் கருத்துக்களை நும் பாடப்பகுதி வழி விளக்குக | K2 | CO4 | PO5 |
| 3 | முத்தொள்ளாயிரம் உணர்த்தும் அரசனின் சிறப்புகளை கட்டுரை வரைக | k1 | CO1 | PO2 |
| 4 | மதுரைக்கலம்பகம் குறிப்பிடும் அம்மாணை பருவங்கள் குறித்து எழுதுக. | K3 | CO3 | PO1 |
| 5 | மதுரைக்கலம்பகத்தில் இடம்பெறும் புயவகுப் பற்றிக் கட்டுரைக்க. | K5 | CO5 | PO3 |

**முனைவர் உஷா .ஆ**

உதவிப்பேராசிரியர்

தமிழியல் துறை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி - 627012.

9790381487

ushaskv23@gmail.com

| Text Book(s) | |
|---|---|
| | கலிங்கத்துப்பரணி, வெளியிடுவோர்: எஸ். ராஜம், சென்னை, 1960. |
| | கலிங்கத்துப்பரணி, உரையாசிரியர்: ஆ.வீ. கண்ணையநாயுடு, முல்லைநிலையம், சென்னை, முதற்பதிப்பு: 2012. |
| | கலிங்கத்துப்பரணி, தெளிவுரை: புலியூர்க்கேசிகன், பாரிநிலையம், சென்னை, மறுபதிப்பு: 2015. |
| | ஸ்ரீகுமரகுருபரர்சுவாமிகள்பிரபந்தத்திரட்டு, உ.வே.சா. எழுதியகுறிப்புரைஆராய்ச்சிமுதலியவற்றுடன், கபீர்அச்சுக்கூடம், சென்னை, 1947. |
| | மதுரைச்சொக்கநாதர்தமிழ்விடுதூது, பதிப்பாசிரியர்மகாமகோபாத்தியாயதாக்ஷிணாத்தியகலாநிதிடாக்டர்உ.வே. சாமிநாதையர், மகாமகோபாத்தியாயடாக்டர்உ.வே. சாமிநாதையர்நூல்நிலையம், சென்னை, முதற்பதிப்பு: 1930, ஏழாம்பதிப்பு: 1994. |
| | முக்கூடற்பள்ளு, தெளிவுரைபுலியூர்க்கேசிகன், சென்னை, முதற்பதிப்பு: ஏப்ரல் 1960. |
| | முத்தொள்ளாயிரம், உரையாசிரியர்: ந. சேதுரகுநாதன், திருநெல்வேலி, தென்னிந்தியசைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம், லிமிடெட், சென்னை, 1946. |
| | முத்தொள்ளாயிரம்மூலமும்தெளிவுரையும், வித்வான்ஆ. நாராயணவேலுப்பிள்ளை, வர்த்தமானன்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு: 1992. |
| | திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ், பகழிக்கூத்தர், பு.சி. புன்னைவனநாதமுதலியார்எழுதியஅரும்பொருள்விளக்கவுரையுடன், திருநெல்வேலி, தென்னிந்தியசைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம், சென்னை, 1977. |
| | பிள்ளைத்தமிழ்க்கொத்து (முதற்புத்தகம்) அரும்பொருள்விளக்கங்களுடன், திருநெல்வேலி, தென்னிந்தியசைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம், லிமிடெட், சென்னை, 1972. |
| | அபிராமிபட்டர்அருளிச்செய்தஅபிராமியந்தாதி, உரையாசிரியர்ம.க. வேற்பிள்ளையவர்கள்விளக்கவுரையுடன், தி. இராசநாயகம்அவர்களால்சென்னபட்டணம்வித்தியாநுபாலனயந்திரசாலையில்அச்சிற்பதிப்பிக்கப்பட்டது, நான்காம்பதிப்பு: ஏப்ரல் 1959. |
| | மேலகரம்திரிகூடராசப்பக்கவிராயர்இயற்றியதிருக்குற்றாலக்குறவஞ்சிமூலமும்பெருநாவலர்திருபு.சி. புன்னைவனநாதமுதலியார், கழகப்புலவர்செல்லூர்க்கிழார்செ.ரெ. இராமசாமிபிள்ளைஎழுதியஉரையும், திருநெல்வேலித்தென்னிந்தியசைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம், லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு: ஆகஸ்டு 1955, மறுபதிப்பு: செப்டம்பர் 1962. |

| | |
|---|---|
| | காவடிச்சிந்து, அண்ணாமலைரெட்டியார், கு. அழகிரிசாமிபதிப்பு, விற்பனைஉரிமை: ஐந்திணைப்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு: 1988. |
| | காவடிச்சிந்துபுகழ்சென்னிகுளம்அண்ணாமலைரெட்டியார்கவிதைத்தொகுப்பு, அரங்க. சீனிவாசனார், திருக்குறள்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு: 1989, இரண்டாம்பதிப்பு: 2014. |
| | அபிராமிஅந்தாதி, அபிராமிபட்டர், ச. தண்டபாணிதேசிகர்எழுதியவிருத்தியுரையுடன், இரண்டாம்பதிப்பு: 1954. |
| Reference Books | |
| | சிற்றிலக்கியத்திறனாய்வு, ந.வீ. செயராமன், மணிவாசகர்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு: 1977. |
| | தமிழில்சிற்றிலக்கியவரலாறு - முதற்பகுதி, தா. ஈசுவரபிள்ளை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு: 2005. |
| | கலிங்கத்துப்பரணிஒருமதிப்பீடு, க.ப. அறவாணன், ஜைனஇளைஞர்மன்றம், சென்னை, முதற்பதிப்பு: ஜனவரி 1976. |
| | அபிராமிஅந்தாதிவிளக்கம்(பாகம் 1), கி.வா. ஜகந்நாதன், அமுதநிலையம்லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு: 1964 (எழில்உதயம்), புதுப்பதிப்பு: செப்டம்பர் 1993. |
| | குறவஞ்சிஇலக்கியம் (குறம், குறவஞ்சி, குளுவநாடகம்), டாக்டர்நிர்மலாமோகன், மணிவாசகர்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு; ஏப்ரல் 1990. |
| | தமிழில்பிள்ளைத்தமிழ்இலக்கியம், எஸ். சௌந்தரபாண்டியன், ஸ்டார்பிரசுரம், சென்னை, முதற்பதிப்பு: ஜூன் 1989. |
| | பள்ளுஇலக்கியம்ஒருசமூகவியல்பார்வை, கோ. கேசவன், அன்னம்பிரைவேட்லிமிடெட், சிவகங்கை, முதற்பதிப்பு: 1981. |

| **Web Sources** |
|---|
| • **Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>**<br>• **Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library**<br>• **Project Madurai - www.projectmadurai.org.**<br>• **Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.**<br>• **Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.**<br>• **Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com**<br>• **Tamil Books on line- books.tamil cube.com**<br>• **Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org**<br>• **Tamil novels on line - books.tamilcube.com** |

| Expected Course Outcomes: **இப்பாடத்தைக்கற்பதால்விளையும்பயன்கள்** | |
|---|---|
| இப்பாடத்தைக்கற்பதால்பின்வரும்பயன்களைமாணவர்அடைவர். | |
| 1. | தமிழின்மரபானஇலக்கியவகைகளின்வரலாற்றைஅறிதல்; குறிப்பிட்டசிற்றிலக்கியம்ஒவ்வொன்றின்தோற்றம், வளர்ச்சிநிலைகளைவரலாற்றுநோக்கில்அறிதல். |
| 2. | பரணி, தூது, பள்ளு, குறவஞ்சிஆகியசிற்றிலக்கியங்களில்சிறப்புப்புலமைபெறுதல். |
| 3. | கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், சிந்துஆகியசிற்றிலக்கியவகைகளிலும்முத்தொள்ளாயிரத்திலும்புலமைபெறுதல். |
| 4. | தமிழ்ச்சிற்றிலக்கியவகைகளின்வளத்தைஅறிந்துஅவற்றின்தனித்தஇலக்கியக்கொடையை - இலக்கியவடிவம், யாப்புவடிவம், பொருண்மைகள், இலக்கியஅழகுகள்முதலியவற்றைஆழமாகஉணர்தல். |
| 5. | மரபானசிற்றிலக்கியவகைகளைஆய்வுக்கண்ணோட்டத்தில்அணுகவும், சிற்றிலக்கியவகைகளில்புதியபடைப்புகளைஆக்கவும்பயிற்சியும்புலமையும்பெறுதல். |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **CLO1** | 2 | **1** | **3** | 2 | 3 | 2 | 2 | 2 | 3 | 2 | 2 | 3 |
| **CLO2** | 2 | **3** | **3** | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 |
| **CLO3** | 3 | 2 | 3 | 3 | 2 | 2 | 2 | **3** | **3** | 3 | 2 | 2 |
| **CLO4** | 3 | 2 | 3 | 3 | 2 | 2 | 2 | **1** | **3** | 2 | 2 | 3 |
| **CLO5** | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | **3** | **3** | 3 | 2 | 2 |